TNLA Debates

VII

No. 4

1980

C

DIGITIZED

D'
v 211,31' N80
N81·7·4:1
123093

வெளியீடு 12-1-1981] [Issued 12-1-1981

134/87
1506
ARCHIVES AND HISTORICAL RESEARCH
10 மார் 1981

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1980 ஆகஸ்ட் 7—தொகுதி VII—எண் 4
Thursday 7th August 1980—Volume VII—No. 4

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

V2.11_31 N80
N81.7.4;31)
123093

உள்ளடக்கம்

7—8—1980

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| 1. உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 343—373 |
| 2. உரிமைப் பிரச்சினை : | |
| துக்ளக் பத்திரிகை—தீர்ப்பு .. .. | 374—375 |
| 3. அரசினர் தீர்மானங்கள் : | |
| (அ) விதி 58ஐத் தளர்த்தல் .. . | 375 |
| (ஆ) விதி 54 (6)ஐத் தளர்த்தல் .. .. | 399 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் : | |
| (அ) திருப்பத்தூர் காவல் நிலையத்தருகில் வெடி குண்டினால் தாக்கப் பெற்று காவல் ஊர்தியில் இருந்தவர்கள் இறந்துள்ளது. | 376—386 |
| (ஆ) சென்னை நகரில் மண்ணெண்ணெய், சர்க்கரை விநியோக ஏற்பாடு. | 386—398 |
| 5. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) வேலூர்—வாணியம்பாடி கல்லூரிகளில் பி.காம், பட்டப்படிப்பில் சேர்வதில் மாணவர்கள் இன்னல். | 399—400 |
| (ஆ) பருத்திக் கழகம், இராமநாதபுரம் மாவட்ட, வட்டங்களில் மட்ட ரக பருத்தியை அதிக விலைக்கு வாங்குவது. | 400—403 |
| (இ) சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். | 404—406 |
| (ஈ) பரமக்குடி பகுதியில் கைத்தறித் துணிகள் தேக்கம். | 406—408 |
| தன்னிலை விளக்கம் : | |
| உறுப்பினர் திரு. துரை ராமசாமி .. .. | 408—413 |

7. தனியார் அலுவல்கள் :

தனித் தீர்மானம்—மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—தொடர்ச்சி

திரு. ஜே. எஸ். இராசு .. .. 413—421

திரு. மி. வின்செண்ட் .. .. 421—427

திரு. எல். இளையபெருமாள் .. 427—447

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/1980) 448—465

(ஆ) வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1980). 466—473

(இ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 33/1980). 474—483

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1980). 483—513

(உ) நிலம் கையப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1980). 513—525

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 526—527

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### வியாழக்கிழமை, 1980 ஆகஸ்ட் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

' அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் '

பேசப்படும் சொற்களின் வகை முறைகளின் தன்மையினையும், ஆய்ந்த பொருளுண்மையின் இயல்புகளையும் அறிந்து தூய்மையான உள்ளத்துடன் காணப்படும் அவையில் அமைந்துள்ளோரால் அவ்வவையின் நிலையினை உணர்ந்து, ஆராய்ந்து பேசுதல் வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவண்ணாமலையில் தொழிற்பேட்டை அமைக்கும் பணி.

* வினா எண். 118—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் தொழிற்பேட்டை அமைக்க கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன ?

(இ) என்னென்ன தொழில் பிரிவுகள் தொடங்கப் பெற்றுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) 16 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(இ) இரசாயனத் தொழிலகங்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் தொழிலகங்கள் உட்பட உணவைப் பதனம் செய்யும் தொழிலகங்கள் தொடங்கப் பெற்றுள்ளன. கனிப் பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழிலகங்கள், டிடர்ஜென்ட் தயாரிக்கும் தொழிலகங்கள் மற்றும் அலுமினியப் பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிலகங்கள் தொடங்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1980 ஆகஸ்ட் 7

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 16 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டிருப்பதாகவும் அவற்றில் பல்வேறு தொழில்கள் நடைபெறுவதாகவும் அறிவித்தார்கள். ஆனால் நான் அறிந்தவரையில் இரண்டு தொழிற்கூடங்களில்தான் தொழில் நடைபெறுவதாகப் போர்டு போட்டிருக்கிறார்கள். அதுவும் நடைபெறவில்லை. மற்றைய கூடங்களில் எல்லாம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உணவு மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கின்ற நிலைதான் இருக்கின்றது. இதுகுறித்து நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

அங்கு திருவண்ணாமலையில் ஏராளமான பண வசதி உடையவர்களும் தொழில் தொடங்குகின்ற ஆர்வம் உடையவர்களும் இருக்கின்றார்கள். அவர்களை அணுகி என்னென்ன தொழில்களைத் தொடங்கலாம் என்ற வகையில் அவர்களை ஊக்குவித்து உடனடியாகத் தொழில்களைத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்கு அளிக்கப்பட்ட தகவல் என்னவென்றால் அங்கே வரவேற்பு மிகக்குறைவாக இருக்கின்றது என்ற தகவல்தான். இந்தத் தகவல்தான் எனக்கு அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல பேர் தொழில்களைத் துவங்குவதற்கு முனைந்திருக்கிறார்கள் என்ற தகவலை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவலின் அடிப்படையில் நான் விரைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு உதவி புரிய ஆவன அனைத்தும் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திருவண்ணாமலையில் 16 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கூடங்கள் எவ்வளவு நாட்களுக்கு முன்பு கட்டப்பட்டன? அவற்றிலே ஏன் நீண்ட காலமாக தொழில்கள் தொடங்கப்படாமல் இருக்கின்றன? தொழில் தொடங்குவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளை அனுசரித்து அங்கு தொழில் கூடங்கள் கட்டப்பட்டனவா ? இல்லையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, இரண்டு காலகட்டங்களில் இந்த 16 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டன. முதற்கட்டமாக 28-2-1972 அன்று 6 தொழிற்கூடங்கள் 7 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டன.



1506



இரண்டாவது கட்டமாக 1973 ஆம் ஆண்டு அதாவது, 23-3-1973 இல் 10 தொழிற்கூடங்கள் 7½ இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. ஆக இந்த 16 தொழிற் கூடங்களும் 1972-ம் ஆண்டு, அடுத்து 1973-ம் ஆண்டு ஆகிய இரண்டு கால கட்டங்களில் 14½ இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

(பதில் இல்லை.)

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 14 லட்சங்களுக்கு 16 தொழில் கூடங்கள் அமைக்க கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அதற்குப் பிறகு, அங்கே தொழில்கள் ஆரம்பிக்கப்பெறாமல் இருப்பதாகத் தெரிகிறது. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு டைரக்டர் ஆப் இன்டஸ்டிரீஸ் தொழில் ஆரம்பிக்க விரும்பும் தொழில் அதிபர்களை அழைத்துப் பேசியதாகவும், அதற்குப் பிறகு அதை அப்படியே விட்டு விட்டதாகவும் தெரிகிறது. இப்படி தொழில் செய்ய முனைபவர்களுக்கு டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஊக்கம் அளிப்பதில்லை என்ற புகார்கள் திருவண்ணாமலையில் மட்டும் அல்ல, பல இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இப்படி கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட தொழில்களை விரைவில் எடுத்து நடத்துவதோடு மட்டுமல்லாமல், தொழில் ஆரம்பிக்க வருபவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஆதரவு கொடுக்க அரசு முன் நின்று செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்ச்சி பூர்வமான உணர்வோடு அரசு பங்கு கொண்டு விரைவில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருவண்ணாமலையில் கட்டப்பட்டிருக்கிற தொழிற்கூடங்கள், தற்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுக்கு வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அந்தக் கட்டிடத்தின் வாடகை வருமானம் எவ்வளவு? தொழில் செய்ய முன் வரும் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தொழில் துறை மூலமாகக் கடன் வழங்க அரசாங்கம் முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியபடி சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுக்கு வாடகைக்கு விடப்பட்டதாக தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. ஆயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் நான் கேட்டு, அதைப்பற்றி ஆவன செய்கிறேன். மற்றபடி தொழில் ஆரம்பிக்கிற நபர்களுக்கு, நிச்சயமாக அரசாங்கத்தில் இன்றைக்கு வழங்கப்படுகிற அத்தனை சலுகைகளும் வழங்கப்பட்டு, நிதி, ஆதாரங்களும் உரிய முறையில் அளிக்கப்படும் வகையில் ஆவன செய்யப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

## மருதூரில் அருள்மிகு இராமலிங்க அடிகளுக்கு நினைவுச் சின்னம்.

*வினா எண் 119-திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மருதூரில் அருள்மிகு இராமலிங்க அடிகளுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) ஆம், தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் பிறந்த வள்ளலார் இராமலிங்க அடிகளாருக்கு அவர் பிறந்ததாகச் சொல்லப்படும் வீடு இருந்த இடத்தில் ஒரு நினைவு மண்டபம் கட்ட ரூ. 70,000-க்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆணையர் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கவிப் பெரியார் திரு. வள்ளலார் அவர்கள்; கருத்துப் பெரியார் தந்தை ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள், வெண்ணாடைப் பெரியார் திரு வள்ளலார் அவர்கள், கருப்பு ஆடைப் பெரியார் தந்தை ஈ. வெ. ரா. அவர்கள். தந்தை ஈ. வெ. ரா. பெரியார்





அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப் போகிறோம். ஆனால் கவிப் பெரியார் வள்ளலார் அவர்களுக்குக் கட்டப்பெறவிருக்கும், நினைவுச்சின்னத்திற்கு சில மர்ம மனிதர்கள் நந்தியாக, நரியாக இருந்துகொண்டு, தடை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. ஆகவே, குறுக்கே இருக்கும் அந்த நந்திகளை அகற்றி எப்படியாவது அந்த நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கொஞ்சம் சுருக்கமாகவும் தெளிவாகவும் கேளுங்கள். நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று புரியவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : அந்த இடத்தில் நினைவுச் சின்னம் அமைப்பதற்கு சிலர் தடையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தடைகளை நீக்கி, வள்ளலாருக்கு நினைவுச்சின்னத்தை விரைவில் அமைக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் 70,000 ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்களே..............

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவலின்படி அரசாங்கம் அனுமதி அளித்து, எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள், 70,000 ரூபாய் செலவில் கட்ட வேண்டும் என்று, ஆனால் சிலர் அதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். ஆகவே, தடைகளை விரைவில் நீக்கி-கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு கவனிக்குமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கேட்கும் கேள்வி இதுவாகத்தான் இருக்கும் என்று கருதி நான் பதில் அளிக்கிறேன். அதாவது, 'இந்த முயற்சிக்கு சில தனியார்கள் தடையாக இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்' என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அதுதான் அவர் கேட்க விரும்புகிற கேள்வி என்றால், அந்த இடத்திலே சில பேர் சில காலத்திற்கு முன்னாலே இப்படி நினைவு மண்டபம் அமைப்பதற்கான அஸ்திவாரக் கல் போட்டு இருக்கிறார்கள். ஆகவே, அதில் தங்களுக்குத்தான் உரிமை இருக்கிறது என்று அறநிலையத் துறை ஆணையரிடம்

கோரியிருக்கிறார்கள். அதற்கு அவர் எழுத்து மூலம் எழுதிக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். அப்படிக் கொடுத்தால் அதில், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க கவனிக்கப்படும். அதுதான் நிலைமையே தவிர, யார் தடுத்தாலும் அந்த நினைவு மண்டபம் கட்டுகிற பணியை நிறைவேற்றுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

திரு. இரா. தாமரைக்கனி : வள்ளலார் பிறந்த தினத்தை அரசாங்க விழாவாகக் கொண்டாட அரசாங்கம் ஆவன செய்யுமா? வள்ளலார் பிறந்த மாவட்டத்தை வள்ளலார் மாவட்டம் என்று அறிவிக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : சம்பந்தப்பட்ட கேள்விக்கு நான் பதில் அளித்திருக்கிறேன். அவர்கள் வேறு விவரங்கள் பெறவேண்டுமென்று விரும்பினால் தனிக் கேள்வி போடவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : திரு தாமரைக்கனி அவர்கள் சொல்வது போல் இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச்சின்னம் அமைப்பது போன்று தந்தை பெரியார் அவர்களுக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுவது பற்றிய கேள்வி.

## கொடைக்கானலில் தொலைகாட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் பணி

*வினா எண் 120 திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் கொடைக்கானலில் தொலைக் கண்காட்சி ரிலே ஸ்டேசன் அமைப்பது பற்றிய திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை மாநில அரசு அறியுமா?

(ஆ) எப்பொழுது அத்திட்டம் அமுல்படுத்தப்படும்?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தமிழ்நாடு அரசின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு கொடைக்கானலில், தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்க, தொலைக்காட்சிப் பொறியாளர்கள் ஒரு இடத்தினைத்தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த நிலத்தினை ஆர்ஜிதம் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) நில ஆர்ஜிதம் முடிந்த உடன் மேற்படி நிலத்தினை இந்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்கும். இந்திய அரசும் உடனடியாக அஞ்சல் நிலையம் அமைக்கும் பணியினைத் தொடங்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : இந்தத் திட்டம் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது மத்திய சாங்கத்தினிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

திரு. ப. நெடுமாறன் : கொடைக்கானலில் அமைக்கப்படுகிற தொலைக்கண்காட்சி மூலம் எந்தெந்த மாவட்டங்கள் பயன் பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது அந்தப் பொறியியல் நிபுணர்கள் வைத்திருக்கிற கணக்குப்படி அநேகமாக தென் மாவட்டங்கள் அனைத்தும் திருச்சியிலிருந்து தொடங்கி மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் வரை நிச்சயமாக, நன்கு தெளிவாக நிகழ்ச்சிகளைக் காண முடியும் என்று தெரிவிக்கிறார்கள். ஆனால், அது அமைக்கப்பட்டதற்குப் பிறகு கோவை வரைகூட இது தெரியலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : கொடைக்கானலில் ஆரம்பிப்பது போல் வால்பாறை, நீலகிரி போன்ற உயரமான பகுதிகளில் இம்மாதிரி தொலைக்காட்சி நிலையம் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது முதல் கட்டமாக கொடைக்கானலில் அவர்கள் அந்த ஒளிபரப்புகிற நிலையத்தை அமைக்கட்டும். அதற்குப் பிறகு இரண்டாவது கோரிக்கையை எழுப்புவோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தத் தொலைக்காட்சி என்பது நல்லதொரு பொழுதுபோக்கு மட்டுமல்லாது மாணவர்களுக்கு அறிவு சம்பந்தமாக பல விஷயங்களைச் சொல்லக்கூடிய

ஒரு நல்ல ஒளிபரப்பு சாதனமாக இருந்து கொண்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்திருந்த மத்திய அமைச்சர் அவர்கள் 1982 ஆம்ஆண்டு இந்தக்கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் செயல்படத் துவங்கும் என்று சொன்னதாகப் பத்திரிகையில் படித்ததாக நினைவு. மதுரையில் ரேடியோ நிலையம் அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசின் பொறுப்பு என்று சொல்லி விடக்கூடாது. ஆகவே, நான் கேட்பது, நம்முடைய நிலையை, தேவையை விளக்கி 1982 ஆம் ஆண்டு கொடைக்கானலில் தொலைக்காட்சி நிலையம் அமைய நாம் எல்லாம் கண்டு மகிழ்கிற அளவிற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் விளைவாகத்தான் மதுரையில் வானொலி நிலையமும், கொடைக்கானலில் தொலைக்காட்சி ஒளிபரப்புகிற நிலையமும் ஏற்பட இன்றைக்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இங்கேயிருக்கிற இந்தக் கோப்பு இதன் தொடர்பாக மத்திய அரசுக்கு எழுதி பதில் பெற்றது; தொடர்ந்து நாம் அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகிற கோப்புதான் இது. ஆகவே, இடையில் மத்திய அரசிலே அமைச்சரகங்கள் மாறிய காரணத்தால் சென்ற ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய திட்டங்கள் தடைப்பட்டுவிட்டன. விரைவில் நடைபெறும் என்று நம்புவோமாக.

<u>திரு. ஆர். டி. கோபாலன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ரேடியோ ஸ்டேஷன் வருவதற்கு முன்னால் கொடைக்கானலில் டி.வி. ஸ்டேஷன் ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதுதான் மூலக் கேள்வி. அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

<u>திரு. ந. குலசேகரபாண்டியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்பட இருக்கின்ற தொலைக்காட்சி நிலையம் வண்ணப்பட தொலைக்காட்சி நிலையமாக அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையிலே இருந்து ஒளிபரப்புகின்ற அந்த நிலையத்திலே வண்ணப்படமாக இருந்தால், அங்கே வண்ணப்படம் தெரியும் ; கருப்பு, வெள்ளையாக இருந்தால், அங்கேயும் கருப்பு வெள்ளையாகத் தெரியும்.





<u>திரு. உ. சுப்பிரமணியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே' கொடைக்கானலிலே அமைக்கப்பட இருக்கின்ற தொலைக்காட்சி நிலையம் ஒரு ரிலே ஸ்டேஷனாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. தனித்த ஒரு ஸ்டேஷனாக, தனி புரோகிராம்களைச் செய்யக்கூடிய நிலையமாக அமைக்க மத்திய அரசிற்கு மாநில அரசு சிபார்சு செய்யுமா ? அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு **தலைவர்** அவர்களே, இப்போது ஒரு மாநிலத்திலே ஒரு தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தத் திட்டத்தைத்தான் மத்திய அரசு வைத்திருக்கிறது. முதலிலே இந்தத் தொலைகாட்சி நிலையம் உருவாகி, அளிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். அத்தகைய பலன் கிடைத்தால், அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

<u>திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொலைக்காட்சி நிலையம் எவ்வளவு தூரத்திற்கு ஒலிபரப்பும் என்பதையும், நில ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்கு கொடுப்பது எப்போது முடியும், எவ்வளவு காலம் ஆகும் என்பதையும் அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:</u> மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நில ஆர்ஜிதத்திலே சில சிக்கல்கள், ஏற்பட்டு அதனால், காலதாமதம் ஆனது. திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களுடைய அறக்கட்டளை நிலத்தை முதலிலே தேர்ந்தெடுத்தோம். 4 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவர்கள் வேண்டுகோளின்படி, அங்கே வழிபாட்டு நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டதால், மீண்டும் பரிசீலிக்கப்பட்டது. மேலும், நல்ல இடங்கள் கிடைக்கவில்லை என்று பொறியாளர்கள், நிபுணர்கள் கூறிய காரணத்தினால், அந்த அடிப்படையிலே அங்கே 2 ஏக்கர் நிலமும், அதற்கு அடுத்துள்ள எட்டயபுரம் அரசிடமிருந்து 1.60 ஏக்கர் நிலமும் எடுப்பதென்று அரசு முடிவு செய்தது. அதை டெலிவிஷன் நிலையத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் காலதாமதம் ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே அமைக்கப்பட இருக்கின்ற ரிலே ( Relay ) ஸ்டேஷன் 10 கிலோ வாட் சக்தியுள்ள டிரான்ஸ்மிட்டராக இருக்கும். டவர், அதாவது கோபுரம் 50 மீட்டர் உயரமுள்ளதாக அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

[1980 ஆகஸ்ட் 7

## நொய்யலாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 121 திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொப்பம்பட்டி அருகே நொய்யலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆற்றில் எப்போதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால், இந்த ஆற்றின் குறுக்கே கடந்து கொடுமுடி செல்வதற்கு இடைஞ்சலாக இருப்பதால், அங்கே பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்த அளவில் சின்ன தாராபுரம்—கொடுமுடி சாலையில் கட்ட வேண்டுமென்று அரசுகூட ஆய்வு நடத்தியிருக்கிறது. ஆனால், இதற்கு 12 லட்சம் ரூபாய் செலவிட வேண்டுமென்று மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில், இந்தப் பாலத்தை எடுத்துக் கொள்ள முடியாத நிலை இருக்கிறதென்றும், அதே நேரத்தில் பல பணிகளை மேற்கொள்ளும்போது, இந்தப் பாலத்தையும் கட்டி முடிக்கலாம் என்றும் கருத்து கூறப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தத் தொப்பம்பட்டி அருகே நொய்யலாற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட வேண்டுமென்று நீண்ட காலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராம மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு கோரிக்கைகள் வந்துள்ளது உண்மையா ? நான்கூட இது குறித்து கோரிக்கை, அனுப்பியிருக்கிறேன். அந்த இடத்திலே பாலம் கட்டுவதைச் சில செல்வாக்கு படைத்தவர்கள் தடுக்கின்ற முயற்சி எடுப்பதால், அந்த இடத்திலே அந்தப் பாலம் கட்டுவதற்குப் பதிலாக வேறு இடத்திற்குப் போகிற மாதிரி செய்தி ஏதாவது உண்டா ? இல்லாவிட்டால், அந்தப் பாலத்தை அங்கே கட்டுவதற்கு என்ன கஷ்டம்? என்ன தவறு இருக்கிறது?



1980 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கோரிக்கை ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கந்தசாமி அவர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே கட்டப்பட இருக்கின்ற பாலத்தைச் செல்வாக்குப் படைத்தவர்கள் மாற்ற எண்ணுகிறார்கள் என்று கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட எந்தவிதமான குறிப்புகளும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

[முற்பகல் 9–20]

திரு. தி. கா. நல்லப்பன் : நொய்யலாற்றுக்குக் குறுக்கே திருப்பூருக்கும் ஊத்துக்குழிக்கும் இடையில் அணை கட்டுவது பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்டப்பட வேண்டுமென்று கோருவது பாலம், அணை அல்ல.

## ஈரோடு—பெருந்துறை சாலைப்பகுதியில் வீடு கட்டும் திட்டம்.

* வினா எண் 122—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் ஈரோடு நகரத்திலிருந்து பெருந்துறை செல்லும் சாலைப் பகுதியில் வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்ட திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன ?

(இ) எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

அ, ஆ மற்றும் இ * விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : பெருந்துறைச் சாலையில் மூன்று இடங்களில் நிலம் கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பெருவாரியான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஏறக்

---

(526–527 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது).

குறைய 80 ஏக்கர் வரை நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அங்கே பெரிய ஹவுசிங் காம்ப்ளெக்ஸ் மாதிரி 'ஏற்பாடாகப் போகிறதா? பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம் போன்ற சகல ஏற்பாடுகளும்—ஏற்கனவே கட்டப்பட்ட திட்டங்களில் இவை இடம் பெறவில்லை—செய்யக் கூடிய அளவுக்குத் திட்டமிடப் பட்டுள்ளதா? இதற்கு என்ன செலவாகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: செலவு பற்றிய குறிப்பு இல்லை. பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களுக்கு, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு, நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு வீடு கட்ட திட்டம் இருக்கிறது. 'இரண்டாவது திட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு வாடகை குடியிருப்பு கட்டும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: வீடு கட்டும் திட்டம் என்ற பெயரால் பெருந்துறை, ஆனப்பாளையம், கருங்காட்டூர் என்ற இடங்களில் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா? அந்த இடங்களில் வீடு கட்டும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப் பற்றித் தகவல் இல்லை.

திரு. கு. ரமணி: புறநகர் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்திடம் இருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் இருக்கிறது. அந்த நிதி உதவி எப்போது கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 'ஹட்கோ' விடம் இருந்து நிதி உதவி கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் வேலை துவங்கும் என்ற தகவல் மட்டுந்தான் என்னிடத்தில் இருக்கிறது.

## வேலூர் நகருக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 123—திரு. இல. பலராமன்: மாண்புமிகு. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூர் நகருக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஆ) இது என்ன நிலையில் உள்ளது?

(இ) எப்போது இத் திட்டம் அமுல்படுத்தப்படும்.?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—(அ) திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுகளப் பணி வேலைகள் முடியும் நிலையில் உள்ளன.

(இ) களப் பணிகள் முடிவு பெற்றவுடன், திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் பெற்று, மேற் கொண்டு அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. த. வேணுகோபால்: வட ஆற்காடு மாவட்டம் வேலூருக்கு பாதாளச் சாக்கடைக் திட்டம் எடுத்துச் சொல்வது ஆய்வில் இருப்பதாகச் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே ஆய்வில் இருப்பதாக அறிவிக்கப்பட்டு இன்னும் வேலை துவங்கப்படவில்லை. அது பெரிய மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கும் காரணத்தால் உடனடியாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆய்வு வேலைகள் முடிவு பெற்றவுடன் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொண்டு அமல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தத் திட்டத்தைப் பற்றிக் கேட்டாலும் 'ஆய்வு, ஆய்வு' என்றே சொல்லுகிறார்கள். ஆய்வு என்றால் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கவேண்டுமென்ற நிலை இருக்கிறதா? குடிநீர்த் திட்டத்தைப் பற்றிக் கேட்கும் போதும் 'ஆய்வில் இருக்கிறது' என்று கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே சோல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வரம்பு வைக்கக்கூடாதா? எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதுவும் ஆய்வு செய்யப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: பாதாள சாக்கடைத் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த ஆய்வில் காட்பாடி, காந்திநகர், தாராபடுவிடு, போன்ற பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளனவா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிற தகவல் வேலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் பற்றியது. அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

<u>திரு. என். ஏ. பூங்காவனம் :</u> தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டிலே வேலூரிலே பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணிபற்றி முடிவு செய்யப்பட்டது. அப்போதே வரப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போதும் ஆய்விலேதான் இருக்கிறது என்று கூறுகிறார்கள். எந்தத் தேதிக்குள் ஆய்வு முடிவு அடையும் என்பதைத் தெவிக்க முடியுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலவைர் அவர்களே, ஆய்வுப் பணிகள். அதாவது இன்வெஸ்டிகேஷன் பணிகள் எந்தத் தேதியில் முடிவு அடையும் என்பதை என்னால் சொல்ல முடியாது என்பதை நான் வருத்தத்துடன் தொவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. பாபு ஜனார்த்தனன் :</u> தலைவர் அவர்களே, இந்த பாதாள சாக்கடை திட்டம் ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். இது பாதாள சாக்கடைத் திட்டம் என்பதால் அது பாதாளத்திலே போடப்பட்டு இருக்கிறதா? அல்லது மக்களுக்கு அத்தியாவசியமான திட்டம் என்ற முறையிலே விரைவிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, ஆய்வுவேலைகள் தொடங்கப்பட்டு பிரதான வடிகால் குழாய், பிரிவு வடிகால் குழாய்க்கள் அமைப்பதற்கான ஆய்வுகள் முடிவுபெறும் நிலையில் உள்ளன. கழிவுப் பொருள் சுத்திகரிப்பு, அகற்று வேலைகளுக்கு இடம் அமைப்பதற்கான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

<u>திரு. ந. குலசேகர பாண்டியன் :</u> தலைவர் அவர்களே, இது எங்கள் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதாலேயும் மழை பெய்கிறபோது முட்டி அளவுக்கு தெருக்களிலே தண்ணீர் தேங்கி மக்கள் நடமாட முடியாத நிலைமை இருப்பதாலேயும் இரண்டு மூன்று ஆண்டுகளாக ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது என்று சொல்லாமல் விரைவாக அவசிய அவசரத்தோடு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> ஆய்வு செய்வது இந்தத் துறையிலே உள்ள நிபுணர்கள். மன்ற உறுப்பினர்களுடைய எண்ணத்தைத் தெரிந்துகொண்டு வேகமாக ஆய்வு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



<u>சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீர் கொண்டுவரும் திட்டம்.</u>

*வினா எண் 124—<u>திரு. இ. முத்துராமலிங்கம் :</u> மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டு வரும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) திட்டம் எப்போது முடியும் ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா எல்லைகளில் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் அடுத்த ஆண்டு (1981) மத்தியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆய்வு அறிக்கை கிடைத்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. இ. முத்துராமலிங்கம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு ஏற்கனவே வீராணத்திலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகிற திட்டம் துவங்கப்பட்டு ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு குழாய்கள் எல்லாம் போடப்பட்டு இடையே கைவிடப்பட்டது. அந்த அளவுக்கு இல்லாமல் இந்தத் திட்டம் முழு முயற்சியோடு நிறைவேற்றப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவர் அவர்களே, ஆந்திர மாநில எல்லையில் அமைக்கவேண்டிய கால்வாயினுடைய நீளம் எந்த அளவுக்கு இருக்கிறது, தமிழ்நாட்டிலே எவ்வளவு தூரம் அமைக்கப்படும் என்று பார்க்கிற பணிகள் எல்லாம் துரிதமாக நடைபெறுகின்றன. 1981 ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணிகள் முடிவு அடைந்து விடும். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சாத்தியக்கூறுகள் நிரம்ப இருக்கின்றன என்று அரசு கருதுகிறது.

<u>திரு. ப. நெடுமாறன் :</u> தலைவர் அவர்களே, ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி சென்னையிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அன்றைக்கு பிரதமர் இந்திரா காந்தி இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதாக அறிவித்தார்கள். அதற்குப் பிறகு ஆந்திர முதலமைச்சர் வெங்கல் ராவ் அவர்களே இந்தத் திட்டத்தின்படி தமிழகத்திற்கு, சென்னைக்கு எவ்வளவு குடிநீர் வேண்டுமோ

[1980 ஆகஸ்ட் 7

அந்த அளவு அளிக்கப்படும் என்று உறுதி சொன்னார்கள். இவ்வளவு ஆனபின்னாலேயும் இன்னும் காலதாமதம் ஆகிறது என்றால் எந்தத் தரப்பிலே ஆகிறது என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதியிலிருந்து மொத்தம் 15 மிலியன் கன அடி தண்ணீரை சென்னை நகரத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்காக இரண்டு மாநில அரசுகள் முடிவு செய்திருக்கின்றன. இப்போது 372 கிலோ மீட்டர் தூரம் ஆந்திர எல்லையிலே கால்வாய் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் பொறுப்பிலே அதைச் செய்யப்போகிறார்கள்; அதற்காக ஆகும் செலவை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தப் பணிகளுக்காக 19 லட்சம் ரூபாய் இதுவரையிலே நாம் ஒதுக்கியிருக்கிறோம். 1981-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அது முடிந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இரண்டு தரப்பிலேயும் எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

[முற்பகல் 9-30]

<u>டாக்டர் கே. சமரசம் :</u> பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கக்கூடிய வீராணம் திட்டம் ஏற்கனவே வீரியன் பாம்பு திட்டமாக ஆகி மக்களைக் கொட்டிவிட்டது என்று சொல்வார்கள். இன்றைக்கிருக்கும் கிருஷ்ணா ஆற்று நீர் கொண்டு வரும் திட்டம் இந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், நகரைத் தேடி வந்த நதியாக விளங்குகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்காக மேலும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு காலத்திற்குள் இதைச் செய்து முடிக்க முடியும் என்பதை அறிவிக்க இயலுமா?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே, அதற்காக திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கின்றபொழுதுதான் அதற்காகும் செலவுகளைப் பற்றிச் சொல்ல முடியும். கிருஷ்ணா நதி என்ற பெயரிலேயே கிருஷ்ணா என்ற பாதுகாப்பான உணர்வு இருக்கின்ற காரணத்தால் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

<u>திரு. பாபு ஜனார்த்தனன் :</u> பேரவைத் தலைவரவர்களே, அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1976 ஆம் ஆண்டில் வந்தபொழுது இந்தக் கிருஷ்ணா ஆற்று நீரைச் சென்னைக்குக் கொண்டுவருவது பற்றிக் குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட



1980 ஆகஸ்ட் 7]

ஆறு ஆண்டுக்காலமாகியும் இன்னும் ஆய்வு, ஆய்வு என்று சொல்லி 19 இலட்சம் செலவு செய்தும் ஆய்வுவேலைதான் முடிந்திருக்கிறதே ஒழிய அதற்குப்பிறகு இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன். உடனடியாக, தண்ணீரின் அத்தியாவசியத் தேவையை முன்னிட்டு விரைவாக முடிப்பதற்கு ஆவன செய்வார்களா? இது எப்பொழுது முடியும்? எப்பொழுது சென்னை மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்ததை ஒட்டி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இந்தத் திட்டத்திற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இடையில், தமிழகம், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கிடையே காவேரி நதி சம்பந்தமாகச் சில பிரச்னைகள் ஏற்பட்டதால் கொஞ்சம் விரைவுபடுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பிறகு 1978 ஜூன் 15 ஆம் நாள் ஆந்திர மாநிலத்தில் ஹைதராபாத்தில் தமிழக முதல்வரவர்கள் ஆந்திர முதல்வரோடு கலந்து பேசி, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லி, இரண்டு பேர்களும் ஒப்புக்கொண்ட பிறகு, இந்தப் பணி இப்பொழுது விரைவாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல இன்னும் ஆறு ஆண்டுகள் கடந்து விடவில்லை ; நாம் 1980 ஆம் ஆண்டிலேதான் இருக்கிறோம். 1981 ஆம் ஆண்டில் இந்தப் பணிகளுக்கான அடிப்படை வேலைகள் பூர்த்தியாக முடியும்.; அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதிலே சிரமம் இருக்காது என்று அரசு கருதுகிறது.

<u>திரு. எஸ். சிவராமன் :</u> தலைவரவர்களே, பொதுவாகத் தண்ணீர் என்றாலே கிராமப்புறங்களில் மிகவும் வறட்சியாக இருக்கிறது. இந்தத் திட்டம் பற்றி கிட்டத்தட்ட நான்காண்டு காலமாகப் பேசப்பட்டு வருகிறது. ஆகவே, இதுபோன்ற திட்டத்தில் ஆய்வு என்று சொல்லும்பொழுதும் காலதாமதம் ஆவதைத் தவிர்த்துத் துரிதமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே, ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலம்—அங்கேயிருந்து தமிழகத்தில் உள்ள பூண்டி நீர்த் தேக்கத்திற்குக் கால்வாய் மூலம் கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. கிட்டத்தட்ட 372 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்த வாய்க்காலை வெட்டிக் கொண்டு வர வேண்டும். எனவே, இதில் அவசரம் காட்ட முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள்

[1980 ஆகஸ்ட் 7

சொன்னதைப்போல, 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இதற்கான அடிப்படை வேலைகள் முடிந்து விடும். முடிய வேண்டுமென்று இரண்டு அரசுகளும் இப்பொழுது தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

திரு. கே. நாராயணசாமி : தலைவரவர்களே, குளித்தலையிலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டு வருவதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, கிருஷ்ணா நதி பற்றியது.

திரு. கே. நாராயணசாமி : சென்னைக்குத் தண்ணீர் வருவதைப்பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைக்குப் பலவகைகளில் தண்ணீர் வருகிறது ; இது கிருஷ்ணா நதி பற்றியது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வர, மாண்புமிகு அமைச்சரவர்கள் 1981-ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் துவங்கப்படும் என்று சொல்கிறார்கள் ; ஆய்வு செய்யப்படும் என்று சொல்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து குடிநீர்த் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, 372 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால் வெட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்பொழுது இடையிலே உள்ள தண்ணீர் இல்லாத கிராமங்களில் இலட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து தண்ணீர் வருகின்றபொழுது இடையிலே உள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்க ஏதாவது திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இது பற்றிய குறிப்பு இங்கே என்னிடத்திலே இல்லை என்றாலும் கூட, இப்படிப்பட்ட பிரச்னைகள் இடையில் எழுவதற்கு வாய்ப்புகள் உண்டு ; அதையும் அரசு கவனத்திலே வைத்திருக்கிறது.

பல்லிக்கூடம் என்னும் இடத்தில் அணைக்கட்டும் திட்டம்.

*வினா எண் 125— திரு டி. மணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லிக்கூடம் என்னுமிடத்தில் அணைக்கட்டுவதற்காக ஆய்வு நடந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை ஆரம்பிக்கப்படுவது எப்போது ?

(இ) 1980–81 திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா?



1980 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ) : முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூடம் என்னுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இந்த முல்லையாற்றில் ஒரு சிறிய அணை கட்டும் திட்டமானது 1978-லே ஆய்வு ஆரம்பிக்கப்பட்டு, அதனுடைய வேலைகள் இந்த 1979–80 முதல் கட்டத்திலேயே முடிவடைந்ததாக அந்தப் பிரதேசத்தில் இருக்கிற மக்கள் கூறுகிறார்கள். மேலும் அந்த ஆய்வு என்ற ஏற்பாட்டை நீடிக்காமல், 1980–81-லே குறைந்தபட்சம் ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு நிறைவேற்றுமா ?

அது மட்டுமல்ல, அந்த ஆற்றின் குறுக்கே அணை கட்டாத காரணத்தால், மழைக் காலங்களிலே அதிகப்படியான தண்ணீர் வந்து 800 ஏக்கர்களுக்கு மேல் பயிர்கள் பூராவும் சேதம் அடைகின்ற நிலையிருக்கிறது. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு, அதி வேகமாக முல்லையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தை ஆய்வு என்ற நிலையில் நீடித்துக் கொண்டு போகாமல், கட்டி முடிக்கும் பணி வேகமாகச் செய்து முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல், கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு வட்டத்தில், அன்னுகோடு கிராமத்தில், மாலைக்கோடு என்னும் இடத்தில் முல்லையாற்றின் குறுக்கே அமைக்கப்படும் நீர்த்தேக்கத் திட்டம் பற்றிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அந்த மாலைக்கோடு என்னும் இடத்தைவிட ஒரு சிறந்த இடமாகிய, அதாவது, இப்பொழுது சொல்லப்படுகிற பல்லிக்கூடம் என்கிற இடம் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால்தான் இடையிலே காலதாமதம் ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், 1,000, 800 ஏக்கர்கள் என்கிற கணக்குகள் என்னிடத்திலே இல்லை. ஆனால், இங்கே உள்ள குறிப்புகளின்படி, முல்லையாற்றின் உபரி நீரைத் தேக்கி வைத்து, 322 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குப் பாசன வசதி, அதாவது, அந்நிலங்களை இருபோக நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் என்கிற அளவிலேதான் அந்த மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சீஃப் இன்ஜினீயர் இன்வெஸ்டிகேஷன்—அவருடைய பணிகளை முடித்து, இங்கே அனுப்பியிருக்கிறார். இங்கே, நம்முடைய துறையோடு கலந்து பேசி, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது, எந்த ஆண்டிலே செய்வது, என்கின்ற அந்த அளவிலேதான் இந்த கருத்து இருக்கிறது. எனவே, கிட்டத்தட்ட 60 சதவீதத்துக்கான அடிப்படை பணிகள் முடிந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[1980 ஆகஸ்ட் 7

கருதுவதைப் போல், அடுத்த நிதி ஆண்டிலே, நாம் மானியக் கோரிக்கையை வைக்கும்போது, சாதனைப் பட்டியலிலே இதுவும் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேது சமுத்திரத் திட்டம்.

* வினா எண் 126—திரு. செ. சிவசாமி, திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்திற்கு மிக முக்கியமான "சேது சமுத்திரத் திட்டம்" என்ன நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) முகவை மாவட்டத்திற்கு முக்கியமான "சேது சமுத்திரத் திட்டம்" செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசிற்கு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திர திட்டம் மிகமிக முக்கியமான திட்டம். திரு. ஏ. இராமசாமி முதலியார் கமிட்டி இது மிகவும் முக்கியமான திட்டம் என்று சொல்லியிருக்கிறது. முன்னாலே, 1969-70-லே நியமிக்கப்பட்ட கமிட்டியானது நீண்ட பரிசீலனைக்குப் பிறகு, இந்தத் திட்டம் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டிய முக்கியமான திட்டம் என்று சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல, தூத்துக்குடியிலே ஹெவி வாட்டர் பிளாண்ட் இருக்கிறது, மிகப் பெரிய ஸ்பிக் தொழிற்சாலையானது இருக்கிறது. அனல் மின் நிலையம் இருக்கிறது. கடல் ஓரத்திலே நிலக்கரி போகும் ஏற்பாடு இருப்பதால், நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 300 மைல் தேவையில்லாமல் கப்பல்கள் சிலோனை சுற்றிக்கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தத் திட்டம் நிச்சயமாகத் தமிழகத்திற்கு மிகப்பெரிய வருமானத்தைத் தரும். அப்படிப்பட்ட திட்டத்தை, தொடர்ச்சியாக, முக்கியமான திட்டம் என்று கமிட்டிகள் அட்வைஸ் பண்ணியுங்கூட, மத்திய அரசாங்கம் ஏன் காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி * * * * செய்வது....—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திட்டத்தைப் பற்றி சொல்லியாயிற்று. சொற்பொழிவு ஆற்றும் நேரம் அல்ல இது, கேள்வி நேரம்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1980 ஆகஸ்ட் 7]

திரு. செ. சிவசாமி: மத்திய அரசாங்கம் * * * செய்வதை தமிழக அரசு தடுத்து, சீக்கிரத்திலே அத்திட்டத்தை செயல்படுத்துமா என்று கேட்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கலாமா? மத்திய அரசு * * * * * * * * செய்கிறது என்று சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசாங்கங்கள் * * * * * செய்வதில்லை, எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, அந்த வார்த்தையை மாற்றிக்கொண்டால் நல்லது.

திரு. ரா. உமாநாத்: உங்களுடைய ஒப்பீனியன் * * * * * * செய்வதில்லை என்று இருக்கலாம். என்னுடைய ஒப்பீனியன் * * * * * * செய்கிறது என்று இருக்கும். ஆகவே, என்னுடைய ஒப்பீனியனைப் பேச எனக்கு உரிமை உண்டு. Unless it is an unparliamentary word * * * * * is a pure Tamil word அது எப்படி அன்பார்லிமென்டரி வேர்ட் ஆகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்பார்லிமென்டரி என்று சொல்லவில்லை. இந்த இடத்திற்குப் பொறுத்தமில்லாத வார்த்தை. ஆகவே, அதை மாற்றிக் கொண்டால் நல்லது.

[முற்பகல் 9-40]

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, * * * * * * என்றால், பிடிவாதம் என்று அர்த்தம் வரும். இதை இப்போது அப்ஜெக்ட் செய்கின்றவர்கள், வேறு நேரத்தில் அதை உபயோகப்படுத்த வேண்டி வரும். இது எப்படி அன்பார்லிமென்டரி என்று வரும். அன்பார்லிமென்டரி என்று இருந்தால் ஒழிய சபையிலே அந்த வார்த்தையை உபயோகப்படுத்தக்கூடாது என்று சொல்ல முடியாது.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1980 ஆகஸ்ட் 7

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, * * * * * * என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம் என்றாலும் * * * என்பது பொதுவாக பெண்களைக் குறிக்கின்ற வார்த்தை என்ப தால் * * * * இந்த அவையிலே பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. அதற்குப் பதிலாக '' ஆமை வேகம் '' என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம்.

திரு. ரா. உமாநாத் : அந்த வார்த்தைக்கு ஆங்கிலச்சொல் 'intransigence' என்பதாகும். டிக்ஷனரியிலும் அந்த வார்த்தை இருக்கிறது. If a word is found in the dictionary it is not unparliamentary.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழில் வேறு நல்ல வார்த்தை இருக்கிறது. டிக்ஷனரியில் இருப்பதால் பயன்படுத்தலாம், அன்-பார்லிமென்டரி அல்ல என்று சொல்வது சரியல்ல, பதிலாக எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல் ' ஆமை வேகம் ' என்று சொல்லலாம். எனவே இந்த இடத்திற்கு பொருந்தாத அந்த சொல் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப் பெற வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தங்கள் தீர்ப்பை நான் ஆட்சேபிக்கவில்லை. இன்றைக்கு அந்த வார்த்தையை உபயோகிக்கக் கூடாது என்று சொல்லக்கூடியவர்கள், நாளைக்கு வேறு ஒரு சந்தர்ப்பத்தில், அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே நான் ஒரு விளக்கம் மட்டும் சொல்ல அனுமதி கேட்கிறேன். சண்டிகேஸ்வரி என்கிற அம்பிகையின் செயல்களைத்தான் அப்படி அழைப்பது உண்டு. பக்தி நூல்கள் படித்தவர்களுக்கு அதைப் பற்றித் தெரியும். ஆகவே, அது அன்-பார்லிமென்டரி அல்ல. ஆகவே, அந்த வார்த்தையை அனுமதிக்கலாம். ஏனெனில், நாளைக்கு சண்டிகேஸ்வரி என்று யாராவது குறிப்பிட்டால், அதையும் நீக்கிவிட வேண்டும் என்று சொல்லலாம். சண்டிகேஸ்வரி என்பது பார்வதி தேவியின் அவதாரம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால் தான் நான் தீர்ப்பு கொடுக்கிறபோதே சொன்னேன். இந்தக் கான்டெக்ஸ்டில் அந்தச் சொல்லை பயன்படுத்தியது சரியல்ல என்பதால் தான் அதனை நீக்க வேண்டும் என்று சொன்னேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1980 ஆகஸ்ட் 7]

அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. துணை வினா கேட்பதாக இருந்தால் கேளுங்கள் ; இல்லையென்றால் நான் அடுத்த கேள்விக்குப் போக வேண்டியிருக்கும்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1960 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1968 ஆம் ஆண்டு இதைப் பற்றிய முடிவுகள் ஏறத்தாழ 37½ கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பிறகு 1974 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் திருத்தப்பட்டு ஏறத்தாழ 65½ கோடி ரூபாய் ஆகும் என்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இதை உடனடியாக செயல்படுத்துவதற்கு எந்தவிதமான அவசரத் தேவையும் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் இந்த அரசு வலியுறுத்தி மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறது. நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் காலதாமதம் ஆவதைப் போல இங்கே நடைபெற்ற விவாதத்தினால் இந்த கேள்விக்கு பதில் சொல்வதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. நிச்சயமாக இந்தத் திட்டம் வலியுறுத்தப்படும என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, 1968-ல் நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் 37½ கோடி ரூபாயில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் பிறகு 1974-ல் 65½ கோடி ரூபாய்க்கு திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான திட்டம் ; பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியக் கனவான திட்டம் என்று கருதுகிறோம். ஆகவே, இந்தத் திட்டத்தை மத்திய அரசிடம் வற்புறுத்தி, நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதைத்தான் முன்பே சொன்னேன். 1968-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1977-ல் முடிவு செய்து சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் இதைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இங்கே நடந்த விவாதங்களைப் பார்க்கும்போது மத்திய அரசு நிச்சயமாக செய்துவிடும் என்று கருதுகிறோம்.

திரு. எம். சின்னராஜ் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் எந்தக் காலத்தில் எந்த ஆட்சியில் மறுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 ஆகஸ்ட் 7

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1960 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1968 ஆம் ஆண்டு அந்த முடிவை மத்திய அரசுக்கு அனுப்பி இருந்தாலும் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள் அன்று தான் இந்தத் திட்டத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அப்போது மத்தியில் இருந்தது ஜனதா அரசுதான். இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய அவசியம் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி, திருப்பி அனுப்பிவிட்டார்கள். திருப்பி அனுப்புவதற்கு முன்னால் இது பற்றிய தகவல் ஒன்றும் வரவில்லை. இந்தத் திட்டம் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 106 கோடி ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். இதை நிறைவேற்ற மீண்டும் வலியுறுத்துவோம் என்று திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறேன்.

<u>திரு. ஏ. சாகுல் ஹமீது :</u> தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை மத்திய அரசு மறுக்குமானால் தமிழக அரசே இதை நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> தலைவரவர்களே; இது ஒரு பெரிய திட்டம். மத்திய அரசுதான் செய்தாக வேண்டும் இந்த மன்றத்தின் மூலமும் இந்த அரசாங்கத்தின் மூலமும் நிச்சயமாக வலியுறுத்தச் செய்வதற்கான முயற்சிகளை செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. உ. சுப்பிரமணியன் :</u> தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை, அவசியத்தை எடுத்துச் சொல்லவில்லை என்ற காரணத்தால் திருப்பி அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள். சேது சமுத்திரத் திட்டம் முக்கியமானது மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதுக்கும் பயன்படும் திட்டம். 'கல்ஃப் ஆஃப் மன்னார்', பாக்ஜலசந்தியை ஆழப்படுத்தப்படுவதன் மூலம் வெளிநாட்டுக் கப்பல்கள் இந்த வழியே வந்தால் நாட்டுக்கு கோடிக்கணக்கில் ரூபாய் மிச்சமாகும்; நூற்றுக்கணக்கான மைல் தூரமும் மிஞ்சும். அதனால்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆகவே இதை வலியுறுத்தி மீண்டும் மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதி, நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> தலைவரவர்களே, இதற்கு முன்பு இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்டது. அதனாலே என்ன இலாபம் இருக்கிறது என்று அப்போதே தீவிர நடவடிக்கை எடுத்து மத்திய அரசுக்கு



1980 ஆகஸ்ட் 7]

சொல்லியிருந்தாலும் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஆண்டு வருமானம் 232 இலட்சம் ரூபாய் என்றும் செலவு போக ஏறத்தாழ 162 இலட்சம் ரூபாய் ஓராண்டுக்கு வருமானம் வரும் என்று கூறப்பட்டது. ஏறத்தாழ 350 மைல் தூரமும் குறைக்கப்படும். அது மட்டுமல்ல. நிலக்கரி ஏற்றிவருகிற கப்பல்களுக்கு ஏறத்தாழ 660 மைல் தூரம் குறைக்கப்படும் என்றும் அதனால் ஓராண்டுக்கு ஏற்படும் செலவில் 1,36,47,036 ரூபாய் மீதி ஆகும் என்றும் கணக்கிட்டு வலியுறுத்தி அனுப்பி இருக்கிறோம். இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு பதிலைச் சொல்லி, திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். இதை மீண்டும் வலியுறுத்துவோம்.

<u>திரு. இ. முத்துராமலிங்கம் :</u> பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் வெளியான பத்திரிகைக் குறிப்பில் மத்திய அரசு இந்த திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தினால் அதிகமான பயன் பெறக் கூடியது தூத்துக்குடி துறைமுகமாகும். நெல்லை மாவட்டத்திலே இந்தத் துறைமுகத்திற்கு முக்கியத்துவம் கிடைக்கக்கூடாது என்று ஒரு சிலருடைய தனிப்பட்ட நோக்கத்தின் காரணமாகத் தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அந்தப் பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இது பற்றி இந்த அரசு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ;</u> பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு கைவிட்டு விட்டதாக நான் அறிந்த வரையில் எனக்குத் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் இந்த அரசாங்கம் விட்டுவிடப் போவதில்லை. நிச்சயமாக இது குறித்து மத்திய அரசை வலியுறுத்துவோம். மத்தியிலே இருக்கின்ற ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் கூட இங்கே இருக்கின்றார்கள். அவர்களும் இதற்கு உதவி புரிவார்கள் என்று கருதுகிறேன்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் ;</u> பேரவைத் தலைவரவர்களே, 1977ஆம் ஆண்டு மத்திய அரசு இதைத் திருப்பி அனுப்பியதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பிறகு 1979 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு தயார் செய்ததாகச் சொல்கிறார்கள். அப்படியானால் இன்னும் இவர்கள் மத்திய அரசை வற்புறுத்திக் கேட்கவில்லை என்பது அவர்களுடைய பதிலிலே இருந்தே தெரிய வருகின்றது. ஆகவே இந்தத் திட்டத்தை ஏன் தமிழ்நாடு அரசு விரைவு படுத்தவில்லை. ஆகவே இன்னும் கால தாமதம் செய்யாமல் விரைவு படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

[1980 ஆகஸ்ட் 7

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் எழுதியக் கடிதத்திற்குப் பின்பு மீண்டும் நாம் நடவடிக்கை எடுத்துதான் திருத்திய மதிப்பீடு தயார் செய்து ரூபாய் 106 கோடி ஆகும் என்று கணக்கிட்டு மத்திய அரசுக்கு எழுதி இருக்கின்றோம். அதற்கான பதில் மீண்டும் வந்து சேர வில்லை. இருந்தாலும் நாம் மீண்டும் இதை வலியுறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தை வளமாக்குகின்ற இந்த திட்டத்தைப் பொறுத்த வரையில் முன்பு இருந்த ஜனதாக் கட்சியின் ஆட்சி ஒப்புதல் அளிக்கவில்லை என்றாலும் இப்போது இருக்கின்ற இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா அவர்கள் தமிழகத்தினுடைய நியாயமான தேவைகளை ஏற்றுக் கொள்வார்கள் என்ற காரணத்தால், அமைச்சரவர்களும் இளைஞராக இருக்கின்ற காரணத்தால் விரைந்து டெல்லிக்குச் செய்று இது குறித்து அவர்களிடம் கேட்டால் நிச்சயமாக மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும். ஆகவே அந்த வகையில் இந்த சட்டசபைக் கூட்டத்தொடருக்குள் இதற்கான முயற்சியினை அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களின் துணை இருக்கும்போது நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இது குறித்து நான் சொல்வதை விட அன்னை இந்திரா விடம் அவர்கள் சொன்னால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆகவே அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏறத்தாழ 20 ஆண்டுக்காலமாக மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் ஏதோ விரோதம் இருக்கின்றதோ என்ற அடிப்படையில் இருந்துகொண்டிருக்கின்றது. இந்த திட்டம் மிகவும் முக்கியமானது. தமிழகத்திற்கு மிகவும் பயன் தரக்கூடியது. கடல் வாணிபத்திற்கு மிகவும் உபயோகமானது. அப்படி இருந்தும் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் தருவதிலே கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கின்றது. கடந்த 20 ஆண்டுக்காலமாக இவ்வாறு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். சுருக்கமாகக் கேள்விதான் கேட்கவேண்டுமேயொழிய வரலாறுகள் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.



1980 ஆகஸ்ட் 7]

திரு. என். ஏ. பூங்காவனம் : இந்த திட்டம் குறித்து நமது ஆளும் கட்சி உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையிலே * * என்ற........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் அடுத்து திரு. செ. சிவசாமி.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1977 ஆம் ஆண்டு கடந்த பிறகு இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 106 கோடியாக உயர்ந்திருக்கின்றது. இப்படியே காலம் ஆக ஆக இதனுடைய மதிப்பீடுதான் உயர்ந்துகொண்டே போகின்றதே தவிர........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரலாறு தேவையில்லை. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, தொடர்ச்சியாக இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடுதான் உயர்ந்து கொண்டே போகின்றதே தவிர திட்டத்திற்கு இன்னும் ஒப்புதல் வரவில்லை. ஆகவே இப்படியே இதனுடைய மதிப்பீடு உயர்ந்துகொண்டே போய் கடைசியில் இது அதிகமான தொகை என்று சொல்லி அதன் காரணமாக மத்திய அரசு இதைத் தள்ளுபடி செய்கின்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடும். எனவே இந்தப் பிரச்சினையினை உணர்ந்து இதிலே இருக்கின்ற * * * * மீள்வதற்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அடுத்த வினா எண் 127.

டீசல் என்ஜின் பொருத்திய வாகனங்களுக்கு டாக்சி பெர்மிட் வழங்கல்.

வினா எண் 127— திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு டீசல் என்ஜின் பொருத்திய மட்டாடர், ஸ்டாண்டர்டு-20 ஆகிய வண்டிகளுக்கு டாக்சி பெர்மிட் கொடுக்க உத்தேசித்துள்ளதா ?

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : டீசல் என்ஜின் பொருத்திய மட்டாடர், ஸ்டாண்டர்டு-20 போன்ற 8-லிருந்து 10 பயணிகள் இருக்கைகளுக்கு மிகைப்படாமல் ஏற்றிச் செல்லும் வண்டிகளுக்கு டாக்சி பெர்மிட் வழங்குவது குறித்து மத்திய அரசு, மாநில அரசுகளின் கருத்துரைகளைக் கோரியுள்ளது. இது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 10-00]

திரு. சு. முத்துக் கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தற்போது இந்த முறை கேரளாவில் செயல்பட்டு வருகிறது. மக்கள் தங்கள் குடும்பத்தோடு சுற்றுலா செல்ல மிக வசதியாக இந்த வண்டிகள் இருக்கும். டீசலில் வண்டி ஓடுவதால் செலவும் குறைவு. அரசுக்கும் இவ்வண்டிகளை டாக்சியாக்குவதினால் வருமானம் கூடுதலாக கிடைக்கும். ஆகவே மத்திய அரசிடம் இப்போது தொடர்பு கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : அதைத் துரிதப்படுத்தி, வெகு சீக்கிரத்தில் இந்த முறையை தமிழகத்தில் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வாரா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றித்தான் அரசு ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, டீசலில் ஓடும் இதுபோன்ற கார்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சலுகைகள் என்ற முறையில் வழங்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வண்டிகளுக்கு டாக்சி பெர்மிட் கொடுப்பது பற்றித்தான் கேள்வி. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டாக்சி பெர்மிட் கொடுப்பதாக எனக்கு தகவல் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 3 பேர்கள் செல்லக்கூடிய சிறிய கார் ஒன்றை, டீசல் என்ஜினால் ஓடக் கூடியது, சிக்கனமானது, செலவு மிகவும் குறைவான அதை





சென்னையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் கண்டு பிடித்திருப்பதாகத் தெரிகிறது. அதை ஆதரித்து, முறைப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி டீசல் என்ஜின் பொருத்திய சில வாகனங்கள் பற்றி. நீங்கள் வேறு ஏதோ புதிய கண்டுபிடிப்பைக் கூறுகிறீர்கள்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள டாக்சிகளில் மீட்டர்கள் திருத்தப்பெற்றது என்று போட்டிருந்தாலும் கூட, ஏதோ ஒரு அட்டையைக் காட்டி அதிகமாக வசூலிக்கிறார்கள். அதை தடை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி டீசல் என்ஜின் பொருத்தப் பெற்ற மட்டாடர் போன்ற வண்டிகளுக்கு டாக்சி பெர்மிட் வழங்குவது பற்றி. ஆகவே இது பற்றி தனிக் கேள்வி போட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிற மட்டாடர் வண்டிகள் பாரம் ஏற்றிச் செல்கிற வண்டிகளா? ஆட்களை ஏற்றிச் செல்கிற வண்டிகளா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விதமாகவும் இருக்கிறது. பாரம் ஏற்றிச் செல்கிற வண்டிகளும் இருக்கின்றன. காரைப் போல தனியார் பயன்படுத்துகிற வண்டிகளும் இருக்கின்றன. அப்படி காரைப் போல தனியார்கள் பயன்படுத்துகிற வண்டிகளுக்குதான் டாக்சி பெர்மிட் கொடுக்கப்பட வேண்டும் என்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் விடுகின்ற திட்டம் முன்பு இருந்தது. ஆனால் இப்போது மினி பஸ்கள் அதிகமாக கிடைக்கவில்லை. ஆகையினால், அதை ஈடு செய்கின்ற முறையிலே, டீசல் என்ஜின் பொருத்திய இத்தகைய மட்டாடர், ஸ்டாண்டர்ட்-20 போன்ற வண்டிகளுக்கு பெர்மிட் வழங்கி உடனடியாக விடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே மினி பஸ் விடுவது சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மினி பஸ்கள் கிடைக்காத காரணத்தால், ஜீப் வகைகளைச் சேர்ந்த வண்டிகளை பயன்படுத்தலாமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதன் அடிப்படையிலே இந்த மட்டாடர் வண்டிகளுக்கு பெர்மிட் வழங்க அரசு முன் வரவில்லை. தனியார்கள் பயன்படுத்துகிற மட்டாடர், ஸ்டாண்டர்ட்-20 போன்ற வண்டிகள் பெரும்பாலும் வாடகைக்கே விடப்படுகின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு வருமானம் வருவதில்லை. ஆகையினால் இத்தகைய வண்டிகளுக்கு டாக்சி பெர்மிட் வழங்கலாம் என்று அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வண்டிகளுக்கு ஆந்திராவில் இப்பொழுது பெர்மிட் கொடுத்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் அப்படி பெர்மிட் கொடுக்கிற காலத்தில் தமிழக அரசு, கட்டணத்தை நிர்ணயிக்கையில், குறைந்த அளவு கட்டணம் வைத்து, ஏழை எளியவர்களும் பயன்படுத்துகிற வகையில் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் பரிசீலனை செய்துக்கொண்டிருக்கிறோம் என்று நான் இங்கே சொல்லியிருக்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தற்பொழுது தமிழகத்தில் இந்த முறையில் அல்லாமல் எவ்வளவு வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எந்தெந்த வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று தனிக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.

பவானிசாகர் அணை.

* குறுகிய கால வினா எண் 61—திரு ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டில் மின்சாரம் தடைபடும் நேரத்தில் ஜெனரேட்டர் வைக்க திட்டம் உண்டா?

(ஆ) திட்டம் ஏற்கனவே இருப்பின் விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: —

(அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: இந்த ஜெனரேட்டர் வைக்கும் திட்டம் குறித்து அங்கே நேரில் சென்று பார்க்கிறபோது அந்தப் பணிகள் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தால் அங்குள்ள ஏழெட்டு பஞ்சாயத்துக்களுக்கு மின்சார வசதியோடு கூட நீர்ப்பாசன வசதியும் கிடைக்க உதவியாக இருக்கும். ஆகவே அத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அதற்கு என்ன செலவாகும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி, பவானிசாகர் அணைக்கட்டில் மின்சாரம் தடைப்படும் நேரத்தில் ஜெனரேட்டர் வைக்க திட்டம் உண்டா? அதற்குப் பதில், ஆம். திட்டம் ஏற்கெனவே இருப்பின் விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா? அதற்குப் பதில், இது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே இதில் ஆமை வேகத்திற்கோ முயல் வேகத்திற்கோ இடமில்லை. அரசாங்கம் ஒப்புதல் அளித்த பிறகுதான் பணிகள் தொடங்கும். செலவு: ரூ. 1,55,500 ஆகும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: இதுபோன்ற ஜெனரேட்டர்கள் எந்தெந்த அணைக்கட்டுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: இந்த கருத்துருவே இப்போது தான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எல்லா அணைக்கட்டுகளுக்கும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1980 ஆகஸ்ட் 7

## 2. உரிமைப் பிரச்சினை

### ' துக்ளக் ' பத்திரிகை—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் 18—7—1980 அன்று 'துக்ளக் ' பத்திரிகை மீது ஒரு அவை உரிமை மீரல் குறித்தபிரச்சினையைப் பேரவையில் எழுப்பினார். இப்பிரச்சினையில், அப்பத்திரிகையிடம் விளக்கம் கேட்டுப் பின்னர் தீர்ப்பு அளிப்பதாகப் பேரவைத் தலைவர் அறிவித்திருந்தார்.

பத்திரிகை ஆசிரியர் தம் விளக்கத்தில், '' தங்கள் கடிதத்திலும் திரு என். எஸ். வி. சித்தன் எம். எல். ஏ. அவர்களின் அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ள ' துக்ளக் ' பத்திரிகை கேலிச் சித்திரத்தில் உரிமை மீறல் இல்லையென்றும், அது யாருக்கும் எந்தவித அவமதிப்பையும் ஏற்படுத்தவில்லையென்றும் நான் கருதுகிறேன் '' என்று கூறியுள்ளார்.

' துக்ளக் ' பத்திரிகையில் வெளியிலுள்ள ஒரு கேலிச் சித்திரம் குறித்தது இந்தப் பிரச்சனை. கேலிச் சித்திரங்களை பெரிதுபடுத்தி எடுத்துக்கொள்ள வேண்டாமென்றும், இம்மாதிரி பிரச்சினைகளில் உரிமை மீறல் போன்ற வலுவான ஆயுதத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம் என்றும் நான் கருதுகிறேன். இவற்றில் உரிமை மீறல் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுதல் தான் அவையின் கண்ணியத்தை மேம்படுத்தும் என்று கருதுகிறேன். எனவே, இது போன்ற பிரச்சினைகளில் பேரவை அதிக கவனம் செலுத்த வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயம், பேரவையின் கண்ணியத்தையும் பெருமையையும் மாசுபடுத்தும் வகையில் செய்திகள் வெளியிடுவதோ, கேலிச் சித்திரங்கள் வெளியிடுவதோ தவிர்க்கப்படவேண்டும் என்று பத்திரிகைகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, பேரவையின் அனுமதியோடு இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

* திரு என். எஸ். வி. சித்தன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். தங்களது தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் இந்த மன்றத்தின் மரபையும், கண்ணியத்தையும், இந்த மன்ற உறுப்பினர்களின் பெருமையையும் குலைக்கிற வகையில் ஒரு கேலிச்சித்திரத்தை வரைந்தார்கள் என்று நான் உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருந்தேன். தாங்கள் விளக்கம் கேட்டு தீர்ப்பு அளிப்பதாகச் சொன்னீர்கள்; விளக்கம் கேட்டிருக்கிறீர்கள். அந்த விளக்கத்திற்கு அவர் பதில் அளித்திருக்கிறார். அந்த விளக்கத்திற்கு பதில் அளிக்கிற அந்த பத்திரிகை ஆசிரியர் குறைந்தபட்சம் ஒரு வருத்தமாவது தெரிவித்திருக்கலாம். இது சாதாரண பிரச்னை அல்ல, அவர் வழக்கமாக





செய்து வருகிற செயல். அவர்களது நோக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். அதே மாதிரி அவர் வருத்தம் தெரிவித்திருந்தால் நீங்கள் பெருந்தன்மை காட்டலாம். இது மாதிரி தொடர்ந்து நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். குறைந்த பட்சம் வருத்தமாவது தெரிவித்திருக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பக்கத்திற்கும் தீர்ப்பு சொல்லியிருக்கலாம். பத்திரிகைகளுக்குக் கூட வேண்டுகோள் விட்டிருக்கிறேன். கேலிச் சித்திரங்கள் குறித்து அதிகமாக, ரொம்ப வேகமாக கவனம் செலுத்த வேண்டியதில்லை. கேலிச் சித்திரங்கள் என்றால் அந்த நேரத்தில் பார்த்தவுடன் சிரிப்பு ஏற்பட வரையப்படுவது. நானும் பத்திரிகை ஆசிரியராக இருந்திருக்கிறேன்.

[முற்பகல் 10–10]

திரு அ. ரகுமான்கான் : * * *

* * * * *

* * * * *

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—

* * * *

திரு. ரகுமான்கான் சொன்னதிலிருந்து இதுவரை நடைபெற்ற சம்பந்தப்பட்ட எல்லா குறிப்புகளையும் நீக்கிவிட்டால், சபையை ஒழுங்காக நடத்த ஏதுவாக அமையும்; எனவே அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

அடுத்து, அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

## 3. அரசினர் தீர்மானங்கள்

### அ. விதி 58-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் ஒரு நாளில் ஒரு பொருளுக்கு மேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி58 ஐ இன்று தளர்த்த வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) திருப்பத்தூர் காவல்நிலையத்தருகில் வெடிகுண்டினால் தாக்கப்பெற்று காவல்ஊர்தியில் இருந்தவர்கள் இறந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம். திருப்பத்தூரிலே போலீஸ், நக்சல்பாரிகள் 5 பேர்களைக் கைது செய்து காரில் ஏற்றி வரும்போது வெடிகுண்டு வெடித்ததனால் போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீசார் உட்பட 6 பேர் மரணம் அடைந்ததனால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர். திரு என். எஸ். வி. சித்தன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு கு. ரமணி, திரு என். வரதராஜன், திரு. ரா. உமாநாத், திரு செ. சிவசாமி. திரு உ. சுப்பிரமணியன், திரு. பி. சுந்தரம், திரு பாபு ஜனார்த்தனன், திரு. சு. பாலன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு த. வேணுகோபால் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி சில கருத்துக்களைச் சொல்கின்ற இந்த நேரம்—நெஞ்சை நெகிழச் செய்யக்கூடிய சம்பவம் நேற்றையதினம் வடார்க்காடு மாவட்டத்தில் நடைபெற்று, நேற்று மாலை பத்திரிகைச் செய்திகளாகவும், மற்றும் வானொலி போன்ற சாதனங்களில் செய்தியாகவும், இன்று காலைப் பத்திரிகைகளிலே விளக்கமான செய்தியாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது. பரப்பரப்பு மிகுந்த பதட்டமான சூழ்நிலையை உருவாக்கக்கூடிய இந்த சம்பவத்தை நாம் எத்தகைய நிலையிலே அணுகிடவேண்டும் என்பதற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்கள் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கிற, புரையோடிவிட்ட சில நிகழ்ச்சிகள், ஆதிக்கத்தை தகர்த்தெரிய வேண்டும் என்று ஆர்த்தெழுந்திருக்கிற உணர்வுகள், பொருளாதாரத்திலே படுபாதாளத்திலே போய்க்கொண்டுள்ள ஏழ்மை நிலை விவகாரங்கள் இவைகளின் காரணமாக உணர்ச்சிக் கொந்தளித்த சில இளைஞர்கள், நாட்டிலே பல்வேறு பகுதிகளில் தாங்கள் கொண்ட கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக தொடக்கூடாத, எண்ணியும் பார்க்கக்கூடாத வன்முறைச் செயல்களை பெரும் கருவியாக ஆக்கிக் கொண்டு கொலைகள் மூலமும்,



தாங்கள் கடைபிடிக்கின்ற வன்முறைச் செயல்கள் மூலமும் தங்கள் லட்சியம் ஈடேறும் என்று எண்ணி அதன் தொடர்பாக வடக்கே சில மாநிலங்களில் காணப்பட்ட சம்பவங்கள் மெல்ல மெல்ல தெற்கேயும் பரவி, குறிப்பாக தமிழகத்திலே தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் பல்வேறு கொலை நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

நக்சல்பாரி இயக்கம் என்ற பேரால் இந்த இயக்கத்தை நடத்துகிறவர்கள் தாங்கள் ஒரு குறிக்கோளுக்காக அந்த இயக்கத்தை நடத்துகிறோம் என்று குறிப்பிட்டாலும், அந்தக் குறிக்கோளை எய்திட அவர்கள் கையாளுகின்ற முறைகளை இந்த அவையிலே இருக்கின்ற எந்த உறுப்பினரும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவைக்கு வெளியே இருக்கிற ஏழ்மையிலே நெளிகின்ற சாதாரண, சாமானிய பொதுமக்கள் கூட இத்தகைய பயங்கரமான வன்முறை நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள். தாங்கள் வறுமையிலே பாதிக்கப்பட்டாலும்கூட, தாங்கள் பல சங்கடங்களிலே இன்றைக்கு அமிழ்த்தப்பட்டு, பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தினாலும் கூட, இத்தகைய சம்பவங்கள் நாட்டிலே உருவெடுக்கக் கூடாது என்பதிலே, சாதாரண, சாமானிய மக்களிலும் கூட ஆழ்ந்த எண்ணம் படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த அவை அறியும். எனினும், அடிக்கடி இந்த சம்பவங்கள் இப்போது அன்மைக் காலமாக வடார்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பெரிய முதலாளிகள், நிலப்பிரபுகள், நிலத் திமிங்கிலங்கள் செல்வந்தவர்கள், இவர்களை வேட்டையாடி வீழ்த்திவிடுவதன் மூலம் தங்களுடைய எண்ணம் நிறைவேறும் என்று, அத்தகைய இளைஞர்கள் அல்லது வாலிபர்கள் இந்த தீவிர இயக்கத்திலே பங்கு கொண்டு இருப்பது மிகமிக வருந்தத் தக்க ஒன்றாகும். இதிலே அவர்கள் மற்றவர்களைக் கொல்வது மாத்திரம் அல்ல, தாங்கள் ஏற்றிக் கொண்டிருக்கிற கொள்கைகள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக கடை பிடிக்கின்ற தவறான மார்க்கத்தின் காரணமாக, அவர்களும் அதிலே பலியாகிக் கொள்ளுகின்ற அந்தக் கொடுமையான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெற்ற காலத்திலே இப்படிப்பட்ட சம்பவங்கள் ஒன்றிரண்டு நடைபெற்று, அதிலே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சில நக்சலைட்டுக் கைதிகளுக்குக் கூட கழக அரசு காலத்தில் அவைகளை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொடுக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. ஏனென்றால் அவர்கள் கொண்டிருக்கின்ற கொள்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அல்லது உண்மையான

சோசலிசம், சமதர்ம சமத்துவம், ஏற்றத்தாழ்வற்ற நிலை நாட்டிலே உருவாகவேண்டும் என்று எண்ணுகின்றவர்களுக்கு அந்த இளைஞர்களுடைய உள்ளத்திலே ஆழப் பதிந்திருக்கின்ற அந்தக் கொள்கையின் பால் ஏற்படுகின்ற அந்த அன்பின் காரணமாகவும், இரக்கத்தின் காரணமாகவும்கூட இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனாலும் தொடர்ந்து நாள்தோறும் காலை மாலை என்கின்ற வேறுபாடு இல்லாமல் நடைபெற்றுக் கொண்டே இருக்குமானால் நம்முடைய நாட்டில் ரத்தச் சகதியிலே மனிதர்களுடைய தலைகளை தாமரை மொட்டுக்களாக மிதக்கவிடுகின்ற ஒரு சூழ்நிலைக்கு உள்ளாகி விடுமோ என்கிற கவலை, என்னை மாத்திரமல்ல, நாட்டிலே இருக்கிற அனைவரையும் இன்றைக்கு வாட்டிக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10-40]

வடாற்காடு மாவட்டத்தில் சில நாட்களுக்கு முன்பு நடேசனார் என்ற மிராசுதார் வெட்டிக் கொல்லப்பட்டார், தீவிர வாதிகளால், நக்சலைட்டுகளால் என்ற செய்தி வந்தது. அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று நான் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள கழக சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசியபோது கேட்டேன். அவருக்கு 10–12 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே 50,000–60,000 ரூ. சொத்து உடையவர்கள்கூட அந்த ஆதிக்கபுரியினர் பட்டியலில் வைக்கப்பட்டு, கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நயினார் என்பவர் 1 1/2 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்—திராவிட முன்னேற்றக்கழகத்தின் கிளைச் செயலாளராக இருந்தவர்—அவர் கூட இந்த நாக்சலைட்டுகளின் கொலை வெறிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார் ஓராண்டு காலத்திற்கு முன்பு.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இடைக்காலத்தில் நடைபெற்ற கவர்னர் ஆட்சியில்கூட, வடாற்காடு மாவட்டம் பொன்னேரி என்ற கிராமத்தில் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவராக இருந்த கேசவ ரெட்டி அவர்கள் இப்படி அவருடைய வீட்டிலேயே பாம் எறியப்பட்டு அவர் குடும்பத்தாரோடு, குழந்தை குட்டிகளோடுபிணமானார் என்று அந்த சோக செய்திகளை எல்லாம் நயம் கடந்த சில மாதங்களாகப் பத்திரிகையில் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

இத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கைது செய்து அந்த நிலைமையை அடக்கவேண்டும் என்பதற்காக தமிழக அரசு மிகத் தீவிரமாகக் கூட அதற்காக ஒரு





தனியான சிறப்புப் போலீஸ் அதிகாரிகளை எல்லாம் அங்கே நியமித்து, அத்ற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக சில அதிகாரிகள் அங்கே சென்று ஒரு கிராமத்திலே அந்த நக்சல் பாரி வாலிபர்களை கைது செய்து, அழைத்து வருகிற நேரத்தில் அந்தக் காரின் மீது குண்டு வீசப்பட்டதோ அல்லது பத்திரிகையில் வந்திருக்கிற செய்திகளைப் போல் (அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிற வரையில் எங்களுக்குச் சரியான விளக்கம் தெரிவதற்கு வழியில்லை) அந்தக் காரில் இருந்த நக்சல்பாரிகள் தங்களுடைய மடியில் கட்டியிருந்த குண்டுகளை வெடித்து, சேதம் உண்டானதோடு மாத்திரமல்லாமல், காரில் இருந்த 6 உயிர்கள் பலியாக்கப்பட்டு உள்ளன. அதிலே 3 உயிர்கள் கடமை ஆற்றுவதற்காக தங்களுடைய வாழ்வை ஒப்படைத்துக் கொண்டவர்கள்—காவல் துறையைச் சேர்ந்தவர்கள்—ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு காவல் துறை நண்பர்கள். இந்த 3 பேரும் பெரிய மிட்டா—மிராசு இல்லை; கோடீஸ்வரர்கள் அல்ல; நிலப்பிரபுக்கள் அல்ல; நிலத் திமிங்கலங்கள் அல்ல. சாதாரணமாக அரசாங்கத்தின் சம்பளத்தில் தங்களுடைய வயிற்றைக் கழுவிக்கொண்டு இருக்கின்ற சாதாரண அரசு அலுவலாளர்கள். அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்தார்கள். கைது செய்து கொண்டு வந்தார்கள் அது காவல் துறையினரின் கடமை. அதற்காக அவர்களும் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைக் கொல்கிற நேரத்தில் அந்தக் காரில் இருந்த கைது செய்யப்பட்ட நக்சல்பாரி கைதிகளும் தங்களுடைய உயிரை பலிகொடுத்து இருக்கிறார்கள்.

தன்னுடைய கடமையை ஆற்றுவதற்காகச் சென்று, தங்கள் உயிரை பலிகொடுத்த, அந்த 3 காவல் துறை நண்பர்களுக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக வீர வணக்கத்தையும், அதே நேரத்தில், தான் கொண்ட கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு தவறான மார்க்கத்தை எடுத்து, அதன் காரணமாக, அந்த மரணப் படுக்கையில் தங்களைத் தள்ளிக் கொண்ட அந்த பரிதாபத்திற்குரிய வாலிபர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இந்த நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படாமல் இருப்பதற்கு வழி என்ன என்பது சமுதாய ரீதியில், அரசியல் ரீதியில், பொருளாதார ரீதியில் அணுக வேண்டிய மிகப் பெரிய பிரச்சினை என்றாலும்கூட, நாட்டிலே அன்றாடம் சட்டம்-ஒழுங்கு, அமைதி இவைகளுக்கு அறைகூவல் விடுத்து, அதைச் சீர்குலைக்கும் முயற்சியில் இதுபோன்ற நிலை தொடர்ந்து நிகழா வண்ணம் அரசு மாத்திரமல்ல, அரசுக்கு உறுதுணையாக எல்லா கட்சிகளும் இருக்க வேண்டும் என்ற என்னுடைய பரிபூரணமான இருதய சுத்தியான எண்ணத்தை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மாத்திரம்மல்ல, இங்கே பேசுகின்ற ஒவ்வொரு கட்சி
யின் தலைவர்களும் கூட, அரசின் சார்பாக பேசுகின்ற
அமைச்சரும் கூட, அந்த தீவிரவாதிகளாக இருக்கும் வாலிபர்
களுக்கு, அந்த இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கக்
கடமைப்பட்டு இருக்கிறோம்.

உங்களுடைய கொள்கைகள் நிறைவேற இது அல்ல மார்க்கம்.
நாம் விவாதிக்கலாம். என்னென்ன குறைகள் உங்களுடைய
குறைகள், எந்தெந்த முறையில் அந்த கொள்கைகளை நிறை
வேற்ற வேண்டும். உங்களுடைய குறைகளை நாம் கலந்து பேசி
விவாதிக்கலாம். எனவே, வன்முறைச் செயல்களைக் கைவிட்டு
விடுங்கள். அந்த அணுகுமுறை தேவையில்லை. அந்த முறை
யில் நம்முடைய அணுகுமுறையை மாற்றி அமைத்துக்கொண்டு,
நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதற்காக, காவல்
துறையைப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லவில்லை. மக்
களின் உயிருக்கும், உடைமைக்கும், வீடுகளுக்கும், பாதுகாப்பு
அளிக்க வேண்டியது காவல் துறையினரின் கடமை. காவல்
துறை அந்தக் கடமையை ஆற்றித் தீர வேண்டும்.

அந்தக் கடமை ஆற்றுகிறபோது, அந்தக் களத்தில் உயிர்
விட்ட 3 போலீஸ் அதிகாரிகளுக்கு அரசின் சார்பாக முதலமைச்
சர் அவர்கள் 90,000—ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 30,000
என்கிற விகிதத்தில் அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு
இன்னும் கூட அதிகம் கொடுக்கலாம். கொடுத்தது குறைவு
என்று குற்றம் சாட்ட விரும்பவில்லை. அவர்கள் செய்து
இருக்கின்ற அந்த வீரச் செயலுக்கு, அவர்கள் புரிந்த அந்தச்
செயலுக்கு, தங்களுடைய இன்னுயிரை ஈந்தளித்த அவர்களுக்கு
30,000 ரூபாய் என்பதை ரூபாய் 50,000 என்று கொடுக்கலாம்.
இலட்சம் கூட கொடுக்கலாம். அப்படிக்கொடுத்தாலும் இழந்து
விட்ட அந்த உயிர்களை அந்தக் குடும்பத்தாருக்கு மீட்டுத்தர
நம்மால் இயலாது. அதைப்போலத்தான் அந்த காரிலே
இருந்து செத்துப்போய்விட்ட அந்த கைதிகள் நிலையும்.
எனவே, இதை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அணுகி,
தமிழகத்திலே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படுவதற்கு வழி
வகுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை
உருவாக்க அரசாங்கம் முன்வருகிற நேரத்தில் திராவிட முன்
னேற்றக் கழகம் அந்த ஒத்துழைப்பைத் தர தயாராக இருக்கிறது
என்பதை எடுத்துக்காட்டி, ஏன் நடைபெறுகிறது என்பதை
நோய் நாடி; அதனுடைய முதல் தொடக்கம் நாடி, அந்த
நோயை அகற்ற வேண்டும் என்பது பழமொழி; அதற்கேற்ப அரசும்
மற்றுமுள்ள கட்சிகளுடைய தலைவர்களும் இணைந்து செயல்பட
வேண்டும் என்பதற்காக அதைப்பற்றி விவாதிப்பதற்கு
அவையை ஒத்திவைத்து பேசுவதற்கு நீங்கள் நேரம் அளிப்பீர்கள்
என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தில் எனக்கு கொடுத்த
நேரத்தில் இந்த அளவுக்கு கருத்துக்களை எடுத்துச் சொல்ல
தாங்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.





<u>திரு. என். எஸ். வி. சித்தன் :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னதைப்போல அனைவரின் நெஞ்சங்களும் பதறத்தக்க
அளவுக்கு கொடுமையான, பேரதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி
நேற்றைய தினம் வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில்நடை
பெற்றிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் கதிரம்பட்டி
நடேச நயினார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது கத்தி
யால் குத்தி கொலை செய்யப்பட்டார். அந்த நயினார் பெரிய
மிராசுதார் அல்ல. ; அவருக்கு 4 அல்லது 5 ஏக்கர் நிலம்தான்
இருக்கிறது. அந்த கொலையை செய்ததாகச் சொல்லப்படும்
6 நக்சலைட்டுகளை கைது செய்து காரிலே ஏற்றிக்கொண்டு
வரும்போது, காலை நேரத்தில் திருப்பத்தூரில், அண்ணா நகரில்
அந்த கார் வரும்போது சிவலிங்கம் என்ற நக்சலைட் இளைஞர்
வெடிக்குண்டு வீசி, அதனால் 39 வயதுடைய முருகேசன் என்ற
காவலரும், 38 வயதுடைய ஜேசுதாஸ் என்ற காவலரும் மரணம்
அடைந்த செய்தி நெஞ்சை உருக்குகிறது. அந்த காரிலே இந்த
நக்சலைட்டுகளை கைது செய்து, பெரிய செயலை செய்துவந்த
காவல்துறை அதிகாரி 37 வயதான பழனிசாமி என்பவர் மருத்
துவ மனையில் மரணம் அடைந்து விட்டார். இன்னும் உன்
னிக்கிருஷ்ணன், மாசிலாமணி போன்ற காவலர்கள் மருத்துவ
மனையில் குற்றுயிராக இருக்கிறார்கள் என்ற செய்தி மிகுந்த
வருத்தத்தைத் தருகிறது. நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை
கண்காணித்து, அவர்களை கைதுசெய்து, இந்த வன்முறைச் சம்
பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்
இந்த இளம் காவலர்களை அரசு நியமித்திருக்கிறது. அவர்கள்
பணியை செய்யும்போது இந்த கொடிய நிகழ்ச்சி நடந்திருக்கிறது.
அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் பரிவான
இரங்கலைத் தெரிவிக்கிறேன். கடமையாற்றும்போது, உயிர்
துறந்த அந்த வீர இளைஞர்களின் குடும்பத்திற்கு
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்
னதைப்போல ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் கூட அந்த
இழப்பை ஈடுசெய்ய முடியாது இத்தகைய வன்முறை சம்பங்வகள்
தொடரக்கூடாது என்பதிலே ஆழ்ந்த அக்கறை காட்ட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, வடாற்காடு, தர்ம
புரி மாவட்டங்களில் நக்சல்பாரிகள் தலைதூக்க முடியாத அள
வுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு
இந்த விசேஷ போலீஸ் படையினர் இப்படிப்பட்ட கொடுமை
களுக்கு ஆளாகாமல் இருக்க இன்னும் அதிகமானவர்களை
உடனடியாக நியமிக்க வேண்டும். கடமையாற்றும் காவலர்
களுக்கு அதிக பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இவைகளைப்
பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர
அலுவல்களை ஒத்துவைத்து. இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 7

*திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைதலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் நேற்று நடைபெற்று இருக்கக்கூடிய துயரமான சம்பவத்தை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். காவல்துறையைச் சேர்ந்த 3 நபர்களும், 3 நக்சல்பாரி தீவிர ஊழியர்களும் மரணம் அடைந்திருக்கிறார்கள். இது பேரதிர்ச்சித்தரக்கூடிய செய்தி. அவர்களுடைய குடும்பங்கள் இன்று பெரும் துயருக்குள்ளாகியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக உயிர் பிரிந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சம்பவங்களின் கோர்வையைப் பார்க்கும்போது அரசுத் தரப்பில் கொடுக்கிற செய்தியிலிருந்துதான் விவரங்களைப் புரிந்துகொள்ள முடியும். கைதாகி ஒருவர் வந்தவுடனே அவரை சோதனை செய்துதான் நாம் லாக்கப்பில் வைக்கிறோம். ஆனால், வந்திருக்கிற செய்தியைப்பார்த்தால் கைதிகள் எப்படி வெடிக்குண்டை வைத்திருந்தார்கள் என்று அறிய முடியவில்லை.

[முற்பகல் 10—50]

ஆகவே, அதிலே ஏற்பட்ட சில சிக்கல்களின் காரணமாகவும் ஒரு பயங்கரமான வெடிவிபத்து ஏற்பட்டிருக்கின்றதோ என்று கருதவேண்டி இருக்கின்றது. ஆனால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலே சமுதாயத்தை மாற்றத் தகுந்தவர்கள் மக்கள்தான் என்று நாங்கள் கருதுகின்றோம். அப்படியல்லாமல் தனியார் பயங்கர வாதத்தால் இந்த சமுதாயத்தை மாற்றிவிட முடியாது. அதோடு அப்படி நினைப்பது பல சீர்கேடுகளையும் தொல்லைகளையும்தான் உண்டாக்கும் என்றுதான் நாங்கள் எண்ணுகிறோம். இதிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய பலர் கடந்த பல ஆண்டுகாலமாகவே பல மாற்றங்களை அடைந்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆரம்பத்தில் உருவான நக்சல்பாரி இயக்கம் இன்று பல்வேறு குழுக்களாகப் பிரிந்து அவர்களில் பலருக்கு மன மாற்றங்கள் ஏற்பட்டு அவர்கள் முன்பு போன பாதையைத் தவறு என்று உணர்ந்து வந்திருக்கக்கூடிய பெரும் பகுதியினர் இன்று உருவாகி வருகிறார்கள். அதையும் பார்க்கிறோம். இன்னொரு பக்கத்திலே இப்படிப்பட்ட சில தவறான கருத்துக்கள் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். ஆகவே, நிலைமை மாறி வருவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். தவறுகள் நடைபெறுவதை நாம் சீராகத் தடுக்க வேண்டும் என்ற வகையிலே இந்த மோசமான நிலைமையை சீர்திருத்தி இந்தச் சூழ்நிலையைத் தவிர்த்து ஒரு சுமூகமான சூழ்நிலையை உண்டாக்கக்கூடிய விதத்தில் நம்முடைய உணர்வுகள் பிரதிபலிக்கின்ற முறையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தி அமருகிறேன்.



1980 ஆகஸ்ட் 7]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலே நெஞ்சை உருக்குகின்ற வகையிலே 3 காவல்துறையினரும், 3 நக்ஸல்பாரிகளும் திடீரென்று இறந்தது பற்றி நான் கேள்விப்படும்போது இப்படிப்பட்ட நிலைமை எதிர்காலத்தில் நடக்கக்கூடாது என்பதிலே எந்தவிதமான கருத்து வேற்றுமையும், இல்லை என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் போலீஸ்காரர்களைப். பொறுத்தவரையில் அவர்கள் கைது செய்து அந்த நக்ஸல்பாரிகளைக் கொண்டு செல்கின்ற போது முன்பே அவர்களை நன்கு சோதனை செய்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆகவே அவர்கள் சரியான முறையிலே நடந்துக் கொள்ளவில்லை என்பதை கணக்கில் கொள்ளத்தான் வேண்டும். மேலும் தமிழகத்தில் நக்ஸல்பாரி என்பவர்கள் இப்படிப்பட்ட பயங்கரத் தன்மைகளின் மூலமாக நாட்டிலே ஒரு சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று தவறாகக் கருதுவதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட பயங்கரமான நிலைமைகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. இளைஞர்கள் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு சரியான முறைகளை கடைபிடிப்பதற்குப் பதிலாக தவறான முறைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையிலே ஜாதி உணர்வுகளையும் சமுதாய உணர்வுகளையும் தூண்டி விடுகின்ற காரணத்தாலேதான், இப்படிப்பட்ட தவறான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட தவறான முறையிலே இளைஞர்களின் மனத்திலே நஞ்சூட்டப்பட்டதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட கொடுமைகள் ஏற்படுகின்றன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அந்தக் குடும்பங்களுக்கு எங்களுடைய அனுபாத்தைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் இது குறித்து இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டும் என்ற முறையிலே சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி என்னுடைய கருத்தை நான் சொல்வதற்கு முன் இதைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் தன்னுடைய கட்சியின் சார்பாகவும் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையிலே மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினை இப்போது தமிழகத்திலே ஓரளவுக்குப் பரவி வருகின்றது என்ற வகையிலே ஆரம்பக் கட்டமாக இது இருக்கின்றது என்பதையும் வெவ்வேறு மாநிலங்களிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளின் தொடரோட்டம் போல இங்கேயும் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 7

ஆகவே மிக மிக எச்சரிக்கையாக நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டியிருக்கிறது என்பதை நான் முதலிலே சொல்லிக் கொள்கிறேன். பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் அனைத்தும் உண்மையாக இல்லை என்பதையும், ஓரளவிற்கு அவ்வப்போது வருகிற தகவல்களை வைத்துதான் அவர்கள் வெளியிடுகிறார்கள் என்பதையும், ஆகவே தீர விசாரணை செய்த பிறகுதான் என்ன நடந்தது ; எப்படி நடந்தது என்பதை விளக்கமாக, தெளிவாகத் தெரிந்துக் கொள்ள முடியும் என்பதையும் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையில் நான் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், இறந்தவர்கள் யாராக இருந்தாலும் நமக்கு அவர்களுடைய குடும்பத்தின் மீதும், அந்த உயிர்களின் மீதும் நிச்சயமாக அனுதாபமும், அக்கறையும் உண்டு என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்தோடும், கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்களுடைய எண்ணத்தோடும்,, மற்றும் இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் எண்ணத்தோடும் ஒருங்கிணைந்து அந்தக் கருத்துக்களை நான் ஏற்றுக் கொண்டு, அதை பகிர்ந்துக் கொள்ள விடும்புகிறேன்.

ஆனால், நடந்திருப்பது, நாம் விரும்பாத, விரும்ப முடியாத, ஏற்றுக் கொள்ள முடியாத அல்லது அனுமதிக்க முடியாத ஒன்றாகும். இதை மனதில் வைத்து, நாம் ஒரு எண்ணத்தையோ, கருத்தையோ, தெளிவையோ சொல்வதற்கு நம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழக அரசைப் பொறுத்த வரையில், தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும் என்பதற்காக உயிரைப் பணயம் வைத்த காவல் துறையைச் சேர்ந்தவர்களில் உயிரழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எந்த வகையில் நாம் அனுதாபத்தைத் தெரிவித்தாலும் அதை ஈடு செய்ய முடியாது என்பதை நானும் இங்கே குறிப்பிட்டுக் கூற விடும்புகிறேன்.

அதுபோலத்தான் இளைஞர்கள் எப்படி வழி தவறிச் செல்கிறார்கள் என்பதையும் இங்கே ஏற்கெனவே குறிப்பிட்டது போல நாம் உணர்ந்து, அதனை அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும், படித்தவர்களும் வெவ்வேறு பணியில் இருக்கக் கூடிய பெரியவர்களும், பிரமுகர்களும், சில ஆழமான கருத்து வாய்ந்தவர்களும், கட்சி சார்பற்ற நிலைமையிலே இருப்பவர்களும் கூட, இத்தகைய முயற்சியிலே ஈடுபடுகிறவர்களுக்கு ஒத்துழைப்புத் தருவது, நாட்டுக்கு நல்லது அல்ல என்பதை நானும் தெரிவித்துக் கொள்ள விடும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வெடிகுண்டு எறியப்பட்டதா ? அல்லது வெடிகுண்டு உள்ளேயே வெடிக்கப்பட்டதா என்பதை எல்லாம் இப்பொழுது நாம் ஒரு கருத்துக்குள்ளே, வட்டத்திற்குள்ளே வைத்துக் கொண்டு, அதைப்பற்றி விவாதம் செய்யாமல் இருப்பது, விசாரணைக்கும், அதில் ஆழ்ந்து செயல்பட இருக்கிற, நடவடிக்கை எடுக்க இருக்கிற காவல் துறையினருக்கும் உதவி செய்வதாகவும். குறிப்பாக மக்களுக்கும் கூட உதவி செய்வதாகவும் அமையும் என்று நான் கருதுகிறேன். என்ன நடந்திருக்கிறது என்பதை இன்னும் தெளிவாகத் தெரிந்துக் கொள்ள முடியாத நிலையில் எதையும் சொல்வது சரியாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கே உயர் அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். உடனடியாக அங்கே சென்று, நேரிடையாக கவனிக்க வேண்டிய, மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகளை, எவர்கள் சென்றால் விசாரணை சரியாக நடைபெற முடியுமோ, அத்தகையவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30,000 என்பது, பணியிலே இருக்கிறபோது இறந்தால், 10,000 ரூபாய் என்பதும் பணியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கையில் இறந்தால் மேற்கொண்டு 10,000 என்பதும் அது போக, மேலே 10,000 சேர்த்து 30,000 ஆக ஆக்கியிருக்கிறோம். அந்தந்த குடும்பங்களின் நிலைமைகளை நன்கு அறிந்து அதற்கேற்ப இந்த அரசு மேலும் ஆவன செய்ய வேண்டியதை செய்யும் என்பதை, இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த எண்ணத்தை வெளிப்படுத்திய எதிர்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு நானே இன்றைய தினம் வேலூருக்குச் செல்வதாக இருக்கிறேன். இன்னும் ஒரு மணி அல்லது 2 மணி நேரத்தில் புறப்பட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக இதில் இருந்து எந்த அளவிற்கு அரசு இதில் அக்கறையும், அனுதாபமும் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை என்பதையும், நடந்து விட்ட நிகழ்ச்சி தொடர்கதையாக ஆகாமல், தடுத்து நிறுத்த ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும், இந்தப் பிரச்சினையில், நிகழ்ச்சியில் என்ன உண்மை அடங்கி யிருக்கிறது என்பதை முழுமையாகத் தெரிவதற்கு முன்பாக, அல்லது தெரிந்துக் கொள்வதற்கு முன்பாக, அதைப்பற்றி இங்கே விவாதிப்பது, வேறு பல எண்ணங்களை மக்கள் மத்தியிலே தோற்றுவிக்கக் கூடும். அந்த நிலைமையை நாம் ஏற்படுத்தித்தராமல், இந்த அளவிலே என் வார்த்தையை நம்பி, அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல், ஒத்தி வைக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வற்புறுத்தாமல்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 7

அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இன்று வேலூருக்குச் சென்று திரும்பி வந்தபிறகு என்ன நிலைமை என்பதையெல்லாம் தெளிவாக அதிகாரிகள் மூலமாகவும் தெரிந்து, இந்த அவையிலே வைப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதற்காக சபையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## (ஆ) சென்னை நகரில், மண்ணெண்ணெய், சர்க்கரை விநியோக ஏற்பாடு.

அடுத்து, "தமிழ் நாட்டில்", குறிப்பாக சென்னை நகரில் மண்ணெண்ணை, சர்க்கரை போதுமான அளவு இருந்தும் அதை விநியோகிப்பதில் சீர்கேடு காரணமாக, தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திரு. ஆர். கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. ஆர். உமாநாத், திரு. கே. ரமணி, திரு. அ. ரகுமான்கான், திரு. எஸ் சிவசாமி, திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு மிக மிகத் தேவையான இந்த அத்தியாவசியப் பண்டங்கள், எண்ணெய் வகையறாக்கள் இவைகள் எல்லாம் கிடைப்பதில் மிகப் பெரிய கஷ்டமான ஒரு சூழ்நிலை இன்று உருவாகிவிட்டது. அதனால் மக்கள் மத்தியில் ஆத்திரமும், சங்கடமும், பொருள்களை வாங்க முடியவில்லையே அவை நியாயமான விலையில் கிடைக்கவில்லையே என்ற வேதனையும் விநியோகத்தில் மிகப் பெரிய தவறுகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்று நம்புவதால் மக்களுக்கு பலவிதத் துன்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையும் ஒன்றிரண்டு விஷயங்கள் மூலம் நான் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. கு. ரமணி]

மண்ணெண்ணெய், சர்க்கரை, சமையல் எண்ணெய் இவைகள் எல்லாம் கிடைப்பதற்கு அரிதாகிக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அவைகளின் விலைகள் தடுத்து நிறுத்த முடியாத அளவிற்கு, அண்மைக் காலத்தில் கண்டிருக்காத அளவிற்கு மேலே மேலே போயிருக்கிறது. தேங்காய் எண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 20 வரை போயிருக்கிறது. நல்லெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 18 வரை போயிருக்கிறது. கடலை எண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 14 வரை போயிருக்கிறது. இதேமாதிரி துவரம்பருப்பு, பயறு வகையறாக்கள் போன்றவற்றின் விலைகள் கணக்கு வழக்கு இல்லாமல் ஏறியிருக்கின்றன. காய்கறிகளை எடுத்துக்கொண்டால் கத்திரிக்காய் உட்பட விலைகள் ஏறி, மக்கள், சாதாரண நடுத்தர மக்கள் கூட வாங்க முடியாத அளவிற்கு விலைகள் ஏறியிருக்கின்றன. இந்த கடுமையான விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தேவை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதைச் சொல்லும்போது இந்த விலைகளைக் குறைப்பதற்காக நாம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது பற்றி ஆலோசனைகள் சொல்வது சரியாக இருக்கும். பதுக்கல்காரர்களின் கைவரிசை இதில் கடுமையாக உள்ளது. கிராமங்களில் உற்பத்தியாகி வரக்கூடிய காய் கறிகளுக்கு, அந்தக் கிராமங்களில் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. ஆனால் அந்தக் காய்கறிகள் நகரங்களுக்கு வந்தவுடன் இடைதரகர்கள் அதில் கொள்ளை இலாபம் அடிக்கும் ஆசையில் நகர மக்கள் சுரண்டப்படுகிறார்கள், கிராமங்களில் உள்ள உற்பத்தியாளர்களும் சுரண்டப்படுகிறார்கள், இதுதான் உண்மை. ஆகவே பதுக்கல்காரர்களின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கான உறுதியான ஏற்பாடுகளை அரசாங்க மட்டத்தில் எடுக்கவேண்டும். விநியோக முறையைச் சீர்படுத்த வேண்டும். கோவை நகரில் எனது வீட்டிற்குப் பக்கத்தில் 11-ம் நம்பர் கடை இருக்கிறது. நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் தலைமையின்கீழ் இயங்குகிற ஒரு இடம், அந்த இடத்தில் ஒரு மாதத்திற்கு 18,000 லிட்டர் மண்ணெண்ணை விற்கவேண்டிய இடத்தில் 9,000 லிட்டர் மண்ணெண்ணை கூடக் கொண்டுவராமல் மாதக் கடைசி வரை காத்திருந்து—அது பற்றி சப்ளை ஆபீசரிடம் விசாரித்ததில் அந்த மண்ணெண்ணையை கொண்டுபோய் விற்கவேண்டியவர்கள் கடைசிவரை எண்ணெய் எடுக்காமல் கடைசி நாள் எடுத்துக்கொண்டு போய், அதுவும் முழுவதும் எடுக்காமல் ஒரு பகுதியை விட்டுவிட்டு, அதை இரண்டு நாட்கள் கூட விநியோகிக்காமல் மிச்சமாகும் மண்ணெண்ணை முழுவதும் கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது என்ற தகவல் அதிகாரிகள் பக்கத்திலிருந்தே வருகிறது. இது அரசாங்கத்தின் கட்டுப்

பாட்டின் கீழ் இருக்கக்கூடிய ஸ்தாபனம் என்று சொல்வதற்கு வேதனைப்படுகிறேன். இதற்கு கடுமையான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து தேவை. கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் நிச்சயமாக கெடுதல்கள் ஏற்படும். ஒட்டுமொத்தமாக விலைவாசியேற்றம் முழுவதும் இந்த அரசால் கட்டுப்படுத்த முடியாது என்பது எங்களுக்குத் தெரியும்.

சர்க்கரை போன்ற சாதனங்களின் விலைகள் ஏறியிருக்கின்றன. இந்த விலை உயர்வுக்கு மத்திய அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. பம்பாய் போன்ற நகரங்களில் சர்க்கரை கிடைப்பதில்லை. இங்கே கூட கிலோ ரூ. 2.80 என்றுள்ள சர்க்கரை இன்று ரூ. 8-க்கு மேல் விற்கப்படுகிறது என்று சொன்னால் இந்திய அரசாங்கத்திற்கு இதில் பிரதான பொறுப்பு இருக்கிறது என்பதை நாம் உணருகிறோம். ஆனால் கையில் இருக்கிற பொருள்கள் கள்ளமார்க்கட்டுக்குப் போகாமல் நியாயமாக வினியோக அமைப்புகள் மூலம் மக்களுக்கு கொடுக்கவேண்டிய பொறுப்பு நம் அரசாங்கத்திற்கு இருக்கிறது அதற்கு மக்களுடைய கண்காணிப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அப்போதுதான் அதைத் தடுத்து நிறுத்த முடியும். வெறும் கொள்கைகளோ, ஆசைகளோ அல்லது எண்ணங்களோ மட்டும் இருந்தால் போதாது. இதனை நிறைவேற்றுகின்ற முறையிலே மக்களுடைய கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தி, இந்த நியாய விலைக் கடைகளிலே போதிய அளவுக்கு கொள்முதல் பொருள்களைக் கொடுத்து, சரியான முறையிலே விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதிலே குறிப்பாக, அதிகமான பெண்மணிகளை அங்கத்தினர்களாக போடுவது நல்லது. காரணம், அவர்கள் குடும்பத்திலே அனுபவிக்கின்ற கஷ்டம், எந்தப் பொருள் எப்படி கிடைக்காமல் இருக்கிறது என்பதை எல்லாம் அறிவார்கள். ஆகவே, இந்த அரசு இந்த முறையிலே அதிகமான பெண்மணிகளை, எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், இன்னும் பொதுச் சேவை செய்யக்கூடிய ஸ்தானங்களிலே உள்ள பெண்மணிகளையும் இந்த கண்காணிப்புக் குழுவிலே போட்டு, இத்தகைய கடைகளிலே விநியோகிக்கப்படுகின்ற பொருள்களின் எடை, அளவு, தரம், சாதனங்கள் எல்லாம் சரியாக விநியோகிக்கப்படுகின்றதா என்பதைக் கணக்கிட்டு, அதற்குத் தகுந்தாற்போல் ரிப்போர்ட் கொடுத்தால், உடனுக்குடன் அதிகாரிகள் அதன்மீது நடவடிக்கைகள் எடுத்துக் காரியங்கள் செய்தால், கொஞ்சம் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும். அப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டுமென்பதைக் கூறிக்கொண்டு, இன்றைக்கு



இந்த தமிழகத்திலே இருக்கின்ற நான்கே முக்கால் கோடி மக்களின் மனதிலே இருக்கின்ற கஷ்டத்தைப் போக்குவதற்கு, இந்த அவையை ஒத்திவைத்து தீர விவாதிப்பது நல்லது, அதற்கான வழிமுறைகளை வகுக்கலாம் என்று கூறி அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு இந்த மாமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களான சர்க்கரைக்கும், மண் எண்ணெய்க்கும் தட்டுப்பாடு தமிழ் நாட்டிலே, குறிப்பாக தமிழகத்தின் தலைநகரான சென்னை நகரிலே ஏற்பட்டிருக்கிறது. கடைகளிலே தாய்மார்கள் கியூவிலே நின்று வந்தாலும் கூட, மண் எண்ணெயும், சர்க்கரையும் கிடைக்காத ஒரு துர்பாக்கியமான நிலை இருக்கிறது. மக்களுக்குத் தேவையான மண் எண்ணெயும், சர்க்கரையும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கச் செய்யவேண்டியது இந்த அரசின் கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து இந்த அரசு தப்பித்துக் கொள்ள முடியாது.

காமராஜ் அவர்களின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு சேலத்தில் பேசிய மத்திய பெட்ரோலிய அமைச்சர் வீரேந்திர படேல் அவர்கள் தேவையான மண் எண்ணெயும், சர்க்கரையும் மத்திய அரசு அனுப்பியிருக்கிறது. ஆனாலும் மண் எண்ணெயும், சர்க்கரையும் தட்டுப்பாடு, அனைவருக்கும் கிடைக்கவில்லை என்று சொன்னால், அதற்கு மாநில அரசு தான் பொறுப்பு என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பெட்ரோலிய பொருள்களுக்கு அதிக வரி போடப்பட்டிருகிறது; மண் எண்ணெய்க்கு வரி போடவில்லை என்று மத்திய சர்க்கார் பெட்ரோலிய அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு மண் எண்ணெய் விநியோக முறையிலே, அதுவும் அரசின் அங்கிகாரம் பெற்ற வியாபாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் என்று கொடுக்கப்பட்டு வந்தது; அது இன்றைக்கு மறுக்கப்படுகிறது. அதைப்போலவே, கை வண்டிகளிலே வீடுகள்தோறும் கொண்டு வந்து மண் எண்ணெய் வழங்கப்பட்டது; வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு நாளைக்கு 100 லிட்டர் கொடுப்பதாக அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால், 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24-ஆம் தேதி முதல் இந்த அங்கீகாரம் பெற்ற கடைக்காரர்களுக்கு மண் எண்ணெய் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இந்த அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளின் கடைகளுக்கு ஏன் மண் எண்ணெய் வழங்கவில்லை என்று தெரியவில்லை. அந்த மண் எண்ணெய் எங்கே போய் விட்டது? அது பதுக்கப்பட்டு விட்டதா? அல்லது வேறு

வழியிலே போய்விட்டதா? ஏன் இந்த அங்கீகாரம் பெற்ற கடைக்காரர்களுக்கு மண் எண்ணெய் வழங்கப்படவில்லை? நிறுத்தப்பட்டிருப்பது ஏன்? என்று தெரியவில்லை.

அதைப்போலவே, சர்க்கரை இன்றைக்கு ஓபன் மார்க்கெட்டிலே கிலோ 9 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. சர்க்கரை தட்டுப்பாடு இருக்கின்றது. தாய்மார்களுக்கும், மற்றவர்களுக்கும் இன்றைக்கு சர்க்கரை கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. உற்பத்தி செய்யக்கூடிய மொத்த சர்க்கரையில் 65 சதவீதத்திற்கு அரசுக்கு லெவி கொடுத்தது போக, மீதி இருக்கிற 35 சதவீதத்தை தனியார் ஆலைகள் ஓபன் மார்க்கெட்டிலே தாங்கள் விற்றுக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டதன் காரணமாக, ஆலை முதலாளிகளும், வர்த்தக சூதாடிகளும் சர்க்கரையை பதுக்கிவைத்து, செயற்கைப் பஞ்சத்தை ஏற்படுத்தி கொள்ளை லாபம் அடித்துக் கொண்டு வருகிறார்கள்.

(முற்பகல் 11-10)

மக்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயும் சர்க்கரையும் கிடைக்கவில்லை. விலையும் அதிகமாக இருக்கிறது. இதற்கு அடிப்படையான சில காரணங்கள் சொல்லப்படுகின்றன. வர்த்தக சூதாடிகள் பதுக்கி வைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு தகவலையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், பர்மிட் இல்லாதவர்களுக்கு 'நான்-லெவி' சர்க்கரை வழங்கியிருக்கிறது. கோவையில் 122 சர்க்கரை மூட்டைகள் 14 போகஸ் பார்ட்டிகளுக்கு தரப்பட்டிருக்கிறது என்பதை அதிகாரியே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கோவையில் சில பினாமிகளுக்கு 85,000 டன் பெறுமான சர்க்கரை மூட்டைகள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி போகஸ் பார்ட்டிகளுக்கு சர்க்கரை வழங்கப்பட்டிருக்கிறது.

இன்று ஓட்டல்களுக்குத் தரப்படும் சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது. திருமண விழாக்களுக்குப் பயன்படுத்தும் சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது. சர்க்கரை, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மத்திய அரசுதான் பொறுப்பு என்று மாநில அரசு பொறுப்பை தட்டிக் கழிக்கக் கூடாது. பதுக்கல் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும். ஆகவே, இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய், சீனி போன்ற பொருள்கள் பிரதானமான பொருள்கள். சென்னை போன்ற டவுன்களிலேயே கிடைக்க



வில்லையென்றால் கிராமாந்திரங்களைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. கிராமங்களுக்கு சீனி, மண்ணெண்ணெய் போய்ச் சேருவதே இல்லை. இடையிலேயே விற்று விடுகிறார்கள். சீனி, மண்ணெண்ணெய் மிக அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. சிந்தாமணி அங்காடியிலேயே கிலோ ரூ. 8-30க்கு சீனி விற்கப்படுகிறது.

டீசலைப் பொறுத்தவரை விவசாயிகளுக்குப் பிரதானமான ஒன்றாக இருக்கிறது. டீசலை பங்குகளில் கூட திருட்டுத்தனமாக விற்றுவிடுகிறார்கள். ஸ்டாக் இல்லையென்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைகளின் காரணமாக இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று குற்றம் சாட்டுகிறேன். கச்சா எண்ணெயை துறைமுகத்திலிருந்து பங்குக்கு போகிற வழியிலேயே பல வருஷங்களாக பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமான எண்ணெயைத் திருடியிருக்கிறார்கள். சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் பேசக்கூடிய அளவுக்கு அந்தத் திருட்டுக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதைத் தடுக்கவேண்டும்.

அதே போன்று பதுக்கலை கண்டு பிடிக்க சரியான அமைப்பு இல்லாததன் காரணமாக சாதாரண மக்களுக்கு இப்படிப்பட்ட பொருள்கள் கிடைக்க சிக்கலாக இருக்கிறது. கடந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். விருதுநகரில் தீபாவளிக் காலத்தில் கடலை எண்ணெய் கிடைக்க முடியாத நிலை செயற்கையாக உண்டாக்கப்பட்டது. கிலோ 7 ரூபாய்க்கு விற்றது 11 ரூபாய்க்குப் போய்விட்டது. கலெக்டர் உடனடியாக நடவடிக்கை எடுத்து விருதுநகரில் உள்ள பல கொடவுன்களில் இருந்து லட்சக்கணக்கான டின்களைப் கைப்பற்றி மூன்று முதலாளிகளை, பதுக்கல்காரர்களை, கோடீஸ்வரர்களைக் கைது செய்தார். அவருக்கு கிடைத்த பலன் என்ன தெரியுமா! இங்கே இருக்கக்கூடிய ஒரு பிரஸிலே சாதாரண மானேஜராக போடக்கூடிய நிலைமைதான் இருந்தது. இப்படி அரசாங்கத்தினுடைய கொள்கை காரணமாக எத்தனையோ பேர்கள் திருடிக் கொண்டிருக்கிறார்கள், திருட்டுக்கு உதவியாக இருக்கிறவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டால்தான் தடுக்க முடியும். ஆகவே இந்த முக்கியமான விஷயங்களைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற முறையிலே இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே மட்டும் அல்ல, தமிழகம் முழுமையும் இன்றைய தினம் அத்தியாவசியப் பொருட்களினுடைய விலைவாசி கூடியிருக்கிறது. குறிப்பாக, சீனி, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலை நாளுக்கு நாள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஆகஸ்ட் 7

உயர்ந்துகொண்டே இருக்கிறது. மத்திய அமைச்சர் மாண்புமிகு வீரேந்திர பட்டில் அவர்கள் தமிழகத்திற்குப் போதுமான அளவுக்கு மண்ணெண்ணெயைக் கொடுத்திருக்கிறோம், இங்கே உள்ள அரசு கேட்கவில்லை என்ற நிலைமை தானே தவிர, கேட்கிற அளவுக்கு கொடுத்திருக்கிறோம் என்றும் சில மாதங்களுக்கு முன்பு கொடுத்ததை எடுத்துக் கொள்ளாத நிலைமை இதற்கு முன்னாலே இருந்தது என்பதையும் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

ஏழை எளிய நடுத்தர மக்களை பாதிக்கக்கூடிய விலைவாசி உயர்வுக்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்ற வகையிலே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். சில நாட்களுக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே நடைபெற்ற உணவுப் பொருட்கள் பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்றபோது கூட அரசு உடனடியாக இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதாரத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்துக்களையெல்லாம் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்ல, ஹோட்டல்களிலே உணவுப் பண்டங்களின் விலைகளை குறைக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால், அதற்குப் பின்னாலே ஓட்டல்களிலே உணவுப் பண்டங்களுடைய விலையை மேலும் உயர்த்தியிருக்கிறார்கள். அரசாங்கம் போதிய அதிகாரங்களைக் கையிலே வைத்துக்கொண்டு, இப்போது மட்டுமல்ல, எப்போதும் விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கின்ற முறையிலே அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

மாண்யுமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருமே விலைவாசி கூடியிருப்பதற்கு இந்த அரசாங்கத்தின் மெத்தனப் போக்குதான் காரணம் என்று சொல்லி இருக்கிறார்கள். சர்க்கரை விநியோகத்திலே ஒழுங்கீனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களிலே வழங்கப்படுவதற்காகக் கொடுக்கப்படுகிற சர்க்கரை கிராமங்களுக்கு முழு அளவில் போவதே கிடையாது. எந்த இடத்திலே அந்த சர்க்கரை எடுக்கப்படுகிறதோ அந்த இடத்திலேயே அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது, இதுபற்றி அரசாங்கம் சோதனைகள் நடத்தினால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் எல்லா இடங்களிலேயும் அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதைக் காண முடியும். பொருளாதாரத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு உதவி செய்கிற முறையிலே சர்க்கரை, மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது முக்கியமான பிரச்சினை. பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.



1980 ஆகஸ்ட் 7]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்தின் முக்கியமான தேவையான மண்ணெண்ணை, சர்க்கரை ஆகிய பொருள்களின் நிலைமை பற்றி விரிவாக விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பார்க்கிறபோது அத்தகைய பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. அதை வாங்குவதற்கு மக்கள் கியூ வரிசையிலே நிற்கிறார்கள். அந்த அவதியைப் போக்கவேண்டுமென்ற அளவிலே ஒத்திவைப்புத் தீர்மானம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதோடு சேர்த்து விலைவாசி உயர்வைப் பற்றியும் பேசினார்கள். விலைவாசி உயர்வு என்று சொல்கிறபோது அதைப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்தே கூட நாங்கள் விவாதிக்கத் தயார். ஆனால் இன்றைக்கு தனி நபர் தீர்மானம் வருகிற காரணத்தாலேயும் அது எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிற உரிமை என்ற காரணத்தாலேயும் உரிமைகளைக் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள் என்ற காரணத்தினாலேயும் நாங்கள் விலைவாசி உயர்வைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதாக இல்லை. மண்ணெண்ணையைப் பற்றியும், அந்தத் தட்டுப்பாடு குறித்தும் பேசப்பட்ட பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு, ரகுமான்கான் அவர்கள், மத்திய அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் இங்கே வந்ததையும், அவர்கள் மத்திய அரசால் எந்தவிதமான குறைபாடு ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியதைப்பற்றியும் எடுத்துச் சொல்லி, இங்கே இருக்கின்ற விநியோக முறையிலே ஏற்பட்டிருக்கின்ற கோளாறுகள்தான் அதற்குக் காரணம் என்கின்ற வகையிலே அவர்கள் பேசியதையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அந்தப் பத்திரிகைக் குறிப்பைப் பார்த்தேன். It is Kerosene, not Kamaraj. என்ற தலைப்பிலே அந்தப் பேச்சு வெளியிடப்பட்டிருக்கிறது. மறைந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறக்க வந்தவர்கள்—இன்னும் சொல்லப் போனால் காமராஜரைவிட மண்ணெண்ணெய் மீதுதான் ஞாபகம் இருந்தது; மண்ணெண்ணெயைவிட எங்களைத்தான் அவர்களுக்கு அதிகமாக ஞாபகம் இருந்தது என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 11·20]

ஆனால் உண்மை என்னவென்று பார்க்கின்றபொழுது, ஒரு அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாடின்றி நியாய விலையில் கிடைக்க வேண்டுமென்றால் இரண்டு முக்கியமான தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். ஒன்று, அந்தப் பொருள் கிடைக்கின்ற அளவு அதாவது, availability இன்னொன்று, அதை விநியோகிக்கும் தன்மை, distribution இந்த இரண்டும் சரியாக இருந்தால் அந்தப் பொருள் தட்டுப்பாடின்றி கிடைக்கும்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் விநியோக முறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பொருளைக் கிடைக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு முழுக்க முழுக்க உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் இந்தப் பொருளை விநியோகம் செய்கிறபொழுது அதைத் தனிப்பட்டவர்களிடத்தில் கொடுத்தால், பதுக்கல், கள்ள மார்க்கெட் ஏற்படும் ; ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காது என்பதால், பொது நிறுவனங்கள் மூலம், நியாய விலைக் கடைகள் மூலம் தமிழகத்தில் விநியோகிப்பதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் 17,000 நியாய விலைக்கடைகள் இருக்கின்றன ; இவற்றில், 15,000 நியாய விலைக் கடைகள் கிராமங்களில் இருக்கின்றன. மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் 100-க்கு 80 பங்கு இந்த நியாய விலைக்கடைகள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. இந்த நியாய விலைக் கடைகளை நடத்துவது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் என்பதத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, விநியோகிப்பதிலே பெரும்பங்கு—100-க்கு 80 பங்கு பொது நிறுவனங்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இது போதாது என்று இதை வைத்துத் தங்களது வாழ்வை நடத்துகின்ற கை வண்டிக்காரர்கள், சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். எனவே முழுவதையும் நாம் எடுத்துக் கொள்வதால் அவர்களது வாழ்வு பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்கின்ற அடிப்படையில் அவர்களுக்கும் தரப்பட்டு அவர்கள் மூலமாகவும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

அந்த வகையில் சென்னையில் 1,023 கை வண்டிக்காரர்கள் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் வாங்கி விநியோகம் செய்கிறார்கள்.

அதே போல சில்லரை வியாபாரிகள் 1,812 பேர் 100 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு வாங்கி சென்னையிலே விநியோகம் செய்கிறார்கள்.

கிராமங்களைப் பொறுத்தவரையில், கை வண்டிக்காரர்கள் 154 பேர், 50 லிட்டர் என்ற அளவில் நாள் ஒன்றுக்கு வாங்கி விநியோகம் செய்கிறார்கள்.

2,400 சில்லரை வியாபாரிகள், 500 குடும்பக் கார்டுகளுக்கு அளவுக்கேற்ற மண்ணெண்ணெயை ஒவ்வொரு வியாபாரியும் பெற்று விநியோகம் செய்கிறார்கள்.





இதுவும் போக, bulk consumers மொத்தமாகப் பயன்படுத்துகிறவர்களுக்கு 1,000 கிலோ லிட்டர் வரையில் மாதம் 1-க்குத் தரப்படுகிறது.

விநியோகத்தைப் பொறுத்தவரையில் 100-க்கு 80 பங்கு பொதுத்துறை நிறுவனங்களின் மூலமும், மீதி உள்ள 20 பங்கு அளவிற்குச் சாதாரண கைவண்டிக்காரர்கள், சில்லரை வியாபாரிகள் மூலம்தான் இந்த விநியோகம் நடைபெறுகிறது.

ஆகவே, இதிலே குறைகள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் குறைவு. குறைகளே இல்லை என்று சொல்லவில்லை ; குறைகள் நடைபெறுவதற்கான, பதுக்கல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு. இருந்தாலும் அந்த வாய்ப்புகளையும் தடுக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் உணவு வழங்கு துறை, உணவு வழங்குதுறை குற்றப் புலனாய்வுத் துறை, அதேபோல வருவாய்த்துறையிலே மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து தாசில்தார்வரை அனைவரும் இந்தக் கடைகளுக்கு — இந்த நியாய விலைக் கடைகள் உள்பட, கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்ற கடைகள் உள்பட — அவர்கள் சென்று எந்த நேரத்திலும் சோதிக்கலாம் என்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பார்க்கிறபொழுது 1979 ஆம் ஆண்டு பதுக்கல் 41 வழக்குகள், கள்ளச் சந்தை 61 வழக்குகள், விலைப் பட்டியல் வைக்காததற்காக 27 வழக்குகள், ஆக அதற்கு மேலும், 1,20,000 ரூபாய் பெறுமான 77,000 லிட்டர்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இறுதிவரையிலும் பதுக்கல் வழக்குகள் 94, கள்ளச் சந்தை வழக்குகள் 73, தவிர, 1,50,000 ரூபாய் பெறுமான 87,000 லிட்டர் மண்ணெண்ணெய் மேலும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, தவறு செய்கின்றவர்கள் அரசு ஊழியர்களாக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை, தற்காலிக வேலை நீக்கம், குற்ற நடவடிக்கை போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவிநியோகமுறையைப் பொறுந்தவரையிலும் எந்தவிதமான குறைபாடும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இல்லை என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

ஆனால், அதே நேரத்தில் நமக்கு கிடைக்கின்ற அளவு என்ன என்பதை பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் பேசுகிறபொழுது சொன்னார்கள், எவ்வளவு வேண்டுமானாலும் தருவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. அது கிடைக்காததற்கு முழுப் பொறுப்பும் மாநில அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு சித்தன் அவர்கள் மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர்கள் கூட, அந்தக்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1980 ஆகஸ்ட் 7

கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கூட, ஒருவேளை, அப்படித் தான் சொல்கிறார்கள். ஆனால், அது செயல்முறையிலே வருகிறபொழுதுதான், சொல்வதற்கும் செய்வதற்கும் சம்பந்தம் இல்லாமல் போய்விடுகிறது.

நம்முடைய அரசு, மத்திய அரசைக் கேட்கவே இல்லை என்று குறிப்பிட்டார்கள். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னாலே அமைச்சரவை இருந்தபொழுது, முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் அப்பொழுது டெல்லியிலிருந்த பெட்ரோலியம் அமைச்சரோடு இது குறித்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு திரு. பி. சி. சேத்தி அவர்கள் இந்தத் துறை அமைச்சராக இருந்தார். அவர் ஒரு நல்ல, நாமெல்லாம் வரவேற்கிற அறிக்கையைக் கொடுத்தார்கள். அது என்ன அறிக்கை என்றால்; சென்ற ஆண்டு, எவ்வளவு மண்ணெண்ணெய் செலவாகி இருக்கிறதோ, அதைப் போல் 16 சதவீதம் கூடுதலாக, அந்தந்த மாதத்திற்கு ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, அதிகாரிகள் மட்டத்திலே பேசுகிறபொழுது 5 சதவீதம் உயர்த்தி வருகிறோம் என்று சொன்னார்கள். நான் உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு ஜூன் மாதம், அவர்கள் ஒதுக்கியது 25,890 கிலோ லிட்டர்ஸ், ஆனால், இப்பொழுது 24,820 கிலோ லிட்டர்ஸ். இது 16 சதவீதம் உயர்வா என்பதை மட்டும் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். 25,000-லிருந்து, 24,000-ஆக இந்த ஆண்டு ஆகியிருக்கிறது. அதேபோல், ஜூலையில் 27,794-என்பதிலிருந்து 26,157 என்று குறைந்திருக்கிறது. சரி, இந்த ஆண்டைப் பார்க்கிறபொழுது கூட, ஜனவரியிலே, 32,344 மெட்ரிக் டன்ஸ். ஆனால், இப்பொழுது ஆகஸ்டில் 26,000 என்று இருக்கிறது. சரி, நாம் கேட்கவே இல்லையாவென்றால், நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று நேற்றைய தினம் மாண்புமிகு சிவசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள். நாம் கேட்கிறோம், ஆனால் கிடைக்கவில்லை.

அதோடு மட்டுமல்ல, இருக்கிற ஒதுக்கீட்டை, 30,000 லிட்டர் மெட்ரிக் டன் என்று தருவதை விட, ஒரு க்வார்ட்டருக்கு அலாட்மென்ட் கொடுங்கள், 3 மாதங்களுக்கு ஒன்றாகத் தாருங்கள் என்று கேட்கிறோம். ஏனென்றால் ரெயில்வே வேகன் ஷார்ட்டேஜ், அங்கே லேபர் ஸ்டிரைக் இந்தப் பிரச்னைகள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, குவார்ட்டர்லி அலாட்மென்டாகவும் கேட்கிறோம். நாம் கேட்பது ஒருபுறம் இருக்க, அவர்களே, சொன்னது, மாண்புமிகு திரு. பி. சி. சேத்தி அவர்கள் 16 சதவீதம் கூடுதல் தருகிறேன் என்று சொன்னார். மே மாதம் மாண்புமிகு வீரேந்திரபட்டீல், இங்கே ஆளுநர் ஆட்சி இருக்கிறபொழுது, வந்த இடத்திலே, இங்கே இருக்கிற அரசுத் துறை அதிகாரிகள் அவரிடத்திலே, கஷ்டம்



1980 ஆகஸ்ட் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

களை எடுத்துச் சொன்ன அந்த அடிப்படையில், குறைந்தது 10 சதவீதமாவது அவர்கள் உயர்த்தித் தருவார்களேயானால், அது மிகப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சர்க்கரையைப் பொறுத்தவரையிலே, 19,700 டன் மாதம் ஒன்றுக்குத் தருகிறார்கள். சர்க்கரையைப் பொறுத்த அளவிலே, அவ்வளவான தட்டுப்பாடு இல்லையென்பதுதான் இருக்கிற நிலை. விலை ஏறுகிறது என்றால், விலை ஏறுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதுதான் நான் சொன்னேன், அவற்றைப்பற்றி விளக்க வேண்டுமானால், அதிகமாக நேரமாகும் என்று. ஆக, சர்க்கரையைப் பொறுத்தவரையிலே 19,700 டன் கிடைக்கிறது. சென்னைப் புறநகர்ப் பகுதிகளிலே 5 கிலோவும் , நகராட்சி, நகரியங்களிலே 3 கிலோவும், நகரப் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்களிலே, 1 கிலோவும் தரப்படுகிறது. அதே போல், இந்த நுகர்ப்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய வற்றின் மூலம் அவை விநியோகிக்கப்படுகின்றன. தமிழகத்திலே மட்டும் 106 இலட்சம் குடும்ப அட்டைகளை நாம் கொடுத்திருக்கின்றோம். அவைகள் மூலமாகத்தான் விநியோகிக்கப்படுகின்றன. நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு எடுத்துச் செல்வதிலே நடுவிலே போய் விடுகின்றன என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். அப்படி இருப்பதாகத் தகவல் கிடைக்குமானால், தயவுசெய்து எங்களுக்குத் தெரிவித்தால், நிச்சயமாக அதன்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-30]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு கடையைப் பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். கோவை நகரத்தில் முதல் வார்டில் 11-ம் எண்ணுள்ள கடையில் மண்ணெண்ணெய் விநியோகத்தில் தவறு நடந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து அமைச்சர் விடையளிப்பாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பரிசீலித்து விடையளிப்பதை விட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : *

* * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் பேசியவைகளில் இருந்து அனைத்தையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதோடு மட்டுமல்ல. இத்தகைய கடைகளிலே கூட்டம் இருக்கிறது என்று சொன்னதற்கு நான் சொல்லிக் கொள்வேன். முதலாவதான காரணம் பெரும்பாலும் மாத ஆரம்பத்திலேதான் இந்தப் பொருள்களை வாங்குவதற்கு நிறைய பேர்கள் வருவதுண்டு. ஆகையினாலே மாத ஆரம்பத்திலே 'கியு இருப்பது தோன்றும் அதை வைத்துக் கொண்டு 'கியு' இருக்கிறது என்று சொல்வது சரியாக ஆகாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் 4000 மெட்ரிக் டன் மாதத்திற்கு நாம் சர்க்கரைக் கொடுக்கிறோம் 1-ந்தேதி முதல் 5-8-1980 வரையில் விநியோகம் ஆகியிருப்பது 2,200 மெட்ரிக் டன்னாகும். கிட்டத்தட்ட பாதி அளவுக்கு முதல் வாரத்திலேயே வாங்கி விடுகிறார்கள். அதற்குக் காரணம் சம்பளம் வருகின்றதுதான். அதனால்தான் ஓரளவுக்கு கூட்டம் இருக்கிறதே தவிர, இனிமேல் இருக்காது. மாத ஆரம்பத்திலே இருப்பது வாடிக்கை என்று சொல்லி சொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரையைப் பொறுத்தவரையில் திட்டக்குழுவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நாங்களும் பேசியபோது, முதல்வர் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். சர்க்கரை விநியோகத்தைப் பொறுத்த அளவிலே இப்போது லெவி, நான்லெவி என்று இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னது அதை முழுவதையுமே அரசே ஏற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு திட்டக் கமிஷனிலே சொன்னார்கள். ஏழைகளுக்கு நாங்கள் லெவி சர்க்கரை தருகிறோம் பணக்காரர்கள் வெளி மார்க்கட்டில் வாங்கிக் கொள்வார்கள் என்பதற்காக அதிக விலைக்கு சர்க்கரை கொடுக்கிறோம் என்ற வாதத்தை வைத்தார்கள். நம் சார்பிலே சொல்லப்பட்டது என்னவென்றால் நிலைமை தலை கீழாக மாறி, வெளி மார்க்கெட்டில் கிடைப்பதை ஏழைகள் வாங்க வேண்டிய நிலைக்கு வந்துவிடுகிறது. ஆகவே முழு விநியோகத்தையும் ஏற்றுக் கொள்ளுவதற்கு நமக்கு அதிகாரம் வேண்டும் என்று நம்முடைய அரசின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சரால் வற்புறுத்தப்பட்டது. அது, குறித்து நம்மை அவர்கள் விளக்கமாக எழுதச் சொல்லி இருக்கிறார்கள். நாம் மத்திய சர்க்காருக்கு இது குறித்து எழுதுவதாக இருக்கிறோம். ஆகவே இவ்வளவு நடவடிக்கை எடுத்திருக்கிற காரணத்காலே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 54 (6) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவனஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54(6)-ஐ இன்றைக்கும், 8-8-80, 11-8-80, 12-8-80 நாட்களிலும் தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. வேலூர், வாணியம்பாடி கல்லூரிகளில் பி.காம். பட்டப் படிப்பில் சேர்வதில் மாணவர்கள் இன்னல்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர், வாணியம்பாடி கல்லூரிகளில் பி.காம் பட்டப் படிப்பிற்கு சேர்வதில் மாணவர்கள் படும் இன்னல் குறித்து' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தற்போது கல்லூரிகளில் 8,670 பி. காம் முதல் வகுப்பு இடங்கள் உள்ளன. சென்னை பல்கலைக் கழகம் பி. காம் வகுப்புகளில் 50 இடங்கள் உள்ள வகுப்பில் மேலும் 10 இடங்கள் அனுமதித்துள்ளது.

வேலூர், வாணியம்படி ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில் பி. காம். மட்ட முதல் வகுப்பு உள்ள இடங்களின் எண்ணிக்கையும் அவைகளில் சேர்ப்பதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கையும் கீழ்வருமாறு :—

| | பி.காம். இடங்கள். | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| வேலூர். | | |
| 1. முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி, வேலூர். | 50 | 550 |
| 2. ஊரிஸ் கல்லூரி, வேலூர் | 60 | 600 |
| 3. டி. கே. எம். மகளிர் கல்லூரி, வேலூர். | 50 | 124 |
| 4. ஆக்ஸிலியம் கல்லூரி, காந்தி நகர், காட்பாடி. | 50 | 200 |
| 5. வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி. | 120 | 49[illegible] |

தற்போது இக்கல்லூரிகளில் பி.காம்.வகுப்புகளில் இட நெருக்கடி உள்ளது உண்மையே. இக்கல்லூரிகளில் மேலும் கூடுதலான பி. காம்.வகுப்புகளை திறப்பதற்கு முதல்வர்களிடமிருந்து தகுந்த பிரேரணைகள் கேட்கப்பட்டுள்ளன. அவைகளை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த அவை மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அந்தப் பகுதியில் மாலை நேரக் கல்லூரிகளாவது விரைவில் தொடங்கி இந்த நிலைமைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அரசு வகுக்குமா? இப்போது பி.காம். படிக்க அதிக மாணவர்கள் விரும்புவதால், அந்த வகுப்புகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்களிடமிருந்து மற்ற பட்டப்படிப்புகளை விட பி.காம். பட்டப்படிப்பிற்கு அதிகமாக மாணவர்கள் விண்ணப்பங்கள் வந்து குவிந்து இருக்கின்றன என்று தகவல் வந்து இருப்பதால், அதிக இடங்கள் ஒதுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்த முதல்வர்களிடமிருந்து அதற்கான பிரேரணைகள் கேட்கப்பட்டு இருக்கிறது. அது வந்தவுடன் விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## ஆ. பருத்திக்கழகம் இராமநாதபுர மாவட்ட, வட்டங்களில் மட்டரக பருத்தியை அதிகவிலைக்கு வாங்குவது

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ''இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூர், இராசபாளையம் வட்டங்களில் மட்டரகப் பருத்தியை திருவில்லிப்புத்தூர் மார்க்கெட்டிங் சொசைட்டி உறுப்பினர்களாகிய விவசாயிகளிடம் இருந்து அதிக விலை கொடுத்து பருத்திக் கழகம் வாங்குவதால், விவசாயிகளிடையே நிலவும் அமைதியின்மை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதிக விலை கொடுத்து வாங்குவதால் விவசாயிகளிடையே பதட்ட நிலை வருவதற்கு காரணம் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்னை குறித்து விளக்கமாக ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது.

இந்தியப் பருத்திக் கழகம் C tton Corporatihnof India திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம்





திருவில்லிப்புத்தூர் மற்றும் இராஜபாளையம் தாலூக்காக்களிலுள்ள உறுப்பினர்களிடமிருந்து எம். சி. யு. 5 பருத்தியை வாங்குகிறது. இச்சங்கத்தின் விவகார எல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூர், இராஜபாளையம், வைத்திராயிருப்பு, சிவகாசி, வெம்பக் கோட்டை, சாத்தூர் வட்டாரங்களையும், மதுரை மாவட்டத்திலுள்ள டி. கல்லுப்பட்டி வட்டாரத்தையும் கொண்டதாகும். ''தமிழ்நாடு பருத்திக் கழகம் என்ற பெயரில் நிறுவனம் ஏதும் இல்லை. உறுப்பினர்கள் தங்கள் விளைபொருள்களை விற்பனைக்காகச் சங்கத்தில் விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வருகிறார்கள். வாங்கும்போதே பருத்தியின் தரத்தை மதிப்பிடுவதற்கும், கொள்முதல் விலையை நிர்ணயிப்பதற்கும் சங்கத்திற்கு வழி காட்ட இந்தியப் பருத்திக் கழகம் சங்கத்திற்கு தன் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது. பருத்தியின் தரத்தை பொருத்தும் அன்றாடச் சந்தை விலையை ஒட்டியும் இந்தியப் பருத்திக் கழகத்தால் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கொள்முதலில் சங்கத்திற்குத் துணைபுரிய இந்தியப் பருத்திக் கழகம் 80 முதல் 90 பேர்கள் வரை ஒவ்வொருவருக்கும் தினக் கூலி 2,75 ரூபாய் என்ற அடிப்படையில் நியமித்துள்ளது. இவர்களுக்கான செலவு முழுவதும் பருத்திக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வாங்கப்படும் பருத்தியின் தரம் இந்தியப் பருத்திக் கழகத்தின் பிரதிநிதிகளால் சோதித்து ஏற்றுக் கொள்ளப் படுவதால், தரம் குறைந்த பருத்தியை வாங்கும் பிரச்சினை எழுவில்லை. விலை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு உறுப்பினர்கள் முன்னிலையில் பருத்தி எடைப் போடப்பட்டு, பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியப் பருத்திக் கழகம், 20–6–80 முதல் கொள்முதல் செய்யத் தொடங்கியுள்ளது. கொள்முதல் விலை ஒரு குவிண்டால் பருத்திக்கு 370 ரூபாயிலிருந்து 486 ரூபாய் வரையாக இருந்தது. 20–6–80 முதல் 20–7–80 வரை இந்தியப் பருத்திக் கழகம், 22,60,974 ரூபாய் மதிப்புள்ள 5,223 குவிண்டால் பருத்தியைக் கொள்முதல் செய்துள்ளது. சங்கத்திலுள்ள பருத்தி அரைவை இயந்திரத்தின் திறன் அளவு போதாமையால், 21–7–80 முதல் திருவில்லிப்புத்தூரில் கொள்முதல் செய்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பருத்திக் கழகத்தின் சார்பாகக் கொள்முதல் செய்யப்படும் பருத்தி, சங்கத்தால், அதன் அரைவைச் சாலையில் விதை பிரிக்கப்பட்டு பஞ்சும் விதைகளும் இந்தியப் பருத்தி கழகத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றன. சங்கத்தின் தினசரி அரைவைத் திறன் இரண்டு முறைப்பணிகளில் (ஷிப்டுகளில்) கிட்டதட்ட 120 குவிண்டால் பஞ்சு ஆகும். சங்கம் இதுவரை இந்தியப் பருத்திக் கழகத்திற்கு சுமார் 505 குவிண்டால் பஞ்சை ஒப்படைத்துள்ளது. அரைவைத் திறன் ஓர் அளவுக்குட்பட்டேயிருப்பதால், இந்தியப் பருத்திக் கழகம் அறிவுறுத்தியவாறு. தனியார் அரைவைச் சாலைகளில் விதை பிரிக்கப்படுவதற்காக சுமார்

[திரு. சி. பொன்னையன்] [1980 ஆகஸ்ட் 7

500 குவிண்டால் பருத்தி இராஜபாளையத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளது.முன்னரே கொள்முதல் செய்யப்பட்டுள்ள பருத்தி இருப்பு ஒரு மாதகால அரைவைக்குப் போதுமானதாகும். மேலும் அதிக காலம் இருப்பு வைத்த பிறகு அரைவை செய்தால் பஞ்சின் தரம் பாதிக்கப்படும் ஆதலால், திருவில்லிப்புத்தூரில் மேலும் கொள்முதல் செய்வது 21—7—80 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இராசபாளையத்தில் உறுப்பினர்களிடமிருந்து பருத்தி கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இராஜபாளையத்தில் அரைவை வசதி பருத்திக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவில்லிப்புத்துரிலும் 29—7—80 முதல் கொள்முதலை மீண்டும் தொடரத் திட்டமிட்டுள்ளது.

இந்தியப் பருத்திக் கழகத்தின் சார்பாக முகவர் முறையில் சங்கத்தால் பருத்திக் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த காலத்தில் சொந்தக் கொள்முதல் செய்து விற்றதில், சங்கம் இழப்பு அடைந்த காரணத்தால் அது சென்ற இரண்டு ஆண்டுகளில் சொந்தக் கொள்முதல் செய்யவில்லை. உறுப்பினர்களிடமிருந்து சங்கம் ஒரு சதவீதம் தரகு பெற்றுக் கொள்கிறது. பருத்திக் கழகம் தரகு தருவதில்லை. பருத்திக் கழகத்திடமிருந்து ஒரு குவிண்டால் பஞ்சுக்கு 30 ரூபாய் வீதம் சங்கம் அரைவைக் கட்டணம் பெறுகிறது. 25—7+80 வரை சங்கம் 15,147 ரூபாய் அரைவைக் கட்டணமாகப் பெற்றுள்ளது. பருத்திக் கழகத்திற்குக் கொடுக்கப்படும் பஞ்சின் விற்பனைத் தொகை சாதாரணமாக ஒரு வார காலத்துக்குள் அதனிடமிருந்து கிடைக்கிறது. அத்தொகை பருத்திக் கழகத்திடமிருந்து வந்தவுடன் உறுப்பினர்களுக்குக் கொள்முதல் செய்யப்பட்ட பருத்தியின் விலை கொடுக்கப்படுகிறது. 25—7—80 வரை 13,93,497 ரூபாய் உறுப்பினர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. விற்பனைத் தொகையிலிருந்து 13,935 ரூபாய் தரகாக பெறப்பட்டுள்ளது. தங்கள் விளைபொருளுக்கு இலாபகரமான விலை கிடைப்பதால் இந்த ஏற்பாட்டில் உறுப்பினர்கள் திருப்தியடைந்துள்ளதாகவும், அவர்களிடையே அமைதியின்மைக்குக் காரணமெதுவும் இல்லையென்றும் சங்கத்திலிருந்து அறியப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சில பிழை ஏற்பட்டதால், இப்படி அமைந்து விட்டது. நேற்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதில் இந்தியன் காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகள் சரிவர கொள்முதல் செய்யாத காரணத்தால், அதற்காக நம்முடைய மாநிலத்திலேயே கார்ப்பரேஷன் அமைக்கப்போவதாக அறிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மார்க்கெட்டிங் சொசைட்டிஆ அந்த இந்திய காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகள் கொள்முதல் செய்வது கிடையாது. ஏனெனில் அவர்கள் குவிண்டாலுக்கு 10 ரூபாய் கொடுக்க வேண்டும்



1980 ஆகஸ்ட் 7] [திரு. இரா. தாமரைக்கனி]

என்று கேட்கிறார்கள். அதைக் கொடுக்க விவசாயிகள் மறுப்பதால், மட்ட ரகப் பருத்தியை பெரும் வியாபாரிகளிடமிருந்து அவர்கள் கொள்முதல் செய்கிறார்கள். என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்து, மட்டரகமாக உள்ள பருத்தியை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் அந்த இந்தியன் காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கமாகப் பேசக்கூடாது. சுருக்கமாக கேள்வியைத்தான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பிரச்னை மைய அரசின் பேரில் உள்ள இந்தியன் பருத்திக் கழகத்தைப் பொறுத்தது. அந்த இந்தியக் காட்டன் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரைக்கும் இத்தகைய ஊழல்கள் நடைபெறுமானால், அது உண்மையிலேயே வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்கது. தக்க ஆதாரத்தை உறுப்பினர் தருவாரானால் மைய அரசுக்கு இது பற்றி எடுத்துக் கூறி தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு முயற்சி எடுக்கும்.

[முற்பகல் 11—40]

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, தொழிற் சங்கச் சட்டத்தின்படி பெண்கள் இரவில் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கக்கூடாது. இரவு 6 மணிக்குமேல் பெண்களை லாக்கப்பில் வைத்திருக்கக்கூடாது என்றும் சட்டம் இருக்கிறது. ஆனால் இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் இரண்டே முக்கால் ரூபாய் சம்பளத்திற்கு இரவில் பெண்களை வேலை செய்யச் சொல்கிறார்கள் ; பெண்கள் வேலை செய்கிறார்கள். அப்படி சுமார் 90 பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். இது சட்டத்திற்குப் புறம்பானது. ஆகையால் அந்த சொசைட்டிமீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி.பொன்னையன்: துணைத் தலைவரவர்களே அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது மார்க்கெட்டிங் சொசைட்டி. அல்ல. இந்தியன் பருத்திக் கழகத்தின் சார்பில் மார்க்கெட்டிங் சொசைட்டி பருத்தியை வாங்குகிறது. அவர்கள் வாங்குகிற பருத்தியை சுத்தப்படுத்துவதற்காக இந்தியன் பருத்திக் கழகம் பெண்களை அமர்த்தி வேலை வாங்கிகுறார்கள். 6 மணிக்குமேல் இந்தியன் பருத்திக் கழகம் பெண்களை அமர்த்தி வேலைவாங்குகிறார்கள் என்ற தகவல் இல்லை. அப்படி இருந்தால் அது தவறு என்று சுட்டிக் காட்டி அந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

## இ. சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

திரு. அ. ரகுமான்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே "சென்னை மாநகராட்சியில் தற்காலிகமாக வேலை பார்த்து வரும் 400 துப்புரவுத் தொழிலாளர்கள் தங்களை நிரந்தரத் தொழிலாளர்கள்களாக ஆக்க வேண்டுமென்று கோரி 19-7-1980 முதல் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே சென்னை நகரில் மக்கள் நெருக்கம் அதிகமாகவுள்ள பகுதிகளிலும் மற்றும் பல அங்காடிப் பகுதிகளிலும் பகல் நேரங்களில் குப்பைக் கூளங்களை அகற்ற இயலாததால், முதற் கட்டமாக 1979-ம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலைத் திங்களில் ஜார்ஜ் டவுன் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நெரிசல் பகுதிகளில் இரவு நேரத் துப்புரவு பணி தொடங்கப்பட்டது. இப்பணி மக்களாலும், பத்திரிக்கைகளாலும் பராட்டப்பட்டதால், நகரின் பிறபகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டது.

இரவு நேரத் துப்புரவு பணி சோதனை முறையில் தொடங்கப்பட்ட தற்காலிகத் திட்டமாகும். எனவே, இப்பணிக்காக அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள்.

இரவு நேரத் துப்புரவுப் பணியாளர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே மாநகராட்சி வட்டங்களில் மாற்றுப் பணியாளர்களாகப் பணியாற்றி வந்தவர்கள்தாம். இவர்களைத் தவிர வேலை வாய்ப்பகங்களிலிருந்தும் மாற்றுப் பணியாளர்கள் அடிப்படையில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரவு நேரத் துப்புரவுப் பணி இரவு ஒன்பது மணிக்கு தொடங்கி இரவு, ஒரு மணிக்கு முடியும். இப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு இரவு 10 மணி முதல் 11 மணிக்குள் ஒரு முறை தேநீர் வழங்கபடுகின்றது.

தென் சென்னையில் இரவு துப்புரவுப் பணியாளர்கள 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ம் நாளன்றும், வட சென்னையில் இரவு துப்புரவுப் பணியாளர்கள் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17-ம் நாளன்றும் பணிக்கு வரவில்லை. இரவு நேரப்படி, வார விடுமுறை மற்றும் பணிகளை வரன்முறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் விடுத்தனர். மாநகராட்சியின் தனி அலுவலரும் பிற அலுவலர்களும் இப்பணியாளர்களின் பிரதிநிதிகளை 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18-ம் நாளன்று



சந்தித்து அவர்கள் குறைகள் கவனிக்கப்படும் என்றும் எனவே உடனே பணிக்குத் திரும்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். இச்சந்திப்பின்போது, பணியை வரன்முறைப் படுத்துவது குறித்து அரசிடம் தெரிவிக்கப்படும் என்றும், பணியாளர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பணி புரிந்தால் அந்த நாட்களுக்கும் ஊதியம் வழங்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அவர்கள் பணிக்குத் திரும்ப ஒப்புக் கொண்டனர். வட சென்னை துப்புரவுப் பணியாளர்கள் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22-ம் நாளன்று பணிக்குத் திரும்பினர். ஆனால், தென் சென்னை துப்புரவுப் பணியாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. எனினும் பகல் நேரத்து துப்புரவுப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதிலே ஒரு சிறிய திருத்தம். இப்போது துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று விட்டார்கள். வாபஸ் பெற்றுவிட்ட காரணத்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்தது கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போது அவர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, வேலை நிறுத்தத்தை அந்த தொழிலாள தோழர்கள் வாபஸ் வாங்கி விட்டார்கள் என்பது உண்மை. ஆனால், வேலை நிறுத்தத்திற்கான காரணம் அப்படியே இருக்கிறது. 400-க்கு மேற்பட்ட நகரசுத்தித் தொழிலாளர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை ; நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையில் வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்றால் மீண்டும் வேலை நிறுத்தம் வர வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் 10 ஆண்டு காலமாக நகரசுத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இரண்டாண்டு வேலை செய்தாலே நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் துப்புரவுப் பணித் தொழிலாளர்கள், இரவு நேரங்களிலே துப்புரவு செய்கின்ற வகையிலே ஒரு தற்காலிகத் திட்டத்தின் அடிப்படையிலேதான் சேர்க்கப்பட்டார்கள். கடந்த 1979-ம் ஆண்டு ஜூன் திங்களிலேயிருந்து இந்தப் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இந்தப் பணி மக்களாலே பாராட்டப்பட்ட பணியாகும். ஆனால் இவர்களுக்கு வேலை இருப்பது எல்லாம் இரவு 9 மணியிலே இருந்து விடியற்காலை இரண்டு மணி வரைதான். ஆகவே அவ்வாறு இரவிலே

4 மணி நேரம்தான் அவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பணிகளை வரையறைப் படுத்த வேண்டும் என்ற அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றது. ஏற்கெனவே நானும் கூட அந்தத் துப்புரவுப் பணியாளர்களைச் சந்தித்து கடந்த 21-ம் தேதி அவர்களிடத்திலே பேசி இருக்கிறேன். ஆகவே அரசின் பரிசீலனை முடிந்த பிறகு அது பற்றிய முடிவினைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அரசு அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இரவு நேரங்களில் பணியாற்றுகின்றபோது கண்ணாடித் துண்டுகள் எல்லாம் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள் காலிலே செருப்பு கூட இல்லாமல் வேலை செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு செருப்பு வழங்க வேண்டும் என்பது ஒரு சிறிய கோரிக்கை. ஆகவே இந்தக் குறைந்த பட்ச கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே அவர்களுக்கு செருப்பு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் நிரந்தரமாக்கப் போகிறேன் என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு முன்பாகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நன்றியும் கூடச் சொல்லி விட்டார்கள். ஆனால் இது அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஆக்வே அந்த ஆய்வு முடிந்த உடனே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## ஈ. பரமக்குடி பகுதியில் கைத்தறித் துணிகள் தேக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பரமக்குடியில் ஏராளமான கைத்தறித் துணிகள் தேக்கம், அதனால் நெசவாளர்களிடையே கொந்தளிப்புக் குறித்து, திருவாளர்கள் மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பரமக்குடிப் பகுதியில் ரூ. 50 இலட்சம் பெறுமான கைத்தறித் துணிகள் தேங்கியுள்ளதால் அங்குள்ள நெசவாளர்கள் இடையே நிலவும் பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





*மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பரமக்குடி எமனேஸ்வரம் பகுதியில் சுமார் 6,900 கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 6,832 கைத்தறிகள் இப்பகுதியில் உள்ள 35 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் இயங்கி வருகின்றன. கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரும் திட்டம் நூறு சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுள்ள பகுதி இப்பகுதி ஆகும். இப்பகுதியில் இயங்கி வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் சேலைகள், பம்பர்க் சேலை வகைகள், இதர பருத்தி துணி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றன. இச்சங்கங்களின் ஒரு மாதத்திய உற்பத்தி சுமார் ரூபாய் 11 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணியாகும். இச்சங்கங்களுக்கு முகவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ரூபாய் 52.40 லட்சம் அளவுக்கு காசுக்கடன் வசதிகளை அளித்து வருகிறது. 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளில் இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்கு இருப்பு மதிப்பு ரூபாய் 33 இலட்சம் ஆகும். இது இச்சங்கங்களின் சுமார் மூன்று மாதத்திய உற்பத்தி அளவே ஆகும். இப்பகுதியில் உள்ள சங்கங்களில் இருந்து " கோ-ஆப்டெக்ஸ் " மே 1980-ல் ரூபாய் 1.75 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள் முதல் செய்துள்ளது. சமீபத்தில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தமிழ் நாடு அரசு வழி வகைக் கடனாக அளித்துள்ள ரூபாய் 5 கோடியின் உதவியால் சரக்கு தேக்கமுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலிருந்து மேலும் சரக்குகளைக் கொள்முதல் செய்ய தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. பரமக்குடி பகுதியிலும் இத்தகைய பிரத்தியேக கொள்முதல் செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளையும் பட்டுவாடா செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுபோக ஆலோசனைக் குழுக்களை நியமித்து தேக்கங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 37 கைத்தறிச் சங்கங்கள் இருக்கக்கூடிய பகுதியாக பரமக்குடி இருக்கின்றது. அந்த மிகப்பெரிய டவுனிலே கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர்கள் கைத்தறியை நம்பி இருக்கிறார்கள். அங்கே கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்குச் சரியான உதவி கிடைக்காததன் காரணத்தாலும் சரியான கொள்முதல் செய்யப்படாததன் காரணத்தாலும் அங்குள்ள வீவர்கள் மாஸ்டர் வீவர்களிடம் மாட்டிக்கொண்டு விழிக்கிறார்கள். இந்த நிலைமையிலே அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால் சரியான முறையிலே கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீண்ட விவாதம் வேண்டாம். சுருக்கமாக ஏதாவது கேட்க வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே அரசு கொள்முதல் செய்யாததன் காரணமாக அவர்களுக்கு ரிபேட் கூட சரியான முறையிலே கிடைக்கவில்லை. கடைசியாக 10,87,146 ரூபாய் அவர்களுக்கு ரிபேட் கொடுக்கப்பட வேண்டி இருக்கின்றது. நாளது வரையில் அது கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையிலே இருந்து அவர்களைக் காப்பாற்றும் முறையிலே கைத்தறித் துணிகளை உடனடியாகக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-50]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ரிபேட் சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்யும். பரமக்குடி சங்கங்களிலிருந்து 11 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு 52.40 இலட்சம் அளவிற்கு காசுக்கடன் வசதிகள் செய்யப்பெற்றிருக்கிறது. தேங்கிக் கிடக்கிற பல துணி வகைகளை விற்று, தேக்கத்தை நீக்குவதற்கும் ஆலோசனைக் குழு அமைத்து விரைவில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு மகிழ்ச்சி. தீபாவளி, பொங்கல், அண்ணா பிறந்த நாள், பொங்கல் போன்ற முக்கியமான விழா நாட்களில் தொடர்ந்து 20 சத வீத ரிபேட் அரசு கொடுக்குமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, அதுபோன்ற விசேஷ நாட்களில் ரிபேட் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## 6. தன்னிலை விளக்கம் :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. துரை ராமசாமி அவர்கள் தன்னிலை விளக்கம் ஒன்று சொல்ல வேண்டுமென்று அனுமதி கோரியுள்ளார். நான் அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.





திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 29 ஆம் தேதிய பேரவையில் நான் இல்லாத பொழுது என்னைப் பற்றி தவறான கருத்து உண்டாகும் வகையில் திரு. சுந்தரராஜன் அவர்கள் பேசி உள்ளார்கள்.

என்னைப் பொருத்தவரையில் முப்பது ஆண்டு காலம் காங்கிரசுக்காக பல சோதனைகளையும், வேதனைகளையும் ஏற்றுக் கொண்டு உழைத்துள்ளேன். 1971-ல் காங்கிரசுக்காக ரத்தத்தை சிந்தினேன். நிபந்தனை ஜாமீனில் 15 மாதம் வேதனை அனுபவித்தேன். இது விவரம் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்கும் தெரியும். இரு காங்கிரஸ் இணைப்பில் கோவை மாவட்ட பொறுப்பு ஏற்று பல இன்னல் பட்டு உழைத்துள்ளேன். இது விவரமும் நண்பர் நெடுமாறன் அவர்களுக்குத் தெரியும்.

ஈரோடு மாவட்ட தலைவர் பொறுப்பேற்று 65,000 உறுப்பினர்களை கட்சியில் சேர்த்தேன். தமிழகத்தில் முதல் மாவட்டம் என்ற நிலை உருவாயிற்று. இருபது தினங்கள் உண்ண நல்ல உணவு இல்லாமல், இருக்க இடமில்லாமல் காடு மலைகளெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து திருமதி இந்திரா காந்தி அம்மைக்கு சிக்மகளூரில் வெற்றிக் கனியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். திருமதி காந்தி கைது செய்யப்பட்டபோது தமிழக காங்கிரசின் முழு பொறுப்பேற்று 51,000 நண்பர்களை சிறைச்சாலை அனுப்பி வைத்த பெரும் பணியில் வெற்றி கண்டு உள்ளேன். 10 ஆண்டு காலம் தி.மு.க. தொகுதியாக இருந்த வெள்ளக்கோவில் 1977-ல் காங்கிரஸ் தொகுதியாக மாற்றினேன்.

காங்கிரசுக்கும் அதன் தலைவி திருமதி காந்திக்கும் உற்றவர்களாக உண்மைத் தொண்டர்களாக, உயிர் கொடுக்கும் உத்தமர்களாக, நல்லவர்களாக, நாணயமானவர்களாக இருந்தவர்களை திருமதி காந்தி அடையாளம் கண்டு கொள்ள முடியாத தடைக்கல்லாக, இரும்புத் திரையாக இருந்தவர்கள் மற்றவர்களை அவமானப் படுத்தி வெளியேற்றினார்கள்.

உழைப்பவர்களை உத்தமர்களை, நல்லவர்களை, நாணயமானவர்களை அறிந்து, தெரிந்து, புரிந்து, ஊக்குவித்து உயர்த்தி, பாராட்டி போற்றக் கூடிய நல்லுள்ளம் கொண்ட நல்ல தலைவன், தொண்டர்களின் கண்ணில் நீர் வடிந்தால் தன் நெஞ்சில் உதிரம் கொட்டும் உத்தமத் தலைவர், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற அண்ணாவின் வாக்கை காக்கும் தெய்வம், புரட்சித் தலைவர்.

திக்கற்ற திசை தெரியாத அவாமனப்படுத்தப்பட்ட காங்சிரஸ் தியாகிகள் நல்லவரை வல்லவரை நோக்கி அ. இ. அ. தி.மு.க.விற்கு செல்வதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

[திரு. துரை ராமசாமி] [1980 ஆகஸ்ட் 7

கம்யூனிஸ்ட் கட்சியின் தூணாக இருந்த வழக்கறிஞர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது மட்டும் நியாயமா?

பெரும் தலைவர் காமராஜ் மறைந்தவுடன் பல்லாயிரக் கணக்கான காங்கிரஸ் நண்பர்களைக் கூட்டி மாநாடு நடத்தி திருமதி இந்திராகாந்தி அவர்கள் அதில் கலந்துகொண்டு கட்சியில் சேர்ந்தது நியாயமா? செல்வி பி. டி. சரஸ்வதி, முன்னாள் அமைச்சராக இருந்தவரை காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது நியாமா? நிலையான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தது நியாயமா? இவைகள் எல்லாம் நியாயம் என்றால் நான் காங்கிரஸ் நண்பர்களை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ப்பதும் நியாயமே.

** ** ** ** **

அச்சுறுத்தி அரசு துறையைச் சேர்ந்தவர்களை வைத்து விரட்டி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் ஆள் சேர்ப்பதகாக திரு. சுந்தரராஜ் அவர்கள் உண்மைக்கு மாறாக குற்றஞ்சாட்டியுள்ளார். இது அபாண்டமானது அநியாயமானது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு.சுந்தரராஜ் அவர்கள் பேசியதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை ராமசாமி அவர்கள் ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்தார்கள். அவர்கள் அவர்களது இவ்வஃவாண்டு சேவை பற்றிச் சொன்னார்கள். அதில் நாங்கள் ஒன்றும் சொல்லப்போவதில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி பற்றி, காங்கிரஸ் கட்சி நிர்வாகம் பற்றி,*** என்று சொல்லி குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். தன்னிலை விளக்கமாக இருக்க வேண்டுமேயல்லாது சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருப்பது சரியல்ல அவற்றை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை ராமசாமி : என் மீது சாட்டிய குற்றம், காங்கிரஸை நான் குழப்புவதாகவும் உடைப்பதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளார்கள். அதற்கு விளக்கம் கூறுகிறவகையில் அதை

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1980 ஆகஸ்ட் 7] [திரு. துரை ராமசாமி]

நான் செய்யவில்லை, காங்கிரஸ் இயக்கத்தில் இருப்பவர்கள் செய்கிறார்கள் என்று குறிப்பிடுவதில் எந்தத் தவறும் இல்லை. அது தன்னிலை விளக்கத்திற்கு உரியதுதான் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(கூச்சல் — குழப்பம்).

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வது ஒரு உறுப்பினரைப் பற்றி இன்னொரு உறுப்பினர் பேசும்போது இந்த அவையில் இருக்கிற உறுப்பினர் குறித்து ஏதாவது ஒரு குற்றச்சாட்டு சொன்னால் உடனடியாக எழுந்து தன்னிலை விளக்கம் சொல்ல இந்த அவையில் உரிமை இருக்கிறது. அன்று ஒரு வேளை உறுப்பினர் வராமல் இருந்து அதைப்பற்றிக் கேள்விப்பட்டு அதற்குப் பிறகு தன்னிலை விளக்கம் சொல்ல உரிமை இருக்கிறது அவைத்தலைவருடைய அனுமதியோடு. அந்த வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு துரைராமசாமி அவர்கள் தன்னிலை விளக்கம் தந்திருக்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது சொல்லப்பட்ட குற்றச்சாட்டிற்கு மாத்திரம் விளக்கம் தருவது சரியா? அல்லது ஒரு கட்சியினுடைய நிலைகள், அந்தக் கட்சியைப் பற்றிய விமர்சனங்களை எல்லாம் தன்னிலை விளக்கம் என்று நீண்ட அறிக்கையாக தரலாம் என்று தாங்கள் தருவீர்களானால் இப்போது தந்ததைக் குறை சொல்லவில்லை, இதே உரிமையை, தன்னிலை விளக்கமாக அளிக்கிற உரிமையை மற்ற உறுப்பினர்கள் தங்களுக்கும் அளிக்க வேண்டும் என்றால் அப்போது யாரும் குறுக்கிடாமல் தாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

[நண்பகல் 12-00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அவருடைய தியாகத்தைப் பற்றி, காங்கிரஸ் கட்சியிலே அவர் எப்படி யெல்லாம் பாடுபட்டார் என்பதைப் பற்றி அவருடைய அரசியல் அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தன் அனுபவத்தைப் பற்றிச் சொல்வதிலே யாரும் குறுக்கே நிற்க முடியாது.. .. .. .. .. ..(கூச்சல், குழப்பம்).

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அன்றைய தினம் பேசிய குறிப்பு என் கையிலே இருக்கிறது. அதற்குத் தான் உறுப்பினர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமே தவிர காங்கிரஸ் கட்சிக்குள்ளே என்ன நடக்கிறது?

* * * * என்பதைப் பற்றியெல்லாம்

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

இந்த அவையிலே சொன்னால், நாங்களும் தொடர்ந்து இது போன்ற நிலைமைகளை உருவாக்க முடியும். அது எங்களுக்கும் தெரியும். ஆகவே, இதை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா அல்லது எக்ஸ்பஞ் செய்யப் போகிறீர்களா என்பதைத் தெளிவாக தெரிவிக்க வேண்டும் (கூச்சல் குழப்பம்).

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கட்சிப் பிரச்சினையாக இருக்கலாம் ; துரை ராமசாமி அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு இடையே உள்ள பிரச்சினையாக இருக்கலாம். ஆனால், இது இந்த அவையினுடைய, அவையிலே உள்ள உறுப்பினர்களுடைய பிரச்சினையாக இருக்கிறது. எங்களுக்கு ஒரு தீர்ப்பு தேவைப்படுகிறது. நாங்கள் எதிர்காலத்திலே எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு அன்றைக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி சுந்தரராஜன் குறிப்பிட்டார்கள். '' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காமராஜ் அவர்கள் பிறந்தநாள் விழாவிலே பேசும்போது காங்கிரஸ்காரர்கள் எல்லாம் ஒன்று சேர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்தார்கள். அதற்கு மாறாக அண்ணா தி.மு.க. உறுப்பினர் துரை ராமசாமி அவர்கள் அண்ணா தி.மு.க. விலே காங்கிரஸ்காரர்களை சேர்வதற்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். இது எப்படிப் பொருத்தம் '' என்று அவர்கள் கேட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் தனக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்றும், அந்த மாநாட்டிற்குத் தான் செல்வதா என்பதைப் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை என்றும், தான் செல்வது சந்தேகம் என்கின்ற அளவிலே இங்கே குறிப்பிட்டார்கள். தனக்கும் அதற்கும் பொறுப்பு கிடையாது என்று கூறிவிட்டார்கள். நண்பர் துரை ராமசாமி அவர்கள் தன்னிலை விளக்கத்திலே அப்படி ஒரு கடிதத்தை அனுப்பினாரா அல்லது அனுப்பவில்லையா என்ற அளவிலேதான் விளக்கம் தர வேண்டும். அல்லது ஏன் அனுப்பினேன் என்பதற்கு விளக்கம் அளிக்க வேண்டும். அதை விட்டு, ஒரு கட்சியைப் பற்றி மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ குறை கூறிப் பேசுவதற்கு இந்த அவையிலே தாங்கள் இன்றைக்கு உரிமை அளித்தால், தன்னிலை விளக்கம் என்ற பெயராலே ஒவ்வொரு உறுப்பினர்களும், நாளைக்கு என் மீது ஒன்றை பேசியிருப்பார்கள். அன்றைக்கு நான் சபைக்கு வராமல் இருந்திருப்பேன். மறு நாள் தன்னிலை விளக்கம் என்ற பெயராலே என்னுடைய விளக்கத்தையும் சொல்லி, அதே நேரத்திலே மறைமுகமாக ஆளுங் கட்சியைப் பற்றி குறை கூறி தன்னிலை விளக்கம் தந்தால், அதை ஏற்றுக் கொள்ள கடப்பாடு உடையவர்களாவீர்கள். அதற்குத் தான் தங்களிடமிருந்து நான் விளக்கம் கேட்கிறேன்.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்று கூறினார்கள் என்று கூறியிருக்கிறார்கள். முதலமைச்சர் என்ற முறையிலே தனக்கும்





அதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னார்களே தவிர, தனிப்பட்ட முறையில் அவருக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாமல் இல்லை.

(கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த முறையில் உறுப்பினர்கள் சத்தம் போடுவது வருந்தத் தக்கது. அவர்கள் தங்கள் கட்சிப் பிரச்சினைகளைக் கட்சியின் செயற்குழு பொதுக் குழுக்களிலே பேசிக் கொள்ள வேண்டுமே தவிர அவையிலே பேசுவது முறையாகாது. திரு. சுந்தரராஜ் அவர்கள் அன்று பேசியதைப் படித்துக் காட்டுகிறேன்—'' அவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது ?'' என்று பேசியிருக்கிறார். ''யோக்கியதை '' என்ற வார்த்தை வந்ததால் அதற்கு அவர் பதில் சொல்ல வேண்டி வந்தது.

திரு. நா. சுந்தரராஜ் : அதற்காக அவர் எங்களை அவமானப்படுத்துவதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற பகுதியை அவருடைய தன்னிலை விளக்கத்திலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரை ராமசாமி : தாங்கள் ஒரு சில வரிகளை நீக்கச் சொல்லியிருக்கிறீர்கள்.

'' அவர்தான் கார்டு அடித்து இன்றையதினம் அச்சுறுத்தி, அரசுத் துறையைச் சேர்ந்தவர்களை வைத்து மிரட்டி இன்று கட்சிக்கு ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார் '' என்று என்னைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார் அதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அது ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளிவந்து விட்டது, திரு. ஆர். உமாநாத் அவர்கள் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ம் நாளன்று மொழிந்த தனித் தீர்மானத்தின் மீது விவாதம் தொடரும். முதலில் திரு. ஜே. எஸ். இராசு பேசுவார்.

## 7. தனியார் அலுவல்கள்.

### தனித் தீர்மானம்—மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்—தொடர்ச்சி.

*திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தோழர்கள் உமாநாத் அவர்களும், அம்பிகாபதி அவர்களும், கிருஷ்ணன் அவர்களும், ஈஸ்வர

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மூர்த்தி என்கிற சொரணம் அவர்களும் கொண்டு வந்த மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் என்ற தனியார் தீர்மானங்கள் மீது கடந்த வாரம் இதே நாளில் நான் பேசி முடிக்கிற நேரத்தில் ' அமெரிக்கா, ரஷ்யா ' என்று குறிப்பிட்டேன். அதோடு அவைத் தலைவர் அவர்கள் நேரம் ஆகிவிட்டது என்று அவையை ஒத்தி வைத்தார்கள். ஆகவே, அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் கடந்த ஒரு வார காலமாக உணர்வு பூர்வமாக உலவிய நான் அதைத் தொடர்ந்து விட்ட இடத்திலிருந்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அமெரிக்காவைப் பற்றியும் ரஷ்யாவைப் பற்றியும் நான் குறிப்பிடுவதற்குக் கரரணம், இந்திய நாட்டு அரசியல் சட்டத்திற்கும் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளின் அரசியல் சட்டத்திற்கும் இருக்கின்ற வேறுபாடுகளை விளக்குவதற்காகத்தான் அந்த நாடுகளைப் பற்றி நான் குறிப்பிட்டேன். அந்த வகையில் உலகில் உருவான முதல் கூட்டாட்சி நாடான அமெரிக்க பூபாகம் கூட்டாட்சி முறையில் தனது அரசியல் சட்டத்தை அன்றைக்கு வகுத்துக் கொண்டது. அமெரிக்கத் திருநாட்டில் அது உருவான நேரத்தில் முதலில் அமெரிக்க ஐக்கிய குடியரசில் இணைந்த நாடுகள் பதின்மூன்று. அந்தப் பதின்மூன்று குடியரசுப் பகுதிகள் கூட மொழியாலோ, இனத்தாலோ வேறுபடாத நிலைமையில் இருந்தாலும் தங்களது தனித் தன்மை, தங்களது மாநிலங்களின் தனித் தன்மை பாதிக்கப்படக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருந்தன.

(பிற்பகல் 12–10).

மிக உறுதியாக இருந்த காரணத்தால்தான் ' அமெரிக்கா ' என்று அந்த நாட்டுச் சட்டத்திலே பெயரிடாமல் '' அமெரிக்க ஐக்கிய நாடுகள் '' என்று, 13 நாடுகளும் அன்றைக்கு அமெரிக்காவிலே இணைந்தபோது பெயரிட்டார்கள். அவர்களுடைய அரசியல் சட்டம் மாநிலத்திற்குத் தந்திருக்கிற பெயர் ' ஸ்டேட் ' ஆகும். பெயர் மட்டுமல்ல, ஸ்டேட் அந்தஸ்தையே அமெரிக்கா அந்த மாநிலங்களுக்கு வழங்கியிருக்கிறது. அதேபோல் அடுத்த மிகப் பெரிய கூட்டாட்சி நாடு ரஷ்யா. ஒரு கட்சியின் ஆட்சி என்ற தத்துவத்தை ஏற்கும் கம்யூனிஸ்ட் நாடாக இருப்பினும், அதிலே இணையும் பல்வேறுபட்ட இனத்தினரும் மொழியினரும் பாதிக்கப்படாத அளவுக்கு ஒவ்வொரு பகுதியும் தனித்தனி குடியரசுகள் என்ற அந்தஸ்தோடு அங்கே அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. யூனியன் ஆப் சோவியத் சோஷ்யலிஸ்ட் ரிபப்ளிக் என்று தான் அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதே தவிர நீண்டகாலமாக பழங்காலத்திலிருந்து அதற்கு வழங்கப்பட்டு வந்த ரஷ்யா என்ற பெயரை அந்தச் சட்டத்திலே குறிக்கவில்லை. இப்போதுகூட ரஷ்யாவிலே இருந்து வந்தேன் என்று யாரும் சொல்வதில்லை; அமெரிக்காவிலிருந்து வந்தேன் என்று யாரும்





சொல்வதில்லை. அங்கேயிருந்து வருகிறவர்கள் கூட சோவியத் நாட்டிலிருந்து வருகிறேன், ஸ்டேட்ஸிலிருந்து வருகிறேன் என்று தான் சொல்வார்களே தவிர அமெரிக்காவிலிருந்து வருகிறேன் அல்லது ரஷ்யாவிலிருந்து வருகிறேன் என்று சொல்வதில்லை. அதற்குக் காரணம் கூட்டாட்சி அமைப்புள்ள நாடுகளாக அங்கே மாநிலங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான். யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா என்பதும் சோவியத் யூனியன் என்பதும் கூட்டாட்சியைக் குறிக்கும் பெயர்களாகும். அசோஷியேட் என்றாலும் கூட அது மாநிலங்கள் இணைவதுதான். அசோஷியேட் செய்வது தான் அசோசியேஷன், அப்படி இணைந்த நாடுகளை அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் தங்களுடைய அங்கங்களாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே ஒவ்வொரு மாநிலமும் ரஷ்யத் திருநாட்டிலே தனித்தனிக் குடியரசுகளாக விளங்கி வருகின்றன. அத்துடன் அக் குடியரசுகள் விரும்பினால் பிரிந்துபோகும் உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலும் அப்படித்தான். இந்தப் பின்னணியில் இந்தியாவிலே அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டிருக்குமானால் நாம் மகிழ்ச்சியடைந்திருப்போம்.

யூனிட்டரி பார்ம் ஆப் கவர்ன்மென்ட் ஆக பிரிட்டன் இருந்தாலும்கூட அதனுடைய ஆளுகைக்குட்பட்ட காலனி நாடான இந்தியாவிற்கு 1919-ம் ஆண்டு சட்டப்படி மாநில சுயாட்சி உரிமைகளை ஓரளவிற்கு வழங்குவதற்கு முன் வந்தார்கள். 1919 ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் சிறப்பே அது வழங்கிய புரவின்ஷியல் அட்டானமியில் தான் அடங்கியிருக்கிறது. அதைச் சற்று விரிவாக்கி 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தைப் போட்டார்கள். அந்தச் சட்டத்திலேயும் மாநில சுயாட்சியினுடைய தன்மைகள் இன்னும் அதிகமாக வழங்கப்பட்டன. இந்த மன்றத்திலே மதிப்பிற்குரிய இராஜாஜியினுடைய படம் இருக்கிறது. அவர் முதல் முறையாக சென்னை இராஜதானிக்கு இங்கே தலைமைப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே அன்றைய அரசியல் சட்டம். வழங்கிய பெயர் அவருக்கு முதல்வர் அல்ல, பிரதமர். எனவே, மாநில முதல்வர்கள் எல்லாம் பிரதமர்கள் ஏன்றே அழைக்கப்பட்டார்கள். ஆகவே மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே, கூட்டாட்சி என்ற தத்துவம் இந்தியாவைப் பொறுத்தவரையில் 70, 80 ஆண்டு நெடிய வரலாற்றை உடையது. அதனால் தான் இடைக்கால அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை இந்தியாவில் ஏற்ற மறைந்த பிரதமர் நேரு அவர்கள், உருவாகப் போகும் புதிய இந்தியா '' ஒன்றிணைப்பாக '' அமையும். அதிலே உள்ள மாநிலங்கள் சுயாட்சிப் பெற்ற நாடுகளாக அரசியல் நிர்ணயச் சட்டத்திலே வரையறுக்கப்படும். எனவே உருவாகும் '' புதிய இந்திய யூனியனில் '' மாநிலங்கள் ' ஸ்டேட்ஸ் ' என்ற சொல்லால் அழைக்கப்படும். புராவின்ஸ் என்றோ பிரஸிடென்ஸி ஏன்றோ அழைக்கப்படமாட்டாது என்ற உறுதியைத் தந்தார்கள்.

ஆனால், விடுதலை வீரராக அந்த உறுதியைத் தந்த பண்டித நேரு அவர்கள் பாரதப் பிரதமராக வந்த போது அதை நிறைவேற்ற முடியவில்லை. தி.மு.க. கேட்பது மாநில சுயாட்சி, ஆனால் திரு. உமாநாத் அவர்கள் கேட்பது கூடுதல் அதிகாரங்கள்தான். இந்த மன்றத்திலே அன்றைக்கு விவாதத்திலே ஈடுபட்ட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கூட மாநில சுயாட்சி என்றாலே அது பிரிவினைக்கு வழி வகுக்குமோ என்ற சந்தேகத்தோடு பேசினார்.

மாநில சுயாட்சி என்றாலே சந்தேகக் கண் கொண்டு பார்த்து அதை அரசியலாக்க முயல்வது சிலரது வழக்கமாகிக்கொண்டு வருகிறது. இதைப்பற்றி தி.மு.க.வினராகிய நாங்கள் வேதனை படுகிறோம். சோவியத் யூனியனை ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையில் கம்யூனிச இயக்கத்தை நடத்திவரும் நண்பர் அம்பிகாபதி அவர்கள், பிரிவினை எண்ணம் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு இல்லை என்றால் அதிக அதிகாரம் கேட்பதும், மாநில சுயாட்சி கேட்பதும் ஒன்றுதான் என்று கூறினார்கள், இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு நாட்டில் பிரிவினை ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்பதற்காக அரசியல் சிந்தனையாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டதுதான் கூட்டாட்சித் தத்துவம். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக, கூட்டாட்சி ஏற்படுவது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று இதுவரையில் யாரும் சொன்னது இல்லை. ஆனால் மதிப்பிற்குரிய, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பொதுவுடைமைக்கட்சிக்காரர்கள் மாநில சுயாட்சி என்றால் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற தங்களது கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் இதைப்பற்றி நல்ல முறையில் சிந்திப்பார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டாட்சி இல்லாவிட்டாலும் எத்தனையோ நாடுகள் பிரிந்திருக்கின்றன. இங்கிலாந்திலிருந்து வேறு நாடுகள் பிரியவில்லையா ஸ்காட்லாந்து பிரியவில்லையா? அயர்லாந்து பிரியவில்லையா? பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரியவில்லையா? ஆகவே கூட்டாட்சி என்று வந்துவிட்டால் பிரிவினை வந்துவிடும் என்று சொல்வது தவறு. கூட்டாட்சி இல்லையென்றாலும் கூட விரும்பினால் நிச்சயமாகப் பிரிந்துபோக போராட்லாம் பிரியலாம் ஆகவே, கூட்டாட்சி என்றாலே பிரிவினைதான் என்ற உணர்வை யாரும் வளர்த்துக் கொள்ள வேண்டாமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிச்சயமாக இந்தத் தீர்மானம் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. என்னென்ன நல்ல நோக்கங்கள்? இன்றைக்கு பேசப்பட்ட விவாதங்களிலேயிருந்தும் நாம் காலங்காலமாக இந்த மன்றத்திலே பேசிவருகின்ற விவாதங்களிலேயிருந்தும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்பது தெளிவாகிறது. அதற்குச் சான்றாகக் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிப்பதைப்





பற்றிச் சொல்லலாம். இரண்டாம் உலகப் பெரும் போர் துவங்கப் படுகின்ற காலத்திலேயிருந்து இந்தக் கறுப்புப் பணம் வளரத் தொடங்கியது. நான் இதைப்பற்றி அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை. இந்தக் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்க எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எத்தனையோ சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. எத்தனையோ சலுகைகள் வழங்கப் பட்டன. ஆனாலும் கூட நிதி அமைச்சராக இருந்த திரு. ஒய். பி. சவான் அவர்கள் ஒரு சமயம் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக ஒரு மாற்று அரசாங்கம், போட்டி அரசாங்கம் நடத்தும் அளவிற்கு இந்தியாவிலே கறுப்புப் பணம் அதிகரித்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடிக்க எத்தனையோ கமிட்டிகள் போடப்பட்டன. இருந்தாலும் இந்திய நாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை, கணக்கில் வராத பணத்தைப் பற்றிய விவரம் இன்றுவரையில் யாருக்கும் தெரியாது. அது மூன்றாயிரம் கோடியா, ஏழாயிரம் கோடியா, பத்தாயிரம் கோடியா, பதினாறாயிரம் கோடியா என்ற உண்மையான கணக்கு யாருக்கும் தெரியாது. இந்தக் கறுப்புப் பணம் அரசியல் உலகில் எவ்வளவு பெரிய மாற்றங்களை உருவாக்கி இருக்கிறது. ஏழை மக்கள் மத்தியில் எவ்வளவு விபரீதமான எண்ணங்களை உண்டாக்குகின்றது என்பதை இந்த மன்றம் அறியாதது அல்ல.

* * * * * * *
* * * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. இராசு அவர்கள் * * * * கடைசியில் சொன்ன கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன். உறுப்பினர் அவர்கள் சீக்கிரத்தில் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு : Allow me to assert my position நான் சொல்லுவது * * * * * *

* * * * * * *
* * * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது அந்தப் பிரச்சினை இல்லை. அதிகாரம் பற்றிப் பேசுகிறோம். அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 ஆகஸ்ட் 7

<u>டாக்டர் மு. கருணாநிதி :</u> துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாநில சுயாட்சி பற்றி இந்த அவையில் திராவிட முன்னேற்றக்கழகம் தீர்மானம் கொண்டுவந்த அந்தக் காலத்திலேயே கறுப்புப் பணத்தை வெளிக் கொணரும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை; மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கக் கூடாது; அந்த அதிகாரங்களை மத்திய அரசும் வைத்திருக்க வேண்டும்; அதே நேரத்தில் மாநில அரசுக்கும் அந்த அதிகாரம் வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்தைத்தான் திரு. இராசு அவர்கள் சொல்கிறார்களே தவிர வேறல்ல.

<u>திரு. ஜே. எஸ். இராசு :</u> துணைத்தலைவர்வர்களே, யாரையும் இழிவுபடுத்த வேண்டும் என்று சொல்லவில்லை; கலைஞர் சொல்லிய கருத்தைத்தான் சொல்ல வந்தேன்.

[பிற்பகல் 12-20]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியது குறிப்பிலே இருக்கட்டும். தாங்கள் குறிப்பிட்டதைத்தான் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிட உத்தரவிடுகிறேன்.

<u>திரு, ஜே. எஸ். இராசு:</u> நான் சொல்ல விரும்புவது, எங்கள் தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த அந்தக் காலத்தில், கறுப்புப் பணத்தைப்பிடிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கும் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். அந்த அதிகாரத்தை மாநில அரசுக்குத் தாருங்கள். நீங்களும் கறுப்புப் பணத்தைப் பிடியுங்கள், நாங்களும் கறுப்புப் பணத்தைப் பிடிக்கிறோம் என்று பன்னி, பன்னி கூறினார். அந்த ஒரு சிறு வேண்டுகோளைக்கூட, இன்றைக்கு நிறைவேற்ற முடியாத காரணத்தால், மத்திய அரசு அனுமதிக்காத காரணத்தால், கறுப்புப்பணம் மிக அதிகமாக வளர்ந்து வருகிற காட்சியை நாம் பார்க்கிறோம். (மணியடிக்கப் பெற்றது) இதோ, நான் முடித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்திற்கு நான் திருத்தம் கொடுக்க விரும்பவில்லை. காரணம், நான் தீர்மானத்தை வரவேற்கிறேன். ஆனால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உமாநாத் தனது தீர்மானத்தில் "...... எனவே, உடனடியாக மாநிலங்களுக்கு நீதி மற்றும் ஏனைய இனங்களில் கூடுதல் அதிகாரம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்யும் வகையில் அவசர நடவடிக்கை எடுக்க, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச முதலமைச்சர்களின் மாநாடு ஒன்றினை இந்தியப் பிரதமர் கூட்ட வேண்டு மென்று மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்கின்றது" என்று கொடுத்திருக்கிறார். இதிலே என்னுடைய கருத்து என்ன வென்றால், எந்த ஒரு பிரச்சினை வந்தாலும், சட்டத்திருத்தமாக இருந்தாலும்,



அரசியல் சட்டப் பிரச்சினையாக இருந்தாலும் மாநில முதல்வர்களைக் கூட்டிப் பேசினால் முடிந்துவிடும் என்று கருதுவது வழக்கம். ஆனால், அனுபவம் மிக்க நம்முடைய மதிப்பிற்குரிய தோழர் உமாநாத் அவர்களும் இதே கருத்தை எப்படி கொண்டார்களென்று எனக்குத் தெரியவில்லை. முதல்வர்கள் என்று சொன்னால் மட்டும் போதாது. காரணம் சில மாநிலங்களிலே மைனாரிட்டி ஓட்டர்களாலே கூட முதல்வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது உண்டு எனவே முதல்வர்கள் மாறலாம். முதல்வர்கள் போய் விட்டால், பிறகு பிரச்சினைகள் போய்விடும். ஆனால் இத்தகைய பிரச்சினைகள் நிரந்தரமான, ஆனால் முக்கியமானவைகள்.... This is a permanent problem. எனவே இத்தகைய இன்றியமையாத பிரச்சினைகளைப்பற்றி முடிவெடுக்க முதலமைச்சர்களை மட்டும் வைத்துப் பேசுவது என்பது நியாயமல்ல திரு. உமாநாத் சொன்னதைப்போல் இது ஒரு தேசியப் பிரச்சினை. எனவே, அப்படி ஒரு குழு அமைத்து விவாதிக்க வேண்டுமென்றால், தேர்தல் கமிஷனாலே, அல்லது வேறு பல அமைப்புகளாலே ஒப்புக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகள், மைனாரிட்டி சமுதாயத்தினர், கல்வியாளர்கள், சட்டயியல் நிபுணர்கள் சமூக இயல்வாதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றுதான் அதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டும். அவ்வாறு பேசினால் நல்ல பலன் கிடைக்குமே. தவிர, முதல்வர்களால் மட்டும் நிச்சயமாக இத்தகைய கருத்துக்களுக்கு ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியாது. கேரளாவிலே இருக்கின்ற திரு. நயினார் பேசுவதைப் போல, இன்னொரு முதல்வர் பேசுவார் என்று எதிர்பார்க்க முடியாது. வங்கத்திலேயிருக்கின்ற திரு. ஜோதிபாசு பேசுவதைப்போல, இன்னொரு முதல்வர் கொஞ்சம் தீவிரமாகப் பேசுவார் என்று சொல்ல முடியாது.

நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் கூட இந்த மாநில சுயாட்சியைப்பற்றி மிக அருமையான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதைச் சொல்லாவிட்டால், இந்தத் தலைப்பில் நான் பேசுவதிலே நிச்சயமாக குறை இருக்கும் என்று கருதுகிறேன். மக்கள் சுயாட்சி வேண்டுமென்று ஆரம்பத்திலே முதல்வர் கூறினார். பிறகு, ஒரு ஆண்டு கழித்து, ஒரு விநோதமான விளக்கம் ஆளும் தரப்பிலே தரப்பட்டது. "பிரிவினை வேண்டோம், கட்டுண்டு வாழோம், சமநிலையில் இணைவோம், என்று. அதற்கான விளக்கங்களை நாங்கள் கேட்டோம். இன்று வரை கிடைக்கவில்லை. "எங்குதான் இந்தத் தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றனவோ என்று கடந்த 7, 8 ஆண்டுகளாக நாங்கள் துருவி, துருவிப் பார்த்தோம். இந்தப் பாவியினுடைய கண்களுக்கு அவைகள் தெரியவில்லை.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> தலைவர் அவர்களே,

<u>திரு. ஜே. எஸ். இராசு :</u> சார், ஐ எம் நாட் யீல்டிங்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள். முடிக்கின்ற நேரங்களிலேதான் பிரச்சனைகளை வளர்க்கிறீர்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : இந்த அவையை நம்பி, இந்த மன்றத்தை நம்பி, நம்முடைய திரு. உமாநாத் அவர்களும் திரு. அம்பிகாபதி அவர்களும் நல்ல ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், யாரை நம்பி கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். ''பிரிவினை வேண்டோம், கட்டுண்டு வாழோம், சமநிலையில் இணைவோம்'' என்று சொல்வதற்கும் கூடுதல் அதிகாரத்திற்கும் ஒத்து வருமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டுகிறேன்.

அடுத்து, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுவதுபற்றி, நம்முடைய முதலமைச்சர் ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார். அதாவது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதுபற்றி அரசு வக்கீல்கள், எனது கட்சியிலுள்ள சட்ட நிபுணர்களோடு கலந்து ஆலோசனை செய்து முடிவெடுப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார். இது ஒரு பெரிய முக்கியமான கொள்கை. தேசீய கொள்கை. அதில், அரசாங்கத்தினுடைய வக்கீல்கள், ஆளும் கட்சி சட்ட நிபுணர்களோடு—வார்த்தைகளே கூட மிக அருமையாக இருக்கிறது ; ''அரசாங்க வக்கீல்கள், ஆளுங்கட்சி சட்ட நிபுணர்கள் இவர்கள் இருவரும் கூடி, இந்த மாநில சுயாட்சி அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவது பற்றி பேசுவார்கள். ஆலோசனை சொல்வார்கள் அதன் பிறகு, முடிவு செய்வோம்'' என்றார். இவ்வாறு ஆண்டுக்கொரு நிலையை நம்முடைய முதல்வர் எடுத்து வருகிறார், அவர்தான் இந்த மாநிலத்தை ஆளுகிறார். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த மன்றத்தில் என்னுடைய கருத்துக்களை முடிப்பதற்கு முன்னால், கடைசியாக ஒரு கருத்தைக் கூற விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் முடித்து விடுங்கள். நான் கொஞ்சம் எலாஸ்டிக்காக இருந்தால், நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். நான் அலவ் பண்ண, பண்ண, நீங்கள் தொடர்ந்து பேசுகிறீர்கள். முடியுங்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : இந்த மாநில சுயாட்சிக் கொள்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏகபோக உரிமையாக்கப்பட்ட கொள்கை என்று பொதுவாக பேசப்படுகின்றது, கருதப்படுகின்றது. அந்த எண்ணம் நிச்சயமாக யாருக்கும் தேவை இல்லை. இந்தக் கழகத்தின் மீதுள்ள அபிப்பிராய பேதத்தால் இந்த அரிய தத்துவத்தின் மீது சந்தேகப்படத் தேவையில்லை. வெறுப்படையத் தேவையில்லை. அகில உலக கண்ணோட்டம் கொண்ட இண்டர்நேஷனல் அப்ரோச் உடைய கம்யூனிஸ்ட்



இயக்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளான அருமைத் தோழர்கள் உமாநாத் அவர்களுக்கும் அம்பிகாபதி போன்றவர்களுக்கும் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தை சந்தேகிக்க வேண்டாம். நிச்சயமாக மாநில சுயாட்சி கேட்பது நாட்டுக்காக, இந்த நாட்டு மக்களுக்காக, காரணம், எங்களுடைய உள்ளம் விசாலமானது. எங்களுடைய உணர்வு பரிசுத்தமானது. ஆகவே, நிச்சயமாக இந்த மாநில சுயாட்சி நம்முடைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருக்கின்ற இந்தக் காலத்திலேயே வந்து, அந்த மாநில சுயாட்சி உரிமைகளை முதல்வர் அவர்கள் பெற்று அதன் மூலமாக தமிழ் நாட்டுக்கு நன்மைகள் செய்வார்களேயானால் எங்களுடைய கழகத் தலைமையும், எங்களுடைய இயக்கமும், மனப்பூர்வமாக அதை வரவேற்கும். காரணம் ஆளை வைத்து பிரச்சினையை எடை போடுவதல்ல எங்கள் கொள்கை. மத்தியிலே யாரும் ஆளலாம். மாநிலத்திலே யாரும் ஆளலாம். யார் ஆளுகின்றார்கள் என்பதைவிட நாட்டு மக்களுக்கு என்ன நன்மை என்பதுதான் முக்கியம். திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்பது கட்சிக்காக அல்ல, எங்களுடைய கட்சியிலே நல்ல ஜனநாயகம் இருக்கிறது. சுயாட்சி இருக்கிறது என்று சொல்லி, இதை நாங்கள் கேட்பது நாட்டுக்காக என்பதைத் தெரிவித்து, வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். தோழர் உமாநாத் கொண்டுவந்துள்ள இத் தீர்மானத்தை வரவேற்று எனது உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய உறுப்பினர் இராசு அவர்கள் பேசியபோது, பிரிவினை வேண்டோம், கட்டுண்டு வாழோம், சமநிலையில் இணைவோம் என்பதற்கு விளக்கம் தெரியவில்லை என்று சொன்னார்கள். இதே மன்றத்திலே நானே பேசியிருக்கின்றேன்.

மாநில அரசினுடைய உணர்வுகளை மதிக்காத அளவில் மத்திய அரசு நடந்து கொள்கின்ற நேரத்தில் நாங்கள் கை கட்டிக் கொண்டு வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம். பிரிவினையை நாடோம் என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்து தமிழ் மாநிலம் தனியாகப் பிரிந்து போகவேண்டும் என்று சொல்ல மாட்டோம். சமநிலையில் இணைவோம் என்று சொல்லுகின்ற போது, மத்திய அரசுக்கு என்ன கொள்கை; மாநில அரசுக்கு என்ன அதிகாரம் என்று வரையறைத்துக் கொண்டு இருப்போம் என்று அன்றைக்கே தெளிவாக சொல்லி இருக்கிறேன்.

திரு. பி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று கேட்பது உரிமையே தவிர, மத்திய அரசுக்கு எதிரான வாதமல்ல என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதிக அதிகாரம் தேவை என்று காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற கர்நாடக மாநில

முதல்வர் குண்டுராவும் கேட்கிறார். வங்கத்தின் ஜோதிபாசுவும் கேரளத்து நாயினார் அவர்களும் கேட்கிறார், காஷ்மீரத்து ஷேக் அப்துல்லாவும் கேட்கிறார். இவைகள் எல்லாம் புரட்சித் தலைவர் அண்ணாவின் வழியில் மாநிலத்துக்கு அதிக அதிகாரம் தேவை என்று கேட்கும் கோரிக்கைக்கு வலிவூட்டுவதாக அமைகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசியல் சட்டத்திலே சில மாறுதல்கள் தேவை என கேட்பது நியாயமே, ஏனென்றால், சட்டத்தை இயற்றிய அம்பேத்கார் அவர்களுக்கும் நிம்மதி இல்லை. புனிதத்தைப் புகுத்த நினைத்தேன், ஆனால், சைத்தான் புகுந்துவிட்டது என்று சொன்னார் அவர். சட்டத்தை இயற்றிய அரசியல் நிர்ணயசபை வெள்ளையனை விரட்டி அடித்த ஜுபிலியண்ட் மூடில் கூடியது. எப்படிப்பட்ட அரசியல் அமைப்பு உருவாகவேண்டும் என்று முடிவாகாத நேரம் அது. பெடரலாக இருக்க வேண்டுமா, யூனிடரியாக இருக்க வேண்டுமா என்பது சந்தேகம். பிளக்சிபளாக இருக்க வேண்டுமா, ரெஜிட்டாக இருக்க வேண்டுமா என்பதும் சந்தேகம். மக்களின் நல்வாழ்வை கணக்கெடுக்காமல் அந்த நேரத்தில் குவாசி பெடரல் என்ற அமைப்பு உருவாகியது.

எந்த 1935 ஆம் ஆண்டு சட்டத்தை காலனி ஆதிக்கச் சட்டம் என்றும், மக்களால் ஒத்துக் கொள்ள முடியாத சட்டம் என்றும் காங்கிரஸ்காரர்கள் விமர்சித்தார்களோ, அதே சட்டத்தை மையமாக வைத்துத்தான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இத்தனையும் தெளிவாக சட்ட நிபுணர் Iver Jenning says "The Constitution derives directly from the Government of India Act, 1935. From which in fact many of its provisions were copied almost textually என்று குறிப்பிடுகிறார்.

(பிற்பகல் 12-30)

பிரிட்டிஷ் கான்ஸ்டிடியூஷனில் 13 கிளாஸ் தான் உண்டு. அமெரிக்கன் கான்ஸ்டிடியூஷனில் 37 கிளாஸ்தான் உண்டு. ஆனால் இந்தியன் கான்ஸ்டிடியூஷனில், உட்பிரிவு, ஷெட்யூல்களை நீக்கிவிட்டு பிறகு 395 கிளாஸ்கள் உண்டு. மத்திய அரசு, மத்திய பார்லிமென்ட், மாநில அரசு, மாநில அசெம்பிளி, நீதி மன்றங்கள் முதல் நகராட்சி வரை உள்ள அதிகாரங்கள் அத்தனையும் இந்திய அரசியல் சட்டத்தில் எழுத்து மூலம் வரையறுக்கப்பட்டு உள்ளது. அதனால் தான் 'Indian Constitution is a jungle' என்று குறிப்பிட்டார். இந்திய அரசியல் சட்டம் இவ்வளவு விரிவாக இருந்தும், தெளிவு பிறந்ததா என்றால் இல்லை என்பதுதான் வேதனை. Judiciaryஐ பொறுத்தவரையில் There is American in Indian Constitution. Powers and functions of President and கவர்னரைப் பொறுத்தவரையில், There is French in Indian Constitution. பார்லிமெண்டைப் பொறுத்தவரையில், There is British in Indian Constitution, ஆனால் விந்தை என்ன? There is no Indian in Indian Constitution.



அரசியல் சட்டத்தில் மத்திய அரசு பட்டியலில் 97 அதிகாரங்கள் உள்ளன. மாநில அரசு பட்டியலில் 60 அதிகாரங்கள் உள்ளன. கன்கரன்ட் லிஸ்டில் 47 அதிகாரங்கள் இருக்கின்றன, ஆனால் இந்த உலகத்திலேயே எந்த நாடாக இருந்தாலும் சரி, அது யூகோஸ்லாவியாவாக இருந்தாலும் சரி அமெரிக்காவாக இருந்தாலும் சரி, ஜெர்மன் நாடாக இருந்தாலும் சரி, கனடா நாடாக இருந்தாலும் சரி, யு.எஸ்.எஸ்.ஆர். நாடாக இருந்தாலும் சரி, சுவிஸ்சர்லாந்த் நாடாக இருந்தாலும் சரி, அது எந்த நாடாக இருந்தாலும் சரி, எந்த நாட்டிலும் ரிசிடியரி பவர்ஸ்—எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை. எஞ்சிய அதிகாரம் மத்திய அரசு எடுத்துக்கொண்டது என்பதை இந்தியா தான் செய்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்கரன்ட் லிஸ்டில் 47 அதிகாரங்கள் உள்ளன. அதன்கீழ் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் அதிகாரம் செலுத்தலாம். ஆனால் அந்த 47 அதிகாரங்களில் மாநிலங்களுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா என்றால் எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அத்தனை அதிகாரங்களும் மத்திய அரசே எடுத்துக்கொண்டுள்ளது. இதனால் தான் அச்சம் கொண்ட கருநாடக மாநிலத்தில் முன்னால் முதலமைச்சர் வீரேந்திரப் படீல் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். (இன்றைக்கு அவர்கள் மத்திய அரசில் மந்திரியாக இருக்கிறார்கள்) 'டெல்லியில் உள்ள மாநில அரசு கட்டிடங்கள் எல்லாம் வெளிநாட்டு துதரகங்கள் ஆகிவிடுமோ' என்று குறிப்பிட்டார்கள். எவ்வளவு வேதனை இருந்து இருந்தால் அன்றைக்கு அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லி இருப்பார்கள். இன்று அவருக்கு என்ன கருத்தோ எனக்குத் தெரியாது. ஐவர் ஜென்னிங்ஸ் கூறுகிறார்—

Indian Constitution is federal in form, Unitary in content.

வெளித் தோற்றத்தில் சமஷ்டி, உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியம், என்கிறார். ஏனென்றால், 7ஆவது ஷெட்யூலில்—ஸ்டேட் லிஸ்டில் 14ஆவது ஐட்டத்தில் விவசாயம்—விவசாயக் கல்வி இருக்கிறது. பயிர்நோய்கள் தடுப்பு இருக்கிறது.

மாநில அரசு பயிர்களை வளர்த்து விளைச்சல் செய்கிறது. உற்பத்தியைப் பெருக்குகிறது. அந்த உற்பத்தி செய்கிற பொருள் மீது மத்திய அரசு உரிமை கொண்டாடுகிறது.

விவசாய வளர்ச்சிக்காகத்தான் விவசாயக் கடன்களை குறிப்பிட்ட அளவிற்கு ரத்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் அதை மத்திய அரசு மறுக்கிறது. மாநில மனிதர்களாக இருக்கும் போது கடனை ரத்து செய்வோம் என்கிறவர்கள் மத்திய மந்திரி ஆனபிறகு மாநில அரசைக் கேளுங்கள், என்று சொல்கிறார்கள்.

'விளைச்சலுக்கு மாநில அரசு, விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசு' இது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

ஆகவேதான் சொல்கிறோம், விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கே தரவேண்டும். அப்படி தருவது தேசீய ஒருமைப்பாட்டிற்கு மேலும், மேலும் உறுதியளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த அரசியல் சட்டம் மத்திய அரசையும், பார்லிமெண்ட்டையும் உருவாக்கியதோ, அதே அரசியல் சட்டம்தான் மாநில அரசையும், மாநில சட்டமன்றத்தையும் உருவாக்கியது.

The Constitution is not for the Central Government. It is for the whole country.

இதில் மத்திய அரசு எஜமானும் அல்ல, மாநில அரசு வேலைக்காரனும் அல்ல. சம வாய்ப்பும், சம உரிமையும் அரசியல் அமைப்புச் சட்டம் பெற்றெடுத்த பிள்ளைகள். இதில் ஒன்றை ஒன்று குறைத்துக்கொள்ளக்கூடாது. இது தான் சமஷ்டி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டம் இயற்றும் உறவு, நிர்வாக உறவு, நிதி உறவு, திட்டமிடுதல், வளர்ச்சி பற்றிய உறவு, அவசர நிலை ஷரத்துக்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தில் கவர்னரின் பங்கு என்ற அமைப்பில் சில மாறுதல் தேவை எனக் கேட்பது மாநிலங்களின் உரிமை என்று நான் கருதுகிறேன்.

368 ஆவது பிரிவின்கீழ் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். மாநிலங்களுக்கு அதிக வருமானம் வருகிற அளவில், மாநிலங்களுக்கு பங்கு கொடுக்கும் அளவில் அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும். தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், 'பாப்புலேஷன் அண்ட் பெர்ஃபார்மன்ஸ்' அடிப்படையில் மாநிலங்களுக்கு 'ஆஸ் ஆஃப் ரைட்' என்ற அடிப்படையிலே உரிமை வேண்டும்.

அதைப்போல, மத்திய அரசின் 'சாரிட்டி ஆர் டிஸ்கிரஷனரி பவர்ஸ்' முறையில் பங்கீடு என்ற முறையில் மாற்றம் காண வேண்டும். அதற்கான பிரிவுகளை அரசியல் அமைப்புச் சட்டத்திலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வருமான வரி, சுங்க வரி போன்றவைகளை எப்படி பிரித்துக் கொடுப்பது என்பதைப்பற்றி நிதிக்கமிஷன் சிபாரிசு செய்கிறது. அந்த சிபாரிசுகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம் அல்லது நிராகரிக்கவும் செய்யலாம். அதன் விளைவாக மாநில அரசுகள் ஒதுக்கப்படுகின்றன.





என்ற உணர்வு காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களிலும் வளர்கிறது என்று சொல்கிறபோது காங்கிரஸ் அல்லாத மற்ற மாநிலங்களுக்கு வருத்தம் அளிப்பது நியாயம்தானே.

தமிழ்நாட்டுக்கு பணம் ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டுகிறது மத்திய அரசு. அந்த நிலை மாற வேண்டும் என்பதற்கு சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு 10.8 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.5 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.1 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சதவீதம், ஆனால் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.1 சதவீதம் என்றால் இதன் பெயர் பாரபட்சம்தானே. இது நியாயம் தானா? என்று கேட்க ஆசைப்படுகிறேன். மத்திய அரசு தமிழக அரசை ஏமாற்றுகிறது என்று சொல்லாவிட்டாலும் உரிமையைத் தர மறுக்கிறது என்று சொல்ல உரிமை உண்டு என நான் கருதுகிறேன்.

மத்திய அரசு மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டியது அவசியம். ஆதலால் இந்தியாவின் ஒருமைப்பாடு (Political Unity of India) இந்திய நாட்டின் பொருளாதார வழிபட்ட ஒற்றுமை (Fiscal Unity) இந்தியாவின் பாதுகாப்பு அதிகாரம், வெளிநாட்டு விவகாரம், நாணயச் செலாவணி ஆகியவை மத்திய அரசிடம் இருக்க வேண்டும். ஏனென்றால் மத்திய அரசு கட்டாயமாக பலமாக இருந்திட வேண்டும் என்பதற்காக. அதே சமயம் உள்நாட்டில் கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, சமூக நீதியுடன் இணைந்த விநியோக உரிமை Social Justice ஆகிய அதிகாரங்கள் மாநில அரசிடமே இருந்திட வேண்டும். தொழில்களை தொடங்கும் லைசென்சுகளை வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கே இருக்க வேண்டும். 100 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டுமே மத்திய அரசு லைசென்ஸ் வழங்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்க மறுத்தாலும் Consumers' Industries and Labour Intensive Industries (வேலைவாய்ப்பு அதிகம் உள்ள தொழிற்சாலைகள்) இவை இரண்டையுமாவது மத்திய அரசு மாநில அரசின் அதிகாரத்திற்கு விட்டு, மாநில அரசே லைசென்ஸ் கொடுக்க விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு நேர்மாறாக மாநிலங்களின் அதிகாரங்கள் அதிகரிப்பதால் தேவையற்ற இனங்களில் மத்திய அரசு செயல்படும் நேரமும், கவனமும் மிச்சப்படும்; ஒருமைப்பாடு உணர்வு வளரும், உண்மையான சமஷ்டி வளரும். எனவேதான் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறோம்.

Dr. Ambedkar says that "Democracy is not a form of Government, but a form of social organisation" ஜனநாயகம் என்பது வெறும் ஆட்சிமுறை தத்துவம் அல்ல; ஒரு சமுதாய அமைப்புத் தத்துவம் ஆகும். சமுதாய அமைப்பு உண்டாகத்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று சொல்லுகிறோம்.

நிலச் சீர்த்திருத்தம் மாநில அரசுக்கு உட்பட்ட அதிகாரம். ஆனால் அங்கீகாரம் பெறுவதற்கு ஜனாதிபதிக்கு செல்கிறது. சட்டமன்றத்தை மதித்து ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துவிடுவது முறையாக நடந்தாலும் கூட சில சட்டங்களில் மத்திய அரசு தலையிட்டு திருத்தம் செய்யச்சொல்லுகிறது. அரசியல் சட்டத்தால் நியமனம் செய்யப்பட்ட சட்டமன்றத்தை இது அவமதிப்பதாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Respect is always mutual, not one-sided.

இது மனிதாபிமானத் தத்துவம். மத்திய அரசு நினைத்தால் மாநில அரசை காரணம் காட்டாமலேயே கலைக்கலாம் என்ற நிலை வரை வந்துவிட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக மாநில அரசு நடக்கிறது. இந்த மாநிலத்தில் நீதி நிர்வாகம் கெட்டுவிட்டது; சட்டம் கெட்டு விட்டது; ஒழுங்கு கெட்டு விட்டது; அமைதி கெட்டுவிட்டது என்று மத்திய அரசால் ஏதாவது ஒரு காரணம் காட்டபட்டுத்தான் இது வரை மாநில சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டன. இது வரை 77 தடவைகள் மத்திய அரசு மாநில அரசுகளை கலைத்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசை கலைத்ததற்கு எந்தக் காரணமும் காட்டப்படவில்லை., எந்த வகையான காரணமும் காட்டாமல் கலைக்கும் உரிமையானது இந்த மத்திய அரசுக்குத் தேவைதானா? இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இது அதிகார துஷ்பிரயோகம் என்று சொல்லாவிட்டாலும் ஆட்சிக் கலைப்பு என்பது மாநில-மத்திய அரசு ஒற்றுமையிலிருந்து வேற்றுமைக்கு இழுத்துச் சென்றுவிடக் கூடாது என்பதற்காக இதை கூறுகிறேன்.

[பிற்பகல் 12-40]

அடுத்து மாநிலங்களின் மொழிக் கொள்கையில் மத்திய அரசு தலையிட உரிமை இல்லை என்ற நிலை சட்ட வடிவு பெற வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தை காந்தியே விரும்பவில்லை என்று நிர்ணயசபை கூட்டத்திலேயே திரு. அனும்ந்தையா அவர்களே கூறியுள்ளார்கள். நேருவும் இதற்கு ஒத்த கருத்து உடையவராகவே பேசியுள்ளார். சட்டத்தை இயற்றிய அம்பேத்கார் புனிதத்தைப் புகுத்த நினைத்தேன், சாத்தான் புகுந்து விட்டது என்று வேதனைப்பட்டுள்ளார். பெர்னாட்சா அவர்கள் சுயின் கண்ணும், எருமையின் நாக்கும், நாயின் வாலும், குதிரையின் மூக்கும் உள்ள ஒரு பிராணி எது என்று கேட்டால் That is the Constitution of India என்று சொல்லி இருக்கின்றார். ஆதலால் சில மாற்றங்கள், சில திருத்தங்கள் தேவை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர்களையும் அனைவரையும் ஒன்றாக அழைத்து இதுபற்றிப் பேசி அதற்குப் பிறகு அரசு ஒரு முடிவு எடுப்பது நலம் பயக்கக்கூடிய காரியமாக அமையும் என்று சொல்லி முடிக்கிறேன்.





*திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அன்புச் சகோதரர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்திலே நான் பங்குகொள்வதிலே பெருமையடைகிறேன். அவர் பேசுகின்ற போது பாதுகாப்பு, இரயில்வே, தபால்-தந்தி, கப்பல் போக்குவரத்து ஆகியவை மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்று அவரே ஒத்துக் கொண்டதனால் நான் அதைப்பற்றி அதிகம் பேசத்தேவையில்லை. ஆனால் (அதிகப் பணம் வேண்டும்) அதிக நிதி வேண்டும் மாநிலங்களுக்கு என்று கேட்பதிலேயும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் அதிக அதிகாரம் வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர, இன்னும் மாநிலங்களுக்கு எதற்காக அதிகாரம் தேவை என்பதை எல்லாம் அவர் இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பின்னுரையிலே சொல்வார் என்று எதிர் பார்க்கிறேன்.

இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே வெள்ளைக்காரன் ஆட்சியில் இருக்கின்றபோதே அதாவது 1919 ஆம் ஆண்டிலேயும், 1935 ஆம் ஆண்டிலேயும் உள்ள சட்டப்படி மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகும் வேண்டிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு கொடுத்த அதிகாரத்தையே இன்னும் நாம் சரியாகப் பயன்படுத்தாத நிலையிலே இருக்கிறோம் என்பதை சகோதரர் திரு. உமாநாத் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் பேசுகின்றபோது ரஷ்ய தேசத்தின் கான்ஸ்ட்டிட்யூஷன் பற்றிச் சொன்னார்கள். ரஷ்ய கான்ஸ்ட்டிட்யூஷனிலே ஆர்ட்டிக்கிள் 17-லே அந்த தேசத்திலே இருக்கின்ற தொழிலாள வர்க்கத்திற்கும் அந்த தேசத்தில் இருக்கின்ற மக்களுக்கும் சமுதாயத்திலே சம அந்தஸ்து கொடுக்கப்படக்கூடிய நிலைமையை உண்டாக்கி இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னைவிட அதிகமாகத் தெரிந்தவர். ஆனால் நம்முடைய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி தீண்டாமை ஒழிப்பு என்ற சட்டப்படி தீண்டாமை குற்றம் என்று இருக்கின்றது, ஆனால், ரஷ்ய தேசத்திலே ஜார் மன்னரின் கொடுமைக்குப்

பிறகு ஏற்பட்ட அரசிலே அந்த நாட்டிற்காக பாடுபட்ட லெனின் போன்ற பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து, நாட்டு மக்களின் மனங்களிலே அவநம்பிக்கை தோன்றாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் எந்த நாடு வேண்டுமானாலும் மத்திய அரசை விட்டுவிட்டு பிரிந்து செல்லலாம் என்று ஒரு உத்தரவாதம் கொடுக்கின்ற வகையிலே அரசியல் சட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

ஆனால், சகோதரர் திரு. உமாநாத் அவர்களை நான் ஒன்று கேட்கிறேன். இந்த தேசத்திலே 3 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தியர்களின் எண்ணமும் இந்து மதமும் மனுஸ்மித்தியும் முன்போலவே இருக்கின்றது. 33 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பிறகு பொருத்திருந்தும் அதே நிலைதான் இன்றும் இருக்கின்றது. தொழிலாளர் சட்டங்கள் 1948-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டு அதன் பிறகு அந்தச் சட்டம் 3 முறை திருத்தப்பட்டு இருக்கின்றது. நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் வரவு செலவுத் திட்டத்தின்போது தொழிலாளர்கள் சம்பந்தமாக பிரச்சினைகளைத் தீர்க்க கடுமையான சட்டங்களைக் கொண்டு வரப்போகிறேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் நன்றி கூறிக்கொள்வதோடு இந்தச் சட்டத்தின்படி தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்காமல் பாவமான செயலைச் செய்து சட்டத்தையும் மதிக்காத மனத்தையும் கொண்டவர்களில் ஒரு நபர் மீது கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை திரு. உமாநாத் அவர்கள் என்னைவிட நன்கு தெரிந்தவர்கள்.

அப்படிப்பட்ட கருத்திலே கொடுத்த சட்டத்தை, மனு—ஸ்மிருதியிலே நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்ததாலோ, இந்து மதத்திலே நம்பிக்கை வைத்துக் கொண்டதினாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனம், தாழ்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டு, விவசாயத் தொழிலாளர்களாக நிர்க்கதியாக நிற்கிறார்கள் என்று அறிந்தே, அந்தச் சட்டத்தை அமுல் நடத்தாமல் இருக்கும் போது, இன்னும் அதிக அதிகாரங்களை—சட்டங்களை வழங்கினால், அந்த ஐந்தில் ஒரு பங்கு மக்கள் எப்படி ஒப்புக் கொள்வார்கள்? அதாவது அதிக அதிகாரம் கேட்பதை எப்படி ஒப்புக் கொள்வார்கள் என்று கேட்கிறேன்.

அண்ணல் அம்பேத்கார் அவர்கள், ஐந்தில் ஒரு பங்கு மக்களுக்காக, வட்ட மேஜை மாநாட்டிலே அதிகாரங்களைக் கேட்டார். அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது. அவருக்கு இந்த நாட்டிலே நம்பிக்கை குறைந்தது. இந்த நாட்டு தலைவரிடம் நம்பிக்கை குறைந்தார். இந்த நாட்டு மதத்திலே கூட நம்பிக்கையை குறைத்து எண்ணினார். அன்று ஆண்ட வெள்ளையனிடம் கூட அவர் கேட்டார். "நாங்கள் ஒரு தனி இனம்.





நாங்கள் இந்த நாட்டு மக்களால் நசுக்கப்பட்டோம். மதத்தின் பெயரால், ஆண்டவனின் பெயரால், சாஸ்திரத்தை பெயரால், இந்து என்கிற சமுதாயத்தின் பெயரால் நசுக்கப்பட்டோம்" என்று சொன்னார்கள். இந்து என்கிற ஒரு சமுதாயத்தை மட்டும் ஏன் சொல்ல வேண்டும். கிறிஸ்துவ சமுதாயம் கூட இன்றைக்கு அதே நிலைமையில் தான் எங்களை வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி இஸ்லாமிய சமுதாயத்தில் சேர்ந்தால், இஸ்லாமிய சமுதாயத்திலே அந்த நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும் கூட தங்களைச் சுற்றி இருக்கிற இந்து சமுதாய சகோதரர்களை திருப்தி பண்ணுவதற்காக அல்லது அவர்களுடைய தொழில் முடக்கம் தீர, தொழில் முடக்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாக வீட்டிலே எங்களை சகோதரர்களாக நடத்தினாலும் வெளியிலே அப்படி நடத்த முடியாத அவல நிலைமை, அவர்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது. இதையாரும் மறுத்துவிட முடியாது...

**திரு. ஏ. சாகுல் ஹமீது:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்றை நான் மறுக்கிறேன். அந்த மாதிரி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாமிய மதத்தில் அவர் சொன்ன மாதிரி நிலைமை இல்லை. சகோதரத்துவம் நிலை நிறுத்தப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

**திரு. எல். இளையபெருமாள்:** தலைவர் அவர்களே, நான் மதத்தைச் சொல்லவில்லை. இருக்கிற அந்த மதத்திலே அதிக நம்பிக்கை உள்ளவன் நான். அந்த மதத்து மக்களிடம் அதிகம் பற்றுக் கொண்டவன் நான். ஆனால் இந்து சமுதாய மக்கள் இருக்கிறார்கள் என்றதனால் நான் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன். என்னுடைய சொந்த ஊர் பகுதியிலே ஆயர்குடி என்ற ஒரு இடம் இருக்கிறது. அங்கே முஸ்லிம் மக்கள் அதிகம் இருக்கின்றனர். ஆனால் அங்கு இருக்கிற ஒரு முஸ்லிம் வைத்திருக்கிற டீ கடையிலே நாங்கள் இந்துக்களோடு உட்கார்ந்து டீ குடிக்க முடியாத அவல நிலை இன்றைக்கும் இருக்கிறது. குடித்தால் மறுநாள் இந்துக்கள் யாரும் வருவது இல்லை என்ற காரணத்திற்காக அனுமதிப்பதில்லை. அந்த அவல நிலை இன்றைக்கும் இருக்கிறது என்பதை நான் மதிப்பிற்குரிய இஸ்லாமிய சங்கத் தலைவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர் மறுத்தாலும், உண்மையை மறைக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மதத்தின் மேலே குறைகூறவில்லை. மதத்திலே நம்பிக்கை உள்ளவர்களை குறைகூறவில்லை. இருக்கிற உண்மையைத்தான் இப்படி நம்முடைய சமுதாய அமைப்பிலே இருக்கிறது என்ற நிலையைத்தான் இங்கே தெரிவித்தேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதுபோலவே, அண்ணல் அம்பேத்கார் அவர்கள் அன்றிருந்த நாட்டின் நிலைமையிலே ஒரு கருத்தை வெளியிட்டார். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டுக்கு விடுதலை கொடுக்கின்ற தினத்திலே கூட சொன்னார்கள், அவர் நாட்டைப் பிரித்து இயக்க

வில்லை. ஆனால் சொன்னார்கள். இந்தக் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவதற்கு ஒரு வழி சொன்னார்கள். ''இந்த மக்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் தங்களுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க செப்பரேட் எலக்ட்ரேட் கொடுக்க வேண்டும்'' என்று கேட்டார்கள். அதுவும் மறுக்கப்பட்டது என்று சகோதரர் உமாநாத் அவர்களுக்கு நினைவு கூறுகிறேன். அவரை நான் குறை கூறவில்லை. அவருடைய தீர்மானத்திலே அதிக நிதி கேட்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர் தீர்மானத்திலே நாட்டு மக்களின் ஐக்கியத்திலே அவருக்கு நம்பிக்கை குறைவு இருப்பதாக நான் சொல்லவில்லை.

பச்சையாகச் சொல்ல வேண்டுமானால், துளுவத்தை சேர்ந்த மொழியைப் பேசுகிறவர்கள், பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள்—இங்கே சொல்ல வேண்டும், அது உலக வழக்கு என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவர் பிராமணர் என்று தன்னைச் சொல்லிக் கொள்வது இல்லை. ஆனால் அவர் நிலையிலே, அவர் எண்ணுகிற அளவிற்கு பிராமணீயம் நடக்கவில்லை என்பதை மறுக்க முடியாது. பிராமணீயத்தின் பெயரால், அரிசனங்களுக்கு மாத்திரம் அல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏராளமான சமூதாயத்தினருக்கு தொல்லை படுத்தப்பட்டிருப்பதை எடுத்துச் சொல்கையில் அவர்கள் உணரக்கூடிய நிலையிலே உள்ளவர்கள். ஆகவே தான் அந்த அதிகாரத்தை இன்னும் கேட்பதானது, ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்கள், 3 ஆயிரம் ஆண்டுகளாக அடங்கி நடந்தவர்கள், விடுதலை பெற்று 33 ஆண்டுகளாக அடங்கி வாழ்ந்த அந்த சமுதாயத்தினருக்கு அது தன்மையை பயக்காது என்று சொல்கிறேன். 33 ஆண்டுகளுக்கு முன் வெள்ளைக்காரர்களுக்கு எவ்வளவோ பணி செய்தும், அந்த நன்றி அற்றவர்கள், போகிற போது, இந்த நாட்டின் பின்தங்கிய இம்மக்களுக்காக, ஒரு சிறு நன்றி உதவியைக் கூட செய்யாமல் சென்றுவிட்டார்கள். இப்படி அவல நிலையில் அந்த மக்கள் இருக்கிறபோது, இன்னும் அதிகாரங்கள் வேண்டும் என்று அரசியல் சட்டத்திலே திருத்துவதோ அல்லது அதிக அதிகாரங்களைக் கொடுப்பதோ, என்னைப் பொறுத்தவரையில் என்னைப் போன்ற அவதிப்படுகிற என் சமுதாய மக்களுக்கு மைனாரிட்டி மக்களுக்கு நலம் அளிக்காது. மாநில அரசுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது எந்த வகையிலும் எங்களுக்கு நலம் அளிக்குமா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. அந்த எண்ணத்தின் காரணமாகத்தான் அதை எதிர்க்கிறேனே தவிர, நிதி ஆதாரங்களை அதிகமாகக் கொடுப்பதிலோ அல்லது பல்வேறு சக்தி உள்ள காரியங்களுக்கோ நான் இடையூராக இல்லை என்பதையும் நான் அவர்களுக்கு இந் நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





[பிற்பகல் 12-50]

பச்சையாகச் சொல்லப் போனால் தஞ்சை மாவட்டத்தில் கீழ்வெண்மணி கிராமத்தில்—திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைவிட—42 ஜீவன்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. அந்தத் தவறில் சிக்கிக்கொண்ட மனிதன் திரும்பி வருகிறபோது நாகப்பட்டினத்தில் ஊர்வலங்கள், பாண்ட் வாத்தியங்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் மாலை அணிவித்தார்கள் என்கிறபோது இந்த அதிகாரத்தை அதிகமான அதிகாரங்களை உங்களிடம் கொடுத்தால் இந்த மக்களின் நிலை என்னவாகும் என்பதை அவர்கள் சிந்தித்து பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

விழுப்புரம் படுகொலை, அன்று நடந்த அவதிகள் பற்றி விசாரிக்க சதாசிவம் கமிஷன் அமைக்கப்பட்டது. சதாசிவம் கமிஷன் ரிப்போர்ட் இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாததும், சதாசிவம் கமிஷன் ரிப்போர்ட் பேரில், அவர்கள் கொடுத்த சிபாரிசுகள் அமல் செய்யப்படாததும் தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தியன் எக்ஸ்பிரஸில் பார்த்தால் தெரியும். விழுப்புரத்தில் பதட்ட நிலை, புபரணாம்பட்டில் பதட்ட நிலை. இவைகளையெல்லாம் ஒருவரையோ, ஒரு அரசாங்கத்தையோ, ஒரு கட்சித் தலைவரையோ குறைகூறும் எண்ணத்தோடு சொல்லவில்லை. ஆனால் என்னஎன்ன செய்கிறீர்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அதிக அதிகாரங்கள் கேட்கிறார்கள். அதிக அதிகாரங்களை உங்களிடம் கொடுப்பதில் எனக்கு நம்பிக்கை குறைகிறது. எனக்கு நம்பிக்கையூட்டுங்கள். இந்தத் தீர்மானத்தின் கர்த்தா நல்ல ரெவில்யூஷனரி எண்ணங்களைக் கொண்டவர். அவர்களையும் மற்றத் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எங்களுக்கு என்ன பாதுகாப்பு? எங்களுக்கு பாதுகாப்பு என்ற நிலையைக் கொடுத்தாலொழிய இந்தத் தீர்மானத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். என்னைப் போல் எண்ணம் உள்ளவர்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது இந்தச் சபையில் அவர்கள் எண்ணங்களைப் பொருத்தது.

அடுத்து, சோவியத் கான்ஸ்டிட்யூஷன், ஆர்டிகிள் 19 இன்டலிஜன்ஷீயா பற்றியும் தொழிலாளர் வகுப்பு பற்றியும், சமுதாயம் பற்றியும், சமத்துவம் பற்றியும், மனிதாபிமானம் பற்றியும் சொல்லியிருக்கிறது ஆர்டிகிள் 19.

The Social Basis of U.S.S.R is an unbreakable alliance of workers, peasants and intelligentsia.

இந்த நாடு ஒத்துக்கொண்டிருக்கிறது. உத்தமர் காந்தியடிகள், பண்டிட் ஜவகர்லால் நேரு போன்றவர்கள் ஒத்துக்கொண்டு டாக்டர் அம்பேத்கார் அவர்களைக் கூப்பிட்டு இந்த நாட்டின் அரசியல் சாசனத்தை எழுதுங்கள் என்று கொடுத்திருக்கிறார்கள்.

அன்று வள்ளுவன் பிறந்து நாட்டுக்கு திருக்குறள் கொடுத்ததைப் போல் இந்த தேசத்துக்கு ஒரு நல்ல அரசியல் சாசனத்தை உருவாக்கும் பொறுப்பினை டாக்டர் அம்பேத்கார் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இந்த நாடு என்ன செய்தது என்பதை நான் திரு. உமாநாத் அவர்கள் நினைவிற்காகச் சொல்கிறேன்.

யார்யாருக்கெல்லாமோ பட்டம் கொடுத்தது இந்த நாடு, ஆனால் அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு இறக்கும் வரை இந்த தேசத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் ஒரு பட்டம் கூட கொடுக்க முன்வரவில்லை. நான் அதற்காக பொறாமைப்பட வில்லை. அங்கலாய்க்கவில்லை. கெஞ்சிக் கேட்கவில்லை. கடைசியாக வந்தது மைசூர் யூனிவர்ஸிட்டி. அப்போது சொன்னார் கள் டாக்டர் அம்பேத்கார் அவர்கள், ஐயா, நீங்கள் பட்டம் எனக்குக் கொடுக்க முன்வந்ததற்காக நன்றி. நான் இந்திய மண்ணில் பிறந்தவன், இந்துவாக பிறந்தவன், நான் இந்துவாக சாக விரும்பவில்லை. என்னை மனிதனாக இந்தப் பூமி, நான் பிறந்த பூமி நினைக்கவில்லை, இந்த நாட்டில் ஒரு பட்டம் வாங்குவதைவிட எவ்வளவோ பட்டங்களை அன்னிய நாட்டான் உங்களையும். என்னையும் ஆண்டவன் கொடுத்துவிட்டான், அந்தப் பட்டங்களே போதும், உங்கள் பட்டம் தேவையில்லை. காலம் கடந்தாவது நினைத்ததற்கு நன்றி சொல்கிறேன் என்றார் கள். ஏன் பட்டம் கொடுக்க வில்லை?

<u>திரு. ஜி. மூர்த்தி</u>

* * *

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u>

அவர்கள் சொன்னது பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கியவர்களை அவமானப்படுத்துவதாகும். ஆகவே திரு. மூர்த்தி சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. எல். இளையபெருமாள்:</u> தலைவர் அவர்களே ரஷ்யன் கான்ஸ்டிடியூஷன்படி, 21-லே சொல்கிறார்கள்

The sta'e c:ncerns itself with impr:ving th: working condition safety and labour protection and scientific organisation of work என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது போலவே, நம் அரசியல் சட்டத்திலும் ஆர்டிகள் 46 இருக்கிறது. அதன்படி மத்திய அரசும், மாநில அரசும் 33 ஆண்டுகள் ஆனபிறகும்கூட அதிக அதிகாரம் இருந்தும்கூட, வீக்கர் செக்ஷன்களுக்கு பொருளாதார உயர்விலே வழி செய்வதற்கு முன்வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்குமேல் செல்ல விரும்பவில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உமாநாத் அவர்கள் நல்லதொரு ஸ்தாபனத்தைச் சேர்ந்த வர்கள்; அதிலே ஆட்சேபணை இல்லை; அவர் நல்லவர்; அதிலேயும் ஆட்சேபணை இல்லை. ஆனால், இந்தியாவிலே ஜாதி, மதம், மொழி போன்ற இந்த பேதமை எண்ணங்களுக்கு முடிவுகட்டாத காலம் வரையில், அதிக அதிகாரம் கொடுத்து, மீண்டும் கீழ்வெண்மணி, விழுப்புரம் போன்றவைகள் ஏற்படாது என்ற நம்பிக்கை குறைவு என் போன்றவர்களுக்கு வராமல் இருப்பதற்கு வழிச் சொல்லுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மேலும், இந்த ஆதிக்க வெறியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். ஆப்பிரிக்க நாடு மண்ணால் ஒன்றுபட்டிருந்தாலும், நிறத்தால் ஒன்றுபட்டிருந்தாலும், அதை ஆண்ட ஆதிக்க வெறி யர்களால் அந்த நாடு கூறுபட்டது. நாட்டிலே சேதம் ஏற் பட்டது. நாட்டு மக்கள் பொருளாதாரத்திலே குறைந்தார்கள். ஆனால், ஆப்பிரிக்க நாட்டிலே பிறந்த நீக்ரோ சகோதரர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் பெருமையைப் பற்றி இந்த இடத்திலே சொல்லவேண்டும். ஒற்றுமை, இன உணர்வு, மொழி உணர்வு, தங்களுக்குத் தாங்களே காபந்து செயதுகொள்ள முடியும், தார்மீக ரீதியிலே என்ற வகையிலே தியாகம் செய்த லுமும்பா, காங்கோ நாட்டிலே பிறந்த ஒரு போஸ்டல் கிளார்க் அந்த நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார். அப்படிப் பட்ட அந்த நாட்டிலே கூட இந்த ஆதிக்க வெறி உடையவர்கள் கையிலே அதிக அதிகாரம் போகக்கூடாது என்கிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, சகோதரர் உமாநாத் அவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறவர்களுக்கு ஜாதியின் பெயரால், மொழியின் பெயரால் எண்ணுகின்ற இந்த நாட்டிலே அதிக அதிகாரம் கொடுக்கப்படுவது சரியா என்பதைப் பற்றி தீர்க்கமாக சிந்தித்து பதில் சொல்வார்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்....

<u>டாக்டர் மு. கருணாநிதி:</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் தமிழகத்தின் முன்னாள் தலைவருமான இளையபெருமாள் அவர்கள் மாநில சுயாட்சி தேவை இல்லை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை இல்லை என்பதற்கு, மாநில அரசுகளில் நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகளை மாநில அரசு சரிவர கண்காணிக்கவில்லை என்பதை மட்டும், அந்த ஒன்றை மட்டும் காரணம் காட்டி, எனவே, அதிக அதிகாரங்கள் கூடாது என்று சொல்கிறார்கள். 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, கீழ்வெண்மணி சம்பவம் நடைபெற்றது. இப்போது, அண்மையில் விழுப்புரம் நிகழ்ச்சி நடைபெற்றது. இவைகள் எல்லாம் மாநில அரசின் அதிகாரத்திற்குள்ளே இருக் கிற காவல் துறையினரால் கண்காணிக்கப்பட வேண்டியவை; வழக்குகள் போடப்பட வேண்டியவை. ஆகவே, ஆதிக்கத்திலே உள்ளவர்கள், ஆதிக்கம் அற்றவர்களை அடிமைகளாக நடத்து கின்ற நிகழ்ச்சி இருக்கலாம். ஆனால், அதற்கும் மத்திய அரசு

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஆகஸ்ட் 7

மாநில அரசுக்கு அதிகாரம் வழங்குவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற அதிகாரங்களை நல்லமுறையிலே பயன்படுத்துங்கள் என்று கேட்க சட்ட மன்றங்கள் இருக்கின்றன ; இங்கே இருக்கின்ற அரசுகளைப் பார்த்துக்கொள்ளத் தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் சரிவர தங்களுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தாவிட்டால், அதைப் பார்த்துக் கொள்ளத்தான் நாமெல்லாம் இருக்கிறோம். ஆகவே, அதிக அதிகாரம் வாங்கிக் கொடுத்துவிட்டு, அவர்கள் பயன்படுத்த வில்லை என்று குறை கூறுகிற பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளுவதுதான் முறையாக இருக்குமே தவிர, எதற்காக இந்த அதிகாரம் என்பது சரியாக இல்லை. எனவே, உங்களுக்கு இன்னும் அதிகாரம் தேவையில்லை என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வது பொருத்தமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : எல்லாவற்றிற்கும் தகுதியான தலைவர் அவர்கள் குறுக்கிட்டதற்காக நான் பாராட்டுகிறேன் ; மன நிறைவு பெறுகிறேன். 1952 ஆம் ஆண்டு எங்கள் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதிலே இருந்து, இன்று 1980ஆம் ஆண்டு வரையிலும், மத்திய அரசு கொடுத்த, ஹோம் செகரடரியுடைய ஆர்டர், There is a reservation in promotion for Scheduled Castes and Tribes but unfortunately it was no implemented all these years from 1952 to 1980 That is why I have my own doubt எனக்குச் சந்தேகம் வருகிறது. ஆனால், தலைவர் அவர்களோடுநான் போராடுவேன்; அவர் என்னென்ன உரிமைகளைக் கேட்கிறார்களோ, அதற்குத் தோள் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் சந்தேகம் இல்லாத நிலையை நீங்கள் வளர்க்க வேண்டும். இதற்கு உறுதி கொடுக்க வேண்டுமென்பதிலே இருந்து, நீங்கள் ஒருநாளும் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் அனுப்பிய உத்தரவுகள் எல்லாம் எந்த அளவுக்கு அமுல் நடத்தப்பட்டது என்று அவர்கள் கேட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதற்கு முன்னால் பேசும்போது, அவர்களுக்கு என்ன சந்தேகம் இருந்ததோ, அதே சந்தேகம்தான் எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் மக்கள் சபையிலே உறுப்பினராக இருந்தார்கள். அப்போது அவர்கள் தலைமையிலே, இளையபெருமாள் கமிட்டி என்று ஒரு கமிட்டி, அரிசன மக்களுடைய குறைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டது.



1980 ஆகஸ்ட் 7] [திரு. ப. நெடுமாறன்]

[பிற்பகல் 1—00]

அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை மத்திய அரசு இதுவரை அமல் நடத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : நண்பர் நெடுமாறன் அவர்கள் தலைவர் சொன்னதற்கு ஒருபடி மேலே சென்று என்னைச் சோதிக்கிறார். நான் அவதிப்பட்ட இனத்தைச் சார்ந்தவன். சிறு வயதிலேயே, 29, 30-வது வயதிலேயே பாராளுமன்ற உறுப்பினராக ஆனவன். பதினைந்து ஆண்டுகளுக்கு பின்பு குழுவின் சேர்மனாக இருந்து நான் கொடுத்த ரிப்போர்ட்டை அமல் செய்யாத குறை மத்திய சர்க்காருக்கும் உண்டு. மாநில சர்க்காருக்கும் உண்டு.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள் மத்திய சர்க்கார் அந்த அறிக்கையை அமல் நடத்தவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுத்தால் அவர் விரும்புகிற காரியங்கள் நடக்காது என்று நினைப்பது சரியல்ல. மத்திய அரசாங்கத்திடம் ஏராளமான அதிகாரங்கள் குவிந்த நிலையில் பொறுப்புள்ள உறுப்பினர் அரிசன சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகக் கொடுத்த ரிப்போர்ட்டை அமல் நடத்தவில்லை என்று பார்க்கும்போது அதற்குக் காரணம் அவர்களிடம் அதிகமாக அதிகாரம் இருந்தது தானோ என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த அதிகாரத்தைப் பிரித்து மாநிலங்களுக்குக் கொடுப்பார்களானால் திரு, இளையபெருமாள் அவர்கள் எத்தனை ரிப்போர்ட்டுகளைக் கொடுத்தாலும் மாநில அரசு பரிசீலனை செய்து அமல் நடத்த வசதியாக இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : இந்த விஷயத்தில் பார்க்கும்போது — அண்ணா அவர்கள் மறைந்துவிட்டாலும் என் நெஞ்சை விட்டு அவர் மறைந்தது கிடையாது. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சார்ந்தவன் அல்ல. ஆனால், என் நெஞ்சில் அவர் எப்போதும் இருக்கிறார். 1947 ஆம் ஆண்டிலேயே அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் என்னுடைய கிராமத்திற்கு வந்தது என்னுடைய நினைவில் இருக்கிறது. அண்ணா அவர்களும் அன்றைய குஜராத் மாநில முதலமைச்சர் அவர்களுந் தான் என்னுடைய ரிப்போர்ட்டின் (திட்டத்தில்) ஒரு பகுதியையாவது ஏற்று நடைமுறைப்படுத்தச் செய்தார்கள் என்பதைப் பாராட்ட விரும்புகிறேன்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'பாண்டட் லேபர் சிஸ்டம்' இல்லையென்று சொன்னார்கள். இன்றைய பிரதமர் கூட அன்றைக்குப் பிரதமராக இருக்கும்போது சொன்னார்கள். ஆனால் எமர்ஜன்சி வருவதற்குச் கொஞ்ச நாள் முன்பு நடந்த

அக்கிரமங்களைப் பார்த்து கமிட்டி போட்டு விசாரித்ததில் இளையபெருமாள் கமிட்டி ரிப்போர்ட்டில் கூறியது சரியாக இருக்கிறது என்று உணர்ந்தார்கள். பாரதப் பிரதமர் விசாரித்து உண்மையை உணர்ந்த உடனே ' கொத்தடிமையை ஒழிப்பேன் ' என்று இருபது அம்சத் திட்டத்திலே ஒரு திட்டமாகக் கொண்டு வந்தார்கள் என்பதை சகோதரர் நெடுமாறன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அன்று நானும் அவரும் ஒன்றாக இருந்தோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

சுப்ரீம் கோர்ட்தான் கடைசி எல்லை இந்த நாட்டு மக்களுக்கு. நான் அவர்களிடம் கேட்டேன் — எவ்வளவு பேர் எஸ்.சி. அங்கே பணி செய்கிறார்கள்? எவ்வளவு பேர் பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்? எவ்வளவு பேர் மலை வாழ் மக்கள்? எவ்வளவு பேர் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் என்று கேட்டேன். நீதிமன்றத்தில் சாதிக்கு இடம் இல்லையென்று பதில் வந்தது. பின்பு அதே சுப்ரீம் கோர்ட் ரிஜிஸ்ட்ராருக்கு எழுதிக் கேட்டேன் — எவ்வளவு பேர் பின்தங்கிய கிளாஸ் 1, 2, 3, 4 ஆகிய பணிகளில் வேலை செய்கிறார்கள் என்று கேட்டேன். ஏதோ நான்கு, ஆறு, ஏழு, எட்டு என்று பதில் வந்தது. நான் மறுபடியும் எழுதிக் கேட்டேன்—தாழ்த்தப்பட்ட இந்த மக்களுக்கு கான்ஸ்டிடியூஷனல் சேஃப்கார்டு இருக்கிறது. அந்த மனிதனுக்கு மேலே இருக்கிற பதவிகள் வரை கொடுத்து அந்த மக்கள் பாதுகாக்கப்படாததற்கு என்ன காரணம் என்று கேட்டேன். அதற்கு 1966ல் இருந்து 1969 முடிய எந்தவித பதிலும் வரவில்லை. இந்த தேசத்தின் அரசு கொடுத்த பரிசு அதுதான். சகோதரர் நெடுமாறன் அவர்கள் கொள்கைக்காக என்னுடன் தோள் கொடுத்து உழைத்தவர். 1965—ல் பண்டித நேரு அவர்களால் இந்தக் கமிட்டி அமைக்க உறுதி கூறப் பட்டது. இந்தக் கமிட்டி ரிப்போர்ட்டை அமல் நடத்தவேண்டுமென்று உத்தரவு போட்டது லால்பகதூரர் சாஸ்திரி. ஆனால் இந்த ரிப்போர்ட்டின் முடிவைப் பார்க்க முடியாமல் இறந்து விட்டார். ரிப்போர்டின் முடிவை இன்றைய பிரதமர் இந்திராஜி அறிவார்கள். இந்தச் சமுதாய மக்களுக்கு லோக சபையிலும், ராஜ்ய சபையிலும் 16 சதவிகித விகிதாசாரப்படி பதவிகள் கொடுக்கப் பட்டனவா?

எனக்குக் கிடைத்த பரிசு பதில் இல்லாமை தான். சகோதரர் நெடுமாறன் அவர்களுக்குச் சொல்வதெல்லாம் இந்த நிலைமைக்கு வழி என்ன? எப்படி அதிகாரம் கொடுப்பது? மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறார்கள். இங்கே மதிப் பிற்குரிய பெரியவர்கள் சொன்னார்கள், டிஸ்மிஸ் செய்தது பற்றி. நான் அதுபற்றி பார் அன்ட் எகென்ன்ஸ்ட் சொல்வதற்கு



வரவில்லை. அது இதற்கு சம்பந்தம் இல்லை. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவ்வளவு அதிகாரங்கள் இருந்தாலும் கூட 1952 முதல் 1980 ஆம் ஆண்டு வரை, இன்று வரையிலும் there is a reservation even in Promotion except to class I services. என்று இருந்தும் நடக்கவில்லை. இதற்கு யார் தலைவர்கள்? அந்த அந்த காலங்களிலே முதல்வர்களாக இருந்தவர்கள் தலைவர்கள், அந்த காலத்திலே சீப் செகரட்டரிகளாக இருந்தவர்கள், அதற்கு அடுத்து செக்கரட்டரிகள், அந்த அந்த துறைகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்கள் காரணம் என்ன? எப்படி நம்புவது? என்னுடைய சந்தேகத்தை தெளிவாக்க வேண்டுமென்றுதான் நான் கேட்கிறேனே தவிர, உங்களில் யாரின்மேலும் அவநம்பிக்கை என்பதல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விவாதத்திலே பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். அவற்றிற்கு கடைசியாகப் பதில் சொல்லுவோம். இருந்தாலும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். கொள்கை என்பது ஒன்று, நடைமுறை என்பது ஒன்று. அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்த விவாதத்திலே அவர்கள் கலந்துகொண்டு பேசுவது ஏதோ அதிக அதிகாரங்கள் வந்தால் அதுதாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்படாது என்ற தொனியிலே தாங்கள் பேசுகிறீர்கள். நான் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதே மாநில அரசு சம வாய்ப்பு என்ற அடிப்படையிலே இந்த மண்ணிலே பிறந்த மக்கள் அனைவரும் சமம் என்ற அடிப்படையிலே எல்லோரும் அர்ச்சகர் ஆகலாம் என்று நாங்கள் சொன்னோம், இந்த அரசு சொன்னது, ஒரு நேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருந்தார்கள், ஆனால் இருக்கக்கூடாது என்று தீர்ப்பை வழங்கிற்று சுப்ரீம் கோர்ட். அந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையிலே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. ஆகவே ஒரு மாநில அரசு எல்லோரும் சமம் என்ற ஒரு நிலை எடுக்கிறபோது மத்திய அரசு அந்த நிலையை எடுக்க மறுப்பானேன். அத்தகைய மத்திய அரசினிடத்திலே அதிகாரங்கள் இருப்பது முறைதானா?

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆழமாக என்னை இட்டுச் சென்றாலும் நிச்சயமாக அவதிப்படுகிற மனிதன்...............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆக, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பது வேறு, நடைமுறைப் படுத்துவதிலே, இருக்கிற பிரச்சினைகள் என்பது வேறு. மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அரசாங்கமாக இருந்தாலும் நடைமுறைப்படுத்துவதிலே வருகிற தவறுகளை சுட்டிக்காட்டு

வதற்கு, தட்டிக் கேட்பதற்கு திறமை வாய்ந்த எதிர்க்கட்சிகள் உண்டு. தங்களைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உண்டு.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னாலும் ஒன்றை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கொள்கை என்பதும், அமல்நடத்துவது என்பதும் அரசியல் மேடை என்பதும் இந்தீ நாட்டிலே ஒன்றாக இல்லாது ஒரே பாவ காரணத்தால்தான் இந்த நாட்டு மக்களுக்கு சீர்திருத்தம் என்ற பெயரால், பெரியார் என்ற பெயரால், அம்பேத்கார் என்ற பெயரால், அண்ணா என்ற பெயரால் செய்ய முடியாத அவலநிலைமையில் தான் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். கருத்துவேற்றுமை இதிலே சொல்லமுடியாது என்று எண்ணுகிறேன்.

ஆகவே எப்படியிருப்பினும், 1967 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளில் நம்முடைய அண்ணா அவர்கள் பேசுகின்ற போது ஒரு வார்த்தையைச் சொன்னார்கள், அம்பேத்கார் அவர்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஒன்றியம் என்பதும் இணைப்பாட்சி என்பதும் வேறு, அதில்தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சந்தேகத்தை எழுப்பினார்கள். நான் சந்தேகத்திற்கே வரவில்லை, என்னைச் சந்தேகமற்றவராக தயார்படுத்துங்கள் என்றுதான் கேட்கிறேனே தவிர வேறு அல்ல. அதிகாரம் அங்கே இருப்பதா, இங்கே இருப்பதா என்பதல்ல, எங்கே இருந்தாலும் என் கதி அதே கதிதானே. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், நாட்டுக்கு நல்ல துரை (நிலைமை) வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் வேலை போக வில்லையே என்று. அதுதான் என்னுடைய எண்ணம்.

1898 ஆம் ஆண்டிலே வெள்ளைக்காரன் பஞ்சம தரிசு என்று கொடுத்தான். அமைச்சர் அவர்களும் நானும் ஒரே ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். வடலூர் என்பது அவருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். 1898 ஆம் ஆண்டிலே பஞ்சம தரிசாக ஒதுக்கிய நிலத்தை அங்கே அரசியல்வாதிகள், அரசாங்கத்தினர் சட்டத்தை மீறி அந்த இடத்திலேயிருந்து அரிசன மக்களை துரத்தியடித்து இருக்கிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சுயாட்சி அல்லது அதிக அதிகாரம் என்ற தலைப்பிலே பேசுகின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்கள் தாழ்த்தப்பட்ட அல்லது ஆதி திராவிட சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற அல்லல்களை எடுப்பாக அல்லது முக்கியத்துவம் தந்து, யார் வந்தாலும், என்ன அதிகாரம் தந்தாலும், இந்த சமுதாயத்திற்கு விமோசனம் இல்லையே, பிறகு ஏன் அதிகாரங்கள் என்ற பாணியிலே தன்னுடைய வாதங்களை எடுத்து வைக்கிறார்கள்.





[பிற்பகல் 1-10].

அதே பாணி, இந்தியாவிற்குச் சுதந்திரம் கேட்ட நேரத்தில், காந்தியடிகளும், மற்றவர்களும் சுதந்திரக் களத்திலே இருக்கிற பொழுது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அப்பொழுதும் ஒடுக்கப்பட்டார்கள் உயர் ஜாதிக்காரர்களால், யார் வந்தாலும் இந்த நிலைதானே எங்களுக்கு, ஆகவே, சுதந்திரம் வேண்டாமென்று சொல்லியிருந்தால் அது எவ்வளவு பொருத்த மற்றதோ, அதைப்போலத்தான் என்ன அதிகாரம் வந்தால் என்ன, அதே நிலைதானே எங்களுக்கு, ஆகவே, மாநில சுயாட்சி வேண்டாம் என்று சொல்லிவிடுவதும் ஆகி விடாதா ?

திரு. எல். இளையபெருமாள் : அவர்கள் என்னைவிடத் திறமையாகப் பேசுகின்றவர்கள் எல்லா வகையிலும். ஆனாலும் ஒன்று சொல்ல விரும்பகிறேன். அண்ணல் அம்பேத்கார் அவர்கள்—நல்ல சமயத்திலே தலைவரவர்கள் எனக்கு வழிகாட்டி விட்டார்கள்— அவர்கள் வைஸ்ராய் கவுன்சில் மெம்பராக இருக்கிறார்கள். சுதந்திரப் பேராட்டம் மிக விரைவாக இருக்கிறது. மகாதேவ தேசாய் போன்றவர்கள், திலகர் பெருமான் போன்றவர்கள் அந்தமான் சிறையிலே அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அன்றைய நிலையிலே அண்ணல் அம்பேத்கார் அவர்கள் நாமினேட்டட் மெம்பராக இருந்தார்கள் ; தேர்வு பெற்ற மெம்பர்கூட இல்லை. அப்பொழுது அண்ணல் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தேச விடுதலைக்குத் தியாகம் செய்கின்ற செம்மல்கள் அங்கிருக்கின்ற கிரிமினல்களோடு அந்த மானிலே சிறையில் வாடுவதைக் கண்டு வெட்கப்படுகிறேன் என்று சொன்னார்கள். அன்றைக்கிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், தங்களைப் போன்ற சபாநாயகர் சொன்னார், "Mr. Ambedkar, you are a nominated member by the British Council என்று சொன்னார்கள். அப்பொழுது அம்பேத்கார் அவர்கள், சொன்வார்கள்.

"yes, I know I am a nominated Member. But I am an Indian first and then only a member என்று சொன்னார்கள். அன்றைக்கு விடுதலைக்கு அவர் விரோதமாக இல்லை என்பதையும், நம்முடைய தலைவரவர்கள் இப்பொழுது நல்ல சமயத்திலே நினைவுப் படுத்தினார்கள்.

அதே சமயத்தில் அன்றைக்கு அம்பேத்காருக்கும், காந்தி மகானுக்கும் 1932ஆம் ஆண்டு ஏர்வாடி சிறையிலே பூனா ஒப்பந்தம் நடக்கிறபொழுது இரண்டு பேருக்கும் வாக்குவாதம் நடந்தபொழுது காந்திஜி சொன்னார் "அம்பேத்கார், நீங்கள் அரிசன் என்பது இன்றுதான் தெரிகிறது. இவ்வளவு சமஸ்கிருத பாண்டித்யம் உமக்கு எப்படித் தெரிந்தது? உன்னைப் பிராமணன் என்றல்லவா எண்ணினேன்" என்று சொன்னார். அப்பொழுது சொன்னார் : "காந்தியடிகளே, நீங்கள் நல்லவர்கள் திருடர்

களின் பழக்கம் உங்களுக்குத் தெரியாது. சுதந்திரம் கேட்கிற இந்தியாவிலே என்ன நடக்கிறது என்றுஎண்ணுவதற்கு உங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. நான் மாணவனாக இருந்த பொழுதே அதை உணர்ந்தேன். எனக்கு இந்தியாவிலே சமஸ்கிருதம் படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. யாரையெல்லாம் கெஞ்சினேன். ஒருவரும் சொல்லிக்கொடுக்க முன்வரவில்லை. ஜெர்மானிய நாட்டு அறிஞர்தான் எனக்கு சமஸ்கிருதத்தைப் போதித்துக் கொடுத்தார். அதை ஏன் படித்தேன் என்றால், இந்தச் சமுதாயம் கோடிக்கணக்கான மக்களை ஆண்டவன் பெயரால் இந்த சமஸ்கிருத பாஷையை வைத்துக்கொண்டு, தேவ ரகசிய பாஷை என்று வைத்துக்கொண்டு செய்வதால் அதில் என்னதான் இருக்கிறது என்ற நிலைமைக்காகத்தான் படித்தேன். அந்த நிலையால் நான் பிராமணன் என்று எண்ணாதீர்கள். நான் ஒரு தாழ்ந்த மகன்'' என்று சொன்னார்கள்.

அமைச்சர் பெருமகன் இப்பொழுது சொன்னபொழுது சொன்னார்கள், எந்த அதிகாரம் வந்தாலும் நமக்குக் கிடைக்காதோ என்ற சந்தேகத்தில்...........

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, திரு. உமாநாத் கொடுத்த தீர்மானம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற விதத்திலே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பது. ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைரவரவர்கள் மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரம் கொடுத்தும் பயன் இல்லை மாநில சர்க்காருக்கு அதிக அதிகாரம் கொடுத்தும் பயன் இல்லை என்று அவருடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியானால் யாருக்குத்தான் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற விவரத்தைச் சொன்னால் பயன் உள்ளதாக இருக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, உங்களுடைய பாதுகாப்பு இனிமேல் எனக்குத் தேவை. என்னுடைய நேரம் என்னவாகுமோ தெரியவில்லை. ஆனால் அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த விஷயத்தில்தான் நான் நம்முடைய அருமைச் சகோதரர் திரு. உமாநாத் அவர்களிடம் இப்பொழுது கேட்டேன். சகோதரர் திரு. ரமணி அவர்களிடமும் நான் பேசிக்கொண்டு கேட்டேன். பிரிந்து போகின்ற சக்தியை அந்த ரஷ்ய புண்ணிய பூமியிலே கொடுத்தார்களே, என்ன காரணம் என்று அவர்களிடம் கேட்டேன். அந்த மக்கள் நம்பிக்கை உள்ளவர்கள்; நன்றி உள்ளவர்கள்; தேசம் பெரிது என்று எண்ணினார்கள். அவர்கள் ஜாதியிலே, மதத்திலே, நம்பிக்கை அற்றவர்கள்; இருந்தாலும் அவர்களுக்கு நம்பிக்கை ஒளி ஊட்டுவதற்காகப் பிரிந்து போகலாம் என்ற எண்ணம் கொடுக்கப்பட்டது என்று அவர்கள் சொன்னார்கள். அது திருப்தியாக இருந்தது.



(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஆனால் இங்கு நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிக் கொடுத்தும் செயல்படவில்லையே என்ற விரக்தியின் காரணத்தால் உங்களுக்கு வெளிப்படையாகச்சொல்கிறேனே தவிர ஆனால் இதே கொடுமை நீடிக்குமேயானால் என்னைப் பொறுத்தவரையிலே சொல்கின்ற உரிமையோடு சொல்கிறேன், Within the Constitution, within the State, within the Centre, we want a separate autonomous Schedule Caste area. That is 17 S.C. areas in India, according to 17 Languages of our country. அது என்னுடைய Birthright. இப்படிக் கொடுமைகள் நடந்தால் அந்த அதிகாரங்கள், Within the constitution, within the State, within the centre we want a separate autonomous State for Scheduled castes. When there are separate areas for scheduled Tribes, why not you accept for a Scheduled caste autonomous area.

திரு. ஏன். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, 'ஷெட்யூல்ட் டிரைப்ஸ்' பழங்குடியினர் பிரதேசம் ஒதுக்கப்படும் போது, அந்தப் பழங்குடியினர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழ்கிறார்கள்; ஆகவே, அவர்களுக்கென்று கேட்க முடியும். ஆனால், இன்றைக்கு ஒதுக்கப்பட்ட, ஜாதிகளைப் பொறுத்தவரைக்கும், பரவலாக, அவர்கள் ஒரு மாநிலம் பூராவிலும் பல இடங்களிலே பிரிந்திருக்கக்கூடிய நேரத்திலே, இந்த 'அட்டானமஸ் ஏரியா' என்று குறிப்பிடுவதே, அவர்கள் ஒரு இடத்திலே குவிந்து வாழ்வது என்ற அடிப்படையிலே இருக்கும்பொழுது; அதற்குத்தான் இது பொருந்துமே தவிர, இவ்வாறு இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் பொருந்த முடியாது. ஆகவே. அதை அவர்கள் எப்படி கேட்கிறார்கள் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : அருமை, 'பொதுவுடைமைக் கட்சித் தலைவருக்கு நன்றி சொல்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுத்ததற்காக. எங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு நாளைக்கு, இந்து சமுதாயம் அல்லது, கிருஸ்தவ சமுதாயம் அல்லது பௌத்த சமுதாயம் அல்லது முஸ்லிம் சமுதாயம் தீண்டாமை என்ற கொடுமை பெயரால், தள்ளி வைக்கப்பட வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, எங்கேயெல்லாம் மூன்றில் ஒரு பங்கு பாப்புலேஷனுக்கு அதிகமாக இருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் இருப்பவர்களை, நாங்கள் இந்தியாவிலே, 6, அல்லது 10 கோடியாக இருந்தாலும், தமிழகத்திலே, அரசாங்கக் கணக்குப்படி 1 கோடிக்குக் கிட்டத்தட்ட வந்தாலும், ஐந்தில், ஒரு பங்கு இருந்தாலும் நாங்கள் எல்லாம் மைனாரிட்டி மக்கள் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம். அரிசன தலைவர்கள், உறுப்பினர்கள் கூட இதை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட இதை ஏற்றுக்கொள்வார்

கள் என்று எண்ணுகிறேன். கிட்டத்தட்ட ஒரு கோடியாக இருந்தாலும், அந்தந்த இடத்திலே நான் மைனாரிட்டித்தான். ஆனால் மெஜாரிட்டியுள்ள இடத்தில் அங்கே ஜாதி இல்லை. தீண்டாமை கொடுமை இல்லை, கூலிச்சட்டம் ஒழுங்காக இருக்கிறது, சட்டங்கள் ஒழுங்காக இருக்கின்றன, என்று கலெக்டரும், வெல்ஃபேர் ஆபீசரும் அந்த ஊரைப் பாராட்டித்தான் பரிசு கொடுக்கிறார். தீண்டாமை ஒழிந்து விட்டது என்று சொல்லி. ஆகவே, அருமை பொதுவுடமைக் கட்சித் தலைவரைப் பாராட்டுகிறேன், என்று சொல்லும்பொழுது எங்களுக்கிழைக்கப்படுகின்ற கொடுமைகளை உங்களால் நீக்க முடியவில்லை. அரசால், முடியவில்லை. அதிகாரிகளால் முடியவில்லை. இடையாத்தூரில் நடந்ததைப்போல, இடையாத்தூருககுப் பொதுவுடமைத் தலைவர்கள் போனீர்கள், காங்கிரஸ் தலைவர்கள் போனார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்க்ள் ஒத்துக்கொள்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். சொந்த நிலம் உள்ளவர்கள், மெஷீன் செட் எல்லாம் உடையவர்கள் தங்களுடைய நிலத்தையே விட்டுவிட்டு, கடந்த இரண்டு மாதகாலமாக, கட்டாந்தரையிலே, குளிரிலும், வெயிலிலும், மழையிலும் கிடக்கிறார்கள். என்ன செய்ய முடிந்தது அரசால்? ஆகவே, சந்தேகத்தாலும், விரக்தியாலும் வேறு வழியின்றி நான் சொல்கிற ஒரு வழி மட்டுமல்ல இது. If there is a will there is a way. எப்படி மலபாரிலே, மாப்ளாஸ் டிஸ்ட்ரிக்ட்டைக் கொடுத்தோம்? கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் இங்கே, Autonomous State for SCs. and STs. வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் கொடுத்திருக்கின்ற தீர்மானம், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பது. அதற்கு மேலாக ஒரு படி போய், அட்டானமஸ் ஸ்டேட்ஸ், தன்னாட்சி உரிமையுள்ள மாநிலங்கள் அமையவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் இங்கே கேட்டுக் கொண்டிருப்பதால், திரு. உமாநாத் கேட்டதற்கு ஒரு படி மேலாகவே அவர் கேட்டிருக்கிறார். அவர் அதை வாங்கினால், அதை ஒட்டியாவது, மற்ற மாநிலங்களும் அட்டானமஸ் ஸ்டேட்டஸ். பெறுவதற்கு வசதியாக இருக்கும். எந்த நோக்கத்திற்காக மாண்புமிகு உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களோ, அந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டிருப்பதற்காக அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துச் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளையபெருமாள் பேசிக்கொண்டே வரும்போது, விரக்தி மனப்பான்மையிலே சொல்கிறேன் என்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். அவரே அந்த வார்த்தைகளைச் சொன்னார். ஆகவே, அவை முன்னுள்ள



பிரச்னையிலிருந்து கொஞ்சம் டீவியேட் பண்ணிக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பிரச்னைக்கு வந்தால் சரியாகப் போய்விடும்.

திரு. எல். இளையபெருமாள் : எனக்குக் காபந்து கொடுத்ததற்காக நன்றி சொல்லுகிறேன். நான் விரக்தி என்று சொன்னதற்குக் காரணம், சிறு வயது முதலே அனுபவித்த தொல்லை, அரசியலுக்கு வந்தால் கிடைத்திருக்கின்ற நிலைமை, அகில இந்தியா பூராவும் சுற்றிப் பார்த்து நான் கொடுத்த அறிக்கை. அது யார் கண்ணிலும் படாதுபோன நிலைமை ; அது ஏதோ, புண்ணிய வசமாக அண்ணா அவர்களும், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் ஓரளவுக்காவது அதைப் புரிந்து கொண்டு ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக, நன்றி சொல்கிறேனே தவிர என்றாவது ஒரு நாள் என்ன நிலைமையிருக்கும். மிசோரமில் என்ன நிலைமை? ஏன் கிறிஸ்தவ மிஷன் பாதிரிகளைக் கோபிக்கிறோம்? அது இந்திய அரசாங்கமாக இருக்கட்டும், மாநில அரசாங்கமாக இருக்கட்டும்? என்ன நிலமை. நான் சென்றிருந்தேன். 22 நாட்கள் கோஹிமாவில் தங்கியிருந்தேன். அந்த மக்களைப் பார்த்தேன். நம்முடைய அதிகாரிகள் நடந்து கொண்ட பெருந்தன்மையும், கிறிஸ்தவ பாதிரிமார்கள் நடந்து கொண்ட எளிமையையும், மலைவாழ் மக்கள் கண்களைத் திறந்தது. இவர்தான் நம்முடைய ‘சேவியர்’ என்று, பாதுகாப்பாளர் என்று எண்ணுகிற சூழ்நிலையில், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் எண்ணுகிறார்கள்.

சிவ சேனா என்பது என்ன? கர்நாடக மாநிலத்திலே மண்ணின் மைந்தன் என்று சொல்லிக் கொண்டிருப்பது என்ன? ஏன், தமிழ்நாட்டிலேகூட, இன்னும் கொஞ்ச நாளைக்குப் பிறகு நமக்குக் கூட அந்த எண்ணங்கள் வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வேலையில்லா திண்டாட்டம். பொருளதார நிலைமை, பசியின் கொடுமை இவ்வளவு இருக்கும்போது, நமக்கும் அந்நிலைமை வரும். ஆகவே, எப்படியிருந்தாலும், ஒன்று மட்டும் நான் சொல்கிறேன். சகோதரர் நெடுமாறன் சொன்னது போல், ‘செப்பரேட் கன்ட்ரி’, அல்ல நான் சொல்வது Within the State, within the Centre, within the Constitution we want a separate autonomous State of Scheduled Caste area. Why? Because you do not want to help us, you do not want to treat us as a brother: you do not want to treat us as a citizen of this country. That is why we are thinking like this way.

[பிற்பகல் 1–20]

அதனால் தான் சொல்லுகிறேன். இருக்கிற அதிகாரமே போதுமே, இதற்கு மேல் கொடுத்தால் இதன் நிலை என்ன என்ற சந்தேகத்தில் சொன்னேன். எதிர்கட்சித் தலைவர் சந்தேகப்

படவேண்டாம் என்று சொல்லுகிறார். நம்புகிறேன். அந்த நம்பிக்கை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இதற்கு மேல் அதிகாரம் வருவதிலே உங்களுக்கு நன்மை இருக்குமானால் தமிழகத்தின் பேரால், தமிழ் மக்களின் பேரால், தமிழ்நாடு அரசின் சார்பாக எல்லாரும் கருத்து சொல்வதற்கு வருமானாலும் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கு மட்டும் நான் இதைச் சொன்னேனே தவிர வேறு எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாக 30—7—1947-ல் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. சந்தானம், திரு. அனந்தசயனம், திரு. ராமலிங்க செட்டியார், முன்னாள் தமிழக நிதி அமைச்சர் கோபால் ரெட்டி போன்றவர்கள், ஏன் திரு. ராஜமன்னர் போன்றவர்கள் எல்லாம் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் கூர்ந்து கவனிக்கின்ற வாய்ப்பு இந்த சந்தர்ப்பத்திலே இருப்பதனால் அரசு இவைகளை கவனித்து என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை நான் கவனித்து, நல்லவைகளுக்கு எங்கள் ஆதரவு இருக்கும் என்று சொல்லுகிறேன். அதைப் போலவே மாநிலத்துக்கு அதிகாரம் என்பதற்கு அவர்கள் சொல்கிறார்கள். ஆர்ட்டிக்கிள் 257, 365 என்ன சொல்லுகிறது என்றால் "If any State Government failed in its function to give effect to any decision given by the Union or Centre" அவர்கள் கொடுத்ததை செய்யாதபோதுதான் அவர்களை கேட்க முடிகிறதே தவிர, கொடுத்ததை செய்கிறபோது அநீதி அக்கிரமமாக கொடுப்பதை எதிர்க்கவேண்டும் என்றோ, இருக்கிற சட்டத்தை மாற்றவேண்டும் என்றோ நாங்கள் சொல்லவில்லை.' அதிக அதிகாரம் கொடுக்கிறோம். கொடுத்த அதிகாரம் பயன்படுத்தவில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்கு அது ஒழுங்காகச் செயல்படவில்லை. அது மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரியில்லை என்பதைச் சொல்வதோடு பொது உடமைக் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதிலே இப்போதும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு இந்த நம்பிக்கை இல்லாது இருப்பதனால் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவர் என்பதால், எங்களுக்கு என்னதான் வழி, இந்தக் கொடுமைக்கு என்னதான் முடிவு, யார்தான் இதைச் செய்வது, என்பதை அவர் அடுத்து வருகின்ற சந்தர்ப்பத்திலே சொல்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, எங்களுடைய அபிப்பிராயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இருக்கக்கூடியவர்கள் பிரதானமாக உழைப்பவர்கள், விவசாயத் தொழிலாளர்கள். ஆகவே இத்த உழைப்பவர்கள் என்ற வர்க்கத்துக்கு



ஒற்றுமை அடிப்படையில் அவர்களுடைய பொருளாதார சமுதாய வெற்றிக்குப் போராடுவதன் மூலம் தான் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும்.

திரு. எல். இளையபெருமாள் : பொருளாதார உயர்வு என்பது மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செய்யக்கூடியதாக சட்டங்கள். இன்றைக்குச் சொல்லுகிறேன் என்னைவிட அதிக அனுபவம் உடையவர் சகோதரர் அவர்கள்.

The Minimum Wages Act was passed in the year 1948. It was amended twice. It is in force. But unfortunately neither any government nor your Government or alliance Government—are not coming forward to implement this. What is your reply for this? Then how you are going to improve the condition of the agricultural labourers including Scheduled Castes and Scheduled Tribes. That is why the difference of opinion between myself and my leader. (opp.)

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் கேட்கிறார்கள். இடது சாரி ஐக்கிய முன்னணி என்று இருக்கக்கூடிய மாநிலங்களில், இப்போது தமிழ் நாட்டில் அந்த குறைந்த பட்சக் கூலி சட்டத்தை மத்திய சட்டத்தின் கீழ் கொண்டு வந்து அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்றால் அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி உட்பட இம்மாதிரி பிரச்சினைகளில் ஆழ்ந்த அக்கறை எடுத்து அந்த சமுதாய சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதிலே முன்னுக்கு வந்தால் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்கு சமாளிக்க முடியும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நான் ஒத்துக் கொள்கிறேன். எல்லோரையும் கேட்கிறேன். எல்லா மதத்தினரையும் கேட்கிறேன். சர்வ கட்சித் தலைவர்களையும் கேட்கிறேன். தனியாக எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோதெல்லாம் இந்தக் கொடுமைகளைப் பற்றி சொன்னது உண்டு. அது போலவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சென்ற வாரத்தில் சந்தித்துப் பேசியபோதும் இந்த உண்மையை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். நிச்சயமாக நம்முடைய சங்கரையா போன்றவர்களுடைய எண்ணங்கள் சீக்கிரத்தில் வெற்றி பெறும் என்று சொல்லி, சகோதரர் நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல நான் கேட்கின்ற இந்த அட்டானமஸ் என்பது ஒரு ஜாதியின் பேரால் கேட்பதாக எண்ணவேண்டாம். ஒரு கொடுமையின் பேரால் கேட்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 7

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தீர்மானம் கொண்டு வந்த கம்யூனிஸ்ட் கட்சிகள், மற்றும் உள்ள எல்லாக்கட்சிகளும் சேர்ந்து மாண்பு மிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு உறுதி அளிக்கிறோம். எந்தவிதமான ஆபத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வராமல் மாநில அரசு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும். இப்போதாவது மாநில சுயாட்சியை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மிக வல்லவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சிறு வயது முதற்கொண்டே தெரியும். அவருடைய உண்மையான உள்ளத்தை நான் உணர்ந்தவன். ஆகவே, அந்த வகையில் நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதுவும் அந்தச் சமுதாய மக்களின் சம்பந்தி என்று அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொள்வார்கள். யாரும் செய்யாததை அவர்கள் செய்ததற்காக நான் அதற்கும் நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால் சம்பந்தி என்று வந்தாலும், அந்தச் சம்பந்தியோடு சேர்ந்து டீக்கடைக்குப் போகும் தைர்யம், சட்டம் இருந்தும் நிலைமை இல்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

திருவோணத்தில் இன்றைக்கும் எல்லாக்கட்சியினரும் சேர்ந்து கோவிலுக்குப் போகமுடியாது என்கிற நிலைமை இருக்கிறது. அங்கே கலெக்டர் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அந்த மாவட்ட எஸ்.பி. இருவரும் சம்பவ காலத்தில் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர். நான் உங்களின் தகவலுக்காகச் சொல்வேன், நாங்கள் கேஸ் கொடுத்து 8 நாட்கள் ஆன பின்பு, இடையாத்தூரில் ஜோடித்து கேஸ் போட்ட பிறகு, அவர்களையும் சேர்த்து, எங்களையும் சேர்த்து கேஸ் போட்டோம் என்று இங்கே அவை முன்னவர் சொன்னார்கள். ஆனால் யார் தான் உண்மை?

இன்னொரு பக்கம், திரு. நெடுமாறன் அவர்கள் கேட்டதற்குச் சொல்கிறேன். '' அடானமஸ் '' பற்றி கேட்டார்கள். அரிச்சந்திரன் நாடகத்தில் ஒரு சமுதாயத்தைப் பற்றி இழிவான நிலை வருகிறது. அதை எடுக்க வேண்டும் என்று சொன்னோம். அவர்கள் அதைக் கூட எடுக்கவில்லை. காட்சி நடக்கும் இடத்திற்கு நாங்கள் போகவில்லை. சென்னராயன்பாளையம், திருவள்ளூர் தாலுக்கா, செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட், இராமனாதபுரம் ஜில்லா, மதுரை ஜில்லா, போகவில்லை. நாங்கள் போகாமல் இருந்த பாவத்திற்கு இரவு இரண்டு மணிக்கு எங்களை அடித்து, சொத்துக்களை கொள்ளையிட்டு அதன் பிறகு எங்கள் மீதும், அவர்கள் மீதும் கேஸ் போடுகிற அரசாங்கமாக இருந்தால் எப்படி உங்களை நம்புவது என்று கேட்கிறேன்.



1980 ஆகஸ்ட் 7]

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் இளையபெருமாள் அவர்கள் பேசியது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்று சொன்னாலும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்பவர்களை எல்லாம் மத்திய விவசாயத் துணை அமைச்சர் —அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும். பிரிவினை வாதிகள் என்று பொருள்பட பேசுவது தர்மம்தானா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : அருமைத் தலைவர் அவர்களே, அவ்வளவு சொல்வதற்கு எனக்குத் தகுதி இருக்கிறதா என்பது சந்தேகம். இருந்தாலும் ஒன்றை மட்டும் சொல்வேன். யார் சொன்னாலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிற உரிமை இருக்கிறது. அதிலே நியாயம் இருக்கிறது. கொடுப்பதும், கொடுக்காததும் வேறு விஷயம். கேட்பதற்கு பன்டமென்டல் ரைட்ஸ் இருக்கிறது. ஆனால் அந்த பன்டமென்டல் ரைட்ஸையே தூக்கி எறிகிற நிலைமையில் சுப்ரீம் கோர்ட் இருக்கிறது. அர்ச்சகர் சட்டம் பற்றிச் சொல்கிறேன். நாங்கள் அர்ச்சகருக்குப் படிக்கவில்லை. இருந்தாலும் அந்தச் சட்டம் மனித உரிமைக்குக் குரல்கொடுக்கப்படுகிற சட்டம். அதற்கு தோள் கொடுக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் என்று அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே அந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு மாண்புமிகு அமைசசர் அவர்களும, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கிறார்களோ அதற்கெல்லாம் நான் துணை நிற்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, சகோதரர் உமாநாத் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை. இருக்கின்ற அதிகாரம் போதும். அதிகம் வேண்டாம். கிடைத்ததைக் கொண்டு ஒழுங்காகச் செய்யுங்கள். அதன் பிறகு சேர்த்துக் கேட்டுக் கொள்ளலாம் எனறு சகோதரர் உமாநாத் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வளவு விளக்கத்தையும் அளிக்க வாய்ப்பு அளித்த தலைவருக்கும், எங்களுக்கு உறுதி அளித்த எதிர்க்கட்சித் தலைவருக்கும் நன்றி கூறுகிற அதே நேரத்தில், ஒன்றைச் சொல்கிறேன், விழுப்புரம் தொடர்கிறது, இடையாத்தூர், சென்னராயன்பாளையம், மாணவர்கள் கைது, ஆசிரியர்கள் கைது என்ற செய்திகள் வருகின்றன. இவைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கிற வகையில் நம்பிக்கை கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக தமிழன் என்ற முறையிலும், இந்தியன் என்ற முறையிலும், நிச்சயமாகத் தோள் கொடுத்து நிற்பேன் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தின் மூலம் அதிக அதிகாரங்கள் கேட்க வேண்டாம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1980 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இன்று மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

சட்டமன்றப் பேரவை மீண்டும் மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

## (8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ). பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

### (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண், 36/1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு *பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ், 1980 என்ற இந்த சட்டத் திருத்தத்தின் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் " ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் " என்ற பகுதியில் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கான காரணங்கள், நோக்கங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சொல்லுகிற போது, 'The Tamil Nadu Sales Tax Committee (Kaiwar Committee) while agreeing with the suggestions of the Officer on Special Duty for rationalisation and simplification of Commercial Taxes Acts................. "என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கெய்வார் கமிட்டி என்றால் என்ன? அவர்கள் கொடுத்த ரிப்போர்ட் என்ன? இந்த சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக என்னென்ன ஒழுங்கு முறைகளை சொல்லியிருக்கிறார்கள் ' என்ன சிபாரிசு

*1980 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 1 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1980 ஆகஸ்ட் 7] [திரு. அ. ரகுமான்கான்]

செய்திருக்கிறார்கள் என்கின்ற விவரங்களை இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் பார்வைக்காக டேபிளில் வைத்து இருந்தால், உறுப்பினர்கள் எல்லாம் அதை முழுமையாகப் படித்துப் பார்த்து, அதிலே சொல்லியிருக்கிற மொத்தக் கருத்துக்களையும் ஆராய்ந்து பார்த்து, கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் இன்றைக்கு இருட்டறையிலே பூனையைத் தேடுவதைப் போல இந்த மசோதாவிற்கான குறிப்புகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது இருட்டு இல்லை ; நல்ல வெளிச்சமாக இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் இலக்கிய நயத்திற்காக அப்படி குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு ஒன்றுமல்ல. இப்படி பகலிலே எரியும் விளக்கைப் போல இந்த மசோதா இருக்கிறது. காரணம் இந்த கெய்வார் கமிட்டி ரிப்போர்ட் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அது இருந்திருந்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, ரிப்போர்ட்டில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக,

The Government have decided to accept the above recommendation and to amend Section 3 of the Tamil Nadu General Sales Tax Act, 1959.

என்று இதிலே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவினுடைய அடிப்படை நோக்கம் மூலப் பொருள்களுக்கு, காம்பொனன்ட்ஸுக்கு கன்செஷன் கொடுக்க வேண்டும் என்பது கன்செஷன் கொடுக்க வேண்டும். என்றுதான் கெய்வார் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அந்த சிபாரிசை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் இதில் ஒன்று விளங்கவில்லை ; நம்முடைய அமைச்சரவர்கள் அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

,to increase the rate of tax levied under sub-section (3) of section 3 of the Act 4 per cent in respect of component parts to be on par with the general rate of tax என்று சொல்லப்பட்டிருக்கிறது. காம்பொனன்ட்ஸ் பார்ட்சுக்கு 3 சதவீதம் தான் விற்பனை வரி இருக்கிறது. ஆனால் கன்செஷன் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு அந்த 3 சதவீதம் வரியை 4 சதவீதமாக சென்ட்ரல் ஆக்ட் அடிப்படையிலே உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். இது எப்படி கன்செஷன் ஆகும் ? வரி விகிதம் உயர்ந்திருக்கிறதே தவிர கன்செஷன் என்ற முறையில் குறையவில்லை. அமைச்சரவர்கள் அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதிலே,

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஆகஸ்ட் 7

Commercial Tax Officersas Assistant Commissioner of Commercial

"The Government have issued orders upgrading, among others, certain posts of Commercial Tax Officer as Assistant Commissioner of Commercial Taxes.

என்று வருகின்ற அந்த வரிகளில் அவர்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றது.

குறிப்பாக வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற விதத்திலே வியாபாரிகளினுடைய வீட்டிற்குள்ளோ அல்லது குடோனுள்ளோ அல்லது வேறு சரக்கு வைத்திருக்கின்ற இடத்தினுள்ளோ நுழைந்து அந்தப் பொருட்களை எல்லாம் பரிசோதனை செய்வதற்கும், ரிக்கார்டுசளை எல்லாம் பரிசோதனை செய்வதற்கும் அல்லது அந்த சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்கின்ற போது அதாவது "Transpotation" என்ற வகையிலே சென்று கொண்டிருக்கும் போது தடுத்து நிறுத்தி பரிசோதனை செய்வதற்கும் உரிய அதிகாரத்தை நீங்கள் அதிகாரிகளுக்கு வழங்கி இருக்கிறீர்கள். ஆனால் இந்த அதிகாரம் மிஸ்யூஸ் ஆகிவிடக் கூடாது. ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் வருகின்றன. அதாவது வியாபாரிகளிடத்திலே பணம் பெறுவதற்காக சில தவறான பாதைகளிலே இந்த அதிகாரத்தை பயன்படுத்துகின்ற நிலைமை சர்வ சாதாரணமாக இருந்துக் கொண்டிருக்கின்றது. இதையும் பயன்படுத்திக் கொண்டு வியாபாரிகளை பயமுறுத்தி இலாபம் சம்பாதிக்கின்ற நோக்கத்தோடு செயல்படுகின்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவே இந்த அதிகாரமும் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிடக் கூடாது. அந்த விதத்திலே அதிகாரிகள் கண்காணிக்கப்படவேண்டும். அதற்கு இந்த மசோதாவிலே எந்தவிதமான குறிப்பும் இல்லை. அது குறித்து இந்த அரசு என்ன சொல்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு பிரிவு இதிலே இருக்கின்றது. அதாவது விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் வரி பாக்கி செலுத்த வேண்டிய வியாபாரிகள் அந்த வரியினை ஏய்ப்பதற்காக அவர்களிடத்திலே உள்ள பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாகவோ அல்லது கிப்ட் என்ற வகையிலேயோ ட்ரான்ஸ்பர் செய்தால் அது செல்லாது சட்டப்படி That sale is void சட்டத்திலே செல்லுபடியாகாது என்று ஒரு பிரிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கதுதான்.

அதைப்போலவே இன்னொன்று. எப்படி லேன்ட் ரெவின்யூ பாக்கிக்காக முதலிலே கடன்காரர்கள் கொடுக்க வேண்டுமோ எப்படி லேன்ட் டெவல்ப்மென்ட் பேங்கினுடைய கடன்காரர்ககள் முதலிலே அதற்குக் கொடுக்கவே வேண்டுமோ



1980 ஆகஸ்ட் 7] [திரு. அ. ரகுமான்கான்]

அந்த மாதிரி இந்த விற்பனை வரிபாக்கியையும் முதலிலே வைத்திருப்பது வரவேற்கத் தகுந்ததுதான். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்த மசோதாவிலே உள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால் வியாபாரிகள் வரியை ஏய்க்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருந்துவிடக்கூடாது. வரி ஏய்ப்பு என்பது சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய நிகழ்ச்சி என்பதை நாம் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். ஆகவே அதிகாரிகளின் செல்வாக்கின் மூலமாகவோ அல்லது பணத்தின் மூலமாகவோ வியாபாரிகள் வரி ஏய்ப்பு மன்னர்களாக உலவி விடாமல் இந்த சர்க்கார் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இந்த மசோதாவினுடைய உண்மையான நோக்கம் அப்படி இருந்தால் அந்த வகையிலே சர்க்கார் இயங்கவேண்டும்என்று கேட்டு என்னுடையகருத்தைச் சொல்லி அமருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, விற்பனை வரிச் சட்டத்தினுடைய திருத்தத்தில் சில நல்ல அம்சங்கள் இருப்பதாக மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது. கைவார் கமிஷன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் காம்பொனன்ட் பார்ட்ஸ்க்கு சலுகைகள் தரவேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அதாவது ரா மெட்டிரீயல் தயாரிப்பதற்கு அந்த சலுகைகள் தரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் பினிஷ்ட் குட்ஸ் என்று சொல்லப்படும் போது கைத்தொழில்களின் மூலமாக செய்யக்கூடிய பொருள்களுக்கு அதிகமான சலுகைகளை வழங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு கொண்டு வந்திருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது.

[மாலை 4-10]

ஆகவே இந்த கைவார் குழு குறிப்பிட்ட அடிப்படையில் பல்வேறு திருத்தங்களையும் இங்கே ஏற்படுத்த இருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஏற்கனவே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, இந்த அரசைப் பொருத்தவரையில் விற்பனை வரியை வசூல் செய்வதற்கு, அதற்கான முன்னுரிமை 3-வது இடம் என்று ஒதுக்கப் பெற்றிருப்பது, நல்ல அம்சம். பாராட்டுகிறேன். அதாவது, நில வள வங்கியின் கடன், அடுத்தது ரெவின்யூ டாக்ஸ், முறையாவதாக இந்த விற்பனை வரிக்கு, வசூல் செய்வதற்கான முன்னுரிமை கொடுக்கப்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. அதன் மூலமாக வரி ஏய்ப்பு செய்கிறவர்களை கண்காணிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1980 ஆகஸ்ட் 7

அதோடு தூக்கிச் செல்லக் கூடிய பொருள்களை கண்காணிப்பதற்கும் அவைகளை எக்சாம் செய்வதற்கும் உரிமை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது தான். ஆனால் இதில் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு, லாரிகளிலோ, பஸ்ஸிலோ ஏற்பாடு செய்தாலும், அந்த லாரி டிரைவர்கள் அல்லது ஓட்டுநர்கள் இதனால் பாதிக்கப்படக் கூடாது. அதாவது இன்னொசென்ஸ் என்று சொல்லக் கூடியவர்களுக்கு இதிலே பாதுகாப்பு அளிப்பதற்கான வழிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது இதை வலியுறுத்திக் கூறுகிறபோது, அப்படி எடுத்துச் செல்லும் லாரி டிரைவர்கள், தண்டிக்கப்படக்கூடாது. ஆகையினால் நல்ல விளம்பரங்களை முறையாக செய்வதன் மூலஷ் இப்படிப்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்திக்க முடியும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு நான் ஏற்கனவே சொன்ன அடிப்படையில் இன்றைக்கு இந்த சேல்ஸ் டேக்ஸ் ஒரு மறைமுக வரியாகத்தான் இருக்கிறது. சாதாரண மக்கள் பயன்படுத்துகிற அன்றாட பொருள்களின் மீது வரி போட்டு, அதன் மூலம் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் சரியல்ல. அதே நேரத்தில் மிகப் பெரிய அளவில் வியாபாரம் செய்யக்கூடியவர்கள், பெரிய பெரிய வியாபாரிகளிடம் இந்த வரியே முனைப்பாக வசூல்செய்வதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால் இன்றைக்கு கைத் தொழில்களின் மீது அதாவது கைத்தொழில்களின் மூலம் உருவாக்கக் கூடிய பொருள்களின் மீது போடப்பட்டிருக்கிற வரி குறைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

நேற்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பற்றி இன்னொரு முறை வருகிறபோது பேசலாம் என்று சொன்னார்கள். ஆகவே நான் ஏற்கனவே சொன்ன ஆடிப்படையில், கைத் தொழிலாக செய்யக் கூடிய தீப்பெட்டி, அப்பளம் போன்ற பொருள்கள், கள்ளக்குறிச்சி அப்பளத்திற்கு வரி விலக்கு இருக்கலாம். ஆனால் இதுபோன்ற பல இடங்களில் கைத் தொழிலாக அப்பளம் செய்கிறார்கள். அவைகளுக்கும் ஊறுகாய் போடுதல், சோப்பு செய்தல் போன்ற குடிசைத் தொழில்களை பாதுகாக்க வேண்டும். குடிசைத்தொழில்கள் நசிந்து விடக் கூடாது. மெஷின் மேட் பொருள்களுக்கும், குடிசைத் தொழில்களின் உற்பத்தியாகும் பொருள்களுக்கும் போட்டி வரும்போது, குடிசைத் தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வகையில் இதில் பாதுகாப்புச் செய்ய வேண்டும். அதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது மிகமிக அவசியம் என்று சொல்லி, அந்த அடிப்படையில் அப்படி உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களுக்கு போடப் பட்டிருக்கிற வரியை குறைக்க வேண்டும். அல்லது நீக்கவேண்டும் என்று கோருகிறேன்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. ரா. கிருஷ்ணன்]

பொதுவாக மறைமுக வரி என்பது மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் பொருள்களின் மீது போடுவதால் அவற்றின் விலை ஏற்றத்திற்கு உறுதுணை செய்வதாக ஆகிவிடும் என்கிற வகையில் இப்படிப்பட்ட மறைமுக வரியை குறைத்து, அல்லது நீக்கி, நேரிடையாக பெரிய பெரிய தொழில் அதிபரிகளிடமிருந்து முனைப்பாக வரிகளை வசூல் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>டாக்டர் கே. சமரசம்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே சுய ஆட்சிப் பெறாத ஒரு மாநில அரசு, தங்களுடைய சக்திக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கிறபோது எவ்வளவு அதிகபட்சம் செய்ய முடியுமோ அவ்வளவு தான் செய்ய முடியும் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள்.

உதாரணமாக சைக்கிளில் போகக்கூடிய ஒருவன் ட்யூப் பஞ்சரானால் அதை ஒட்டிக்கொள்வான். அதற்குப் பெயர் அட்ஜஸ்ட்மென்ட் என்று சொல்வார்கள். ஆனால் இரவு நேரமானாலும், எந்த நேரமானாலும் ஒரு டயனமோ பொருத்திக்கொண்டால் அதை டெவலப்மென்ட் என்று சொல்வார்கள். ஒரு மாநில ஆட்சி. இந்தியத் துஊணக்கண்டத்திலுள்ள ஒரு கட்சி பெரும்பாலும் இதுவரை ஒரு அட்ஜஸ்ட்மென்ட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிர்வாகத்தை நடத்தி வந்திருக்கிறதே தவிர டெவலப்மென்ட் என்று சொல்லக்கூடியவகையில் பல நேரங்களிலே, 33 ஆண்டுகளில், அந்தச் சூழ்நிலை உருவாகவில்லை.

இப்போது இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த அருமையான திருத்த மசோதா உண்மையிலேயே மேடுபள்ளங்களைச் சரிப்படுத்தி சமமான வழியில் மக்களை 'இட்டுச்செல்கிறது. விழுந்தவனுக்கு தேவை இல்லை. உழைப்பவன் உயர்ந்தால் போதும் என்ற இலட்சியத்தின் அடிப்படையில் பொருளாதார அடிப்படையில் உதவியும் பாதுகாப்பும் தரக்கூடிய அளவிற்கு இந்தத் திருத்தங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தில்தான் மிகச் சிறந்ததொரு நிர்வாகம் நடந்து வருகிறது என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு வருவாய்த் துறையில் ஏற்பட்டிருக்கிற சீர்திருத்தங்கள் மிகப் பெரிய விஷயங்களாகும். இன்றைய

தினம் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மக்கள் மத்தியில் இருந்து இந்த மன்றத்திற்கு வந்தவர் என்பதை விளக்கக்கூடிய வகையில் அனுபவம், ஆற்றல் மிகுந்தவர் என்று சொல்லக் கூடிய வகையில் புது வரிகளைப் புகுத்தாமல் ஏற்கனவே இருந்த வரியில் சீர்திருத்தம் மட்டும் செய்து அதன் மூலம் ஆண்டுக்கு 70 கோடி ரூபாய்க்கு மேலாக கூடுதலாக இந்த அரசுக்கு வருவாய் வருகிறது என்று சொன்னால் எந்தளவிற்கு எல்லாச் சட்டங்களையும் இதில் அடக்கியிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கக்கூடிய மாநிலங்களில் தமிழ் நாடு மாநிலத்தில் நிர்வாகிகள் அல்லது அரசு அதிகாரிகள் மிகச் சிறப்புப் பெற்றவர்கள் என்பதை இந்த ஒரே காரணத்தினாலேயே எடுத்துச் சொல்லிவிடலாம்.

அதுமட்டுமல்லாமல், கலைத் துறை என்ற வகையில் சினிமாத் துறையை எடுத்துக் கொண்டால் சினிமா வரி என்று சொல்வது 19 கோடி ரூபாயாக இருந்த வருவாயை 29 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். வருவாய் வருகிறது. ஆனால் புதிய வரியை அரசாங்கம் போடவில்லை ஏற்கனவே இருந்த சட்டங்களை சீர்திருத்தம் செய்த காரணத்தினால்தான், அந்த ஓட்டைகளை அடைத்த காரணத்தால்தான் வரி வருகிறது. அதற்கு என்று ஒரு புது வரியோ அல்லது புதுப் பொருப்பாளரோ போடவில்லை. அப்படி எதையும் செய்யாமல் சீர்திருத்தம் என்ற முறையில் மட்டும் சீரமைத்த காரணத்தால் ஏறத்தாழ நூறு கோடி ரூபாய் அளவிற்கு மேல் வரி வரக்கூடிய ஒரு புதிய நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் தமிழகத்தின் முதல்வர், வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மிகச் சிறந்த ஒரு நிர்வாகி, தலை சிறந்த ஒரு நிர்வாகி என்பதும் இந்தப் பொறுப்பில் உள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் அனுபவம் பெற்ற ஒரு அரசியல்வாதி, தைரியசாலி, சீர்திருத்த வாதி, தேவையான நிலையில் தேவையானவர்களை வைத்து ஆட்சி புரிகிறார்கள் என்று நாடு சொல்லக்கூடிய வகையில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்னும் சொல்லப் போனால், பல பல சட்டங்கள் இருந்தன. அந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி ஆட்சிக்கு அல்லது ஆட்சிக் கட்சிக்கு என்று சொல்லி வசூல் செய்யக்கூடிய நிலை எல்லாம் இருந்திருக்கிறது. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் வியாபாரிகள் அச்சமின்றி நடைபோடுகிறார்கள். அவர்கள் தொழிலில் நிம்மதியாக அவர்கள் வாழக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது இந்த ஆட்சி என்றால் அது மிகையாகாது. இன்று அந்த அளவிற்கு மிக நல்ல முறையில் நிர்வாகம் இருக்கிறது. கொள்ளையடிப்பதே ஒரு கலை என்று சொல்லக்கூடிய அளவில் வியா





பாரிகள் என்று சொன்னால் ஒன்றுக்கு பத்து அல்லது நூறு மடங்குக்கு விற்கலாம், எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம், அரசாங்கத்தை எவ்வளவு வேண்டுமானாலும் ஏமாற்றிக் கொண்டு போகலாம் என்ற நிலையை மாற்றி ஏமாற்ற முடியாது, ஏமாற மாட்டோம் என்ற அளவில் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது இந்த ஆட்சி. புது வரி போடாமல், அதிகாரிகள் போகாமல் தானாகவே கஜானாவிற்கு பணம் வர வேண்டிய அளவிற்கு இடைத்தரகர்கள் இல்லாமல் அதிக வருவாய் வருகிறது என்று சொன்னால் இது போன்ற நிர்வாகச் சீர்திருத்தங்கள்தான் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் அரசுக்கு மேலும் வருவாய் வர ஒரு யோசனை மட்டும் கூற விரும்புகிறேன். அப்படிச் செய்வதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் அரசுக்கு வருமானம் வரும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயமாகும். ஒரு இடத்திற்கு சரக்கு அனுப்புகிறவர்கள் என்றால், சென்னைக்கு தர்மபுரியிலிருந்து சரக்கு போகிறது என்றால், 100 டன் ஏற்றுகிறவர்கள் என்றால் இது சென்ற பிறகு மூன்று பில்கள், இரண்டு பில்களில் எழுதிவிடுகிறார்கள், மூன்றாவது வொயிட் பேப்பர் வைத்துக் கொள்கிறார்கள். வழியில் பரிசோதகர்கள் ஒன்றை வாங்கி கொள்கிறார்கள். எழுதிக் கொண்டு போவதில் ஒன்றைக் கொடுத்துவிடுகிறார்கள். யாரும் பிடிக்காமல் போனால் கீழே இருப்பதில் ஐந்து டன் என்று எழுதி வைத்துக் கொண்டு விடுகிறார்கள்.

(மாலை 4—20)

அந்த அளவிற்கு ஏமாற்றுகின்ற நிலை இருக்கிறது. ஆனால் இனிமேல், அப்படி இல்லாமல் அங்கே சரக்கு சென்ற பிறகு, டெலிவரியான பிறகு, இந்த பில்லை மீண்டும் அனுப்ப வேண்டுமென்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால், இடையே ஏமாற்ற முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்தஅளவிற்கு புதிய சீர்திருத்தம் செய்தால், இன்னும் பல கோடி ரூபாய் வருமானம் வரும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்த வகையில் இதைப் பரிசிலனை செய்து இதை இந்த அரசு நடைமுறைப் படுத்த வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி இரண்டாவது திருத்த மசோதாவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பொது விற்பனை வரியானது 1939 ஆம் ஆண்டில் மதுவிலக்குச் சட்டத்தை தமிழகத்தில் அமுல் செய்த நேரத்தில் மறைந்த இராஜாஜி அவர்கள் முதல்வராக

இருந்த நேரத்தில் அதை ஈடு செய்வதற்காக இந்த விற்பனை வரி கொண்டு வரப்பட்டாலும், இது தமிழகத்திலே இன்றைய தினம் அரசிற்கு ஒரு பெரும் வருமானத்தைத் தேடித்தரக் கூடிய ஒரு கருவியாக இருக்கிறது. இதைக் கட்டக் கூடியவர்கள் வியாபாரிகள் என்றிருந்தாலும், நேரடியாக பொதுமக்கள் மீது இந்தச் சுமை விழுகிறது என்பதும், ஒரு மறைமுகமான வரி என்பதும், இந்த விற்பனை வரியை உயர்த்துகின்ற கொள்கை என்பது மக்களுக்கு மேலும் அதிக வரி விதிக்கக்கூடிய கொள்கையை அமுல் செய்யப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இந்த விற்பனை வரியை இன்றையதினம் வியாபாரிகளிடத்திலே இருந்து வசூலிக்கின்ற நேரத்தில், வருவாய் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் வரக்கூடிய நேரத்தில் இந்த வியாபரிகள் படும் பாட்டைப் பார்த்தால், ஒரு பரிதாபமான நிகழ்ச்சியாக இருக்கிறது. அதற்கு என்ன காரணங்கள் சொன்னாலும், இன்றையதினம் வியாபாரிகள் கணக்கு வைக்கக்கூடிய முறையிலே கோளாறோ அல்லது நடைமுறையிலே சாத்தியம் இல்லாத ஒன்றை செய்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்ந்து, அந்த வரியை எளிய முறையிலே வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி, அரசுக்கு செலுத்தவேண்டிய வரியைச் செலுத்துவதற்கு, அப்படி வரி வசூலிக்கக் கூடிய முறைகளை சுலபப்படுத்துவதற்கு மாநில மட்டத்திலேயும், மாவட்ட மட்டங்களிலேயும் வியாபாரிகளைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்து, இந்த வியாபாரிகளின் ஆலோசனைகளையும் பெற்று, இந்த வரியை முறையாக வசூலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சட்டத்தின் திருத்தத்திலே, காம்பொனென்ட் பார்ட்ஸ் அதாவது உதிரி உறுப்புகளுக்கு ஏற்கனவே 3 சதவீதம் வரி இருந்தது, இப்போது 4 சதவீதம் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இது அவசியம் தானா என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே பல்வேறு நல்ல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு திருத்தம், நில அடமான வங்கிகள், மற்றும் அரசு லாண்ட் ரெவிண்யூ போன்றவைகளை முதல் சார்ஜாக எடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்முலம் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை முதற் கடமையாக செய்துவிட்டு, அடுத்த வரிசையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே இந்த ஸ்தாபனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.





அடுத்து, மற்றொரு முக்கியமான திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வரியை விதிக்கக்கூடிய நேரத்திலே, அதற்கான இடைக் காலத்திலே அந்தச் சொத்துக்களை விற்பதோ, போக்கியம், அடமானம் செய்வதோ செல்லாது என்று திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். இது ஒரு முக்கியமான அம்சமாக அமைந்திருக்கிறது. பொதுவாக, இன்றையதினம் இந்த வரியை 3 சதவீதம் என்று உயர்த்தி இருப்பதன் மூலம், அரசாங்கத்திற்கு ஒரு பெரிய வருமானம் கிடைத்துவிடும் என்று நான் நினைக்கவில்லை.

ஆகவே, இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி வசூலிக்கக்கூடிய முறைகளில் இருக்கக்கூடிய முறைகளை மாற்றும் வகையில், அதிகாரிகளும், வியாபாரிகளும் அச்சம் இல்லாத முறையில் நடந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்க ஆலோசனைக் குழுக்களை அமைத்து செயல்பட வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. ஏ. சாகுல் ஹமீது :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்திருப்பதை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக வரவேற்கிறேன். இன்றைக்கு வணிகர்களிடமிருந்து வரியை வசூலிப்பதில் நல்ல முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். குறிப்பாக, வரி வசூல் என்றால் முறையான செம்மையான நிலைமைகள் இருப்பதில்லை, என்பது பொதுவான நியதி. அந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரே ஒரு கருத்தைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதற்காகத்தான் பேச எழுந்திருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை சித்த வைத்திய மருந்துகளைத் தயார் செய்யும் தொழிலைச் செய்கிறவர்கள் பச்சிலை, மூலிகைகள், மரப்பட்டைகள் மூலம் மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்கிறார்கள். அவர்கள் செய்யும் அந்த மருந்துகளுக்கு 8 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரி மறைமுக வரி என்ற காரணத்தினால் வாங்குகிற ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆங்கில மருந்துகளை விட சித்த வைத்திய மருந்துகள் விலைகுறைவாக இருக்கின்றன. இந்த வரி ஏழை எளியமக்களைப் பாதிக்கும் என்ற காரணத்தால் சித்த வைத்திய மருந்துகளுக்கு இந்த வரியிலிருந்து விலக்குத் தரவேண்டும். அவர்கள் இந்த மருந்துகளை மெஷினரியில் செய்யவில்லை. கையால் செய்கிறார்கள். கை முறை செய் முறையில் தயாரிக்கப்படும் சித்த வைத்திய மருந்துகளுக்கு வரி விலக்கு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி சட்ட முன் வடிவின்மீது இரண்டொரு விஷயங்களைச் சொல்ல விரும்பு கிறேன். பொதுப்படையாக நிலவள வங்கிக்குச் சேரவேண்டிய தொகையை நீக்கவேண்டும். அமைச்சர் அவர்களுக்கு நிச்சய மாகத் தெரியும் — நிலவள வங்கிகளில் குறைந்த வட்டிக்கு வாங்கி ......................

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதைப் பற்றி இதிலே சொல்லவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிச் சொல்லவில்லை என்று சொல்லுவதால் மேலும் சொல்ல விரும்பவில்லை.

ஊறுகாய், கற்பூரம், பெருங்காயம், அப்பளம், சிறு பாய்கள் ஆகியவற்றுக்கெல்லாம் இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் குடிசைத் தொழில்கள். இவற்றின் மூலம் மிகுந்த அளவுக்கு வரித் தொகை வந்து விடாது. குடிசைத் தொழில் களை வளர்க்கவும், ஏழை எளிய மக்கள் பயன்படவும் இந்தத் தொழில்களுக்கு வரி விலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் குறைந்த அளவுக்குத்தான் உற்பத்தி செய்கிறார்கள். அரசு முன்வந்து முழுமையான அளவுக்குத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள் கிறேன்.

கெய்வார் குழு பரிந்துரைகளில் சில முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. அதை முழுமையாகப் பரிசீலனை செய்து நடை முறைக்குக் கொண்டு வரவேண்டும். சட்டம் செய்தால் மட்டும் போதாது, சட்டத்தை அமல் செய்யும் நிலைமைக்கு வழி செய் தாலொழிய அரசுக்கு நல்ல பெயர் இல்லை. குழு அமைப்பது ஏதோ அந்தச் சமயத்தில் உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்பட்டு கேட்கிறார்கள், வேகமாகக் கேட்கிறார்கள் என்ற காரணத்தால் அந்தக் கோபத்தைத் தணிக்க குழுக்களை அமைப்பது நியாய மானது அல்ல, நேர்மையானது அல்ல. ஒருசில காலத்திற்கு மட்டுமே அது பயன்படலாம். குழுக்கள் அமைக்கப்பட்டால் அதன் பரிந்துரைகள் சரியாக இருக்குமானால் அமல் நடத்தப்பட வேண்டும். இல்லையென்றால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள் ளும் நிலைக்குத்தான் போய்விடும். குறிப்பாக அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு என்ற வகையில் கொடுத்திருக்கிறார்கள். பாராட்டு கிறேன். அவர்கள் இதனை எவ்வளவு தூரம் அமல் படுத்து கிறார்கள் என்று பார்க்கவேண்டும். பதவிகள் உயர்ந்தால்மட் டும் போதாது.





[மாலை 4-30]

நிலைமைகள் என்ன என்பதை பகிரங்கமாக நாம் அவர் களுக்குச் சுட்டிக்காட்டுகிற நிலைமையிலே அவர்களுக்கு என்ன உயர்வு கொடுத்தாலும் வருகின்ற வரிகளை ஏய்ப்பதைத் தடுப் பதற்கும், அவர்கள் சரியாக செலுத்துகிறார்களா என்பதை அறி வதற்கும் அவ்வப்போது அரசு அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்வதிலே பின்தங்கிவிடக் கூடாது. பின்தங்குவோமானால் அவர்களுக்கு உயர்வு கொடுப்பது பரீட்சையிலே அதிக மார்க் வாங்கிய பிள்ளைகளைப் பார்த்து சந்தோஷப் படுவதுபோல் தான் ஆகுமே தவிர வேறு ஒன்றும் நடக்காது. அவர்களுக்குக் கொடுப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு முன் னாலே பேசிய சகோதரர் கருப்பையா அவர்கள் சொன்னதைப் போல ராஜாஜி மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக அதற்கு நட்டஈடு செய்வதற்காக கொண்டுவரப் பட்டது. இன் றைக்கு அது பர்மனன்ட் ஆக இருக்கிறது. வரியில்லாமல் அரசை நடத்தமுடியாது ஆகவே அந்தக்கருத்திலே நான் சொல்லவில்லை. அப்போது அந்தத் திட்டத்தினால் வருமானம் குறைந்த நிலைமை இருந்ததால் அதை ஈடுகட்ட வேண்டிய முறையிலே கொண்டுவரப் பட்டது. வணிகர் சங்கத்திலே இருந்து அரசுக்கு கோரிக்கை யைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று, அதிகாரிகள் தங்களை அலைக்கழிப்பதாகவும் கடுமையாக நடப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சார்ந்து பேசுகின்ற நண் பர்களாக இருந்தாலும்—அதிகாரிகள் தவறு செய்தால் கண்டிக்க வேண்டும்—ஆனால் தாங்கள் தவறு செய்தால் அதிகாரிகள் கேட் கவே கூடாது என்ற நிலைமை கூடாது. ஒருமுக வரி, மறைமுக வரி என்று சொல்லிக் கொண்டு வரி ஏய்ப்பு செய்கிற நிலைமை களையெல்லாம் அரசாங்கம் தீர்க்கமாகப் பரிசீலனை செய்து— வணிகர் சங்கத்திற்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்—அதே நேரத்திலே அதிகாரிகள் தங்கள்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது, எந்தவிதமான பிடிப் பும் தங்கள்மேல் இருக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. அதற்காக உறுப்பினர்கள் அரசாங்கத்தை, அமைச்சர்களை நெருங்கியிருப்பதாக நான் அறிகிறேன், எனக்குத் தெரிந்தவரை யில். இதிலே அவர்கள் தீவிரமாக இருக்கவேண்டும், அதற்கு இடம் கொடுத்தால் அது சரியாக இருக்காது. நல்லது செய்வதற் காக நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகிற பொருள்களுக்கு நிவா ரணம் கொடுக்க ஆவனசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத் துக்களை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசைப்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1980 ஆகஸ்ட் 7

பொறுத்தவரையிலும் நான் மகிழ்ச்சியோடு சொல்வேன், இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு புதிதாக எந்த வரிகளையும் போடவில்லை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள், அதே நேரத்திலே போடப்பட்ட வரிகளிலே பலவற்றை இயன்ற அளவுக்கு குறைத்திருக்கிறது என்பதையும் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

முதலிலே வணிகர்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான் புதிதாக வரிகளைப் போடாமலும், பழைய வரிகளை முடிந்த அளவில் குறைத்திருப்பதும் ஆகும். அது மட்டுமல்ல, இந்த மாமன்றத்திற்கு வெளியே இருக்கிற வணிகப் பெருமக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுவேன். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசினுடைய கடமையாகும். மக்களுடைய தேவைகளை அரசால் மட்டும் நிறைவேற்ற முடியாதபோது பல தனி ஸ்தாபனங்கள் அவர்களால் முடிந்த வரையிலும் அவர்களுக்கு லாபம் வந்தாலும் மக்களுக்கு உதவி செய்கிறார்கள். இன்றைக்கு வணிகர்கள் எந்தப் பொருளை வியாபாரம் செய்தாலும் அவர்கள் எல்லாம் வியாபாரம் செய்யாவிட்டால் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வது அரசினுடைய கடமையாகும். ஆகவே அவர்கள் எல்லாம் மக்கள் நலனைக் கருதி வியாபாரம் செய்கிறபோது அவர்கள் லாபம் அடைந்தாலும் மக்களுக்கு நன்மை செய்வதற்காக அவர்கள் இருக்கிறார்கள் என்ற முறையிலே அவர்கள் செயல்படவேண்டும். ஆகவே வணிகர்கள் மீது கடுமையாக நடக்கவில்லை, அவர்களுக்கு வரிப்போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச்சொன்னார்கள்.

அதிகாரிகளைப் பார்த்தவுடனே அங்கே இருக்கிற வணிகர்கள் பயந்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதிகாரிகளும் நம்மைப்போன்று மனிதர்கள்தான்; ஆனால் அரசிலே உத்தியோகத்திலே இருக்கிறார்கள். அதிகாரிகளைப் பார்த்துப் பயப்படுவது என்றால், நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் பயந்த காலம் உண்டு. இப்பொழுது அதிகாரிகளைப் பார்த்து அதிகம் பேர் பயப்படுவது இல்லை என்பது நன்றாகத் தெரியும். ஆனால் எங்கே பயப்படுகிறார்கள் என்றால், மடியிலே கனம் இருந்தால் வழியில் பயம் இருக்கும். மடியிலே கனம் இல்லை என்றால் ஏன் பயப்பட வேண்டும்? நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அதிகாரிகளும் அரசுக்கு உதவி செய்ய வேண்டும்; வணிகர்களும் உதவி செய்ய வேண்டும். இருவரும் பொதுவாகத் தங்களுடைய தேவைகளை ஒழுங்காகப் பார்த்தால் யாரையும் பாாத்து யாரும் அஞ்ச வேண்டியதில்லை. ஒருவரைப்



1980 ஆகஸ்ட் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பார்த்து ஒருவர் அஞ்சுகிறார் என்று சொன்னால்—இவர் மட்டும் அஞ்சுகிறார், அவர் அஞ்சவில்லை என்றால் எங்கேயோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தம், அவைகளெல்லாம் இல்லாமல் இருப்பதற்கு இந்த அரசு தன்னால் முடிந்த முயற்சிகளைச் செய்யும், நான் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் டாக்டர் சமரசம் அவர்கள் சொல்கிறபொழுது அரசு இப்பொழுது எந்தப்புதிய வரிகளும் இல்லாமல் நிர்வாகத் திறமையினால் அதிகமான வருமானத்தை ஈட்டியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் அதிகமாக ஈட்ட வேண்டுமென்றால் அதற்குச் சில வழிகளையெல்லாம் கூடச் சொன்னார்கள். அவைகளையும் இந்த அரசு கவனிக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் திரு. இளையபெருமாள் அவர்கள் சில பொருள்களையெல்லாம் சொல்லி அந்தப் பொருள்களுக்கெல்லாம் அரசு வரி போட்டிருக்கிறது, அதனால் அதிகமான வருவாய் இல்லையே, இப்படிக் கோடிக் கணக்கிலே, பல நூறு கோடி வாங்குகின்றவர்கள் அதை விட்டுவிட்டால் என்ன என்று கேட்டார்கள், ஆனால் சிறு துளி பெரு வெள்ளம். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், அவர்கள் வீட்டிலே சாமான் வாங்க வேண்டுமென்பதற்காக 100 ரூபாய் கொடுத்து விட்டு வந்தால் மறுநாள் அந்த நூறு ரூபாய் அப்படியே வீட்டிலே இருக்காது. ஆனாலும் அதை அப்படியே செலவு செய்து விடுவதும் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக, 1 ரூபாய், 2 ரூபாய், 10 ரூபாய் என்றுதான் போகிறது. இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழிந்து 100 ரூபாயும் செலவாகி விடுகிறது. அதுபோலவேதான் ஒவ்வொரு ரூபாயாகச் சேர்த்தால்தான் 100 ரூபாய் வரும். எனவே, சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப்போல் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும்.

ஆனால் குடிசைத் தொழிலுக்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டும் என்று சொன்னதை அரசு கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. எந்த அளவிற்கு ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும், வரி விதிப்பால் அவர்கள் முன்னேற முடியவில்லை என்றால் நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும்; கவனித்து வேண்டியவைகளையெல்லாம் செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீப்பெட்டியைப் பற்றிச் சொன்னார்கள். தீப்பெட்டியைப் பொறுத்தவரையில் இந்த அரசு—நான் இந்த மாமன்றத்தில் முன்பே சொல்லியிருக்கிறேன்—மாண்புமிகு இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சங்கரய்யா அவர்கள்—போன அவையிலே அவர்கள் கட்சியின் சார்பில் பேசும்பொழுது

தீப்பெட்டிக்கு அதிக வரி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது என்னிடத்தில் இருந்த குறிப்பை அவர்களிடத்தில் காண்பித்தேன். அந்தக் குறிப்பையெல்லாம் பார்த்துவிட்டு, சரியாகத்தான் இருக்கிறது என்று என்னிடத்திலே சொன்னார்கள். நான் கொடுத்ததற்காக அப்படிச் சொல்ல மாட்டார்கள்; உண்மையில் தவறு இருந்தால், அந்தத் தவறை மாற்றிக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஆனால் அந்தக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சரியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் குறிப்பைப் பார்த்த ஞாபகம் அவர்களுக்கு இருக்குமே தவிர, குறிப்பிலே இருந்ததை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாது.

தீப்பெட்டிகள், இயந்திரத்தால் செய்யப்படும் தீப்பெட்டிகள், கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள், கையால் செய்யப்படுகிற குடிசைத் தொழிலைச் சேர்ந்த தீப்பெட்டிகள் என்று தீப்பெட்டிகள் இருக்கின்றன. ஆனால் குடிசைத் தொழில் மூலம் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி போடுகிறீர்கள், அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன், மற்ற மாநிலங்களில் போடப்பட்டிருப்பதை விட எவ்வளவு குறைவாக நாம் போட்டிருக்கிறோம் என்ற கணக்கைக் காட்டுவதற்கு முன்னால் நான் ஒன்றைச் சொல்வேன்.

மெஷினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு, தயாரிப்பாளர்களுக்கு ஒரு குரோசுக்கு ஆகும் செலவு 490 ரூபாய், மற்றச் செலவுகள் 720 ரூபாய், கூலி 132 ரூபாய், ஆக மொத்தம் மெஷினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு ஒரு குரோசுக்கு 1,342

[மாலை 4-40]

ரூபாய் ஆகிறது. அவர்கள் எந்த விலைக்கு விற்கிறார்கள் என்றால் ரூ. 1440-க்கு விற்கிறார்கள். ரூ. 98 இலாபம் வருகிறது. அதே போல், கையினால் செய்கிறவர்களுக்கு, முதலிலே, ரூ. 409 செலவு, வரி 2 சதவிகிதம், தயாரிப்பாளர்களுக்கு மொத்தச் செலவு ரூ. 430, கூலி ரூ. 79 ஆக மொத்தம் அவர்களுக்கு ரூ. 960 அடக்கம். எந்த விலைக்கு விற்கிறார்கள் என்றால், ரூ. 1120-க்கு விற்கிறார்கள். ரூ. 160 இலாபம் வருகிறது. மெஷினால் செய்யப்படுபவை ரூ. 98 இலாபம், கையால், செய்யப்படுவதற்கு ரூ. 160 இலாபம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், கூட்டுறவுத் துறையிலே செய்கிறவர்களுக்கும் வரி விதிக்கிறோம்.

மற்ற மாநிலங்களை ஒப்பிடுகிறபொழுது, கையால் தயாரிக்கப்படுகிற தீப்பெட்டிக்கு அசாமில் 5 சதவிகித வரி போடுகிறரர்கள். மத்தியப் பிரதேசத்தில் 7 சதவிகிதம் போடுகிறார்கள். உத்தரப் பிரதேசத்தில 7 சதவிகிதமும், மேற்கு வங்காளத்தில் 6 சதவிகித





மும், பீகாரிலே 7 சதவிகிதமும், ஆந்திராவிலே 4 சதவிகிதமும், கர்நாடகாவிலே 4 சதவிகிதமும், மராட்டியத்திலே 2 சதவிகிதமும், கேரளாவிலே 2 சதவிகிதமும், குஜராத்திலே 2 சதவிகிதமும் தமிழ்நாட்டிலே 2 சதவிகிதமும்தான் போட்டிருக்கிறோம். என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி தீப் பெட்டிக்கு இந்த அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாரியைப்பற்றிச் சொன்னார்கள். லாரி வருகிறது, சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்காக ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறோம், அதைப் பரிசீலனை செய்வதெற்கென்று. இப்படிச் செய்கிற பொழுது, சில தவறுகளெல்லாம் நடக்கின்றன என்று கண்டு பிடிப்பதற்காக, ஏறக்குறைய $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள் போடப்பட்ட சோதனைகள் எவ்வளவென்றால் 16,515 அவ்வளவு திடீர் சோதனைகள் போடப்பட்டன. வெளிமாநிலங்களில் செய்யப்பட்ட ஆய்வு 46. இப்படியெல்லாம் செய்து, தவறு செய்கின்றவர்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்றால், ரூ. 8 கோடியே 36 இலட்சம் அதிலே வசூலிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த அரசு இத்தகைய காரியங்களை எல்லாம் செய்து வருகிறது என்று உங்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன்.

திரு. ரகுமான்கான் அவர்கள், கெய்வார் கமிட்டி அறிக்கையை அவையிலே வைத்திருக்க வேண்டாமாவென்று கேட்டார்கள். இந்த அவையிலே சிலவற்றை வைக்கிறோம், சிலவற்றை வைப்பதில்லை. இதற்கு முன்னாலே, இப்படிப்பட்ட பல கமிட்டிகளுடைய ரிப்போர்ட் அவையிலே வைக்கப் படாமல், நூலகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. நூலகத்திலே வைத்திருப்பது உறுப்பினர்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய அறிக்கைப் புத்தகத்தை அச்சடித்து எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்றால், எவ்வளவு செலவாகும் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அந்தப் புத்தகத்தை, நாம் நூலகத்திலே வைத்திருக்கிறோம்: இதற்கு முன்னாலே கூட நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் நூலகத்திலே இருப்பதே போதும் என்று சொன்னார்கள். இதை அச்சடித்து இங்கே வைக்க வேண்டுமென்றால், வேறு யாரிடமோ பணத்தை வாங்கி, நாம் அச்சடித்து கொடுப்பதில்லை. அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்றால், அரசினுடைய பணத்திலேதான் அச்சடித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை அச்சடித்துக்கொடுக்க செலவு செய்யக்கூடாது என்பது அல்ல. நான் செலவு செய்யாமல் அப்படியே கட்டி, எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற பிற்போக்கு எண்ணம் உடையவன் அல்ல. செலவு செய்யவேண்டும். செலவு செய்கிறபொழுது அதனால் வருகிற லாப-நட்டம் எவ்வளவு, நன்மைகள் எவ்வளவு என்று பார்க்கிறபொழுது, நூற்றுக்கணக்

கிலே அச்சடித்துக் கொடுத்தாலும், யாராவது சிலர்தான் படிக்கிறார்கள். அந்த யாராவது சிலர் நூலகத்திற்குச் சென்று படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்பதால்தான் அதை அச்சடித்து கொடுக்கவில்லை யென்பதைச் சொல்லிகொள்கிறேன். இங்கே அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியவற்றுக்கெல்லாம் பதில் சொல்லி விட்டேனென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே. இங்கே நடைபெறுகின்ற இந்த மசோதாவின்மீதான விதாதத்தில் இந்தக் குறிப்பிட்ட செக்ஷன்களின் அடிப்படையிலே அதனுடைய ஆப்ஜெக்ட்ஸ் அன்டு ரீசன்ஸ் பார்ப்பதற்காக, கெய்வார் கமிட்டியின் ரிப்போர்ட்டு லைப்ரரியிலே இருக்கிறது. அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அப்படி அங்கே தேடுகிறபோது அந்த வாய்ப்புகள் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைப்பதில்லை. அங்கே ஒரு காப்பி, இரண்டு காப்பி தான் இருக்கின்றன. ஆனால் இந்த அரசை நான் கேட்க விரும்புவதெல்லாம், இதுபேன்ற வாதங்கள் வரும்போது குறைந்த பட்சம் அதனுடைய சம்மரியையாவது டைப் செய்து கொடுத்தால் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஒன்றை நான் சொல்ல மறந்துவிட்டேன். அருமை நண்பர் இளையபெருமாள் பேசுகிறபோது கேட்டார்கள். இந்த கெய்வார் கமிட்டி 116 கோரிக்கைகளைச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே 59 ஆணைகள் மூலம் செய்யக்கூடியது. அதில் 55-செய்தாகிவிட்டது. விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் செய்யவேண்டியது 28, அதிலே 10 செய்தாகிவிட்டது. சட்டத்தின் மூலம் செய்யவேண்டியது 22. அதில் 12 செய்தாகிட்டது. 7-ல் நடவடிக்கை தேவையில்லை. ஆனால் ஓராண்டுகுள், கெய்வார் கமிட்டி இந்த அறிக்கையை கொடுத்து இந்த அறிக்கையில் 75 சதவிகித அதாவது 116 கோரிக்கைகளில் 80 கோரிக்கைகளை செய்தது இந்த அரசு என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலுக்கு நன்றி. ஆனால் நம்மால் செய்ய முடிந்ததை ஏன் இன்னும் செய்யாமல் இருக்கிறோம் என்றும், வருங்காலத்தில் அவைகளை அரசாங்கம் செய்து முடிக்குமா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 116-ல் 80 செய்தாகிவிட்டது. இது மிகவும் அதிகம் என்று நான் நினைக்கிறேன். இதைவிட வேகமாகப் போக வேண்டும் என்றால் நான் பறக்கத்தான் வேண்டும். மற்றவைகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிக்கும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்திற்கு உபயோகப்படுத்துகிற மருந்துப் பொருள்களுக்கு வரி விலக்கு உண்டா என்று கேட்கப்பட்டது. அது என்ன ஆனது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

[மாலை 4-40]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை பேரவை முடிவிற்கு விடப்பெற்று? நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1980 ஆகஸ்ட்

ஆ. வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.7 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1980)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1980) ஆய்வுக்கு *எடுத்துக்கொள்ள பெறவேண்டும்''.

(முற்பகல் 4—50)

* திரு. பெ.சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு விளைபொருள் அங்காடிகள் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நீங்கள் இந்தச் சட்டம் கொண்டு வருவதையே நான் முதன் முதலில் எதிர்க்கிறேன். காரணம், ஒரு மாநிலத்திலே மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அமைக்கப்பட்டு விட்டால் போதுமானது அல்ல. உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மற்றும் இப்படிப்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஆகியவற்றிலும் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற தனி அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆண்டுக்கணக்கில் நிர்வாகம் நடத்துவது சரியானதாக இல்லை. அங்கேயும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கவேண்டும். அப்போது தான் அரசாங்கம் எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தாலும் அவைகளை நாட்டிலே நல்ல முறையிலே நிறைவேற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கொண்டு வந்த போது, விவசாயிகள் நகரங்களில் இருக்கின்ற தரகு மண்டிக்காரர்களிடத்தில் மாட்டிக்கொண்டு ஏமாறாமல், நியாயவிலையில் தங்கள் விளைபொருள்களை விற்பதற்கும், நியாயமான முறையில் ஒழுங்கான முறையில் எடைகள் போட்டு அந்தப்

---

*1980-ம் ஆண்டு ஜூலை 11—ம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1980 ஆகஸ்ட் 7] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

பொருள்களை எடுத்துக்கொள்வதற்கும் என்கிற அடிப்படையில் அந்த விவசாயிகளின் நலன் கருதி, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மாவட்டந்தோறும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. இருப்பினும் பல்வேறு இடங்களில் அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் செயல்படாமல் உள்ளன. 1978-ம் ஆண்டில் உங்கள் ஆட்சி இருந்தபோது அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் குழுக்களைக் கலைத்தீர்கள். ஆனால் உடனடியாகத் தேர்தல் நடத்தி இருக்கலாம். அப்படிச் செய்யாமல், ஓராண்டு காலத்திற்குப் பிறகு செய்வோம் என்று சொன்னீர்கள். பிறகு இன்னொரு ஆண்டு நீடிக்கப்பட்டது. இன்றைய தினம் இரண்டு ஆண்டு காலத்திற்கு என்கிற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இதில் இருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், இன்னும் இரண்டாண்டு காலத்திற்கு நீங்கள் தேர்தல் நடத்துவதாக இல்லை என்கிற நிலைமையைத்தான் நாம் சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றையதினம் அங்கே தனி அதிகாரிகளை நியமிக்கிற போது அதிகாரிகள், என்றால் பயப்படத் தேவையில்லை என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அதிகாரிகளைக் கண்டு பயப்படத் தேவையில்லை என்று சொன்னாலும், பல அதிகாரிகள் நல்லவர்கள் இருக்கலாம், இருப்பினும், அதிகாரிகளை வைத்து நடத்துகிற நேரத்தில், ஜனநாயக முறைப்படி நடக்கும் நிர்வாகமாக அது இருக்குமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி இல்லாத நிலையில் அதைச் சரிவர நடத்த முடியாது என்பதைத் தான் நாம் பல்வேறு இடங்களில் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

இன்றையதினம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. சீர்கேடான முறையில் இருக்கிறது. நான் அறிந்த வரையில், வடாற்காடு மாவட்டத்தில் அந்த நிலைமை இருக்கிறது. உலக வங்கியில் பல இலட்சக்கணக்கில் ரூபாய்கள் கடனாகவும் மானியமாகவும், தருகிறார்கள், பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், கூடங்கள் அமைப்பதற்காகவும் என்று. ஆனால் அப்படிப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிகாரிகள் விரைவாகச் செயல்படாமல் இருக்கிற நிலை இருக்கிறது.

அங்கே ஒரு நிர்வாகக் குழு இருந்தால் சரியாக, செம்மையாக செயல்பட முடியும். இன்றைக்கு அந்த நிலை இல்லை. வடாற்காடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் அங்கே என்ன நடக்கிறது என்று கண்டறிய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு இன்றைக்கு நிர்வாகம் சீரழிந்து இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1980 ஆகஸ்ட் 7

இந்தத் தேர்தல்கள் நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது? எதற்காக இரண்டாண்டு காலம் தேவை. மாநகராட்சித் தேர்தல்கள், நகராட்சித் தேர்தல் என்று சொன்னால் 18 வயது அடைந்தவர்கள் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கவேண்டும் என்று சொல்லாம். ஆனால் இந்த ஒழுங்கு முறைவிற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில், யார் யார் வாக்காளர்கள் என்கிற ஜாபிதா ஏற்கனவே எடுக்கப்பட்டு இருக்கும். அங்கே வந்து விற்பனை செய்பவர்களும், அங்கே வியாபாரிகளாகப் பதிவு செய்துள்ளவர்களும்தான் வாக்காளர் என்று இருக்கும். அந்த ஜாபிதாக்களை வைத்துக் கொண்டு அங்கே தலைவர் தேர்தல் நடத்தலாம். உறுப்பினர்கள் தேர்வு நடத்தலாம். இப்படி ஆண்டுக் கணக்கில் தள்ளிப் போட்டுக்கொண்டு போவது, நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்காது என்பதை மட்டும் சொல்லிக கொள்கிறேன்.

அங்கே இருக்கும் தொழிலாளர்கள் கூட சந்தோஷமாக சரிவர வேலை செய்ய முடியவில்லை. அவர்களுக்குப் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைக்க அதிகாரிகளால் முடியவில்லை. இப்படிப்பட்ட நிலை திருவண்ணாமலை, வேலூர் போன்ற இடங்களில் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. இப்படிச் சீர்கேடான நிலையில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இயங்குகின்றன என்று தெரிந்தபின்பும், மேலும் இரண்டாண்டு காலத்திற்கு தனி அதிகாரிகள் ஆட்சியை நீடிப்பது எதற்காக என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. காரணம் நீங்கள் இந்த நிர்வாகத்திலே தனி அதிகாரிகள் பதவியை நீடித்துக் கொண்டேச் செல்வது நியாயம் அல்ல. உடனடியாக சட்டம் இயற்ற வேண்டும், சட்டம் இயற்றப்போகிறோம், அல்லது புதிய சட்டங்கள் வர இருக்கின்றன என்று நீங்கள் சொல்லலாம். குழுக்கள் நடைமுறையில் இருக்கும் போதே கூட சட்டம் இயற்றலாம். அதை யாரும் தடுக்க மாட்டார்கள்.

பஞ்சாப் போன்ற வட மாநிலங்களில் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். பல இலட்சக்கணக்கான ரூபாய் வருவாய் வருகிறது. அந்த நிதியிலிருந்து சாலைகள் அமைக்கும் பணிகள்கூட இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட, ஒரு சிறப்பான முறையில் நடைபெற்று வரக்கூடிய இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் நடத்தி, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் வந்தபிறகு அரசாங்கம் விரும்பினால் என்ன சட்டத்தை வேண்டுமானாலும் கொண்டு வரலாம்; விதிமுறைகளைப் புகுத்தலாம்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கின்ற நீங்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். ஏற்கனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கும்போது உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல் வரும். தேர்தல் வரும் என்று அறிவித்தீர்கள். உங்கள் காலத்திலே தேர்தல் வரும் என்று நாங்கள் எல்லாம் ஆவலோடு எதிர்பார்த்தோம். நீங்கள் தேர்தல் வரும் என்று சொன்னீர்கள். என்ன காரணத்தாலோ தேர்தல் வரவில்லை. இப்போது சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் பெரும்பான்மை இடத்தைப்பெற்று, வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அப்படி இருந்தாலும் ஏன் தேர்தலை நடத்த தயக்கம் காட்டுகிறீர்கள்? நீங்கள் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்றால் தேர்தல் என்றாலே உங்களுக்கு அலர்ஜியாக இருக்கிறது. விரைவிலே நீங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் விவசாயிகள் சரியான முறையிலே அங்கே இருக்கிற அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அங்கே வியாபாரிகள் ஆதிக்கம்தான் கை ஓங்கி இருக்கிறது. அவர்கள் என்ன விலை போட வேண்டுமென்று சொல்கிறார்களோ அந்த விலைக்கு விற்கின்ற ஒரு மோசமான சூழ்நிலை பல்வேறு இடங்களில் இருக்கிறது. அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் பொதுமக்கள்தான், விவசாயிகள்தான். எந்த நல்ல நோக்கத்தோடு இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்ட இந்த விற்பனைக் கூடங்கள் வியாபாரிகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. எல்லா வியாபாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். நல்லவர்களும் இருக்கிறார்கள். இடைத்தரகர்கள் பிடியிலிருந்து விவசாயிகள் விடுபட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த விற்பனைக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அது நடைபெற முடியவில்லை. நிர்வாகம் சீர்குலைந்து இருக்கிறது. அதனால் நீங்கள் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை எதிர்க்கிறேன். இந்த மசோதாவில் எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றிகூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர அவர்களே, தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் திருத்த மசோதாவின் பேரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே தனி அதிகாரிகளைப் போட்டு நடத்தி வருகின்ற இந்தச் சிறப்பங்காடிகள் இன்னும் இரண்டு ஆண்டுகள் தனி அதிகாரிகள் பொறுப்பிலே விடப்பட வேண்டுமென்ற

ஒரு நிலையைச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி விடப்படும்போது முறையாக அந்தத் தனி அதிகாரிகள் செயல்படுகிறார்களா என்று பார்க்க வேண்டும். இப்போது அந்தச் சிறப்பங்காடிகள் சரியாகச் செயல்படவில்லை. எந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்தை விவசாயிகளைப் பொறுத்தமட்டில் அடைய முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், தேர்தல் வரும்வரையில் கமிட்டிகளைப் போடும்போது அந்தக் கமிட்டியிலே வியாபாரிகள், விவசாயிகள் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இடம்பெற வேண்டும். அவர்களை எல்லாம் உள்ளிட்டு, கமிட்டிகளை அமைக்க வேண்டும்.

அதோடு, விவசாயிகளுடைய விளைபொருட்கள் விற்பனைக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அனுப்பப்படும்போது, ஒரு பொருள் 100 ரூபாய் விலை போகும் என்றால் அந்த பொருள் விற்கப்படும் வரையில் சற்று விலையைக் குறைத்து 75 ரூபாய் அதன்பேரில் கொடுக்க வேண்டும். அதாவது அந்தப் பொருளின் விலையில் 75 சதவீதத்தை முதலில் கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும். உடனடியாகத் தேர்தலை நடத்தினால்தான் எந்த நோக்கத்தோடு சிறப்பங்காடிகளை ஆரம்பித்தோமோ அந்த நோக்கம் நிறைவேறும் ; விவசாயிகளுக்குப் பயனளிக்கும் என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

[மாலை 5–00]

*திரு. டி. மணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மை விளைபொருள் அங்காடி சம்பந்தமாக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற மசோதாவிலே ஒரு முக்கியமான கருத்தை எங்கள் கட்சியின் சார்பிலே, சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் தேர்தலுக்கான கால அளவை இன்னும் நீட்டிப்பது என்பது சரியாக இருக்காது. அதனுடைய தனி அதிகாரிகள் எல்லாம் எந்த அளவுக்கு விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற விளை பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கிறார்கள் என்பதை எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளை பொருட்களுக்கு அவர்களே விலையைத் தீர்மானித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகவே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் கமிட்டியினர் இருந்தால்தான் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே இரண்டாண்டுகளுக்கு மேல் நீட்டிக்காமல் ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாகவாவது அதனுடைய தேர்தலை நடத்தி முடித்து விவசாயிகளுக்கு நியாயம் வழங்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும்.





இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் இருக்கின்ற, ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்படுவதால் அவர்கள் நியாயம் இல்லாத காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். இதிலே குறிப்பாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சங்கரன்கோயில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் இருக்கின்ற தனி அதிகாரி அங்கே அருகாமையில் உள்ள விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான நிலத்தை விற்பனை செய்கின்ற வகையிலேயோ அல்லது வேறு வகையிலேயோ ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமாக அமைச்சரவர்களுக்கும்....

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, இது தொடர்பாக சட்டமன்றத்தில் கூறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்படித் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. டி. மணி : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி. இந்தத் தகவலைச் சொன்னதற்குக் காரணம் ஒரு கோர்ட்டினுடைய முடிவு என்னுடைய கையிலே இருக்கின்றது..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது குறித்துத்தான் அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்களே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்று. பிறகு ஏன் அதைப்பற்றி பேச வேண்டும்.

திரு. டி. மணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்களுடைய கருத்தெல்லாம் இவ்வாறு இரண்டாண்டுக்காலம் தேர்தலை நீட்டிப்பது நியாயமல்ல. எனவே சீக்கிரமாக தேர்தலை நடத்தி அதாவது 6 மாதத்திற்குள்ளாகவாவது தேர்தலை நடத்தி விவசாயிகளுக்கு நியாயம் வழங்கக் கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்வதுதான் சிறந்ததாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு அவ்வாறு தேர்தலைச் சீக்கிரமாக நடத்த வேண்டும் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களை இங்கே சொல்லி இருக்கிறார்கள். தனி அதிகாரியின் பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது. தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் இங்கே பேசிய திரு. திருவேங்கடம், திரு. நல்லப்பன், திரு. டி. மணி ஆகிய அனைவருடைய ஒன்றுபட்ட கருத்து என்பதை நான் மிகத் தெளிவாக அறிகிறேன், உணர்கிறேன். ஆனால் இந்தத் தனி

அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்குக் காரணம்—தனி அதிகாரிகள் மேலே தனி அன்பு கொண்டு இவ்வாறு அவர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துச் செல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வேளாண்மை விளைபொருள் அங்காடி சட்டத் திருத்தத்தின் மூலம் பல திருத்தங்களை நிச்சயமாகச் செய்து தீரவேண்டி இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல இடைத்தரகர்களின் இரும்புப் பிடியிலிருந்து விளை பொருட்களை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்கள் மீள வேண்டும் என்ற வகையிலேதான், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. திருவேங்கடம் அவர்கள் பேசுகின்றபோது ஏன் முதலிலே தேர்தலை நடத்திவிட்டு அதற்குப் பிறகு திருத்தங்களைச் செய்யக் கூடாது என்று கேட்டார்கள். ஆனால் நாம் செய்யக் கருதுகின்ற திருத்தங்களில் தேர்தல் பற்றிய திருத்தங்களும் செய்ய வேண்டி இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது விற்பனைக் கூடங்களில் இருக்கின்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தலை நடத்தினால் அது எப்படிப்பட்ட ஒரு பொதுத் தேர்தலாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். அது சரியாக இருக்காது என்பதையும் அவர்கள் நிச்சயமாக எண்ணிப் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன். மற்ற மாநிலங்களிலே அந்தத் தேர்தல் எந்த முறையிலே நடத்தப்படுகின்றது என்பதை எண்ணிப் பர்ர்த்து அந்த வகையிலே தேர்தலை நடத்தலாம் என்கின்ற வகையிலேதான் கால நீட்டிப்பு கேட்கப்படுகின்றது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து கால அவகாசம் கேட்ட பழக்கத்தால் இன்றைக்கும் கேட்கிறேன் என்று சிலர் சொல்லலாம். ஆனால் எல்லோரும் ஒரு பெரிய அரசியல் விபத்திற்குப் பிறகு மீண்டும் வந்திருக்கிறோம். ஆகவே, இப்பொழுது அப்படிப் பல தேர்தல்கள் நடத்த வேண்டிய கால கட்டத்தின் கீழ் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சீக்கிரமே தேர்தல்கள் நடத்துவதாக உத்தேசித்து இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு பெரிய பிரச்னையை பலரும் கோடிட்டுக் காட்டினார்கள். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளின் கைதான் ஓங்கி இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். அது மிகப் பெரிய, கடுமையான தவறு. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்களுடைய விளை பொருள்களுக்கு நியாயமான





விலை, ஒழுங்காகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டனவே தவிர, அப்படிப்பட்ட விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளின் கை ஓங்கியிருக்கக் கூடிய நிலைமை இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முறையாக எடுத்துரைத்தால், அதற்குரிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தொடர்புள்ள அதிகாரிகள் ஆட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, விவசாய மக்களுக்கு நன்மை ஏற்படுத்துகிற வகையில், அவர்கள் உற்பத்தி செய்கிற விளை பொருள்களுக்கு நியாயமான விலை கொடுக்கத்தான் இப்படிப்பட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளை முறைப்படுத்துகிற வகையில் திருத்தங்களைக் கொண்டு வருவதன் காரணமாகத்தான், இப்படிப்பட்ட கால நீட்டிப்பு கேட்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி, அதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1980) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, நிறைவேற்றப் பெற்றது.

[1980 ஆகஸ்ட் 7

**இ. பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 33/1980).**

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1980) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொதுப் பொறுப்புக் குழுவிற்கு சொந்தமான நிலங்களை, உரிமையில்லாத சில பேர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படி அனுபவித்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து அந்த நிலங்களைப் பொறுப்புக் கழகங்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று, சர்க்கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விட்டு, அந்த அதிகாரிகள் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்போது, "அப்படி எடுக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை" என்று உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்புச் சொன்னதை வைத்துக் கொண்டு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்த கெய்வார் கமிட்டியினுடைய ரிப்போர்ட் புத்தகம் பெரிய புத்தகமாக இருக்கிறது. ரிட் மனுவில் என்ன நடந்தது? என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்? அதற்கேற்றபடி தான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறதா என்பதை எல்லாம் கவனிக்க எங்களுக்கு வாய்ப்பு இல்லை. காரணம் அந்த கெய்வார் கமிட்டியினுடைய ரிப்போர்ட் புத்தகம் இங்கே கொடுக்கப்படவில்லை. நீங்கள் வழக்கறிஞர்தானே உங்களுக்குத் தெரியாதா என்று கேட்கலாம். நான் இதை துரைமுருகனுக்காக மாத்திரம் கேட்கவில்லை. அனைவருக்காகவும் கேட்கிறேன். இங்குள்ள அனைவராலும் ஏ. ஆர். புத்தகம் வாங்கி படிக்க முடியாது. எவ்வளவோ செலவு செய்கிறீர்கள். அப்படியே இதையும் செலவு பண்ணி அந்த. அந்தப் புத்தகங்களையும், தீர்ப்புகளையும் காப்பி எடுத்து இங்கே வைத்தால் அல்லது வாங்கி வைத்தால், எல்லோருக்கும் வசதியாக இருந்திருக்கும்.

---

*1980 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏதோ தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கு உத்தரவு சரியான முறையில் வழங்கப்படவில்லை. அப்படி வழங்குவதற்கான முறையில்தான் இதை நீங்கள் திருத்த முன் வந்திருப்பதாக நாங்கள் எண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். அதாவது பப்ளிக் டிரஸ்டிக்கும், நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இருக்க வேண்டிய, லேன்ட்-ஓனர் டெனன்ட்ஸ் உறவு முறையாக இல்லை. நிலத்தை வாடகைக்கு எடுத்தவர்கள் யாரோ, அவர் எப்பொழுதோ போய்ச் சேர்ந்திருப்பார்கள். அதற்குப் பிறகு, அது பல கைகள் மாறி, பல தலைமுறைகள் கடந்து வந்திருக்கும். ஆனால் இப்பொழுது டிரஸ்டிக்குச் சொந்தமான நிலத்தில், வாடகைக்கு எடுத்தவர் இல்லாத நிலைமையில் இப்பொழுது அதிலே உழுது கொண்டிருப்பவர்களைப் போய், அந்த டிரஸ்டியினுடைய அதிகாரிகள், வெளியேறச் சொல்ல முடியாது.

[மாலை 5-10]

டெனன்டாக இருந்தவர்கள் பலர் போய்விட்டார்கள். பலர், அவர்கள் கைமாறி நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள் இந்தத் திருத்தத்தின் மூலம் பினாமி நிலங்கள் என்று சொல்லி அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பீர்களானால் அவர்களின் நிலை என்னவாவது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் தலைமுறை தலைமுறையாக உழுது பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களை திடீரென்று வெளியே போ என்று சொல்வது சரியாக இருக்காது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற தத்துவம் இருக்கிறது. இவன் அப்பன் பாட்டன் உழுது கொண்டிருக்கிறான். இப்போது நீ டெனன்ட் இல்லை என்று, இது பினாமி நிலம், இதை டரஸ்ட் எடுத்துக்கொள்ளபோகிறது என்று சொன்னால் அந்த ஏழை விவசாயி எங்கே போவான்? ஆகவே அவன் கையில் இருப்பதை அவனிடமே கொடுத்து உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற வகையில் அந்த நிலத்தைத் தரவேண்டாமா? எவ்வளவோ பேர்கள் இப்படி வைத்திருக்கிறார்கள், துரைமுருகனுக்குத் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த நிலங்களை யார், யார் இப்போது உழுதுகொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு வேறு நிலமே இல்லை என்றால், இதை விட்டால் அவர்கள் நிலமற்றவர்களாகிவிடுவார்கள் என்ற நிலைமை இருக்குமானால் அத்தகைய நிலமற்றவர்களுக்கெல்லாம் அந்த நிலங்களை நீங்களே பட்டா செய்து கொடுக்கிற வழிவகைகளைச் செய்ய வேண்டும். அவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது.

பத்தாண்டுகளுக்குமேல் ஒருவன் போகத்தில் நிலம் இருக்குமானால் அது அவனுக்கே சொந்தமாகிவிடக்கூடிய நிலை இருக்கிறது. இந்த வகையிலே பார்த்தாலும்கூட அந்த நிலம் அவனுக்குச் சொந்தமாகிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக சகட்டுக்குமேனிக்கு பினாமி நிலங்களை எல்லாம் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லி எடுத்துக்கொள்வது சரியல்ல. அதன் காரணமாக ஜெனுயின் கேஸஸ்கூட அடிப்பட்டுப்போய் விடும் நிலை ஏற்படும். ஆகவே யார் யாருக்கு நிலம இல்லையோ அவர்களுக்கு நிலம் கிடைக்க வழிவகை காண வேண்டும்.

திரு என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப் பொறுப்புக் கழகங்கள் திருத்த சட்டமுன்வடிவின்மீது சில முக்கியமான கருத்துக்களை மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் பரிசீலனைக்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் திருத்தச் சட்டத்தில் செய்யப்பட்டிருக்கக் கூடிய ஒரு மாற்றம் 14 (எ) பிரிவிலே, யாராவது ஒருவர் அதிகாரமில்லாத வகையில் இந்த நிலங்களை வைத்துக் கொண்டிருந்தால் அவருக்கு இந்தப் பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் நிலத்தை ஒப்படைப்பதற்காக இன்றைக்கு கட்டளை பிறப்பிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 14 (எ)பிரிவில் இதை புதிதாக சேர்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இறுதியாக எவ்வாறு அந்த நிலங்கள் ஒரு அதிகாரம் பெறாத ஒருவர் வைத்திருந்தால் அது பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு கிடைத்தவுடன் அதை மறுபடியும் இந்த அதிகாரம் பெற்ற அதிகாரி நிர்ணயிக்கக்கூடிய பட்டியலில் உள்ள ஒரு பயிரிடும் குத்தகைக்காரருக்கு அந்த நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற அந்தப் பிரிவில் மாற்றம் இல்லை.

பொதுப் பொறுப்புக் கழகங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் இருபது ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. அதற்கு மேலும் அவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு மனு செய்து அரசாங்கம் பரிசீலனை செய்து வழங்கலாம் என்றிருக்கிறது. அதிகப்படியான பொதுப் பொறுப்புப் கழகங்களின் நிலங்களை சாகுபடி செய்யக் கூடிய குத்தகைத்தாரர்களுக்கு ஒப்படைக்கவேண்டும் என்பது தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதின் நோக்கம். ஆனால், இந்தச் சட்ட முன் வடிவின் காரண விளக்கங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், பொதுப் பொறுப்புக் கழகங்கள் நிலங்கள் அதிகாரம் பெறாதவர்களின் கையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இவ்வளவு காலம் அதிகாரம் பெறாதவர்கள் கையில் நிலம் ஏன் இருந்தது? அதைச் சாகுபடி செய்யும் குத்தகைத்தாரர்களிடம் ஒப்படைக்காமல் இருந்தது தவறு. அந்தத் தவறை திருத்த என்ன



வழி? ஹைகோர்ட் ஜட்ஜ்மென்ட்டை சமாளிப்பதற்காக இன்று இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிகாரம் பெறாதவர்கள் வைத்திருக்கக்கூடிய நிலத்தை பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் ஒப்படைக்கச் செய்வதுதான் நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே ஒரு சிறிய முரண்பாடு வருகிறது. ஏற்கனவே 14 (ஏ) சட்டப்படி, உட்பிரிவிலே சேர்த்துக்கொண்டாலும், அந்த அதிகாரம் பெற்ற அதிகாரி கிடைக்கக்கூடிய உபரி நிலத்தை சாகுபடி செய்யக்கூடிய, பயிரிடும் குத்தகைத்தாரருக்கு கிடைக்காத வழியிலே இதில் கவனம் செலுத்துவதாக இருக்கிறது. ஆகவே, பொதுப் பொறுப்புக் கழகத்தில் அதிகப்படியான நிலங்களை ஒப்படைத்து அவர்களுடைய சொந்த சாகுபடிக்குக் கொண்டு வரும் நேக்கத்திலே காரியங்களைச் செய்யக்கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வன்மையாக எடுத்துக்கூற விரும்புகிறேன் உரிமை பெறாதவர்கள் இந்த நிலங்களிலே இருந்தால், எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆட்சேபணை இல்லை. மொத்த குத்தகைத்தாரர், பெருவாரியான நிலங்களை எடுத்து, அதிலே அவர்கள் பயிரிடாத நிலங்கள் இருந்தால், அதை எடுத்துக்கொள்வதிலேயும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், ஆப்படிப் பட்ட நபர்களிடமிருந்து எடுக்கப்படுகின்ற நிலங்களில், உள் குத்தகைதாரர்களாக உள்ள, உண்மையிலே அந்த நிலங்களிலே பயிரிடும் குத்தகைதாரர்கள் இருந்தால், அவர்களுக்கு அந்த நிலங்கள் கொடுக்கப்பட வேண்டுமே தவிர, அதைப் பொது பொறுப்புக் கழகத்திடம் கொண்டுவரக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு, உண்மையிலேயே குத்தகைதாரர்கள், சாகுபடியாளர்களாக இருந்தால். அவர்களிடத்திலே இந்த நிலங்கள் கொடுக்கப்படவேண்டும். இன்றைக்கு, அதற்குப் பதிலாக என்ன நிகழ்ச்சி நடக்கிறது? பொதுப் பொறுப்புக் கழகத்திடம் சொந்த சாகுபடிக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டு, பின்னர் ஸ்டேட்ஃபார்ம் கார்ப்பரேஷனுக்கு, அரசுப் பண்ணைக் கழகத்திற்கு வருகின்ற ஒரு நிகழ்ச்சிப் போக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் சிக்கலிலே 400 எக்கர் கோயில் நிலம் கோயிலினுடைய பண்ணை சாகுபடி நிலம், இப்போது அரசுப் பண்ணைக் கழகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதைப் போல், திருவாரூரில், தியாகராஜபுரத்திலுள்ள வெளிமங்கலம் கிராமத்தில் உள்ள கோயில் பண்ணை நிலம், இப்போது அரசுப் பண்ணைக் கழகத்திற்கு விடப்பட்டிருக்கிறது. என்னுடைய ஐயப்பாடு, இவ்வாறு இந்த நிலங்கள் எடுக்கப்படுவது தடுக்கப் படவேண்டும். அந்த நிலங்களிலே உண்மையாகவே யார் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த நிலங்கள் கொடுக்கப்பட வேண்டுமே தவிர, பொதுப் பொறுப்புக்

கழகத்தின் பொறுப்பிலே கொண்டு வந்து, மறுபடியும் இந்த ஸ்டேட்ஃபார்ம் கார்ப்பரேஷன், அதாவது அரசுப் பண்ணைக் கழகத்திடம் ஒப்படைக்கின்ற இந்த நிகழ்ச்சிப் போக்குத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், இங்கே ஒரு உத்தரவு இருக்கிறது. இந்த தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான காலமாநல்லூரில் சாகுபடிக்கான நிலம் இருக்கிறது. அங்கே விசாரணைக்காக அதிகாரம் பெற்ற அதிகாரி சென்றபோது, மொத்த சாகுபடி செய்யக்கூடியவர் சாகுபடியிலே ஈடுபடாத காரணத்தால், அந்த நிலத்தை தன்னிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். ஆனால், அந்த நிலத்திலே உண்மையிலேயே சாகுபடி செய்யக்கூடிய உள் குத்தகைதாரர் இருக்கிறார். அவர் இந்த நிலத்தைப் பெறமுடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அந்த அதிகாரி 30 நாட்களுக்குள் அந்த நிலத்தை ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறார். ஆனால், தருமபுர ஆதீனம் அந்த நிலத்தை ஒப்படைக்க மறுக்கிறது. அப்போது அந்த நிலத்தை உள் குத்தகைக்கு எடுத்து உண்மையிலேயே சாகுபடி செய்துகொண்டிருக்கின்றவர் வெளியேற்றப்படுகின்ற நிலை இருக்கிறது. காரணம் அவரிடம் அதற்கான ரிக்கார்டு இல்லை. நிலப் பசி அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்திலே, இன்றைக்கு நாம் குறிப்பாக இந்தக் கோயில், மடங்கள் சம்பந்தப்பட்ட நிலங்களை நிலச் சீர்திருத்த வரம்பிற்குள் கொண்டு வருவதற்காக, நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே, 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களை எடுக்கும்போது, அந்த நிலங்களிலே உள்ள உள் குத்தகைதாரர்களுக்கு அந்த நிலங்கள் கொடுக்கப்பட வேண்டுமே தவிர, அதை விட்டு விட்டு மொத்த குத்தகைதாரர்களிடமிருந்து அந்த நிலங்களை எடுத்து, உண்மையான குத்தகைதாரர்களுக்குக் கொடுக்காமல் பொதுப் பொறுப்புக் கழகத்திடம் அதன் நேரடி பொறுப்பிற்கு கொண்டு வருவது, அரசுப் பண்ணைக் கழகத்திடம் ஒப்படைப்பது என்று நிகழ்ச்சிப் போக்கு இன்றைக்கு இருக்கிறது. இன்றைக்குப் புதிய குத்தகைதாரர்களை உருவாக்குகின்ற முறையிலே, இந்தத் திருத்தச் சட்டம் இருக்கவேண்டும். அந்தக் கண்ணோட்டத்தில், இந்தச் சட்டம் குத்தகைதாரர்களை பாதுகாக்கின்ற வகையிலே, இன்றைக்குக் கோயில், மடங்கள் ஆகியவைகளிலிருந்து கிடைக்கின்ற உபரி நிலங்கள் இத்தகைய புதிய சாகுபடியாளர்களுக்கு போக வேண்டுமே தவிர, பொதுப் பொறுப்புக்கழகத்திற்கு சேர்க்கின்ற நிகழ்ச்சிப் போக்கு இருக்காத வகையிலே இந்தத் திருத்தச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்று கூறி நான் அமர்கிறேன்.

[மாலை 5–20]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



இந்தச் சட்ட முன்வடிவு எப்போது கொண்டு வரப்படுகிறது என்றால் ஹைக்கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கிய பிறகு அரசு விழித்துக் கொண்டு கொண்டு வருகிறது, இவ்வளவு நாட்களாக அந்த நிலங்களைப் பெரிய பெரிய முதலாளிகள் அனுபவித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு வராவிட்டால் தொடர்ச்சியாக இந்த நிலங்கள் அவர்கள் கையிலேயே இருக்கும். உழுபவருக்கு நிலம் என்று சொல்லும்போது இப்போது எடுக்கக்கூடிய டிரஸ்ட் நிலங்களை சிறு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். டிரஸ்ட் நிலங்களை உழக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டால் கீழே இருக்கிற சிறு விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை வரும். எந்தக் காரணத்தைக் கொண்டும் சிறு விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை டிரஸ்ட் நிலங்களாக வைத்து விவசாயம் செய்துகொண்டிருக்கும் நிலச் சுவான்தார்களிடமிருந்து அந்த நிலங்களைக் கண்டிப்பாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உட்பட்டவர்களிடமிருந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் எடுக்கக்கூடாது. அப்படி எடுக்கப்பட்ட நிலங்கள் சிறு விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத் தீர்ப்பில் சொல்லப்பட்ட பிரகாரம் குத்தகைதாரருக்குச் சாதகமாக இருந்தாலும் சட்டத்தில் பார்த்தால் சாதகத்திற்குப்பதிலாக பாதகமாக இருக்கிறது. இப்பொழுது பொதுப் பொறுப்புக் கழகத்திடம் அந்த நிலங்களை ஒப்படைக்கப் போகிறார்கள். குத்தகை செய்கிறவர்கள் உரிமை, பாத்தியதை இழந்தவனாகிறான். சட்டம் மனிதனுக்காகத்தான் இருக்கிறது: வழக்கறிஞர்கள் இங்கே இருந்தாலும் தவறாக நினைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். வக்கீல்கள் கெட்டிக்காரத்தனமாக சட்டத்தின் நோக்கத்தையே மாற்றி விடுகிறார்கள். அவர்கள் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் மாற்றி விடுகிறார்கள். உண்மையான கொலைகாரர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள், நிரபராதிகள் கொலைக் குற்றத்தில் ஆயுள் தண்டனை பெறுகிறார்கள் —இந்த அளவுக்கு வக்கீல்கள் செய்கிறார்கள் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவை மரபுப்படி 'பொய்' என்ற வார்த்தையை சபையில் உபயோகப்படுத்தக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'பொய்' என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினால் நன்றாக இருக்கும்.

[1980 ஆகஸ்ட் 7

திரு. எல். இளையபெருமாள் : நான் இங்கே யாரையும் பொய் சொன்னதாகச் சொல்லவில்லை. வழக்கறிஞர்கள் பொய்யை மெய்யாக்குகிறார்கள், மெய்யைப் பொய்யாக்குகிறார்கள் என்று சென்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதைச் சகோதரர் அவர்களுக்கு விளக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

14-ஏ பிரிவு குத்தகைதாரர்களுக்குச் சாதகமாக இருந்தாலும் இப்போது பொதுப் பொறுப்புக் கழகத்திடம் கொடுக்கும்போது உண்மையான குத்தகைதாரர்கள் நிலை என்ன என்று ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் அனுபவம் உள்ளவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லியாக வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு இருக்கும் பல ஜோலிகளில் விட்டு விடுவார்களோ என்ற அச்சத்தில் பேச எழுந்தேன்.

தஞ்சை ஜில்லாக்களில் கொள்ளிடக் கரையோரம் கருப்பூர் என்ற கிராமத்தில் ஆற்றுப் பகுதியில் பின்தங்கிய மக்களும், அரிசன மக்களும் விவசாய நிலத்தை எடுத்தார்கள். கோர்ட்டு மூலமும் கலெக்டர் மூலமும் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் செல்வாக்கு உள்ளவர்களால் அவர்களுடைய மகசூல் அழிக்கப்பட்டது. இப்போது இருக்கிற நிலத்தை எடுத்துப் பொதுப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைப்பதால் உண்மையாகப் பயிரிடும் குடியானவன் நிலை என்ன ?

அதைப்போலவே தென் ஆற்காடு ஜில்லாவிலே வாலாஜா ஏரி பக்கத்திலே பின்னலூரில் ஏரியிலே இதுபோன்று பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பயிரிட்ட நிலங்கள் அழிக்கப்பட்டன. ஆனால் 14-ஏ பிரிவின் பிரகாரம் இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு அற்ற நிலைமையை ஏற்படுத்துகிற அளவுக்கு நாம் போய்விடக் கூடாது என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதரைஸ்டு ஆபீஸர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் சந்தேகிக்கவில்லை. அவர்கள் திர்க்க விசாரிக்காத நிலையிலே, அதிகார துஷ்பிரயோகம் என்று நான் சொல்லவில்லை. நீதியும் கடமையும் செய்ய வேண்டிய நேரத்திலே அவர்கள் மறதியின் காரணமாகவோ அல்லது அவர்களுடைய வேலைப் பளுவின் காரணமாகவோ அல்லது சந்தர்ப்பம் இல்லாததன் காரணமாகவோ அவர்களுக்கு நீதி வழங்க மறுத்திருப்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. இதைப் போன்ற நிலைமைகளிலே அரசாங்கம் தகுந்த கவனம் செலுத்தி பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு கேடு உண்டாகாத நிலைமையை ஏற்படுத்தி உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. எல். இளையபெருமாள்]

இப்போது கொண்டுவந்திருக்கின்ற இந்த சீர்திருத்த சட்டத்தின் பகுதியை நான் வரவேற்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட நிலைமையைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இதைப் போன்ற வழக்குகளில் ராஜாஜி அவர்கள் ஒரு சமயம் சொன்னது நினைவுக்கு வருகிறது, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், பொதுப் பொறுப்புக் கழகச் சட்டம் வருகிறபோது சொன்னார்கள், கூடியவரையில் வழக்கறிஞர்களுக்கு இடம் கொடுக்காமல் உண்மையாகவே பயிரிடுகிறவர்களுக்கு அதிகாரிகள் மூலமாகவோ அல்லது கோர்ட்டுகள் மூலமாகவோ அவர்கள் தங்களுடைய நிலைமையைச் சொல்கிற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே நான் நீண்ட நேரம் விளக்கமாகச் சொல்ல வேண்டியதில்லை. அருமைச் சகோதரர் இளையபெருமாள் பேசுகின்றபோது அமைச்சர் இதை நன்றாக கவனிப்பார்கள், அப்படியெல்லாம் தவறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டத்தினுடைய நோக்கமே இன்றைக்கு இருக்கிற சட்டப்படி ஆதரைஸ்டு ஆபீஸர்கள், அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கு இதை செய்ய வேண்டுமென்று சொல்கிற அதிகாரம் கொடுக்கப்படுவது முறையற்ற முறையிலே நிலங்களை வைத்திருந்தால் அதைக் கண்டுபிடிப்பது, கண்டுபிடித்துவிட்டு அதைத் தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற சட்டம், ஆனால் அப்படிச் சொல்கிறபோது பொதுப்பொருப்புக் கழகம் செய்யாவிட்டால் இன்றைக்கு இருக்கிற சட்டத்தில் அவர்களுக்கு இடம் இல்லை. இன்றைக்கு வந்திருக்கிற சட்டமே எடுக்கப்படுகிற நிலத்தை தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அதிகாரி சொல்லிவிடுவார். அப்படிக் கொடுக்காவிட்டால் இவர்களே கொடுக்க அதிகாரம் இருக்கிறது. அதிகாரத்தை பொதுப் பொறுப்புக் கழகத்திலிருந்து அதிகாரிகள் இன்றைக்கு எடுத்துக் கொள்கிறார்கள்.

அருமை சகோதரர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசுகிறபோது தர்மபுர ஆதினத்திலே இந்த மாதிரி தகவல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்டு ஆதரைஸ்டு ஆபீஸர் இன்னாருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியாகிவிட்டது. சொன்னதற்குப் பிறகு கொடுக்கவில்லை. கொடுக்கவில்லையென்றால் அதிகாரியே கொடுப்பதற்கு இன்றைக்கு இருக்கிற சட்டத்திலே அதிகாரம் இல்லை. இன்றைக்கு வருகிற

சட்டத்திலே பொதுப் பொறுப்புக் கழகத்திலே இதை செய்ய வேண்டுமென்று சொல்லி செய்யாவிட்டால் இவர்களே செய்ய வேண்டுமென்று அதிகாரம் கொடுக்கப்படுகிறது நிலத்தைப் பொது பொறுப்புக் கழகத்திலே சேர்ப்பதற்கு 'நிச்சயமாக' இந்த அரசு முன்வராது. முன்கூட்டியே அந்த நிலம் குத்தகைக்கு இருக்கிறபோது மீண்டும் திருப்பி குத்தகைக்குத்தான் கொடுக்கப்படுமே தவிர அது பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு வராது, வருவதற்கு சட்டம் வகை செய்யாது. ஆனால் பொதுப் பொறுப்புக் கழகத்தைக் கட்டுப்படுத்துகிறது. கட்டுப்படுத்தாவிட்டால், சொல்லிவிடலாம் நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று, அவர்கள் அதை கேட்காவிட்டால் என்ன செய்வது என்றால் இன்றைக்கு அதற்கு ஒன்றும் இல்லை இப்போது நிலைமை என்னவென்றால் கொடுக்காவிட்டால் இவர்களே செய்வார்கள், முதலிலே உத்திரவு போடுவார்கள், செய்யவில்லையென்றால் இவர்களே அதற்கான உத்திரவைப் போடுவார்கள் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி கொஞ்சம் கொஞ்சமாக முற்போக்கான இடத்திற்கு நாம் போய்க் கொண்டு இருக்கிறோம்.

[மாலை 5-30]

இன்னமும் முற்போக்கான இடத்திற்கு நிச்சியமாகப் போவாம் என்று கூறி, இதை நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு' (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்னவடிவு எண் 33/1980) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை. நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : -

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஈ. கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1980).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் "

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களால் இம்மாமன்றத்திலே வைக்கப் பட்டிருக்கிற மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்வதற்கு விழைகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையெல்லாம் கலைத்துவிட்டு, 1976 ஆம் ஆண்டு தனி அதிகாரிகளை நியமித்தார்கள். அந்தத் தனி அதிகாரிகள் காலம் நான்காண்டு ஆறு மாத காலம் வரையில் அவர்கள் பதவியிலே இருக்கலாம்; பிறகு தேர்தல் நிச்சயம் என்று அன்றைய தினம் பிரசிடென்ட் ஆக்ட் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். 1976 ஆம் ஆண்டு பிரசிடென்ட் ஆக்ட் வந்தது. இது 1980. எனவே, கிட்டத்தட்ட அதனுடைய காலவரம்பு முடிந்து போய்விட்டது. எனவே நீங்கள் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் தனி அதிகாரிகள் என்பதற்குப் பதிலாக நாங்கள் இப்பொழுது மேனேஜிங் கமிட்டி என்ற ஒன்றைப் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். இந்தத் திருத்தமே அதுதான்.

* 1980 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. துரைமுருகன்] [1980 ஆகஸ்ட் 7

ஒரு கால வரம்பு முடிந்த பிறகு என்ன செய்யலாம்? இரண்டு காரியங்களைச் செய்யலாம். ஒன்று, தனி அதிகாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்து விட்ட காரணத்தினால் தேர்தல் நடத்தலாம். அதுதான் ஜனநாயக முறை. அதை நீங்கள் கையாண்டிருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்ற திடமான எண்ணம் எனக்கு உண்டு. ஆகவே என்ன செய்தீர்கள், தனி அதிகாரிகள் போன பிறகு அந்தத் தனி அதிகாரிகளுக்குப் பதிலாக இப்பொழுது மேனேஜிங் கமிட்டி என்று ஒன்றைப் புதிதாக ஆக்கியிருக்கிறீர்கள். இந்த இடத்திலே கூட கேட்கிறேன். தேர்தல் நடத்துவதற்கு நேரம், காலம் ஒத்துக் கொள்ள வில்லை என்று ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்வதாக இருந்தாலும் கூட அந்தத் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டித் தர வேண்டும்; இன்னும் சில வேலைகள் இருக்கின்றன; அவைகளை முடித்த பிறகு தேர்தலை நடத்தலாம்; மேலும் ஆறு மாத காலத்திற்கு இதில் தனி அதிகாரிகள் தர்பார் நடத்துவார்கள் என்று சொல்வதுதான் முறையாக இருந்திருக்கும். ஆனால் என்ன செய்கிறீர்கள்? பெருமாள் பெத்த பெருமாள் ஆன கதையாக தனி அதிகாரிகளை ஒழித்து விடுகிறோம்; அடுத்து இப்பொழுது மேனேஜிங் கமிட்டி என்ற பிரிவைக் கொண்டு வந்து போடுகிறோம் என்று கொண்டு வந்து அந்த இடத்திலே நுழைக்கிறீர்கள்.

இந்தத் தனி அதிகாரிகள் 4 1/2 ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தினார்கள். நாங்கள் போடுகிற மானேஜிங் கமிட்டிகள் இரண்டு ஆண்டுக்காலம் ஆட்சி நடத்துவார்கள் என்று இப்பொழுது தான் முதலிலே ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தத் தனி அதிகாரிகளுக்குப் பதிலாக யாரைக் கொண்டு வந்து போடப் போகிறீர்கள்? எதற்காகப் போடப் போகிறீர்கள்? தனி அதிகாரிகளானாலும், மானேஜிங் கமிட்டி யானாலும் எதற்கு போடப்படுகிறது என்பதற்கு இந்தச் சட்டத்திலே மிக அழகான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

......In the public interest for the purpose of safeguarding the interests of the members or depositors, for ensuring the proper utilisation of the amounts guaranteed by the Government.

ஆகையினாலே, டெப்பாசிட்டர் இன்ட்டரஸ்ட், பப்ளிக் இன்ட்டரஸ்ட், அரசாங்கம் கொடுத்த பணம், அதைச் செலவு செய்கிற விதம், அதனுடைய திறமைகள், இவைகளையெல்லாம் கண்காணிப்பதற்காகத்தான் தனி அதிகாரிகளானாலும், மானேஜிங் கமிட்டிகளானாலும் போடப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய கேள்வியே, நீங்கள் தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். தேர்தல் நடத்தாததற்கு என்ன காரணங்களையாவது சொல்லியிருக்கிறீர்களா? இதுவரையிலும்



1980 ஆகஸ்ட் 7] [திரு. துரைமுருகன்]

எதுவும் சொல்லவில்லை. சொல்லாதது மட்டுமல்ல, இருக்கிற அதிகாரிகளை இப்பொழுது எதற்காக எடுத்துவிட்டு வேறு சிலரைக் கொண்டுவந்து ஒரு மானேஜிங் கமிட்டி போடுகிறீர்கள். அதையாவது குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். தனி அதிகாரிகள் $4\frac{1}{2}$ ஆண்டுகள் ஆண்டார்கள், எவ்வளவு தவறுகள் செய்தார்கள் தெரியுமா ? ஆகவேதான் அந்த அதிகாரிகளை அங்கே உட்கார வைக்க எங்களுக்கு மனம் இடம் தரவில்லை. அந்தக் காரணத்தினால் தான் மானேஜிங் கமிட்டிகளைத் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்களா? அதுவும் கிடையாது. இல்லாவிட்டால், தனி அதிகாரிகள் தவறு செய்யவில்லை; ஆனால், நாங்கள் சொன்னால், கேட்க மாட்டேனென்கிறார்கள், என்றாவது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறீர்களா? பாவம், அதுவும் இல்லை. ஆனால், திடீரென்று எடுத்துவிட்டு, ஒரு மானேஜிங் கமிட்டி போடுகிறோம் என்று சொல்கிறீர்களே? அதிலே எத்தனை பேர் இருப்பார்களா? 9 பேர் இருப்பார்களாம் அந்த 9 பேர்கள் யார். யார் இருப்பார்கள் ? 'The Managing Committee shall consist of both officials and non-officials'

அஃபிஷியல்சும் இருப்பார்களாம், நான்—அஃபிஷியல்சும் இருப்பபார்களாம். மொத்தம் எத்தனை பேர்கள் இருப்பார்கள்? 9 பேர்கள். அதிலே நான்—அஃபிஷியல்ஸ் எத்தனை பேர், அஃபிஷியல்ஸ் எத்தனை பேர்? அந்த விவரம் இதிலே கிடையாது. அதுதான் மூடுமந்திரம். ஏனென்றால், 9 லே 8 நான்—அஃபிஷியல்ஸ் போட்டு, ஒரு அஃபிஷியல் போட்டாலும் கூட, அஃபிஷியல்சும் உண்டு, நான்—அஃபிஷியல்சும் உண்டு என்று நீங்கள் சாதுரியமாக வாதாடலாம். அடுத்து என்ன சொல்கிறீர்கள்? 'The Government shall appoint one of the members of the Managing Committee as the Chairman thereof'.

இந்த 9 பேரில் அஃபிஷியல், நான்—அஃபிஷியல் கொண்ட இந்த 9 பேர் குழுவில் ஒருவர், அக்குழு சேர்மனாக ஆகலாம். யார் அப்படி வரலாம்? நான்—அஃபிஷியலும் வரலாம், அஃபிஷியலும் வரலாம். ஆகவே, நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டுவது எல்லாம். உங்களுடைய கட்சிக்காரர்களைக்கொண்டு வந்து, கூட்டுறவு பரிபாலனத்தில் அமர்த்த வழி தேடுகிறீர்கள். அதற்கு என்ன வழி என்று பார்த்து, இப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்தால், எல்லா கூட்டுறவு சங்கங்களிலும் அண்ணா தி.மு.க. அமைப்பாளர்கள் ஆட்சிபீடத்திலே உட்காருவார்கள் என்றுதான் இப்படிப்பட்ட மூடுமந்திரமான, கொஞ்சங்கூட ஏற்கத்தகாத, ஜனநாயகத்திற்குப் புறம்பான ஒரு மசோதாவை, கொஞ்சங்கூட கூச்சமில்லாமல், இந்த மாமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்காக வைத்திருக்கிறீர்களே, என்று உங்களுக்காக நான் கழிவிரக்கம் கொள்கிறேன், வேதனைப்படுகிறேன். அது ஜனநாயக அமைப்புதானா என்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. துரை முருகன்] [1980 ஆகஸ்ட்

நீங்கள் என் தேர்தல் வைக்கவில்லை? பப்ளிக் டெப்பாசிட்டர்ஸ் இன்ட்டரஸ்டுக்கு யாரைக் கேட்க வேண்டும்? டெப்பாசிட்டர்ஸ் இன்ட்டரஸ்டை பணம் போட்டவர்களைப் பற்றி, கவனிக்க அந்த பாங்கை நடத்துகிறவர்களுக்கல்லவா நீங்கள் வாய்ப்பு தவரவேண்டும். யார் யார் பாங்கிலே பணம் போடுகிறார்களோ அவர்களுக்கு வாக்குரிமை தரப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டாமா? அவர்களுக்கு உரிமை கிடையாதா? நீங்கள் நியமிக்கிற ஏ.பி.சி. அந்த மானேஜிங் கமிட்டியிலே வந்து விடுவார்கள். ஆனால், பணம் போட்டு வங்கியை நடத்துகிறவர்களுக்கு வாய்ப்பு கிடையாது. அதுதானே, இதில் இருப்பது அமைச்சர் படித்தவர்தானே?

No taxation without representation என்றுதானே அமெரிக்காவிலே

சொன்னார்கள். அதுதானே, அமெரிக்காவிலே சிவில் வார் ஆக உருவாயிற்று. ஆகவே ரெப்ரசன்டேஷன் இல்லையென்றால், நாங்கள் டாக்ஸ் தர முடியாது, என்று சொன்னார்கள் ஆனால் வங்கியில் பணம் போடுங்கள், ஆளுவதற்கு நான் ஆள் அனுப்புகிறேன் என்று சொல்கிறார்களே அது முறைதானா என்று நான் கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, இரண்டு ஆண்டுக்காலம் என்கிறீர்கள் அந்த இரண்டு ஆண்டுகாலத்திற்கு அவர்களுக்கு என்ன, என்ன சௌரியங்கள் அடேயப்பா, நல்ல அருமையான சௌரியங்கள் என்ன, என்ன?

The Government may fix the remuneration payable to the managing Committee........

நீங்கள் நியமிக்கிற மானேஜிங் கமிட்டிக்கு நீங்கள்தான் ரெம்யூனரேஷன் ஃபிக்ஸ் செய்யப் போகிறீர்கள். நீங்கள் நினைத்தால், ரூபாய் 1,000, நீங்கள் நினைத்தால் ரூபாய் 2,000, நீங்கள் நினைத்தால் ரூபாய் 700—ஆக எவ்வளவு வேண்டுமானாலும் ஃபிக்ஸ் பண்ணலாம் என்று அறுதியிட்டு செய்கிற காரியத்தை அரசாங்கம் தன் கையிலே எடுத்துக்கொள்கிறது.

'The Government may fix the remuneration payable to the managing committee appointed under sub-section (1) and the amount of remuneration to be fixed, and such other expenditure incidental to the management of the scheduled co-operative society as may be approved by the Registrar,....

[மாலை 5-40]

அதுமட்டுமல்ல. அவர்களுக்கு ரெமூனரேஷன் பிக்ஸ் பண்ணுவது கவர்ன்மெண்ட். ஆள் போடுவது அவர்களுடைய ஆட்கள். அதற்கு மேலும் கோவாபரேடிவ் ரிஜிஸ்டிரார் இருக்கிறாரே அவர்



1980 ஆகஸ்ட் 7] [திரு. துரைமுருகன்]

அப்போதைக்கப்போது உத்தரவிடுவார். நீங்கள் சிந்திக்க வேண்டுமா. காஷ்மீரத்திலே கூட்டம் போடுங்கள். ஊட்டிக்குப் போகலாம், ஆளுக்கு ஒரு கார் வைத்துக்கொள்ளலாம். அறைகளுக்கு ஏ.சி. வைத்துக்கொள்ளலாம். எது வேண்டுமோ அதற்கெல்லாம் அவர் பிறப்பிக்கின்ற உத்தரவுகள். இவைகளுக்கு எல்லாம் பணம் உங்கள் சர்க்கார் கொடுக்கிறதா? கிடையாது. அடுத்துச் சொல்கிறார்கள். 'shall be paid from the funds of such scheduled co-operative society' பணம் கொடுப்பது கோவாபரேடிவ் சொசைட்டி. யாருக்கு? அவர்களுடைய பரிபாலன தர்பாருக்கு. ஆள் போடுவது அவர்கள். இதற்கு மேல் ரிஜிஸ்டிரார். அவர் கொஞ்சம் நஞ்சம் இருக்கிறதை போனசாக கொடுப்பார். அகமுடையான் நெய்யே, என் மனைவியின் கையே என்று எங்கள் கிராமத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. அப்படி கோவாபரேடிவ் பணத்தை எடுத்து

அமைப்பாளர்களுக்கு ஊதியமாக, ரெமூனரேஷனாக நீங்கள் தருவதற்கு நீங்கள் வழி கண்டிருக்கிறீர்கள். ஊருக்கு ஊர் தாலுகாவுக்குத் தாலுகா, வில்லேஜ்-க்கு வில்லேஜ் எல்லா இடங்களிலும் உங்கள் அமைப்பாளர்களுக்கு ஆளுக்கு 700, 800 ரூபாய் பணம் கிடைக்க வழி செய்து வைத்து, அரசாங்கப் பணத்தில், அல்ல கூட்டுறவு சொசைட்டிகளின் பணத்தில், மக்களுடைய வரிப்பணத்தில் இருந்து கொடுத்து, அதை பாழடிப்பதற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதைத் தான் நான் இங்கே குற்றச்சாட்டாக, சாட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தக் கூட்டுறவு தத்துவம் எதற்காக ஏற்பட்டதோ அதை நீங்கள் படுகொலை செய்து ஜனநாயகத்தைப் பயங்கரமாக படுகொலை செய்கிறீர்கள். நான் இன்னும் சொல்லுகிறேன், புற்று நோய்க்கிருமிகளை எடுத்து உடம்பிலே புகுத்துவதைப்போல உங்கள் அமைப்பாளர்களை இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளின் உள்ளே விட்டு, அதனுடைய தத்துவத்தை பாழடிக்க, அதற்கு சாவு மணி அடிக்க அமைச்சர் திட்டம் தீட்டிவிட்டார். இன்றைக்குக் கூட்டுறவுத் துறைக்கு மரண அடி அடிக்கப்பட்டுவிட்டது. சாவு ஓலை அனுப்பப்பட்டு விட்டது என்று கூறி, ஜனநாயகத்தின் பேரால், கேட்கிறேன்; நீதியின் பேரால் கேட்கிறேன். கொஞ்சமாவது உங்களுக்கு இந்த எண்ணம் இருக்குமானால் இதை உடனடியாக வாபஸ் வாங்குவதுதான் முறையாக இருக்கும் என்று கூறி, நான் அமர்கிறேன், நன்றி.

*திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகள் நியமனச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கு வந்துள்ள சட்ட முன் வடிவின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இங்கே கொண்டுவரப்பட்டுள்ள சட்டமுன்வடிவின் மீது பேசியபோது நண்பர் துரைமுருகன் அவர்கள் கூறிய கருத்தை ஏற்று அதன் தொடர்பாக நானும் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களின் பேசிக் ஸ்ட்ரக்சரையே அழிக்கின்ற வகையிலே அடிப்படைத் தன்மைகளை அழிக்கின்ற வகையிலே இன்றையதினம் நீங்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் 1976 ஆம் ஆண்டு, நாட்டிலே இருந்த பல சங்கங்கள் கலைக்கப்பட்டு தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். பின்னர், தேர்தல் நடைபெற்ற பிறகு, உங்களுடைய கட்சி 1977-ல் ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகு தேர்தல் நடத்துவோம் என்று அறிவித்தீர்கள். மாறாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் சொன்னீர்கள். ஒரு குறிப்பிட்ட கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவிலேயே 30 ஆண்டுகளுக்குத் தேர்தலே நடக்காது என்றும் சொன்னீர்கள். ஆனால், நாங்கள் வெற்றி பெற்று வந்த உடனே, 3 மாதத்தில் தேர்தலை நடத்தினோம். நீங்களும் வெற்றி பெற்று ஆட்சிக்கு மீண்டும் வந்தீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 30 ஆண்டுக் காலம் அவர்கள் தேர்தல் நடத்த மாட்டார்கள் என்று சொன்னோமே, நாம் ஆட்சிக்கு வந்து விட்டோமே, தேர்தலை நடத்திவிடுவோம் என்று சொன்னீர்களா என்றால் அதுதான் இல்லை. அந்தத் தேர்தலை நடத்துவதில் உங்களுக்குஉள்ள சங்கடங்கள் என்ன? ஏன் தேர்தலை வைக்கப் பயப்படுகிறீர்கள். தேர்தல் நடத்தாமல் இருக்கும் மர்மம் என்ன? அதையாவது வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். அப்படித் தேர்தல் வைத்தால் வெற்றி பெறுவதற்கு முடியாது என்ற எண்ணமா? இவ்வளவு மெஜாரிட்டி இவ்வளவு பெரும்பான்மை பெற்றிருக்கின்ற நீங்கள் ஏன் தேர்தல் நடத்தக் கூடாது. அப்படித் தேர்தலை நடத்துகின்ற திறமை உங்களுக்குக் கிடையாது, ஆற்றல் கிடையாது. அந்தத் தைரியமும் உங்களுக்குக் கிடையாது என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக உங்களின் ஆட்சி காலத்தில், ஆலோசனைக் குழுக்கள் நியமித்தீர்கள். அந்த ஆலோசனைக் குழுக்கள் வெறும் ஆலோசனை வழங்கும் குழுக்களாக, நிர்வாக அதிகாரம் இல்லாத குழுக்களாக இருந்த காரணத்தால், வேறு ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவந்து, அந்த ஆலோசனை குழுக்களை நிர்வாகக் குழு என்று திருத்தி அமைத்தீர்கள். நிர்வாகக் குழு என்பதை ஸ்பெஷல் ஆபீசர்கள் என்பதற்குப் பதிலாக அதிகாரம் பெற்ற குழு என்கிற முறையில் ஆக்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இதன் மூலம் என்ன தெரிகிறது என்று சொன்னால், உங்களுக்கு அதிகார ஆசை வந்து விட்டது. அதிகாரம் செய்ய வேண்டும் என்கிற ஆசை வளர்ந்து விட்டது. அந்த ஆசை கூட்டுறவு சங்கங்களுக்கும் வர வேண்டுமா? மாநிலத்தில் அதிகாரம் செய்வது போதவில்லையா? மாநிலங்களுக்கு அதிக அதி





காரங்கள் வேண்டும் என்று சொல்கிறீர்கள், இருக்கின்ற அதிகாரத்தை வைத்து இந்த குழுக்களுக்கான தேர்தல்களை நடத்த ஏன் பயப்படுகிறீர்கள். சாதாரண மக்களின் வரிப்பணத்தைப் பெற்று அமைக்கப்படும் இந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கு, மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் வந்து அதிகாரம் செய்யாமல், உங்களுடைய அமைப்பாக அதை மாற்றி, அதிலே உங்களுடைய கட்சிக்காரர்களைப் போட்டு, அதன் மூலம் உங்கள் கட்சியை வளர்க்கப்பார்க்கிறீர்கள். மத்தியில் இருந்து அதிக அதிகாரம் பெற வேண்டும் என்று சொல்கிற நீங்கள், இருக்கிற அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களுக்குக்கூட தேர்தல் நடத்த முடியவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். மேலும், மேலும் இந்த நீடிப்பு செய்வதன் மூலம் இந்த நாட்டில் ''ஜனநாயகப் படுகொலை''யைத்தான் நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவு அமைப்புகளில் ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. இப்போது இரண்டாண்டுக் காலம் தள்ளிப்போட்டாலும், 2 ஆண்டு காலத்திற்குப் பிறகு மீண்டும் இந்தச் சட்டத்திற்கு அமென்ட்மென்ட் கொண்டு வந்து மேலும், தள்ளிப்போடலாம். இப்படியே உங்களுடைய ஆட்சிக்காலம் பூராவும் தள்ளிவிடலாம் என்று நினைக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன். அப்போதுதான் கூட்டுறவு அமைப்புகளில் உங்கள் கட்சிக்காரர்களைப் போட்டு, அந்தந்தப் பகுதியில் கட்சியினை வளர்க்க முடியும் என்கிற கருத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவிக்க விரும்புவது எல்லாம், காங்கிரஸ் கட்சி இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறது, இது ஒரு ஜனநாயக விரோதமான திருத்தம், கூட்டுறவுச் சங்கங்களின் உரிமையைப் பறிக்கிற சட்டம், இதைத் திரும்பப் பெறுங்கள் என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கட்சியை வளர்க்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த வகையில் முயற்சி எடுத்து இருக்கிறது என்று சொன்னார்கள். உத்திரப்பிரதேசத்தில் அந்த முயற்சி எடுக்கத்தான் இப்படிப்பட்ட சட்டம் போடப்பட்டு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உத்திரப்பிரதேசத்தில் என்ன சட்டம் போட்டு இருக்கிறார்கள்?

திரு. கோவைத்தம்பி: இதே மாதிரி ஒரு சட்டத்தை உத்திரபிரதேசத்தில் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதைத்தான் கேட்டேன். எங்களைப் பொறுத்த வரையில், பாரதி கமிஷன் வராத அளவிற்கு நடந்து கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : பாரதி கமிஷன் வராவிட்டாச், சாரதி கமிஷன் வந்துவிட்டுப்போகிறது.

* திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளில் இன்று இருக்கும் நிலையைச் சீர்திருத்தி, மேனேஜ்மென்ட் கமிட்டிகளை மேலும் இரண்டாண்டு காலத்திற்கு நியமிப்பது என்கிற வகையில் சட்டத்தில் சொல்லப் பட்டு இருக்கிறது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், அங்கே அதனுடைய உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்க வேண்டும் என்பதிலே சந்தேகம் இல்லை. முன் னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பலர் அதை இங்கே வலியுறுத்தினார்கள். ஆனால், இந்தக் கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளைக் கலைத்து, அதிலே நிய மனங்களைச் செய்கிற முறை யாருடைய ஆட்சிக் காலத்தில் வந்தது என்பதை முன்னாலே பேசிய நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசை ஒலி). நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இங்கே பேசியபோது, இது ஒரு புற்று நோய் போல் வந்து விட்டது என்று சொன்னார்கள். கட்சிக்காரர்களை அங்கே கொண்டு போய் புகுத்துவதற்கான திட்டம் என்று மிகக் கடுமையாகச் சொன்னார்கள்.

[மாலை 5–50]

இந்த புற்று நோயை 1967க்குப் பின்னாலே கூட்டுறவுத் துறையிலே இன்ஜெக்ட் செய்தது யார் என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. கூட்டுறவுத் துறையிலே தேர்தலே வேண் டாம் என்று அன்றைக்கு இருந்த அமைப்புகள் அடியோடு கலைக் கப்பட்டது. 1967-ம் ஆண்டுக்குப் பின்னால்தான். கலைத்து விட்டு வரிசையாக நியமனங்கள் செய்யப்பட்டது மட்டுமல்ல புதிய புதிய சொசைட்டிகள் ஏற்படுத்தப்பட்டு அவைகளுக்கும் நியமன உறுப்பினர்கள் என்ற முறையிலே 'கோவாப்ட்' செய்து அவர்களுடைய மெஜாரிட்டியை நிலை நாட்டிக் கொள்ளும் முறையிலே பல காரியங்கள் நடைபெற்றன. அதற்குப் பின்னால் தான் 1972-ம் ஆண்டிலே ஆலோசகர் ஆட்சி வந்தபோது (குறுக்கீடு) 1976-ம் ஆண்டிலே ஆலோசகர் ஆட்சி வந்த போது கூட்டுறவுத் துறையிலே இருக்கக் கூடிய இந்த சீர்கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளைக் கலைத்தார்கள். அதையும் இந்திரா காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் நண்பர் சுந்தரராஜ் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைக்கு ஆலோசகர் நியமிக் கப்பட்டிருந்தாலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடக்கும்போது தான் இந்த அமைப்புகள் எல்லாம் கலைக்கப்பட்டு, கூட்டுறவுத் துறையிலே பல்லாண்டு காலமாக தொடர்ந்து இருந்து வந்த





சீர்கேடுகளை களைய, அதிகாரிகளை நியமித்து அவர்கள் கையிலே அந்த பொறுப்பை ஒப்படைத்தார்கள். அதற்குப் பின்னால் கூட்டுறவுத் துறையிலே இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த முறை தொடர்ந்து இருக்க வேண்டு மென்று நான் வாதாடுவதற்கு வரவில்லை. எவ்வளவு விரைவிலே கூட்டுறவுத் துறைக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஏற்பாடு களைச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவிலே இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. துரை முருகன் : சார், பாயின்ட் ஆப் கிளாரிபி கேஷன். சிறு சிறு சொசைட்டிகளுக்கும் நாங்கள் நியமன உறுப்பினர்களை வைத்தோம் என்று சொன்னார்கள். சிறு சிறு சொசைட்டிகளுக்கும் நாங்கள் ரெப்பிரசென்டேஷன் கொடுத் தோமே தவிர ஒட்டு மொத்தமாக மானேஜிங் கமிட்டி போட வில்லை என்பதை நண்பர் நெடுமாறன் அவர்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன். இப்போது கூட கேட்கிறேன், மானேஜிங் கமிட்டி போடுவதின் மர்மம் என்ன ? இதற்குப் பதில் சொல்ல வேண்டி வரும் என்று நினைத்துத்தான் சீக்கிரமாக முடித்துக் கொண்டார்கள்.

திரு. ப. நெடுமாறன் : நான் அதற்குப் பதில் சொல்கிறேன். உறுப்பினர்களே இல்லாத லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகளை ஏற்படுத்தி, அவைகளின் சார்பிலே ஒவ்வொரு கூட்டுறவு அமைப் பிலும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டார்களே. அது எப்படி நடந்தது என்று உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களா ?

திரு. துரை முருகன் : உறுப்பினர்களே இல்லாத சொசைட்டி அல்ல. உறுப்பினர்களை வைத்துத்தான் சொசைட்டிகள் நடை பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட விவாதங் கள் இப்போது வேண்டாம். இந்த பில்லை பற்றிய விவாதத்தை முதலிலே முடிப்போம் ; வேறு விளக்கங்கள் வேண்டாம். அடுத்து டாக்டர் சமரசம் பேசுவார்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த கூட்டுறவுச் சட்டத்தை ஆதரித்து அதில் நான் ஒரு சில கருத்துக்களை ஆட்சிக் கட்சியின் சார்பிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசும்போது முதலிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பில்லிலே மிகத் தெளிவாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (1) அதிகாரிகள், (2) அனுபவசாலிகள், (3) நியமன உறுப்பினர்கள்—அவர்கள் கட்சி சார்பிலே நியமிக்கப்படக் கூடியவர்கள் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். இதை வைத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனித் தன்மையில் கூட்டுறவுத் துறையை ஆக்கிரமிக்கக் கூடிய நிலையில் இல்லை ; இந்த அரசும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஆலோசனைக் குழுக்கள் என்ற முறையிலே இப்போது நியமன கமிட்டிகளை அமைத்திருக்கிறார்கள். அதுவும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காகத்தான் ; தேவை என்ற காரணத்தால்தான் நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் சொரைக்காய் பலூனை இந்தப் பக்கம் அமுக்கினால் அந்தப் பக்கம் பெருக்கும் ; அந்தப் பக்கம் அமுக்கினால் இந்தப்பக்கம் பெருக்கும்: அதைப்போல அதிகாரிகளை நியமித்தால் ஏன் கமிட்டி அமைக்கவில்லை என்கிறார்கள், கமிட்டியை அமைத்தால் கமிடடி எதற்கு? அதிகாரி போதுமே என்கிறார்கள். இருந்தும் கெடுத்தான் முன்சீப், செத்தும் கெடுத்தான் முன்சீப் என்று சொல்வார்கள். அதைப்போலே ஓவ்வொரு நேரத்திலும் ஓவ்வொரு ஆலோசனையைச்சொல்கிறார்கள். அதையெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தால் காலமும் தாங்காது, நேரமும் போதாது.

ஏற்கெனவே கூட்டுறவுத் துறையைப் பற்றி மிகப் பெரிய கலையை வகுத்துக் கொடுத்தவர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் இருந்தபோது நாம் தான் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல. அந்தத் தேர்தல் முறைக்கு " * " என்று கூட பொதுவாகப் பத்திரிகைகளிலே பெயரிட்டு அனுப்பியதை நான் அறிவேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தனிப்பட்ட பெயர்களைச் சொல்லக் கூடாது. ஆகவே அந்தப் பெயரை அவைக்குறிப்பிலே இருந்து எடுத்துவிட உத்தரவிடுகிறேன்.

<u>டாக்டர் கே. சமரசம்</u> : பேரவைத் தலைவரவர்களே, ஆகவே அப்படிப்பட்ட நிலையிலேதான் நாம் ஏற்கென்வே நடந்துக் கொண்டிருக்கிறோம் என்பதிலே நம்மை நாமே ஒரு முறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று நான் நண்பர் துரை முருகன் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வேன்.

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



" தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும் ".

என்று சொல்வார்கள். ஆகவே மிகத்தெளிவாக ஆராய்ந்து இருக்கின்ற காரணத்தால்தான் கூட்டுறவுத் துறையினை நிர்வகிக்கக் கூடிய அனுபவசாலிகளையும் இணைத்து, சம்பந்தப்பட்ட நல்ல அலுவலர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று ஆட்சிக் கட்சியின் சார்பாக இருக்கக்கூடிய அனுபவசாலிகளையும் இணைத்து நடத்தவேண்டும் என்று சொல்கிறோம். அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் ஆள்வதற்காகத்தான் இவ்வாறு செய்துக்கொள்கிறீர்களே தவிர எதிர்காலத்திலே எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வாய்ப்பு இல்லாமல் இருப்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவகையில் அரசின் சார்பாகக் கூட இல்லை ஆட்சிக் கட்சியின் சார்பாக அதை ஏற்றுக் கொள்கிறேன். அவ்வாறு சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் ஆள்வதற்காக பொது மக்கள் எங்களை அனுப்பி இருக்கிறார்கள். ஆலோசனைகள் அளிக்கத்தக்க வகையிலேதான் எதிர்க்கட்சியாகிய உங்களையும் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே உங்களுடைய ஆலோசனைகளையும் பெற்று எப்படி எப்படி ஆட்சி நடத்த வேண்டுமோ அப்படி நிச்சயமாக ஆட்சி நடத்துவோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே கூட்டுறவுத் துறையிலே கோவை சிந்தாமணியில் நாமினேஷன் என்ற பெயரால் என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டன என்பதையும் அந்தத் துறையிலே இருந்து மாநாடுகளுக்காகவும், இன்ன பிற காரியங்களுக்காகவும் எப்படி எப்படி வசூல் செய்யப்பட்டது என்ற நிலைகள் எல்லாம் இருந்தன. ஆகவே அவற்றைகளையக் கூடிய வகையில் நல்ல திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அதை ஆதரித்து அமருகிறேன்.

<u>* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u>: பேரவைத் தலைவரவர்களே கனம் அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்த மசோதாவை ஆதரத்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப் படுகிறேன்.

இப்போது கனம் அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவில் அஃபிஷயல், நான் அஃபிஷயல் ஆகிய இருவரும் சேர்ந்து நிர்வாகத்துறையிலே இருந்தால் நிச்சயமாக திருட்டுக்கு இடம் இல்லாமல், பணம் கொள்ளை போகாமல் இருக்கும் என்ற காரணத்தால் தான் இவர்கள் இருவரையும் இனைத்து போடக்கூடிய முறையிலே உருவாக்கி இருக்கிறார்கள் என்று நினைத்து நான் மகிழ்ச்சி அடைந்து இதை நான் ஆதரிக்கிறேன்.

அடுத்து கனம் துரை முருகன் அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள். ஜனநாயகத்தைப் படுகொலை செய்யக்கூடிய அளவுக்கு இங்கே தேர்தலே நடத்தாமல் நீங்கள் செய்யக்கூடியது நியாயம் இல்லை என்று சொன்னார்கள். ஓரளவுக்கு அதை ஏற்றுக் கொண்டாலும் கூட சோளவந்தான் தொகுதியிலே நிலக்கோட்டை தாலுக்காவிலே நாங்கள் பல சிரமப்பட்டு அலங்காநல்லூர் சுகர் பேக்டரியை ஏற்படுத்தினோம். இரவு பகலாக அலைந்து 30 லட்சம் ரூபாய் ஷேர் கேப்பிட்டல் வசூல் செய்து 90 லட்சம் ரூபாய் அரசாங்கக் கடனாகப் பெற்று 2,200 டன் அரைக்கத்தக்க அளவுக்கு கெப்பாசிட்டி கொண்ட அந்த மில்லை உருவாக்கினோம். அந்த மில்லை உருவாக்கி அங்கே கட்டிடங்களைக் கட்டி டிரக்டர்ஸ் போன்ற் அப்பாயின்ட்மென்ட்ஸ் கூட சரியாகப் போடவில்லை; அதற்குள்ளாக 1967-ம் ஆண்டு காங்கிரஸ் வாஷ் அவுட் ஆகிவிட்டது. அதிலே முதல் முறையாக அரைத்து சர்க்கரையை எடுப்பதற்குள் காங்கிரஸ் மக்கள் மத்தியிலே இருந்து வெளியே வந்துவிட்டது. அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தது. அவர்கள் வந்த பிறகு அவர்களுடைய கட்சிக்காரர்களையும் அவர்களுக்கு வேண்டியவர்களையும் அங்கே போட்டு கடந்த 9 ஆண்டுக்காலமாக அங்கே தேர்தலே நடத்தாமல் அவர்களாகவே ஆட்சி செய்து கொண்டிருந்தார்களே அது எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. அந்தக் கட்டத்தில் லிஃப்ட் இரிகேஷன் சொசைட்டி, அக்ரோ சர்வீஸ் எல்லாம் ஏற்படுத்தி அவர்களுடைய கட்சிக்காரர்களுக்கே அவற்றில் வேலை வாய்ப்புக் கொடுத்து * '' '* '' ;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * '' * '' ,

என்று அவர் சொன்னதை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்து விடுவதற்கு உத்தரவிடுகிறேன். ஆகவே திருமதி பொன்னம்மாள் அவர்கள் இந்த மசோதாவை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் பேசுங்கள் போதும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இது சம்பந்தமாக நல்லவர்களை நிர்வாகத்திலே போட வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் இதற்கு முன் எத்தனையோ தவறுகளைக் கண்டு பிடித்திருக்கின்றது இந்த அரசாங்கம். ஆகவே மேனேஜிங் கமிட்டி போடும்போது நல்லவர்களைப் போட்டு மக்களுக்கும் சமுதாயத்திற்கும் தொண்டு செய்யக்கூடிய அளவுக்குச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த திருத்த மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





[மாலை 6-00]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விசேஷ தனி அதிகாரிகள் நியமனம் குறித்த திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் ஒரு புனிதமான இயக்கம். இதைப் போற்றி பாதுகாக்க வேண்டியது அவசியம் தான். ஜனநாயக முறையிலே செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு இயக்கம் இது என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் இந்த இயக்கம் பல்வேறு சோதனைகளை தாங்கி, தாண்டி வந்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஜனநாயகம் என்று கூறக்கூடிய சந்தர்ப்பத்திலே, இதிலே பல்வேறு விளக்கங்கள் கூறக்கூடிய சந்தர்ப்பத்திலே நாம் வந்திருக்கிறோம். நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் 1972 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில், ஏற்கெனவே இருந்த சட்டத்தின் அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாக சபைகளை, அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயக்கத்தின் பெயராலே. அவர்களாகவே தீர்மானித்து, அதில் யார் தலைவராக வரவேண்டும் என்று ஜாபிதாவைக் கூடக் கொடுத்து அந்த முறையிலேதான் ஜனநாயகம் என்ற பெயரால், தலைவராக வரவேண்டும் என்ற நிர்பந்த ஜனநாயக முறைகள் கூட உருவாக்கப்பட்டு, அதன் காரணமாக பல கூட்டுறவுச் சங்கங்கள் சீரழிக்கப்பட்ட நிலைமையும் உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகுதான் 1976 ஆம் ஆண்டிலே ஆளுநர் ஆட்சியிலே, அட்வைசர் ஆட்சியிலே, கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகளை நிர்வகிக்க தனி அதிகாரிகளை வைத்து அவர்களுடைய ஆட்சி கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. அதிலேயும் ஒரு பெரிய அனுபவத்தை நாம் பெற்றிருக்கிறோம். தனி அதிகாரிகள் தங்கள் கையிலே அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அதன் மூலமாக சீரழிந்த கூட்டுறவுச் சங்கங்கள் பல உண்டு.

உதாரணத்திற்கு சொல்லவேண்டும் என்றால், கோவையில் இருக்கிற சிந்தாமணி சிறப்பு அங்காடியில் தனி அதிகாரி நிர்வாகத்திலே அவருடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு அவர் நிர்வாகம் பண்ணிய முறையினாலே, பல கோடி ரூபாய்களுக்கு பல கோடி என்று சொல்லக்கூடாது, ஒரு கோடிக்கு மேல் லாபம் வந்து கொண்டிருந்த ஒரு இயக்கமாக இருந்த அந்த நிர்வாகம், தனி அதிகாரியின் ஆட்சிப் பொருப்

பிலே தொடர்ந்து நஷ்டத்தை தான் அதிகமாக பெற்று வருகிற நிலையில் செயல்படுகிறது இன்றைய தினம். அதே மாதிரி பல கூட்டுறவுச் சங்கங்கள், இன்றைய தினம் தனி அதிகாரிகளுடைய, முறையற்ற நிர்வாகத்தின் காரணமாக, அவர்கள் எந்தவிதமான கவலையும் இல்லாமல், தங்களுடைய சொந்த அதிகாரத்தைக் கொண்டு செயல்படுத்தி வருவதன் காரணமாக, சீரழிந்துக் கொண்டிருக்கிறது என்று அனைவருக்கும் தெரியும்.

ஆகவே இதிலிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் சீக்கிரத்திலேயே தேர்தல் நடத்த வேண்டும் என்றும், அதற்கான சட்டம் கொண்டு வருவதற்காகத்தான் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் நான் உணர்கிறேன்.

நேற்றைக்கு முன் தினம் கூட, கூட்டுறவுச் சங்கங்களில் மசோதா ஒன்று சபையில் அறிமுகம் செய்யப்படவிருக்கிறது என்றும், அது புதிய சட்டமாக வருவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும் எனவும், அந்த நிலையிலே தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலிருந்து அந்த நிர்வாகங்களை மீட்க வேண்டும் என்று தீர்மானம் செய்யக்கூடிய நேரத்திலே, இதில் கூறப்பட்டிருக்கிற, மேனேஜிங் கமிட்டியிடத்தில் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகிற நேரத்திலே, அதற்கான அதிகாரங்களை திரும்ப எடுத்துக்கொள்ளும் வகையாகத்தான் இதிலே கூறப்பட்டிருக்கிறது.

அப்படிச் செய்யக்கூடிய நேரத்திலே அந்த கமிட்டிகள் நியமிக்கப்பட்டு செயல்படும் காலம் 2 ஆண்டுகளுக்கு மேற்படாமல், என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் எங்களுடைய கட்சியின் சார்பிலே வேண்டிக்கொள்வது அந்த இரண்டு ஆண்டுகள் என்பது தேவைதானா? நாம் புதிய கூட்டுறவு சட்டத்தைக் கொண்டு வரப்போகிற நேரத்தில், அதை நிறைவேற்றுவதற்கான ஒரு குறிப்பிட்ட கால அளவிலே அதாவது ஒரு 6 மாத காலத்திற்கு அந்த கமிட்டியினுடைய பொறுப்பிலே இருக்கும்படி வழங்கினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு இயக்கம் என்பது ஒரு பிரதான இயக்கமாகும். இந்த இயக்கத்தில் ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டும் பிரதிநிதித்துவம் பெறுவது என்றில்லாமல் கடந்த காலத்தில் கடைபிடித்து வந்த நடைமுறைகளை நாம் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவற்றை சரியான நடைமுறைகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் தான் இந்த மானேஜ்மென்ட் கமிட்டிகளில் அங்கம் பெறுவது என்ற நிலை இருந்தது. அது





சரியல்ல. அந்த முறை மாற்றப்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த மானேஜ்மென்ட் கமிட்டிகளில் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையில் இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மானேஜ்மெண்ட் கமிட்டியில் இருப்பவர்களுக்கான ரெம்யூனரேஷன் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபையில் உள்ள அதன் தலைவருக்கு அல்லது நிர்வாகிகளுக்கு எந்த அளவிற்கு ரெம்யூனரேஷன் பெற அந்த சங்கங்களிலே பைலாவில் விதிகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையில் அமைந்தால் போதுமானதாகும். அதற்கு மேல் மானேஜ்மென்ட் கமிட்டியில் இருப்பவர்களுக்காக ஏற்படும் பல்வேறு செலவினங்கள் தவிர்க்கப்பட வழிவகை காண வேண்டும். ஏற்கனவே சங்கங்களின் பைலாப்படி என்ன ரெம்யூனரேஷன் கொடுக்கப்பட்டு வந்ததோ அதுவே போதுமானது.

ஆறு மாத காலத்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டுகள் வரவேண்டும்.

செலவினங்கள் சம்பந்தமாக மாற்றம் செய்ய வேண்டுமென்று கூறி இந்த மசோதாவிற்கு என் ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பூனை குறுக்கே போகிறது. சகுனம் சரியா என்று கேட்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இந்தச் சங்கங்களுக்கு தேர்தல் நடந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டன. இது தொடர்ந்து நீட்டிக்கப்பட இறுதியாக தனி அதிகாரிகள் போடப்பட்டு இன்றையதினம் மக்களுக்கும் அரசாங்கத்திற்க்கும் சம்பந்தம் இல்லை என்ற முறையில் ஒரு இலாகாவாக இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த கூட்டுறவு அமைப்பு இன்றைக்கு ஆளும் கட்சிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்த ஒரு அமைப்பு அப்படியே இருக்கிறது. அதுவும் கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் அங்கே இது ஏதோ ஒரு குடும்பச் சொத்தாகவே

[திரு. என். பழனிவேல்] [1980 ஆகஸ்ட் 7

இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இதனால் மக்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சலுகைகள், உரிமைகள் கிடைப்பதில்லை. தனி அதிகாரிகளாகவே இதை மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் செயல்படுத்துகிறார்களா என்றால் அதுவும் கிடையாது. ஆகவே தனி அதிகாரிகளுக்குப் பதிலாக கமிட்டிகள் நியமிப்பது என்பது நியாயமானதே. ஆனால் திரு. கருப்பையா அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த நியமனம் நிரந்தரமாகிவிடாமல் குறுகிய காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்தியாக வேண்டும்.

தேர்தல்கள் நடத்துவதற்கு முன்னால் ஆங்காங்கு நியமிக்கக்கூடிய கமிட்டிகளில் நியாயமான முறையில் அனுபவம் மிக்கவர்களை — அனுபவமிக்கவர்கள் என்று நான் சொல்லும்போது குறிப்பாக காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருப்பார்கள், நான் அந்த அனுபவத்தைச் சொல்லவில்லை நியாயமானவர்களை, அனுபவமுள்ளவர்களை, மக்களுக்கு பயன்படக்கூடிய காரியங்களை செய்ல்படுத்தக்கூடியவர்களை, ஹரிஜனங்களை, பெண்களை இந்தக் கமிட்டிகளில் நியமித்து மக்களுக்கு பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேருவதில் பல சிரமங்கள் உள்ளன. கூட்டுறவு என்றுதான் பெயர். ஆனால், அதில் உறுப்பினர்களாகச் சேருவதற்கு பலயிடங்களில் ஆண்டுக்கணக்காக முயற்சித்தாலும்கூட அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அல்லது அந்த அமைப்பின் தலைவர்களாக இருப்பவர்கள் வழிவிடுவது கிடையாது. அவற்றை அவர்கள் குடும்ப சொத்தாக நினைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

[மாலை 6-10]

ஆகவே, இதையெல்லாம் காலப்போக்கில் நிவர்த்தி செய்து, வெகு விரைவிலே தேர்தலைக் கொண்டுவந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கு முன்பாக, இப்படி இடையிலே ஒரு குழு அமைப்பதை நான் வரவேற்று, அந்த அதிகாரிகளும், அந்த குழுவும் விரைவிலே தேர்தலை நடத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நாட்டுயர்வு என்று பேசப்பட்டு வந்த காலம் போய், ஒரு சிலரின் வீட்டுயர்வு என்று கருதுகிற காலத்தில், கூட்டுறவில் பல்வேறு மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று கருதி, பல்வேறு நேரங்களில் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.



1980 ஆகஸ்ட் 7] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கூட்டுறவு இயக்கம் தனித்தன்மையோடு, இந்தியாவிலேயே முதலிடம் பெறத்தக்க அளவிற்கு நடைபெற்று வந்தது என்பதை நாடு நன்கறியும். கூட்டுறவுத் துறையிலே இடையிலே ஏற்பட்ட சில மாற்றங்களின் காரணமாக, பல்வேறு திருத்தங்களின் காரணமாக அது ஓரளவுக்கு சீர்குலைந்திருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி அவ்வப்போது வருகின்ற நிலைமைகளை உணர்ந்து, ஏற்கெனவே பல்வேறு திருத்தங்களைச் செய்வதற்கு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, இந்தத் திருத்தங்கள் மூலம் இந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகக் நான் மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையிலே முதல் முதலாக ஒரு குழு அமைக்கப்பட்டு, பல்வேறு பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு சந்தானம் கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்மேல் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இறுதியாக வர்கீஸ் அவர்களுடைய ஆட்சி மன்ற நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு, அவைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதிலேயும் பல்வேறு திருத்தங்களைச் செய்திருக்கிறோம். இவ்வாறெல்லாம் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனித்தனியாக பை-லாக்கள் அமைத்துக் கொள்ளலாம் என்று சட்ட விதிகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தந்தச் சங்கங்கள் அவரவர்களுக்கு ஏற்ப பைலாக்கள் அமைத்துக் கொண்டு வந்திருக்கின்றன. இவைகளை எல்லாம் பார்க்கின்றபோது, கூட்டுறவுச் துறை எந்த அளவிற்கு மாற்றம் செய்யப்பட்டு வந்திருக்கின்றது என்பதும், கூட்டுறவுத் துறை மக்கள் இயக்கமாக வந்திருக்கிறது என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே, முதலாவதாக நில அடமான வங்கி என்றிருந்ததை அப்படி இருக்க கூடாது என்பதற்காக நில வள வங்கி என்று மாற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அப்படி மாற்றப்பட்டது. இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அவர்கள் கூட, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும், காங்கிரஸ் கட்சிக்காரர்களும் அந்தகாலத்திலே தவறு செய்து விட்டதைப் போலவும், அவர்களைப் போடக் கூடாது என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். நீங்களும் அதனை அனுமதித்தீர்கள். தி.மு.கழக உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஆட்சி புரிந்த காலத்திலே தான் இப்படி நடைபெற்றதாக வலியுறுத்திச் சொன்னார்கள். நான் அந்த இடத்திற்குப் போக விரும்பவில்லை...........

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தி.மு. கழகக்காரர்களையும், காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் இந்தக் குழுவிலே போடக் கூடாது என்ற முறையிலே பேசியதாகவும்....

திரு. அன்பில் தர்மலிங்கம் : நீங்கள் பேசவில்லை. இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், பழனிவேல் அவர்கள் சொன்னார்கள் என்பதை நான் உங்கள் மூலம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : நான் பேசும்போது தி.மு.கழகத்துக் காரர்களையும், காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் போட வேண்டாம் என்று சொல்ல வில்லை. அவர்கள் காலத்தில் இத்துறை புறக்கணிக்கப்பட்டது என்று சொன்னேனே ஒழிய, நான் அவர்களைப் போட வேண்டாம் என்று சொல்லவில்லை.

திரு. இரா கருப்பையா. : நான் பேசியபோது கூட காங்கிரஸ் காரர்கள் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ்காரர்களையே போடுகின்ற நடைமுறையையும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களையை போடுகின்ற அந்த நடைமுறையையும் இப்போது பின்பற்ற வேண்டாம் என்ற முறையில்தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையில் ஏறத்தாழ 30 ஆண்டுக் காலம் அனுபவம் பெற்றவன் என்ற முறையில் சொல்லுகிறேன். கூட்டுறவுத் துறையில் யார் போய் கையை வைத்தாலும் அவர்கள் எதைச் செய்கிறார்கள் என்று தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுக்குத் தெரிவும். கம்யூனிஸ்ட் கட்சி ஆதிக்கத்தில் இருந்த திருச்சி மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் எந்த அளவிற்குப் போனது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

திரு. இரா. கருப்பையா : உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி மாவட்ட விற்பனைச் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சி ஆதிக்கத்தில் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : நான் திரு. மாணிக்கவாசகம் கம்யூனிஸ்டு கட்சி என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.



123093

திரு. இரா. கருப்பையா : மாவட்ட விற்பனைச் சங்கத்தில் அவர் நிர்வாகியாக எப்போதும் இல்லை.

திரு. அன்பில் தர்மலிங்கம் : அதற்குப் பிறகு அது சிந்தாமணியாக மாற்றப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் ஆட்சி புரிந்து அதில் எவ்வளவு சிக்கல்கள் ஏற்பட்டன என்பது தெரியும்.

திரு. இரா. கருப்பையா : மாவட்ட விற்பனைச் சங்கம் வேறு. மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலை வேறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : பெயர் மாற்றந்தான் வேறு ஒன்றும் இல்லை.

எனக்கு அண்ணா அவர்கள் சொன்னது நினைவுக்கு வருகிறது. கூட்டுறவுத் துறையில் நான் பொறுப்பேற்றிருந்த நேரம். மாவட்ட மத்திய வங்கியின் தலைவனாக நான் இருந்த போது அண்ணா அவர்கள் எங்கள் வங்கிக்கு வந்திருந்தார்கள். அங்கே பார்த்து விட்டு அண்ணா அவர்கள் சொன்னார்கள் 'இதனால் தான் கூட்டுறவு சங்கத்தை எவன் பிடித்தாலும் சாகிற வரை விடமட்டான். அப்பன், மகன், அவன் மகன் என்று வந்து கொண்டிருப்பார்களே தவிர, வேறு யாரையும் வர விடமாட்டார்கள்.' என்று சொன்னார்கள்.

1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு கூட்டுறவு இயக்கத்தின் நிலைமைகள் பற்றி என்னிடம் கேட்டார்கள். நான் அண்ணா அவர்களிடத்தில் நிலைமைகளை எடுத்துச் சொன்னேன். சிட்டிங் பீசை எடுத்து விட்டு சம்பளம் கொடுக்கலாம் என்று சட்டத்தில் திருத்தம் வருகிறது. தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1967ஆம் ஆண்டுக்கு முன்னால் ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒரு கூட்டத்திற்குச் சென்று வருகிறார் என்றால் இரண்டு பஸ்ட் கிளாஸ் டிக்கட், அவர் கூட வருகிற ஆளுக்கு இரண்டு டிக்கட், 1967-க்குப் பிறகு அண்ணா அவர்கள் அப்போது இருந்த வி.கே.சி. நடராஜன் அவர்களை அழைத்துக் கேட்டார்கள். ஒருவருக்கு இரண்டு டிக்கட் எதற்காக, பிறகு கூட வருகிறவருக்கு இரண்டு டிக்கெட் என்பது எதற்காக என்று கேட்டார்கள். சிட்டிங் பீஸ் நிர்வாகக் குழுக் கூட்டம் நடந்தால் 25 ரூபாய், வேறு கமிட்டி அதே நாளில் இருந்தால் மேலும் 25 ரூபாய் இப்படி இருந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று அண்ணா அவர்கள் வி.கே.சி. நடராஜன் அவர்களிடத்தில் சொல்லி அவை எல்லாம் மாற்றப் பட்டிருக்கிறது என்பதையும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1980 ஆகஸ்ட் 7

இப்போது சம்பளம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது டி.ஏ. தான் கொடுக்கப்பட்டது. கலைஞர் காலத்தில் கூட அமைக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழுவில் சொல்லியிருப்பது கூட, சிட்டிங் பீஸ் ஒன்று கொடுத்தால் போதும், இரண்டு கொடுக்க வேண்டியது இல்லை யென்று சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் பல மாற்றங்கள் செய்ய வேண்டும். உறுப்பினர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு அமைத்து நிர்வகிக்கலாம். இரண்டு வருஷத்திற்கு மேல் இருக்கக்கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கூட்டுறவில் கொஞ்சமாவது நாலெட்ஜ் இருக்கிறதா, புரிந்தவர்களாக இருக்கிறார்களா என்று யோசித்துப் பார்த்து போட வேண்டும். அப்படி இல்லை என்றால் யார் யார் வேண்டியவர்களோ அவர்களைத்தான் போட முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் கோயில்களுக்குத் தர்மகர்த்தா போடும்போது கட்சிக்காரர்களைப் போட வேண்டாம், அதைத் திருச்சியில் செய்து பார்க்க வேண்டுமென்று என்னிடத்தில் சொன்னார்கள். 'கட்சிக்காரர்களுக்கு வேண்டாம், சாமி நம்பிக்கையுடையவர்களை நியமிக்க வேண்டுமே தவிர, நம்பிக்கை இல்லாத நம்முடைய கட்சிக்காரரைப் போட்டால் இரண்டு எக்ஸ்ட்ரீம்களுக்குப் போய்விடலாம் ஒன்று கோயிலுக்குப் போய் தீபாராதனைகளைப் பார்த்து பக்தன் ஆகிவிடுவான்.

[மாலை 6-20]

அல்லது ரொம்ப தீவிரவாதியாக இருந்தால் அவன் மடப்பள்ளியிலே போய் அய்யரே கொஞ்சம் சிகரேட்டுக்கு நெருப்புக் கொடு என்று கேட்பான். இரண்டும் நமக்கு நஷ்டம்தான், ஆகவே கட்சிக்காரர்களைப் போடக்கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்திலே நான் செய்து காட்டினேன். திரு. சமரசம் அவர்கள் பாரதி கமிஷன் பற்றிச் சொன்னார்கள் தமிழ்நாடு முழுவதும் அந்த கமிஷன் சுற்றிப் பார்த்து நான் தலைவரவாக இருந்த மத்திய வங்கி தான் தமிழகத்திலே சிறந்த வங்கி என்றும், சிறு குறைபாடும் கிடையாது என்றும் எழுதியிருக்கிறார்கள். முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் தலைவராக இருந்த சங்கத்தைப் பற்றி. அவ்வாறு அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த பாரதி கமிஷன் அறிக்கையை நானே பார்த்தேன். அன்றாட நிர்வாகத்தில் உள்ளது பற்றி ஒருவர் மேல் கேஸ் போடப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் வசூலித்த திறமையானவர் என்று பரிசு அளிக்கப்பட்ட கும்பகோணம் கூட்டுறவு நிறுவனத்தின் தலைவராக இருந்த கோ. சி. மணி அவர்கள் 45 ரூபாய் எக்சஸ் பில் போட்டார் என்ற குற்றச்



1980 ஆகஸ்ட் 7] [திரு. அன்பில் தர்மலிங்கம்]

சாட்டுத்தான் வருகிறதே தவிர, நாம் எல்லாம் பில்லைப் பார்த்து படித்துப் பார்த்து கையெழுத்துப் போடுவதில்லை. இது ஒரு பெரிய குற்றச்சாட்டு அல்ல, அதிகாரிகள் அதையே செய்தால் அது தவறு இல்லை. அதிகாரி காரை, வேனை, ஜீப்பை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினால் தவறு இல்லை, ஆனால் அவர்கள் செய்தால் ஜீப்பை எடுத்துக் கொண்டு இந்த ஊரிலிருந்து இந்த ஊருக்குப் போனார் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அதில் இருக்கின்றன. கையாடல் சம்பந்தமாக குற்றச்சாட்டு இருப்பதாகத் தெரியவில்லை. அதிகப்படி பணம் வாங்கப்பட்டிருக்கிறது, அதிகமான பெட்ரோல் செலவழிக்கப்பட்டிருக்கிறது, ஜீப்பை எடுத்து சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றுதான் இருக்கிறதே தவிர, கையாடல் செய்த்தாக ஒன்றுமே கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அந்த அறிக்கையிலே அப்படித்தான் இருக்கிறது. நான் அதைப் படித்துப் பார்த்தேன். அதுதான் அதிலே இருக்கிறது. நாராயணசாமி பிள்ளை கமிட்டி அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள் :

The nominees of the Government on the Board of Management shall be only three and they shall be officials, of whom one sha be from the Co-operative Department.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே மேலும் குறிப்பிடுகிற போது,

The nominees of the Government will have each only one vote in the General Body and they shall exercise this power in person.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே சந்தானம் கமிட்டி அறிக்கையிலே,

In this process, however, it should not be forgotten that co-operation is of value only to the extent that it is managed by elected representatives. The management of socicites through nominated boards for long periods is likely to sap the foundations of the movement and convert it into a semi-departmental agency which will have the merit neither of a Government public undertaking nor of a live co-operative organisation.

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கையிலே, திரு. வர்கீஸ் அவர்கள் தலைமையிலே போடப்பட்ட குழு அறிக்கையிலே,

Such nominated directors should be officials. Non-officials should get into the committee only through elections. If the entire committee is nominated for an indefinite period as is the case in respect of co-operative sugar mills and spinning mills the society

[திரு. அன்பில் தர்மலிங்கம்] [1980 ஆகஸ்ட் 7

loses its co-operative character and becomes virtually a public sector undertaking, though the members contribute to its share capital to a considerable extent and participate in its business. In view, however, of the need for the state to have a larger share in the management of such society in the initial years, the committee may be nominated only for the first three years.

என்று சொல்லியிருக்கிறார்கள். சுகர் மில்ஸ் ஆரம்பிக்கப்படுகிற போது எப்படி இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 9 பேர்கள் நியமிப்பது என்பது ஜனநாயக முறைப்படி பார்த்தால் கூட்டுறவு இயக்கம் தனி இயக்கமாக இருந்தால்தான் நல்லது. ஏற்கெனவே செய்த தவறுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்றைக் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்றாக இருந்த காலத்திலே சேலம் மாவட்டத்திலே தர்மபுரியிலே ஒரு பை-எலக்ஷன் நடந்தது. மாண்புமிகு தலைவரவர்களுக்கே தெரியும். அப்போழுது அவருடைய மாவட்டத் தலைவராக இருந்தவர்கள் மதிப்பிற்குரிய சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள். அப்பொழுது எப்படி நடந்தது என்பது மாண்புமிகு தலைவரவர்களுக்கே தெரியும். வடார்காடு மாவட்ட மத்திய வங்கியின் ஜீப் கார் அங்கே வேலை செய்து, மேட்டூரிலே டேஷ் ஆகியதெல்லாம் மாண்புமிகு தலைவராகிய உங்களுக்கே தெரியும். அப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதால்தான் அவைகள் மாற்றப்பட்டு பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆகையினால் அவர்களெல்லாம் செய்தார்கள். அவர்களெல்லாம் செய்தார்கள் என்ற காரணத்தைக்காட்டி இதை நீங்கள் தயவு செய்து இந்த அளவிற்கு ஆக்காதீர்கள். தமிழ்நாடு கூட்டுறவு இயக்கம் ஒரு புனிதமான இயக்கம். இப்பொழுது கூட்டுறவு இயக்கத்திலே கொடுக்கப் பணம் கிடையாது. இப்படிப் பட்ட இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கவே முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் அவர்களை யெல்லாம் போட்டு வீண்பழிக்கு ஆளாக்காதீர்கள். இப்பொழுது இருக்கின்ற அதிகாரிகள் தீவிரமாகப் பணியாற்றுகிறார்கள். இங்கே சிலர் பேசும் பொழுது ஸ்பெஷல் ஆபீசர்கள் தேவை யில்லை என்று சொன்னார்கள். ஆனால் கொஞ்ச நேரத்திற்கு முன்பு வேளாண்மைத் துறையைப்பற்றி வந்தபொழுது ஸ்பெஷல் ஆபீசர்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்பொழுது நேரத்திற்கு நேரம் மாற்றம் இருக்கிறது. ஆகவே, இதை இப்படி ஆக்க வேண்டாமென்று கேட்டு, ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செய்யப்படுகிற செயல் என்பதைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் முக்கியமான நோக்கம், மாண்புமிகு உறுப்பினர், திரு. துரை முருகன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல அரசியல் இயக்கத்தின் கூடாரமாக கூட்டுறவு அமைப்பை ஆக்க வேண்டுமென்று நோக்கம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு 6:



1980 ஆகஸ்ட் 7] [திரு. சி. பொன்னையன்]

அருமை அண்ணன் மாண்புமிகு திரு. அன்பில் அவர்களுக்கும் கூட்டுறவுத் துறையிலே எந்த அளவிற்கு மாற்றங்களை நாம் பொதுமக்களின் ஒட்டு மொத்த நன்மை கருதி கொண்டு வர வேண்டுமென்பது தெரியாத ஒன்று அல்ல. இந்தக் கட்சி நாட்டை ஆண்ட பொழுது இத்தகைய முறைகேடுகள் நடந்தன. அந்தக் கட்சி நாட்டை ஆண்டபொழுது அத்தகைய முறைகேடுகள் நடந்தன என்பதற்கு நான் வரவில்லை.

தற்பொழுது தமிழகத்திலே கூட்டுறவு அமைப்பு இருக்கின்ற நிலை, தேர்தல் பன்னெடும் ஆண்டுகளாக நடத்தப்படாத காரணத்தால், ''ப்ரொடியூசர்ஸ் கோவாபரேடிவ் சொசைட்டிஸ்,, ஆக இருந்தாலும் சரி, ''கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ்'' ''சொசைட்டிஸ்''ஆக இருந்தாலும் சரி, கூட்டுறவு அமைப்பில் அச்சாணிகளாக விளங்குகின்ற உற்பத்தியாளர்களின் கூட்டுறவு அமைப்புகள், நுகர்வோர்களின் கூட்டுறவு அமைப்புகள் ஆகிய இந்த இரண்டிலுமே மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் தேர்தல் நடக்காத காரணத்தால் கடந்த சில ஆண்டுகளாக மக்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கின்ற பலன் கிட்டாமல் இருப்பதை அரசு உணர்கிறது.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கடந்த காலத்தில் இருந்தபொழுது எந்த அளவிற்கு அங்கு அரசியல் தலையீடுகள் ஏற்பட்டன என்ற காரணத்தால் கூட்டுறவுச் துறையினுடைய தூய்மையே மங்கத் துவங்கியது என்பது அவை அறியாத ஒன்று அல்ல.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரைக்கும், அந்த அமைப்புகள் குறிப்பாக கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புறங்களாக இருந்தாலும் சரி, நலிந்த பிரிவினருக்கு நன்மைகளை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே அமைப்புகள் இருப்பதால் அரசியல் அங்கு தலையிடுகின்ற பொழுது அல்லது அதிகார வர்க்கம் தலையிடுகின்றபொழுது பணக்காரர்களினுடைய ஆதிக்கப் பிடியிலேயிருந்து ஏழைகள் சுரண்டப்படும் ஒரு நிலை தொடர்ந்து இருக்கும் என்பதால்தான், 1976-இல், குறைகள் மலிந்து விட்டன. என்ற காரணத்தால் இந்த அமைப்புகளைக் கலைக்க வேண்டுமென்ற முடிவை எமெர்ஜென்சி காலத்தில் எடுத்து, கலைத்தார்கள்.

ஆனால் தனி அதிகாரிகள் பொறுப்பிலே கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 503 அமைப்புகள் 'அபெக்ஸ் பாடீஸ்' என்ற அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகள் இருப்பதால் இன்று தமிழகத்திலே எந்த அளவிற்கு விபரீதங்கள் நடந்து வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல.

குறிப்பாக விவசாய சங்கங்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களைத் திருப்பித் தராத நிலை,

[திரு. சி. பொன்னையன்] [1980 ஆகஸ்ட் 7

கூட்டுறவு அமைப்புகளிலே முதலீடாகப் போடப்பட்டிருக்கிற பணம் ஒரு புறம், அந்த அங்கத்தினர்களிடமிருந்து டெப்பாசிட்டாக வாங்கப்பட்டு போடப்பட்டிருக்கின்ற பணம் மறு புறம், ரிசர்வ் வங்கியின் மூலம் வாங்கப்பட்டு, போடப்பட்டிருகிற பணம் ஒரு புறம்', கடனாக வாங்கப்பட்ட அந்தப் பணம், திருப்பி, கூட்டுறவு அமைப்புகளுக்கு வரவில்லையென்றால், நலிந்த பிரிவினர் மீண்டும் பணம் படைத்தவர்களிடம் சிக்கி, கடன் வாங்கும் நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, அவர்களும் பல பாதிப்புகளுக்கு உள்ளாகிவிடக் கூடும் என்ற நோக்கத்தோடுதான், பொதுமக்களையும் அதிலே ஈடுபடும் முறையை ஏற்படுத்த வேண்டுமென்ற நோகோடு இந்தச் சட்டம் முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

[மாலை 6.30]

தேர்தலை நடத்தக்கூடாது என்பது அரசினுடைய எண்ணம் அல்ல. தமிழகத்திலேயிருக்கிற இந்தக் கூட்டுறவுச் சட்டத்திலே பல சந்துபொந்துகள் இருந்த காரணத்தால், அதிலே பல குறைபாடுகள் இருந்த காரணத்தால் (குறுக்கீடு)................ கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலைத் கொண்டு வர அரசுக்கு எந்தவித தயக்கமும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் சுந்தரராஜன் அவர்கள் பேசுகிறபொழுது, கடந்த தேர்தலிலே நல்ல வாய்ப்பினை பெற்ற நீங்கள் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்த தயக்கம் காட்டுவது ஏன் எனக் கேட்டார். உண்மையிலேயே, ஒரு சிறிதும் தயக்கம் இல்லை. உடனடியாகத் தேர்தலைக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் புதிய சட்டத் திருத்தத்தைக் கூட, இந்தத் தொடர் கூட்டத்திலேயே நாம் நிறைவேற்ற இருக்கிறோம். ஆனால், புதிய சட்டத்தை நாம் கொண்டு வருகிறபொழுது, ஏற்கெனவே இருந்த சட்டத்திலே இருந்த குறைபாடுகளையெல்லாம் அறவே களைந்து, எங்கெங்கு சந்துபொந்துகள் இருக்கின்றனவோ, அவைகளை எல்லாம் அடைத்து, அந்தச் சட்டத்திலேயிருந்த குறைகளின் காரணமாக கூட்டுறவு சங்கத்திலே அங்கத்தினர்களாக இருக்கின்றவர்கள் தவறு செய்கின்ற வாய்ப்புகளைத் தடுத்து நிறுத்தும் வகையில், நல்லதொரு சட்டத்தை நாம் நிறைவேற்றுவோமானால் குறிப்பாககிராமப்புறங்களிலே இருக்கிற நலிந்திருக்கிற மக்களுக்கு கூட்டுறவு அமைப்பின் உண்மை பலன் கிட்டும் என்ற நோக்கோடு, இந்தச் சட்டத்தைச் செம்மையான முறையில் ஆக்கவேண் வேண்டுமென்ற நோக்கோடு நாம் சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தவுடன் கண்டிப்பாக தேர்தலை உடனடியாக நாம் நடத்துவோம் என்ற உறுதிமொழியை நான் அவைக்குத் தருகிறேன்.

ஆனால், தற்பொழுது தனி அதிகாரிகள் இருக்கிற பகுதிகளில் எல்லாம், அவர்கள் அங்கத்தினர்களோடு தொடர்பில் லாமல், கொடுத்த கடனை வாங்கக்கூடிய அளவுக்கு முயற்சி



1980 ஆகஸ்ட் 7] [திரு. சி. பொன்னையன்]

களை மேற்கொள்ளும்பொழுது, அவர்களுக்கும் ஆங்காங்கு, தடைகள் ஏற்பட்டு, பல இன்னல்கள் வருவதை, ஏற்கெனவே பேசிய அருமை சகோதரர் மாண்புமிகு கருப்பையா அவர்களும், மாண்புமிகு பழனிவேல் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

இந்தக் குழுக்களை அமைக்கின்றபொழுது, விவசாயக் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அதிலே அங்கம் பெறுவார்கள். கோவாப்பரேட்டர்ஸ் அதிலே அங்கம் பெறுவார்கள். அதிகாரிகளும் அங்கம் பெறுவார்கள் ; முழுவதும் இது அரசியல் கூடாரமாக ஆக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு அறவே இருக்க வேண்டாம்.

அப்படி அந்தக் குழு அமைக்கப்பட்டபோதிலும், அவர்களுக்கு சாலரி என்று கொடுத்து விடுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார். அதுவும் இல்லை. இங்கு ரெம்யூனரேஷன் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, அது அலவன்ஸ் அன்ட் டி .எ., அதோடுதான் இருக்கும் என்பதையும், சாலரி என்ற அளவுக்கு அது செல்லாது என்பதையும்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பிரிவுகள் 2, 3, 4, 5-க்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை முருகன், திரு. சுந்தரராஜன் ஆகியோர் கொடுத்துள்ள திருத்தங்கள் பேரவை விதி 100 (2)-க்கிணங்க ஏற்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

<u>பிரிவு—4.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு–4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு கோருகிறேன்.

[மாலை 6-40]

பிரிவு—4.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்குகள் எண்ணிக் கணிக்கப்பெற்றன.

ஆதரித்தோர்—99.

எதிர்த்தோர்—38.

நடுநிலை வகித்தோர்—யாரும் இல்லை.

பிரிவு 4-க்கு ஆதரவாக, 61 வாக்குகள் அதிகம் கிடைத்துள்ளதால், பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

ஆதரித்தோர்.

1. திரு. இரா. மணிமாறன்.
2. திரு. பி. எச். பாண்டியன்
3. திரு. வி. வி. சுவாமிநாதன்
4. திரு. ச. அங்குசாமி
5. திரு. எஸ். அரங்கநாதன்
6. திரு. இரா. அருணாசலம்
7. திரு. தி. அன்பழகன்
8. திரு. சேலம் மு. ஆறுமுகம்
9. திரு. எம். வி. இரத்தினம்
10. திரு. த. இராமசாமி
11. திரு. எஸ். டி. உகம்சந்த்
12. திரு. கே. ஆர். கணபதி
13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
14. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்
15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
16. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
17. திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்
18. திரு. இ. கணேசன்



19. திரு. கா. வே. கந்தசாமி
20. திரு. பி. கந்தசாமி
21. திரு. வி. கருப்பசாமி பாண்டியன்
22. திரு. பெ. கலியமூர்த்தி
23. திரு. கா. கோ. கிருஷ்ணசாமி
24. திரு. சா. கிருஷ்ணமூர்த்தி
25. திரு. செ. குப்புசாமி
26. திரு. ப. குருசாமி
27. திரு. நா. குலசேகரபாண்டியன்
28. திரு. சி. கேசவ ஆதித்தன்
29. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
30. திரு. கோவைத்தம்பி
31. திரு. ஆர். சக்கரபாணி
32. திரு. இரா. சண்முகம்
33. திரு. வ. சத்தியமூர்த்தி
34. திரு. சி. சபாபதி
35. டாக்டர் கோ. சமரசம்
36. திரு. சி. சிவப்பிரகாசம்
37. திரு. மு. சிவபெருமாள்
38. திரு. என். சின்னசாமி
39. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
40. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
41. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
42. திரு. க. இரா. சின்னராசு
43. திரு. எம். சின்னராஜ்
44. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
45. செல்வி ப. விஜயலட்சுமி
46. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்
47. திரு. கே. ஏ. செங்கோட்டையன்
48. திரு. செ. செம்மலை
49. திரு. பு. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
50. திரு. ஏ. எம். சேதுராமன்
51. திரு. ஏ. தங்கராசு
52. திரு. ஆர். தவசி
53. திரு. இரா. தாமரைக்கனி

54. திரு. பெ. திருமாறன்
55. திரு. திருமான்
56. திரு. கே. உச்சி
57. திரு. பி. துரைராஜ்
58. திரு. பி. ஜி. நாராயணன்
59. திரு. சு. பழனிசாமி
60. திரு. ச. பாலகிருஷ்ணன்.
61. திரு. க. பாலசுப்பிரமணியன்
62. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
63. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
64. திரு. ஏ. பெரியசாமி
65. திரு. என். பெருமாள்
66. திரு. ரா. கு. பெருமாள்
67. திரு. த. மாரிமுத்து
68. திரு. சு. முத்துகிருஷ்ணன்
69. திரு. இரா. கருப்பையா
70. திரு. ப. நெடுமாறன்
71. திரு. செ. சிவசாமி
72. திரு. எஸ். என். இராமசாமி
73. திரு. ஜி. மூர்த்தி
74. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்
75. திரு. என். பழனிவேல்
76. திரு. எம். ஆறுமுகம்
77. திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்
78. திரு. ஆர். ரங்கசாமி
79. திரு. எம். கே. இராசமாணிக்கம்
80. திரு. எம். வின்சென்ட்
81. திரு. டி. மணி
82. திரு. ஜே. ஹேமசந்திரன்
83. திரு. ஏ. டி. கருப்பையா
84. திரு. என். விஜயபாலன்
85. திரு. மு. அப்பாதுரை
86. திரு. பா. தீர்த்தராமன்
87. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
88. திரு. ஆ. வெள்ளைச்சாமி



89. திரு. க. ரங்கசாமி
90. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
91. திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்
92. திரு. மு. ஜான் வின்சென்ட்
93. திரு. என். சங்கரய்யா
94. திரு. ஆர். உமாநாத்
95. திரு. கு. ரமணி
96. திரு. என். வரதராஜன்
97. திரு. ஆர். கிருஷ்ணன்
98. திரு. கே. ஆர். சுந்தரம்
99. திரு. எம். செல்லமுத்து

எதிர்த்தோர்

1. திரு. ஏ. சாகுல் ஹமீது
2. திரு. ஆர். தியாகராசன்
3. டாக்டர் மு. கருணாநிதி
4. திரு. அன்பில் தர்மலிங்கம்
5. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்
6. திரு. நா. சுந்தரராஜ்
7. திரு. என். எஸ். வி. சித்தன்
8. திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்
9. திரு. எல். இளையபெருமாள்
10. திரு. உ. சுப்பிரமணியம்
11. திரு. சு. பாலன்
12. திரு. சி. பழனிமுத்து
13. திரு. து. இராசரத்தினம்
14. திரு. எல். பலராமன்
15. திரு. எம். சுந்தரம்
16. திரு. நா. இராமச்சந்திரன்
17. திரு. ஏ. சந்திரசேகரன்
18. திருமதி. தா. இராசாம்பாள்
19. திரு. என். முத்துவேல்
20. திரு. வே. இராஜசேகரன்
21. திரு. கே. கல்லன்
22. திரு. பம்மல் நல்ல தம்பி

23. திரு. வே. வால்மீகி
24. திரு. எஸ். சிவராமன்
25. திரு. பாபு ஜனார்த்தனன்
26. திரு. ஜே. எஸ். இராசு
27. திரு. பெ. சு. திருவேங்கடம்
28. திரு. துரை முருகன்
29. திரு. அ. செல்வராசன்
30. திரு. த. வேணுகோபால்
31. திரு. அ. ரகுமான்கான்
32. திரு. து. புருஷோத்தமன்
33. திரு. து. ப. பழனியப்பன்
34. திரு. என். வி. என். சோமு
35. திரு. மு. ரங்கநாதன்
36. திரு. மு. ப. முனுசாமி
37. திரு. பாபு கோவிந்தராஜன்
38. திரு. ப. சுந்தரம்

நடுநிலை வகுத்தோர்.

யாரும் இல்லை.

[மாலை 6.50]

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தாமல் அரசாங்கம் விருப்பம்போல், ஜனநாயகத்திற்கு விரோதமாக, இரண்டாண்டுகளுக்கு நிர்வாகக் குழு அமைப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டித்து, இந்த மசோதா சட்டமாக நிறைவேறும்போது நாங்கள் வெளியேறுகிறோம். (கூச்சல், குழப்பம்). (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : தலைவரவர்களே, இதை எதிர்த்து நாங்களும் வெளியேறுகிறோம்.

(காங்கிரஸ் " இ " கட்சி உறுப்பினர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினரும் வெளிநடப்பு செய்தனர்).

பிரிவு 5, பிரிவு 6 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 34/1980) நிறைவேற்றப்பெற வேண்டும."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

உ. நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த)* சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 21/1980).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 21/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. ரா. உமாநாத் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த டிராஃப்ட் சட்டத்தின் நோக்கம் நல்ல நோக்கமாகத்தான் இருக்கின்றது. அதாவது நில ஆர்ஜிதம் செய்வதற்கு கெஸட் நோட்டிஃபிகேஷன் செய்த பிறகு அதை டிக்ளேர் பண்ணுவதற்கு மூன்றுஆண்டுகள டைம் இருக்கின்றது. அந்த மூன்றாண்டு காலத்தை எப்படியாவது தள்ளிவிட வேண்டும் என்பதற்காக நீதிமன்றங்களுக்குச் சென்று இரண்டு ஆண்டுகளோ, இரண்டரை ஆண்டுகளோ, அல்லது மூன்று ஆண்டுகளோ ஆகிவிட்டது என்று சொன்னால் அந்த நேரததினுடைய வரம்பு முடிந்து விட்டது என்று சொல்லி எந்த நோக்கத்திற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதோ அந்த நோக்கமே முறியடிக்கப்படக்கூடிய அளவுக்குத்தான் ஏற்கெனவே இருந்த சட்டத்தில் இருக்கின்ற சரத்தினுடைய அர்த்தமாகும். ஆனால், இனிமேல் அந்த மாதிரி நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால் அவர்கள் அவ்வாறு சென்று அங்கு தீர்ப்பளிக்கப்படும் வரை எடுக்கப்படுகின்ற காலம் இந்த மூன்றாண்டு காலத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற முறையிலே இந்த சட்டத்திருத்தத்தில் இருப்பதானது ஒரு நல்ல அம்சமாக நாங்கள் கருதுகிறோம்.

*1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் தேதியிட்ட, தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**அதுமட்டுமல்ல** இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் 1967
**ஆம் ஆண்டு** சனவரித் திங்கள் 20 ஆம் தேதியிலிருந்தே பொருத்
தப்படும் என்ற முறையிலே இப்போது கொண்டு வரப்பட்டிருக்
கின்றது. இதுவும் வரவேற்கத் தகுந்தது. ஆனால் இந்த
நேரத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கெஸட் நோட்
டிஃபிகேஷன் செய்த பிறகு டிக்ளேர் பண்ணுவதற்கு 3 ஆண்டுக்
காலம் என்ற டைம் இருக்கின்றது. ஆனால், இப்படி அதிக
பட்சமாக 3 ஆண்டு என்று இருப்பதை விட ஒரு ஆண்டுக்குள்ளே
டிக்ளேர் செய்யலாம் அல்லது 6 மாதத்திற்குள்ளாக டிக்
ளேர் செய்யலாம். ஆனால், 3 ஆண்டு என்பது மேக்ஸிமம்-
ஆக இருப்பதால் நில ஆர்ஜிதத்தைப் பொறுத்த மட்டிலே **அந்த**
மூன்று ஆண்டுகளையும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருப்
பதை நடைமுறையில் நாம் பார்த்து வருகின்றோம். இவ்வாறு
அதிகபட்சம் 3 ஆண்டு என்று இருப்பதால் அந்த மூன்று ஆண்டு
களையும் எடுத்துக்கொள்வதால், அந்தக் காலதாமதத்தின் காரண
மாக இந்தச் சட்டத்தினுடைய பொது நோக்கத்தையே டிஃபீட்
பண்ணக்கூடிய நிலைமை இருக்கின்றது. அதனாலே ஜனங்களுக்
கும் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல. அவ்
வாறு 3 ஆண்டுகள் காலதாமதப்படுத்துவது பலவிதமான ஊழல்
களுக்கு இடம் கொடுக்கின்றது என்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.

[இரவு 7-00]

அதுவும் கெசட் நோட்டிபிகேஷனுக்குப் பிறகுதான் 3 ஆண்டு
கால கெடு என்றிருக்கிறது. நான் கனம் அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புவது—நோட்டிபிகேஷன் இஷ்யூ
பண்ணுவதற்கே கால தாமதம் ஆகிறது என்பதுதான். லேட்
டஸ்ட் உதாரணம் வேண்டுமானாலும் கனம் அமைச்சர் அவர்
களின் கவனத்திற்கும், இந்த அவையின் கவனத்திற்கும் கொண்டு
வருகிறேன்.

சென்னையில், நுங்கம்பாக்கத்தில் ஆண்டர்சன் ரோட்டில்
ஆசான் மெம்மோரியல் சீனியர் செகண்டிரி கிரேட் ஸ்கூல் என்று
ஒன்று இருக்கிறது. அதிலே 2,500 மாணவர்கள் படிக்கிறார்
கள். 175 ஸ்டாப்ஃபுகள் இருக்கிறார்கள். டெல்லியிலே இருக்
கிற சென்ட்ரல் போர்டில், அந்தப் பள்ளிக்கூடம் இணைக்கப்
பட்டிருக்கிறது. ஆனால், அதை நிரந்தரமாக்க, வேண்டுமென்
றால், டெல்லியிலே இருக்கிற போர்டு அதை அங்கீகரிக்க வேண்
டும் என்று சொன்னால், அதற்கு பிளே கிரவுண்டு, விளையாட்டு
மைதானம் ஒன்று சொந்தமாக இருக்க வேண்டும் என்கிற நிபந்
தனை இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தின் பக்கத்திலேயே
காலி இடமும் இருக்கிறது.





ஆகவே, அந்த இடத்தை அந்த ஸ்கூலுக்கு விளையாட்டு மைதானமாக ஆக்குவதற்கு, வாங்குவதற்கு, அந்தப் பள்ளிக்கூட நிர்வாகத்தினர் தயாராக இருந்தும், அந்த இடத்தின் சொந்தக் காரர்கள் அதைத் தருவதில் தயக்கம் காட்டியதினாலே, அதை அக்கியூர் பண்ண, ஆர்ஜிதம் செய்ய கலெக்டரைப் பள்ளிக்கூட நிர்வாகிகள் அணுகினார்கள். ஆனால், அப்படி அணுகிய பிறகும் ஏராளமான நாட்கள் கலெக்டர் அதை அப்படியே வைத்துக் கொண்டு பேசாமல் இருந்தார். கால தாமதம் கலெக்டர் அளவிலேயே நோட்டிபிகேஷன் கொடுப்பதற்கு முன்னாலேயே ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணமோ தெரியாது. ஆனால் அதற்கு என்ன காரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது இருந்தாலும் அதைத்தான் காரணமாக இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. 'God and Collector alone know why such a delay has taken place' கடவுளுக்கும் அந்த கலெக்டருக்கும் தான் தெரியும் ஏன் கால தாமதம் என்று. எனக்கு அந்தக் கலெக்டர் யார் என்று குறிப்பிட்டுத் தெரியாது. பெயர் தெரியாது. அந்த நேரத்திலே இருந்த கலெக்டரால் கால தாமதம் ஆகியது என்பதுதான் தெரியும்.

அதற்குப் பிறகு, இவ்வளவு நாட்கள் கழித்து கலெக்டர் உத்தரவு அனுப்பியிருக்கிறார். என்னவென்று, 12 இலட்சம் ரூபாய் டெபாசிட் செய்தால் நிச்சயமாக அதை அக்கொயர் பண்ணுகிறோம் என்று லெட்டர் அனுப்பியிருக்கிறார். அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் பாவம், தங்களிடத்தில் பணம் இல்லாததினால், தங்களுடைய பிரைமரி செக்ஷனை விற்றுவிட்டு, 12 இலட்சம் ரூபாயைச் சேர்த்து கலெக்டரிடம் டெபாசிட் செய்தார்கள். அப்படி 12 இலட்சம் ரூபாய் டெபாசிட் செய்தும், அதற்கான நோட்டிபிகேஷன் வெளியிடப்படவே இல்லை. இன்றைய தினம் வரைக்கும் நில ஆர்ஜிதத்திற்கான நோட்டிபிகேஷன் வரவில்லை.

அதற்குப் பிற்கு அந்த நிலத்தை இன்னொரு பிரைவேட் பார்ட்டி வாங்க முயற்சிக்க ஆரம்பித்து விட்டது. அதைப் பிறகு கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, அவர் அதை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பி ரெவின்யூ போர்டு எஜூகேஷன் டிபார்ட்மென்ட்டுக்கு அனுப்பி, இப்போது அது எஜூகேஷன் டிபார்ட்மென்டினுடைய செக்கரட்டரியிடம் இருக்கிறது. இன்னமும் கூட அந்த பைல் இங்கே எஜூகேஷன் செக்கரட்ரியிடம் இருக்கிறது. "Why such a delay" எஜூகேஷன் டிபார்ட்மென்ட் தூங்குகிறதா? ஆகவே, இந்தத் திருத்தத்தில் இருக்கிற மாதிரி நோட்டிபிகேஷன் வெளியிட்ட பிறகு 3 வருஷம் காலக்கெடு என்றிருந்தால் இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ஆகும்? அந்த 3 வருஷத்திற்கு முன்னாலேயே, நோட்டிபிகேஷன் வருவதற்கு முன்னாலேயே இப்படி டிலே ஆகிறதே,

அவ்வளவு பணத்தையும், தங்கள் பிரைமரி செக்ஷன்களைக் கூட இழந்து அந்த நிர்வாகத்தினர் டெபாசிட் கட்டியும், இன்னும் நோட்டிபிகேஷன் வரவில்லையே? பணத்துக்குப் பணமும் போச்சு, வட்டியும் போச்சு, நோட்டிபிகேஷனும் வரவில்லை. இதன் விளைவாக 11 வகுப்புகளுக்கு இடம் இல்லாமல், வெளியே திறந்த வெளியிலே அவற்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது என்னவென்று சொன்னால், இப்போது கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டத்தை அமுல் செய்கிற அதே நேரத்திலே, இப்படிப்பட்ட தேவையற்ற கால தாமதங்கள் ஏற்படாமல், அதிகாரிகள் டிலே பண்ணாமல் இருக்கக் கூடிய முறையிலே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நல்ல வகையில் செயல்படும் முறையிலே, நோட்டிபிகேஷன் வெளிவருவதற்கு முன்பு கால தாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு, வெகு விரைவில், இன்னும் 3 ஆண்டுகள் காலக்கெடு இருக்கிறது. நோட்டிபிகேஷன் வந்த பிறகு என்றெல்லாம் காத்துக்கொண்டிருக்காமல், வெகு சீக்கிரத்தில், அந்த பிளே கிரவுண்டை அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். கெஸட் நோட்டிபிகேஷன் வந்துவிடுகிறது. கெஸட் நோட்டிபிகேஷன் வந்தபிறகு மூன்று வருடங்கள் என்றிருந்தால் அது நல்லதா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று விரும்புகிறது இந்த அரசு. ஆகவே கெஸட் நோட்டிபிகேஷன் வந்த பிறகு, பணம் கட்டிய பிறகு ஆறு மாதங்களுக்கு மேல் டைம் கொடுக்காமல் உடனடியாக எடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

ஆஸ்பத்திரிகள், கல்விக் கூடங்கள், ரோடு போட நிலங்கள் எடுக்கிறோம். எனது நிலக்கோட்டை தொகுதியை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மக்கள் பலவித சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள். 16 ஆண்டுகளாகி, நிலத்தை எடுத்து, பணம் கட்டி, நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, கல் நட்டு, சர்வே செய்து பட்டா கொடுத்த பிறகும்கூட கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே ஆர்டர் வாங்கிவிடுகிறார்கள்.





எனது அளகாபுரியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய ஒரு நிலக்கிழார்—மலையில் வசிக்கக்கூடியவர்—நிலத்தைப் பிரித்து பட்டா கொடுத்து விட்ட பிறகு, கல் ஊன்றி, சர்வே செய்த பிறகுகூட கோர்ட்டுக்குப் போய் ஸ்டே ஆர்டர் வாங்கி, நிலத்தை நான் விடமாட்டேன், இதில் தென்னம்பிள்ளை வைக்கப் போகிறேன் என்று உள்ளே நுழைய விடாமல் தடுக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பரிதாபகரமான நிலை இருக்கிறது. ஆகவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது. காலம் கடத்தாமல் உடனடியாகங் காரியங்களைச் செய்ய வேண்டும். கெஸட் நோட்டிபிக்கேஷன் வந்தவுடனே அதில் மறுபரிசீலனை இல்லாமல் நிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலயிடங்களில் விலை உயர்ந்த நிலங்கள் எடுக்கப்படுகின்றன. தென்னம்பிள்ளைகள் வைத்திருக்கக்கூடிய தோப்புகளை எடுக்கிறோம். அப்படி எடுக்கும்போது காம்பன்சேஷன் கொடுக்கிறோம். நான்கு ஆண்டுகளாக அதை வைத்து வளர்த்து நல்ல வருமானம் வரக்கூடிய சூழ்நிலையில் அதை எடுக்கிறோம். நான் பணக்காரர்களுக்காகப் பரிந்து பேசவில்லை கனம் அமைச்சர் அவர்கள் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே அப்படி விலை உயர்ந்த தோப்புகளை எடுக்கும்போது, அவற்றிற்குச் சற்று நியாயமான காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். ஏழை மக்களின் நிலங்களை எடுக்கும்போது—பள்ளிக்கூடங்களுக்காக நிலம் எடுக்கும்போது, ஆஸ்பத்திரிக்காக நிலம் எடுக்கும்போது, ரோடு போட நிலம் எடுக்கும்போது அப்படிப்பட்ட ஏழைகளுக்குத் தகுந்த காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். தோப்புக்களுக்கும் ஓரளவு நியாயமான காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும்.

கெஸட் நோட்டிபிக்கேஷன் வந்த பிறகு காலம் கடத்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு.பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த, நிலம் கையகப்படுத்தல் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் முதல் நோக்கமே பொது நோக்கத்திற்காக, பொது மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்துவது என்ற அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது. பொது நோக்கிற்காக என்று எடுக்கும்போது எவ்வளவு விரைவாக இதைச் செயல்படுத்த வேண்டுமோ அந்தளவிற்கு விரைவாகச் செயல்படுத்தப்

[திரு. கு. பா. பழனியப்பன்] [1980 ஆகஸ்ட் 7

பட வேண்டும் என்ற அடிப்படையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதில் சொல்லப்பட்டிருப்பது போல் சொல்ல வேண்டுமானால், நீதி மன்றத்தில் பல்வேறு வழக்குகள் சென்று இழுத்தடித்து தாமதிக்கப்பட்டு நோக்கம் நிறைவேறாத அளவிற்குச் சிக்கல்கள் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கு முன்பாக இருந்த சட்டத்தில் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக கையகப்படுத்துவதற்கான நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்றும், இறுதியான நோட்டிபிக்கேஷன் கொடுக்க வேண்டும் என்றும் இருக்கிறது. அந்த நோக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் எப்படியும் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக கையகப்படுத்தும் பணியை முடிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தின் அடிப்படையில்தான் இந்த மசோதா இருக்கிறது. ஆனால் வழக்கு மன்றத்தில் வழக்கு சென்று காலத்தை நீட்டிக்கும் நிலை இருக்கிறது. ஒரு ஆஸ்பத்திரி கட்ட, ஒரு தொழிற்சாலை அமைக்க, உடனடியாக நிலம் கையகப்படுத்த ஆர்வத்தோடு முற்பட்டாலும் கூட நீதிமன்றத்திற்குச் சென்று காலத்தை இழுத்தடிக்க இதுவும் உதவியாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[இரவு 7-10].

ஏனென்று சொன்னால், பல்வேறு வழக்குகள் நீதி மன்றங்களிலே அரசுத் தரப்பிலே அதிக அக்கறை எடுத்துக் கொள்ளாததால் விரைவிலே பைசல் ஆகாமல் இன்னும் பல வழக்குகள் இன்றைக்கும் தூங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே இந்த மன்றத்திலே பல குற்றச்சாட்டுக்கள் வந்திருக்கின்றன. எனவே, அவைகளையெல்லாம் பார்க்கின்றபோது, இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் பலன் பெற முடியுமா என்ற ஐயத்தைத் தான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது, என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஆதரித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால் இதிலே இருக்கிற சங்கடங்களைச் சொல்லுகிறபோது, ஏன் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்பதைப் பற்றி இதிலே இருக்கிற நன்மைகளைப் பற்றி அருமை உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஆகவே இதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. திரு. உமாநாத் அவர்கள் சொல்கிறபோது, 3 ஆண்டுகள் என்பது அதிகமாகத் இருக்கிற



1980 ஆகஸ்ட் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்].

இருக்கிறது இதைக் குறைக்கலாம் என்ற யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனையை இந்த அரசு எப்படி எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி யோசனை செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் இன்னொன்றையும் சொல்கிறபோது, இங்கே கல்விக்காக . . . .

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சியின் சார்பில் வெளி நடப்பு செய்யப் பெற்றபோது, எதிர்க்கட்சித் தலைவரைக் கேவலமாக, மரியாதையற்ற வார்த்தைகளால் பேசியிருக்கிறார்கள். அதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அனுமதிப்பது ஏன்றால், இன்றையதினம் முதலமைச்சராக இருந்தாலும், வருவாய்த் துறை அமைச்சராக இருந்தாலும், வேறு எந்த அமைச்சராக இருந்தாலும், அவர்கள் பேசுகிறபோது, எப்படி அந்தப் புறத்திலே இருந்து பேசப்பட்டதோ, அதே சப்தத்தை எழுப்புவது போன்ற முறையை நாங்களும் பின்பற்ற முடியும். அப்படிப் பின்பற்றினால், அந்த வரிசையிலே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் யாராவது பேச முடியுமா? இதைக் குறித்துத் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும். நான் விளக்கம் சொல்கிறேன். வெளிநடப்பு செய்யும் போது உறுப்பினர்கள் அமைதியாக வெளியேறுவதுதான் மரபு . . . . (கூச்சல்—குழப்பம்).

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் வெளிநடப்பு செய்தபோது, அவர்களை நையாண்டியாகப் பேசுவதும், கேலியாகப் பேசுவதும் வழக்கமாக இருந்து வருகிறது . . . . . . (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சாதாரணமாகவே, எந்த ஒரு பிரச்சினையை வரவேற்பதாக இருந்தாலும் வரவேற்கின்ற தரப்பினர் மேசையைத் தட்டி ஒலி செய்வது வழக்கமாக இருக்கிறது. இதை நான் 4 வருஷங்களாகப் பார்த்து வருகிறேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. துரைமுருகன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ஆளும் கட்சியினர் நையாண்டி பண்ணுவது என்றால் நாங்களும் அமைச்சர்கள் பேசும்போது, முதலமைச்சர் பேசும்போது பண்ண முடியும். இது பற்றித் தங்கள் தீர்ப்பு வேண்டும்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாரும் யாரையும் கேலி பண்ணவில்லை. அப்படிக் கேலி பண்ணுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை சுமுகமாக நடக்க வேண்டும் (கூச்சல்—குழப்பம்).

திரு. என். வி. என். சோமு : ஓட்டு மொத்தமாகத் தாங்கள் தீர்ப்பு வழங்கக் கூடாது, எங்கள் கட்சித் தலைவரை அவமரியாதைப் படுத்தியது எங்கள் மனதைப் புண்படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி நடைபெறவில்லை. அந்த மாதிரி நடந்திருந்தால் அது கண்டிக்கத் தக்கது.

திரு. துரைமுருகன் : தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பை மதிக்கிறேன். எதற்கும் முறை உண்டு. அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

மாண்புமிகு திரு .ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கூட்டுறவு மசோதா நிறைவேறுகிற தறுவாயில் எதிர்க்கட்சியினரால் வாக்கெடுப்பு வற்புறுத்தப்பட்டபோது வாக்கெடுப்பு நடந்து முடிந்த பிறகு எதிர்க்கட்சியின் சார்பில் வெளி நடப்பு மேற்கொண்டார்கள். அந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மீது அவதூறாக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள் என்று இப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை அவர்கள் அப்படி ஒன்றும் குறிப்பிட்டு அவரை அவதூறாகப் பேசியதாக எனக்கும் தெரியவில்லை. சபையில் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால் அதிலே இருக்காது. ஆனால் நடந்தது என்னவென்றால், துணைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் வாக்கெடுப்பு நடைபெற்றபோதே இருபுறமும் மேசையைத் தட்டும் ஒலி பலமாக ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. அதனுடைய விளைவு வாக்கெடுப்பு நடந்து முடிந்து, எதிர்க்கட்சித் தலைவர் அல்லது எதிர்க் கட்சிகள் வெளியேறிய போது இரு தரப்பினரும் சத்தத்தை எழுப்பினார்கள். அதுதான் நடந்தது. குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பற்றி எந்த வார்த்தையும் சொல்லப்படவில்லை என்பதுதான் நான் இங்கே கூர்ந்து கவனித்துத் தெரிந்து கொண்டது.

இந்த ஒலியினால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ரொம்பக் கோபப்பட்டு அவர்களும் திரும்பிப் பார்த்து கொஞ்சம் வேகமாகச் சிலவற்றைச் சொன்னார்கள். அதுவும்





அந்த வகையிலே குறிப்பில் இடம் பெறவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் என்று மட்டுமல்ல, இந்தப் பேரவையில் யாராக இருந்தாலும் அவர்கள் பேசுவதற்கு முழு உரிமை உண்டு. கருத்துக்களை எடுத்துச் சொல்கிறபோது அவர்கள் எந்தக் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் அவற்றில் குறுக்கிடாமல் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டிய வாய்ப்பைத் தரவேண்டியது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கடமையாகும்.

[இரவு 7-20]

அந்த வகையிலே பார்க்கிறபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசினாலும் சரி, அதே போல மற்ற உறுப்பினர்கள் பேசினாலும் சரி இந்தப் பேரவையைப் பொறுத்தவரையில் எந்த உறுப்பினரும் அவருடைய கருத்தை அச்சம் அல்லது தயவு தாட்சண்யமின்றி எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டியது நம்முடைய கடமையாகும். அதேபோல் வெளிநடப்புச் செய்கிறபோது நம்முடைய மன்றத்திலே அமைதியாக வெளிநடப்புச் செய்வதுதான் வாடிக்கை. ஆனால் அதிலேயும்கூட இப்போது எதிர்க்கட்சிகள் ஜனநாயக ரீதியில் வெளிநடப்புச் செய்கிறபோது, பொதுவாக நான் சொல்கிறேன். அவர்களும்..........

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் என்ன வேதாந்தம் பேசுகிறாரா? ஒரு பக்கமாகப் பேசிக்கொண்டே போகிறார் ..........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் பேசுவது வேதாந்தம் அல்ல. எதிர்க்கட்சியின் சார்பிலே — இப்போது மட்டுமல்ல — பல நேரங்களிலே வெளி நடப்புச் செய்கிறபோது அண்மைக்காலத்திலேதான், ஆளுங்கட்சியினரைப்பார்த்து அல்லது இருக்கின்றவர்களைப் பார்த்து எதையாவது சொல்லிவிட்டு அல்லது கையையோ காலையோ ஆட்டிவிட்டுச் செல்கின்ற ஒரு பழக்கம் வந்திருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது, வெளிநடப்பும் அமைதியாக நடத்தப்பட வேண்டும் என்பது ஒன்று. அதைப்போல் ஜனநாயக ரீதியிலே வெளிநடப்புச் செய்கிறபோது நிச்சயமாக அதைக் கேலியோ கிண்டலோ பேசுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மனம் புண்பட்டிருப்பாரேயானால் நான் அதற்காக உண்மையிலேயே மிகவும் கவலைப்படுகிறேன். ஏனென்றால் அந்த நோக்கம் எங்களுக்குச் சிறிது கூட இல்லை. இங்கே நடந்த சம்பவங்கள் ஏற்பட்ட ஆர்பாட்டங்களின் தொடர்பாக வந்த விளைவே தவிர அவரைக் குறிப்பிட்டு பேச விடக்கூடாது, பேசுகின்ற வாய்ப்பைத் தரக்கூடாது என்பது எங்களுடைய நோக்கம்

அல்ல என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல் மாண்புமிகு அமைச்சர்கள் பேசுகின்றபோது கூட சில நேரங்களிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எங்களை அனுமதிக்கமாட்டேன் என்கிறார்கள். குறிப்பாக நானே ஒரு முறை அந்தக் கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். என்பதைத் துணைத் தலைவர் ஆகிய நீங்களே அறிவீர்கள். ஆகவே அவர்கள் பேசுகின்றபோது எப்படி அது ஒன்வே டிராபிக்காக இருக்கக்கூடாது என்று சொன்னார்களோ அப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகின்றபோது ஒத்துழைப்பைத் தருவதும் அதே போல் எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகின்ற போது ஆளுங்கட்சி ஒத்துழைப்பைத் தருவதும் இன்றியமையாதது.

கருத்துக்கள் முக்கியமே தவிர நிச்சயமாக நமக்குள்ளே அனாவசியமாக வீண் போராட்டங்களை வளர்த்துக் கொள்வதை நாங்கள் எந்த வகையிலேயும் வரவேற்கவில்லை. ஆளுங்கட்சி சார்பிலே இந்த உறுதியை நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் முன்பு ஒரு நாளில் நடந்ததை இன்றைக்குச் சந்தர்ப்பம் பார்த்து நுழைக்கப்பார்த்திருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு நடந்தது என்ன என்றால் நாங்கள் ஒரு பிரிவிலேஜ் மோஷன் மாண்புமிகு ராஜா முகமது மீது கொண்டு வந்தோம். நாங்கள் பேசினோம், அவர்கள் பதில் சொன்னார்கள், அதற்கு மேல் தீர்ப்புரைக்க வேண்டியது சபாநாயகர். இடையில் இவர் எழுந்து பேசினார், நாங்கள் குற்றம் சொன்னோம், அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள் நீங்கள் என்ன தீர்ப்புச் சொல்கிறீர்கள் என்றுதான் கேட்டோமே தவிர இவர் பேசுவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. சபாநாயகர் தீர்ப்புக்குப் பிறகு அவர் பதில் சொல்ல வேண்டும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இன்றைக்குக்கூட அவர்கள் பேசுகின்றபோது ஏதோ நாங்கள் தவறு செய்ததைப்போல, குற்றம்சொல்லி கொஞ்சம் அப்படி இப்படி ஒட்டி பேசியிருக்கிறார்களே தவிர வேறு அல்ல. ஆனால் இதை மின் துறை அமைச்சர் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறாரா? சாதாரணமாக வெளிநடப்பு ஏன் செய்கிறோம் என்பதைச் சொல்லிவிட்டு எதிர்க்கட்சித் தலைவரோடு நாங்கள் வெளியே போனோம். நாங்கள் அமைதியாக எழுந்து போகிறபோது இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களை கலாட்டாக்களை செய்வது ஆளுங்கட்சிக்குக் கைவந்த கலையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் பிரச்சினையைப் பெரிதுபடுத்தக்கூடாது. அப்படி ஏதும் நடைபெறவில்லை என்று அமைச்சரும் விளக்கம் அளித்



துள்ளார். எந்த நிகழ்ச்சியானாலும் எக்சைட்மென்ட் இல்லாமல் இருக்கின்ற முறையை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும். உறுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் இதைச் சொல்கிறேன். இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். திரு. ரகுமான்கான் ஆரம்பத்திலிருந்து இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறிப்பிலே இருந்தால் பின்னாலே அது நன்றாக இருக்காது.

திரு. துரைமுருகன் : மின்சாரத்துறை அமைச்சர் பேசும்போது ஆனால் அவர்கள் " கவலைப்படுகிறேன் " என்று தான் சொன்னார்கள். அவர்கள் கவலைப்பட்டு எங்களுக்கு என்ன வந்தது ? " எங்கள் பக்கம் பெருந்தவறு நடந்து விட்டது " என்று பெருந்தன்மையோடு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் வருத்தப்பட வேண்டாமா ?

Is it not a common courtesy to express regret?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது முடிந்து போன விஷயம். இதோடு விட்டு விடுங்கள்.

திரு. துரைமுருகன் : இதுவரை நடந்ததை எக்ஸ்பன்ஜ் பண்ணுகிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் எனது தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். இதுவரை எக்ஸ்பன்ஜ் ஆகவில்லை. மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அமைச்சர் தொடர்ந்து பதில் சொல்லட்டும்.

* * * * * *

(இரவு 7-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தீர்ப்பு வழங்கியதிலிருந்து இப்பொழுது நடந்தவை வரை, அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம். (கூச்சல் குழப்பம்).

எல்லோருக்கும் சொல்கிறேன், உறுப்பினர்கள் யாரும் ஒருவருக்கொருவர் பேச வேண்டாம். உட்கார்ந்து கொண்டும் பேச வேண்டாம். (கூச்சம்-குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்குப் பாதுகாப்பு கேட்டார்கள். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் பேசுவதற்குத் தாங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுப்பது எதற்கென்றால், அரசினுடைய பொதுக் காரியங்களுக்கு, மற்ற பொதுக் காரியங்களுக்காக நிலங்களை எடுக்கிறோம். ஆனால், சில நேரங்களிலே அப்படி நிலங்களை எடுக்கிறபோது, அவற்றைக் கொடுப்பதற்கு மறுத்து, உயர்நீதிமன்றத்திற்குப் போய் அங்கே தடை வாங்கி விடுகிறார்கள். அப்படித் தடை வாங்கி அந்த வழக்கு 3 ஆண்டுகளுக்கு மேல் நடந்து விட்டால், அதற்குப் பிறகு அந்த 4(1) நோட்டிஃபிகேஷனுக்கு அதிகாரம் இல்லை. நீதிமன்றத்திலே, வழக்கிலே தீர்ப்பு சொன்னாலும், தீர்ப்பு செல்லாது. ஆகையினால்தான் அந்த வழக்கு நடக்கிற காலத்தை, அந்த 3 ஆண்டுக்காலம் என்பதை எடுத்து விட வேண்டும், வழக்கு மன்றத்திலே இருக்கின்றபோது கொடுக்கின்ற கால அளவை எடுத்து விட வேண்டுமென்று இந்த அரசு இங்கே சட்ட முன்வடிவிலே சொல்லியிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் விளக்கமாக இங்கே சொன்னார்கள். அப்படிக் கொண்டு வருவதற்குக் காரணம், 3 ஆண்டுகள் அது வழக்குமன்றத்திலே இருந்துவிட்டு, அந்த 4(1) நோட்டிஃபிகேஷன் செல்லாது என்று சொல்லிவிட்டால், அதற்குப் பிறகு மறுமுறை வழக்கில் நமக்குச் சாதகமாக தீர்ப்பானாலும் மீண்டும் 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுக்கிறபொழுது 4(1) நோட்டிஃபிகேஷன் என்றைக்குத் தருகிறோமோ அன்றிலிருந்து 3 ஆண்டுகளுக்குப் பின்னாலே, அந்த நிலத்தினுடைய விலையைப் பார்த்து, நிர்ணயம் செய்து அதிலே சராசரி விலையைத்தான் அரசு நிர்ணயிக்க வேண்டும் ஆனால், இந்த 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுத்தது செல்லாது என்று சொல்லிவிட்டால், 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் கழிந்த பிறகு, மறுமுறை 4(1) நோட்டிஃபிகேஷன் கொடுத்தால், அன்றைக்கு இருக்கிற விலையைக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அரசுக்கும் மற்ற பொதுக் காரியங்களுக்கும் நஷ்டம் ஏற்படுகின்றது. அதைத் தடுக்கும் முறையில்தான் இன்றைக்கு 4(1) நோட்டிபிஃகேஷன் கொடுத்து விட்டு நீதிமன்றத்திற்குச் சென்றால், நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிற காலத்தில், அந்த 3 ஆண்டுகளுக்கு எடுக்க வேண்டுமென்று ஒரே ஒரு குறிப்புதான் இந்தச் சட்டத்திலே வந்திருக்கிறது. இதை நீங்கள் எல்லாம் வரவேற்கிறீர்கள்.; ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்] முன் வடிவு எண் 21/1980 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1980) நிறைவேற்றப்பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (8–8–1980) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

80. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு இந்து சமய நிறுவனப் பணியாளர் குடும்ப நலநிதி விதிகளைச் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2-5-1980-ஆம் தேதியிடப்பெற்ற 413ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

81. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 21–3–1980 ஆம் தேதியிடப்பெற்ற 852-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

ஏதுவுமில்லை.

இணைப்பு

[353 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 122—க்கான விடையைக் காண்க].

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகரத்திலிருந்து பெருந்துரை செல்லும் சாலைப்பகுதியில் மொத்தம் மூன்று நில எடுப்பு திட்டங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:—

(1) ஈரோடு கிராமம் —2 திட்டங்கள்.

(2) சூரம்பட்டி கிராமம் —1 திட்டம்.

I. ஈரோடு கிராமம் :

(i) இந்த கிராமத்தில் நில அளவை எண். 393/1 மற்றும் இதர நில அளவைகளில் 18·83 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் ஈரோடு புறநகர் திட்டம் 1க்காக கையகப்படுத்தலில் உள்ளது. அவற்றில் 17·69 ஹெக்டேர் நிலம் ஈரோடு வீட்டு வசதிப் பிரிவினரால் 1980-ஆம் ஆண்டு மார்ச்-ஏப்ரல் மாதங்களில் எடுக்கப் பட்டு விட்டது. மீதமுள்ள 1·14 ஹெக்டேர் நிலம் கையகப் படுத்துவதை குறித்து ஈரோடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி அவர்களிடமிருந்து அறிக்கை கிடைக்கப் பெற்று பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

(ii) இதே கிராமத்தில் நில அளவை எண். 321/1 மற்றும் இதர நில அளவைகளில் 9·05 ஹெக்டேர் நிலம் மாநில அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற் காகக் கையகப்படுத்தலில் உள்ளது. இந்த நிலத்திற்கு 1894-வது வருட நிலம் கையகப்படுத்தும் சட்டம் பிரிவு 4(1)ன் படி அறிவிப்பு, 21—11—1979 தேதி அரசிதழில் வெளியிடப்பட்டது. பிரிவு 6-ன் படி அறிவிப்பு வரைவு பெரியார் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

II. சூரம்பட்டி கிராமம் :

இந்த கிராமத்தில் நகர நில அளவை எண். 113/2 மற்றும் இதர நில அளவைகளில் 4.09 ஹெக்டேர் நிலங்கள் கையகப் படுத்தலில் உள்ளன. ஆனால், நிலச் சொந்தக்காரர்கள், நில ஆர்ஜிதத்தை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து தடுப்பு ஆணை பெற்றுள்ளார்கள் 14–7–180 அன்று சென்ற ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட ஆறு



ரிட் மனுக்களை உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இவைகளில் நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டில் இன்னொரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது. அரசு வழக்கறிஞரிடமிருந்து இதில் தாக்கல் செய்வதற்கு வேண்டிய எதிர் ஆணையுறுதிப் பத்திரம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ) தமிழக வீட்டு வசதி வாரியத்தினரால் கையகப்படுத் தப்பட்ட நிலத்தில் மேம்படுத்தப்படும் வேலை நடந்து வரு கிறது. இந்த நிலத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கிய வர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டும் திட்டங்கள் உள்ளன. இத்திட்டங்களுக்கு வீடு மற்றும் புறநகர் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி கோரப்பட்டிருக்கிறது. இந்த நிதி உதவி கிடைத்தவுடன் மேற்சொன்ன திட்டங்கள் நிறை வேற்றப்படும்.

123093